ஸஞ்சிகை 53—54.

ஸ்ரீவாணீ விலாஸினீ.

1913ஹ

நவம்பர்—டிசம்பர்மீ

227

1259

OFFICE OF THE REGISTRAR OF ... 22 JUN 1916 MADRAS.

ஸ்ரீரங்கம்
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.

Copyright Registered.

ஸ்ரீ வாணீ விலாஸினீ.

L 31n211,SV N13 53

ஓர் மாதாந்தத் தமிழ் ஸஞ்சிகை.

இத்தகைய தமிழ் ஸஞ்சிகை இதுவரை இந்தியாவில் கிடையாது. உயர்ந்த காகிதத்தில் பிரதிமாதமும் நூறு பக்கங்களடங்கியிருக்கும். வெகு முக்கியமான விஷயங்களைக் குறித்துத் தகுந்த வித்வான்களிடமிருந்து அநேக உபந்நியாஸங்கள் வெளியாகும். பிரதி ஸஞ்சிகையிலும் அநேக நேர்த்தியான படங்கள் பிரசுரிக்கப்படும்.

இதற்கு உபந்நியாஸங்கள் எழுதுவதாக அநேக சிறந்த வித்வான்கள் பிரியத்துடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இது இங்கிலாண்டில் நடந்தேறிவரும் மிகச்சிறந்த மாஸ ஸஞ்சிகைகளைப் போலவே இருக்கும். பிரதி வருஷமும் ஸரஸ்வதி பூஜை ஸஞ்சிகையும் ஸங்கராந்தி ஸஞ்சிகையும் மிகவும் வனப்பு வாய்ந்ததாகவும், ஒவ்வொன்றும் குறைந்தது 200 பக்கங்களுள்ளதாயுமிருக்கும்.

இத்தகைய அபூர்வமானதும் உயர்ந்ததுமான ஸஞ்சிகை தமிழ்நாடெங்கும் ஏராளமாய்ப் பரவும்பொருட்டு இதன் கிரயம் மிகவும் ஸுலபமாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சந்தாவை முன் பணமாகவே செலுத்தவேண்டும்.

வருஷம் ஒன்றுக்குச் சந்தா	ரூ 5—10—0
6மீ க்கு	,, 3— 4—0
பிரதி ஸஞ்சிகைக்கும்	,, 0—10—0

விளம்பர விகிதம்.

பக்கம் 1க்கு வருஷம் 1க்கு	ரூ 24—0—0
ஷை ½க்கு ஷை	,, 14—0—0
ஷை 1க்கு மீ 1க்கு	,, 3—0—0
ஷை ½க்கு ஷை	,, 2—0—0

வேண்டியவர்கள் தங்கள் தங்கள் பெயர்களை அடியில்கண்ட விலாஸத்திற்கு எழுதி உடனே ரிஜிஸ்டர் செய்துகொள்ளவேணுமாய்க் கோரப்படுகிறது.

84358

மானேஜர்.

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,

ஸ்ரீரங்கம்

OFFICE OF THE REGISTRAR
22 JUN 19
MADRAS

ஸ்ரீ வாணீ விலாஸினீ.

புத்தகங்கள் 1முதல் 8வரையில் தயாராயிருக்கின்றன.

ஒவ்வொரு புத்தகத்திலும் சுமார் 750 பக்கங்கள் மிகவும் அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. பற்பல விநோதக் கதைகளும், அநேக நூதன உபந்நியாஸங்களும் சிறந்த வித்வான்களால் எழுதப்பட்டுள்ளன. அநேக சித்திரப்படங்கள் பற்பல வர்ணத்தில் வெகு வனப்புடன் அச்சிடப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கூடங்களில் பரிசளிப்பதற்கு இவை இன்றியமையாதவை. ஒவ்வொரு வீட்டிலும் பெண்களும் பிள்ளைகளும் அவசியம் வாசிக்க வேண்டியவை. ஒரு விதத்திலாவது இதற்கு நிகராக வேறொரு புஸ்தகத்தைச் சொல்லவொண்ணாது. வாங்கி வாசித்துப்பார்த்த பின்புதான் இவைகளின் மகிமை தெரியவரும். மிகவும் நேர்த்தியாக காலிகோ பயிண்டுசெய்து கில்ட் அக்ஷரங்கள் போடப்பட்டிருக்கிறது.

புத்தகம் ஒன்றுக்கு விலை ரூபாய் **3-4-0.**

தபால் சார்ஜ் பிரத்தியோகம்.

☞ ஸ்வல்ப பிரதிகள் தாம் கையிருப்பிலிருக்கின்றன. வேண்டியவர்கள் சீக்கிரத்தில் தருவித்துக்கொள்ளவேண்டும்.

ஸ்ரீ ருக்மணீ பரிணயம். இது ஹரிகதைகளில உபயோகிக்கும்படி ஸ்ரீ ராமாயண ஸிம்ஹம் பருத்தியூர் கிருஷ்ணசாஸ்திரிகள் குமாரர் ப. கி. கல்யாணராம சாஸ்திரிகளால் கீதரூபமாய் இயற்றப்பட்டது. 0 2

சுண்ணாம்பு, சாந்து, சிமெண்டு, காங்கிரீட், தளவரிசை இவைகளைப்பற்றிய நூல். இது ரெவினியூ இலாகா மைனர் இரிகேஷன் ஓவர்ஸியர் எஸ். அமிர்தலிங்கய்யரால் இயற்றப்பட்டது. 0 4

ஸ்ரீ வாணீ விலாஸினீ தொடர்.

1. ஸரஸ்வதீ ஸ்தோத்திரம், ச்யாமளாதண்டகம், நவரத்னமாலை. காளிதாஸன் இயற்றியது. தேவநாகர அக்ஷரத்தில் இரண்டு வர்ணத்தில் வெகு நேர்த்தியாக அச்சிடப்பட்டது ... 0 1 0
2. ஸரஸ்வதி அந்தாதி, லக்ஷ்மி அந்தாதி. கம்பன் இயற்றியது. இரண்டு வர்ணத்தில் வெகு நேர்த்தியாக அச்சிடப்பட்டது 0 1 0
3. சந்திரவல்லி. சருக்கை இராமசாமி ஐயங்கார் பீ. ஏ. இயற்றியது. மிகவும் நேர்த்தியான துப்பறியும் கதை 0 6 0
4. அய்யாக்குட்டி அல்லது விவாஹதரகர்கள். டி. வி. வெங்கடரமணய்யர் இயற்றியது ... 0 1 6
5. ஹென்றி பஸ்டலோஸி. பீ. ஏ. ஸுப்பிரமணியய்யர், பீ. ஏ., எல். டி. இயற்றியது ... 0 2 0
6. அம்புஜவல்லி அல்லது கண்டதும் காதல். ஸ்ரீசைலர் இயற்றியது 0 6 0
10. ஸ்ரீ சங்கராசாரியர் சரித்திரம். அநேக படங்களுடன் கூடியது 1 0 0
11. தாதாவின் தந்திரம். டி. வி. வெங்கடரமண ஐயர் இயற்றியது. 0 2 0
12. ஹேமந்தகுமாரி. சருக்கை இராமஸாமி ஐயங்கார் பீ. ஏ. இயற்றியது ... 0 2 0
14. நாற்பது லக்ஷம் ரூபாய். ஒரு துப்பறியும் கதை. இரண்டாம்பதிப்பு 0 2 0
15. விபீஷண சரணாகதி. பண்டிதர் பி. ஆர். கிருஷ்ணமாசாரியார் இயற்றியது. ... 0 2 0
16. ஆனரபில் கோடியாலம் வாஸுதேவ ஐயங்கார். பி. ஆர். கிருஷ்ணமாசார்யர் இயற்றியது. ... 0 2 0
17. மிருச்சகடிகம். மோ. க. சடகோபாசாரியார் இயற்றியது. 0 4 0
18. ஸத்யவதி. கிருஷ்ணமாசாரியார் இயற்றியது. 0 2 0
19. பெருமுடிச்சோழன். ஸ்ரீ சைலர் இயற்றியது. 0 6 0
20. கண்மணி கமலம். ஓர் நேர்த்தியான துப்பறியும் கதை. 0 2 0

OFFICE OF THE REGISTRAR OF ... 22 JUN 1916 MADRAS.

21. நாஸிகேதோபாக்கியானம். அன்பில் ஸ்ரீ வெங்கடாசாரியார் இயற்றியது. ... 0 3 0
2. வீரமாதேவன் அல்லது விஷத்துகில். ஸ்ரீ சைலர் இயற்றியது. 0 4 0
23. ஸுலலிதாமனோஹரம். எஸ். ஜீ. ராமாநுஜலு நாயுடு இயற்றியது. ... 0 2 0
24. ஸ்ரீ ஸதாசிவேந்திர ஸரஸ்வதி. 0 2 0
25. மாலதீ. ஸ்ரீ சைலதாதாசாரியர் இயற்றியது. 0 3 0

ஸ்ரீமத் கம்பராமாயணம்,

சுந்தரகாண்டம்.

மூலத்தைமட்டும் சரித்திரச்சுருக்கம், முகவுரை, செய்யுளகராதி முதலியவற்றோடு பிழையறப்பரிசோதித்துப்படங்களுடன் பதிப்பித்த ஒரு பதிப்பு.

இது டபிள்கிரௌன் 16 பக்கங்கொண்ட பாரத்தில் 450 பக்கங்கள் அடங்கினதாக வெண்மையான ஆன்டிக் கடிதத்தில் நேர்த்தியாய் அச்சிடப்பட்டு இப்போது தயாராக இருக்கிறது. நேர்த்தியான காலிகோ பயிண்டு கிலிட்டடேன். ரூ 1-8-0. தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

திருவானைக்காப்புராணம்.

கச்சியப்பமுனிவர் இயற்றியது. மூலத்தைமட்டும், செய்யுளகராதி முதலியவற்றோடு பிழையறப் பரிசோதித்துப் படங்களுடன் பதிப்பித்த ஒரு பதிப்பு. இதில் கும்பகோணம் தமிழ்ப்பண்டிதர் M. V. இராமாநுஜாசாரியரால் 'திருவானைக்காமான்மியம்' மிக எளிய தமிழ் நடையில் வசன ரூபமாய் எழுதப்பெற்று பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இது ராயல் 8 பக்கங்கொண்டு 270 பக்கங்கள் அடங்கினதாக வெண்மையான பளபளப்பு கடிதத்தில் நேர்த்தியாய் அச்சிடப்பட்டு இப்போது தயாராகவிருக்கிறது. நேர்த்தியான காலிகோ பயிண்டு கிலிட்டடேன் ரூ 2-0-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

மானேஜர், ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ

பகவத்கீதை வெண்பா.

வாதிகேஸரி

ஸ்ரீ அழகியமணவாள ஜீயர்

அருளிச்செய்தது.

இது சுமார் 700 வருஷங்களுக்கு முன்பு இயற்றப்பட்ட மிகவும் அருமையான நூல். கீதையிலுள்ள சுலோகங்களுக்கு ஸ்ரீ ராமாநுஜ பாஷ்யத்தை யனுசரித்து நேராக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மிக்க இனிமையான நடையில் அமைந்துள்ளது. பாராயணத்துக்கு யோக்யமானது. தமிழபிமானிகளும் மதாபிமானிகளும் ஒவ்வொருவரும் தவறாமல் வாங்கி வாசிக்கத் தகுந்தது.

சிறந்த தமிழ் வித்வான்களால் நன்றாகப் பரிசோதித்துக் குறிப்புரையுடன் மிகவும் நேர்த்தியாக வெண்மையான கடிதத்தில் டெமி 16 பக்கத்தில் மூன்று ஷட்டகங்களாகத் தனித்தனியே அச்சிடப்பட்டுள்ளது.

விலை மிகவும் ஸ்வல்பமாகவே ஏற்படுத்தப் பெற்றது.

ஷட்கம் 1-க்கு விலை	அணா 6
கித்தான் பைண்டு விலை	அணா 8

தபால் சார்ஜ் பிரதியோகம்.

ஒரே ஸமயத்தில் 50 பிரதிக்குக் குறையாமல் வாங்குபவர்களுக்கு 100-க்கு 25 வீதம் பிரதிகள் இனாமாய்க் கொடுக்கபபடும்.

இதே புத்தகத்தை மிகவும் விலையுயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு, வெகு நேர்த்தியாக பைண்டு செய்து, கிலிட்டு அக்ஷரங்கள் போட்டு லைப்ராரி எடிஷனை ஐம்பதே பிரதிகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

விலை பிரதி ஒன்று ரூ. 1

வேண்டியவர்கள் அடியில்கண்ட விலாஸத்தில் பெற்றுக் கொள்ளலாம்,

மானேஜர்

புத்தகசாலை

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,

ஸ்ரீரங்கம்.

சிறந்த தமிழ் நாவல்கள்.

சுந்தரிமனோகரன்	0	12	0
பானுமதி வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதியார் இயற்றியது	0	12	0
மங்கம்மாள் அல்லது மதுரைக்கரசி எஸ். கே. பிள்ளை எழுதியது	1	0	0
அக்ஞாதவாஸம் அல்லது மாண்டவன் மீண்ட மாயம் R. S. நாராயணஸாமி அய்யர் B. A., B. L., இயற்றியது.	0	8	0
கல்யாணி அல்லது வாழ்வில் தோன்றிய விபத்து ஷை	0	10	0
பத்மாவதி அ. மாதவய்யர் B. A., இயற்றியது. ...	1	0	0
தாமோதரன் 'டாம்ஜோன்ஸ்' என்னும் ஆங்கிலநாவலை யொட்டி எழுதிய கதை.	0	12	0
சந்திரஹாஸா போரூர் ஷண்முகமுதலியார் இயற்றியது.	0	8	0
கன்னியின் முத்தம் அ. சங்கரலிங்கம்பிள்ளை B. A., இயற்றியது. இரண்டுபாகங்கள்	1	8	0
குலசேகரன் ஓர் இனியதுப்பறியும் நாவல். ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றியது ...	0	10	0
தாக்ஷாயணி அல்லது காதலன் வெற்றி ஷை ...	0	4	0
கருணாகரன் ஷை ...	0	4	0
மங்களாம்பாள் பாலஸரஸ்வதி தேவகுஞ்சரி அம்மாள் இயற்றியது	0	8	0
விஜயலக்ஷ்மி ஷை ...	0	10	0
வசீகரி ஞா. ஞானப்பிரகாசம் பிள்ளை இயற்றியது	1	0	0
மீனாக்ஷி அல்லது ஒரு பிராமணகுடும்பத்தின் விசித்திர கதை	1	0	0
சந்திரோதயம் அல்லது அலைகடலளித்த அரசி நாகை ஸி. கோபாலகிருஷ்ண பிள்ளை இயற்றியது ...	1	0	0
கண்ணகி அல்லது காதலிற்சிறந்த காரிகை ஷை	0	12	0
ஜயலக்ஷ்மி வரகவி திரு அ. சுப்பிரமணிய பாரதியார் இயற்றியது	0	8	0
நவநீதம் ஷை	0	3	0
பத்மினி ஷை	0	3	0
வநஜாக்ஷி ஷை	0	8	0
மாளவிகாக்நிமித்ரம்	0	8	0
நன்றியறியாமகன் கு. ரா. ஸ்ரீனிவாஸய்யங்கார் B. A., இயற்றியது	0	8	0
ப்ரிதுலை ஓர் உழவன் மகள் ஷை ...	0	8	0
வித்யாரண்ய நகரம் ஷை ...	0	8	0
வத்ஸலா எஸ். ஏ. ராமஸாமி அய்யர் இயற்றியது ...	0	8	0

ராயர் அப்பாஜி அல்லது அதிரூபமந்திரி ...	0	1	6
மிருகதிருஷ்ணிகை எஸ். ரங்கஸாமி அய்யர் இயற்றியது	0	6	0
உமா பண்டிதை விசாலாக்ஷியம்மாள் இயற்றியது ...	0	8	0
கல்யாணி அ. நடேச பிள்ளை இயற்றியது ...	0	8	0
அப்பாசாமி சாஸ்திரி ஓர் ஹாஸ்ய நாடகம். அம்புஜு இயற்றியது	0	4	0
ஹநுமான்ஸிங் அல்லது கொலைகளவு திறவுகோல் பி. ஏ. பிரணதார்த்திஹர சிவன் B. A., L. T., இயற்றியது	0	12	0
புத்திமானே பலவான் ஏ. பி. ராம் இயற்றியது ...	0	6	0
இராதாராணி	0	2	0
ஹிரண்மயி	0	2	0

மிகவும் உபயோகமான தமிழ்

புத்தகங்கள்.

முக்திசோபானம் இராம பிரம்மயோகிகள் இயற்றியது	0	12	0
விவேகாநந்த ஸ்வாமிகள் உபந்யாஸங்களாகிய ஞானத்திரட்டு இரண்டுபாகங்கள் ...	1	0	0
பிரபுலிங்கலீலை வசனம் வித்வான் இராமசாமி நாயுடு அவர்களால் வசனரூபமாய்இயற்றப்பட்டது	0	12	0
விவேகாநந்த விஜயம் மஹேசகுமார சர்மா இயற்றியது	1	4	0
பிரபோத சந்திரோதயம் வசனம் ஸ்ரீமான் ராமயோகிகளால் வசன ரூபமாய் இயற்றப்ட்டது	1	0	0
ஸ்ரீபகவத்கீதா ப்ரதிபத டீகா தாத்பர்ய பாஷ்யத்ரயஸாரம்	1	0	0
நாலடியார் உரையுடன்	1	2	0
இந்துதேசாபிமானிகள் சரித்திரம் முதற்பாகம் ...	0	12	0
வியாபாரநீதி சித்தூர் சுப்பிரமணியாசாரி B.A., L.T., இயற்றியது	0	8	0
விவேகசந்திரிகை	0	8	0
தேகதத்வசாஸ்திரம் எஸ். எஸ். வெங்கட்டரமணய்யர் பி. ஏ., பி. எல்., இயற்றியது ...	2	8	0
நீதிவிவாதமஞ்சரி ஷை ...	2	8	0
ஸ்ரீரங்கமஹாத்மியம்	0	3	0

THE MANAGER,

Bookselling Department,

SRI VANI VILAS PRESS,

SRIRANGAM, *Madras Presidency, S. India*

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 NOV 1915
MADRAS



சிருங்ககிரியில் ஸ்ரீசாங்கரகிரந்தாவளியை ஸ்ரீமஹாஸமாதியில்
ஸமர்ப்பித்தல்.

ஸ்ரீ வாணீ விலாஸினீ

வா. 9. 1913ஸு நவம்பர்—டிசம்பர்மீ ந. 53—54.

ஸ்ரீ சாங்கர கிரந்தாவளியின் முடிவும் ஸ்ரீ சிருங்ககிரி யாத்திரையும்.

இவ்வாறு பலவிதத்திலும் என்னை ஆசுவாஸப்படுத்தி எனது யோக க்ஷேமங்களையெல்லாம் தீர விசாரித்து சுமார் முக்கால் மணி ஸாவகாசம் என்னுடன் சிரிப்பும் விளையாட்டுமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு இன்னவிதமாக மறைந்தார்களென்று தெரியாமல் மறைந்துவிட்டார்கள்.

உடனே கண்விழித்தேன். உதயமாய்விட்டது. பரபரப்புடன் எழுந்தேன். உடலெல்லாம் வியர்த்திருந்தது. ஸமீபத்திலுள்ளவர்களுக்கெல்லாம் கண்ட காக்ஷியைச் சொன்னேன். எல்லோரும் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் வியப்படைந்தார்கள். சிலர் என் வார்த்தையை நம்ப

வில்லை. ஆனால் ஒருவனுக்காவது அன்று ஸ்ரீமடத்தில் எனக்கு செய்யப்போகும் மரியாதைகள் இன்னவையென்று தெரியாது. அதை மடத்ததிகாரிகள் வெகு ரஹஸ்யமாக வைத்திருந்தார்கள். ஆதலால் நான் சொன்னதும் அன்று மடத்தில் நடப்பதும் ஒற்றுக்கொண்டால் எல்லோரும் என் காக்ஷியை நம்புவதாகச் சொன்னார்கள். நான் வழக்கம்போல் ஸ்நானம் செய்து ஜபம் முதலானதுகளை முடித்துக்கொண்டு துங்கபத்திரையின் அக்கரையில் ஸ்ரீ நரஸிம்ம வனத்திலுள்ள எனது ஆசார்யேந்திரர்களின் ஸ்ரீ மகா ஸமாதிக்குச் சென்று அங்கு அவர்களின் முன்பாக அப்பெட்டியை வைத்து ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்தேன். எதிரிலுட்கார்ந்துகொண்டு அன்று விடியற்காலம் நடந்ததையெல்லாம் நினைத்துக்கொண்டு வருத்தப்பட்டேன். அச்சமயத்தில் எடுத்த படத்தையும் இதில் பிரசுரித்திருக்கிறது. பிறகு அங்கிருந்து பிரஸாதங்கள் பெற்றுக்கொண்டு ஸ்ரீ ஸச்சிதானந்த விலாஸத்திற்குப்போய் பாதுகைகளை தர்சித்துவிட்டு இப்பொழுதிருக்கும் ஸ்ரீ மகாஸ்வாமிகளிடம் சென்றேன். அப்பொழுது அவர்கள் ஸ்ரீ மகா ஸமாதி பூஜையை முடித்துக்கொண்டு குருவாலயங்களிலெல்லாம் தர்சனம் செய்துவிட்டு, ஆனை குதிரை முதலியதுகளுக்கெல்லாம் பூஜை ஆனபின் சண்டீஹோமத்திற்கு வரும் ஸமயமாயிருந்தது. இந்த சண்டீஹோமம் என்பது நவராத்திரியின் ஐந்தாவது நாள் முதல் ஆரம்பித்து வெகு விமர்சையாய் நடக்கும் ஒரு பெரிய ஹோமம். அதன் பெருமை அதைப் பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். அதில் இந்தக் கடைசிநாளன்றையதினம் பூர்ணாஹூதியென்று ஒரு ஹோமம் செய்கிறார்கள். அதில் மஞ்சள், குங்குமம், கற்கண்டு, சர்க்கரை, வாதாம் பருப்பு, திராக்ஷப்பழம், முதலிய எல்லா திரவியங்

களையும் தட்டுத்தட்டாய் ஹோமம் செய்கின்றார்கள். புதுப்புடவை ரவிக்கை முதலியதுகள் கூட ஹோமம் செய்கிறார்கள். இந்த ஹோமத்தில் செலவழியும் நெய்க்கு அளவில்லை. இந்தனங்கள் முழுமையும் சந்தனக்கட்டை தான். இந்தப் பூர்ணாஹுதியாகும் ஸமயத்தில் ஸ்ரீமகா ஸ்வாமிகள் அங்குவந்து நிற்கிறார்கள். அவர்கள் கையால் தான் ஹோமம் நடக்கிறது. அச்சமயம் நடக்கும் வேத கோஷத்தையும் மற்றுமுள்ள ஸந்நிவேசங்களையும் கவனி ப்பவர்களுக்கு ஒருவிதமான உயர்தாவுணர்ச்சியுண்டாகி றதென்பதிற் சந்தேகமில்லை. இந்த விபவத்தைப்பார்த் தானபின் எல்லோருமாக ஸ்ரீ சாரதாம்பாளின் கோவிலுக் குப்போய் அங்கு பரதேவதையின் பூஜையை கண்குளிர தர்சித்தோம். பிறகு வீட்டிற்குச் சென்று சாப்பிட்டுவி ட்டு ஸாயங்காலம் ஸுமங்கலிகளுக்கெல்லாம் புடவை கொடுக்கும் வேடிக்கையைப் பார்த்தபின் எல்லோரும் வழ க்கம்போல் தர்பாருக்கு வந்து கூடினோம். அவ்விடத்தில் நித்தியப்படி நடக்கும் எல்லாக்காரியங்களும் முடிந்தபிறகு மஹாராஜாக்கள் முதலான சிஷ்யர்கள் காணிக்கைகள் கொண்டுவந்து வைத்தார்கள். இது முடிந்ததும் என்னைக் கூப்பிட்டார்கள். நான் இந்த புஸ்தகப்பெட்டியையும், எனது ஆசார்யேந்திரர்களுடைய ஆலயத்திற்காக நான் உத்தேசித்திருந்த ஸ்வல்ப திரவியத்தையும், ஸ்ரீ மகாஸ்வா மிகள் எதிரில் கொண்டுபோய் வைத்து பின்வரும் சுலோக ங்களைச் சொல்லி நமஸ்கரித்தேன்.

सच्चित्सुखाक्रान्तशिवाभिनव्यनृपूर्वसिंहाख्यगुरोः कृपायाः ।
मत्पूर्वजातैः कृतपूर्वपुण्यैर्मयाप्यहं भाजनमस्मि तूर्णम् ॥

श्रीशंकरार्यस्य कृतीः समस्ताः संमुद्र्य लोके प्रकटीकरोतु ।
भवानितीमां शिरसा गुरूणामवाप्य चाज्ञां कृतवान्प्रयत्नम् ॥

प्राचीनहस्ताक्षरपुस्तकानि संगृह्य संशोध्य च नैकवारम् ।
अपण्डितोऽप्युत्तमपण्डितानां साह्येन भूरिद्रविणव्ययेन ॥

संमुद्र्य काञ्चन कृतीर्द्रुतमेव कृत्वा
चोपायनं गुरुवरेषु कृतार्थ आसम् ।
सानुग्रहं सदयमात्मकटाक्षपातै-
र्हृष्टानुमोदनवचो गुरुराह भूरि ॥

संकल्पानुगुणं विधातुमचिरात्पूर्तिं भवानीपति-
स्तद्वद्रत्नमणीन्द्रराजिविलसत्कुक्षिर्गणेट्शारदे ।
कुर्युर्भक्तवरस्य तेऽन्यजनतादुर्वापमत्यादरा-
दायु:कीर्तिकरं प्रसादमतुलं प्राह स्म चेत्थं गुरुः ॥

भोगादेव किल क्षयो जनिमतां प्राक्कर्मणामित्यत:
प्रत्यूहप्रतिपन्थिभि: प्रतिपदं रुद्धोऽपि नैवात्यजम् ।
तीर्त्वा विघ्नशतं क्रमेण गुरुराडाशीर्भिरेवान्तत:
संमुद्र्यार्यकृतीरशेषमधुना तीर्णप्रतिज्ञोऽभवम् ॥

प्रसादे प्राप्तव्ये हृदयमधुना खिद्यति भृशं
पुरस्तान्नैवासीन्मम गुरुवरस्यार्पणमिति ।
अपि स्थानं तेषामधिगतवतां तत्रभवतां
यदि स्यात्स्वीकार: स हि खलु तदीयो भवति मे ॥

श्रीमच्छंकरदेशिकेन्द्रकृतिभि: साकं गुरोरालय-
प्रासादप्रतिमादिकल्पनकृते किंचिद्धनं चार्पितम् ।
ऊरीकृत्य मयार्पितामुपहृतिं भक्त्योपपन्नां मुदा
भक्तोऽसावनुगृह्यतामिति गुरो संप्रार्थये सादरम् ॥

OFFICE OF ... 22 JUN 1916 MADRAS

இந்த சுலோகங்களை நான் சொன்னதும் என்னைக் கண்டு மனமுருகாதார் அங்கில்லை. ஸ்ரீ மகாஸ்வாமிகள் கூட எனது ஆசார்யேந்திரர்கள் இல்லாமல் நான் தவிக்கும் ஸ்திதியைக்கண்டு மனமிரங்கி என்னை ஸமீபத்திலழைத்து தங்கள் கையாலேயே எனது கழுத்தில் விலையுயர்ந்த கற்களிழைத்த ஒரு ருத்திராக்ஷ கண்டியை அடியிற்கண்ட சுலோகத்தைச் சொல்லிக்கொண்டே போட்டார்கள்.

श्रीशांकरी हि भवता वरपुस्तमाला
भक्त्या सुवर्णघटिता गुरवे न्यवेदि ।
तच्छांकरीं परमुदा भवते शिवाक्ष-
मालां सुवर्णघटितां गुरुरन्वगृह्णात् ॥

உடனே ஜோடி கலாபத்சால்வைகள் போர்த்தப்பட்டன. இது முடிந்ததும் பிரம்மஸ்ரீ அய்யன்வாரு குணிகல் ராமசாஸ்திரிகளைக்கொண்டு பின்வரும் ஸ்ரீமுகத்தை வாசிக்கச் சொல்லி ஸ்ரீ மகாஸ்வாமிகள் உத்தரவு செய்தார்கள்.

श्रीमत्परमहंसेत्यादिसमस्तबिरुदावलीविराजमानश्रीमज्जगद्गुरुश्रीसच्चिदानन्दशिवाभिनवनृसिंहभारतीस्वामिगुरुकरकमलसंजातशृङ्गेरीश्रीचन्द्रशेखरभारतीस्वामिभिः

अस्मदत्यन्तप्रियतम कृष्णस्वाम्यार्यतनूजश्रीरङ्गनगरवास्तव्य **बालसुब्रह्मण्याख्या** समलंकृतशिष्यवरविषये,

नारायणस्मरणपूर्वकविरचिताशिषः समुल्लसन्तुतराम् ॥

संप्रति, सभक्तिश्रद्धं सविनयं सहामोदं च आनतेन शिरसा संधार्यानुल्लङ्घनीयामखिललोकहितंकरीमाचार्येन्द्राणामाज्ञाम्, यत्नबाहुल्येन संपाद्यानेकप्राचीनपुस्तकानि बहुभ्यः, संशोध्य यथा-

वकाशं साह्येन पण्डितानाम्, व्ययित्वा च बहुलं द्रविणम्, सोढ्वा च स्वयं देहप्रयासम्, संमुद्र्याखिलाः कृतीः श्रीमदद्वैतमतप्रवर्तकानां पदवाक्यप्रमाणपारावारपारीणानां श्रीमच्छंकरांशसंभूतानां तत्रभवतामाचार्यभगवत्पादानाम्, अत्यन्तस्फुटतरैर्नागराक्षरैः, साकं विरामार्धविरामप्रश्नपूर्वपक्षसिद्धान्तादिचिह्नैः, यथा स्याद्वाचकानां हस्तचक्षुर्मनसां प्रीतिर्युगपत् तथा निर्माप्य पुस्तकानि, कृत्वा च प्रचारमासमन्ताद्भारते, परिपालिता किलेयमवन्ध्या श्रीमद्देशिकेन्द्राणामाज्ञा ॥

तत्तादृगाचार्यानुग्रहभाजनं भावन् यथासंकल्पमस्मद्गुरुवराणाम् इतः परं लोके '**गुरुभक्तशिखामणिः**' इति नाम्ना प्रसिद्धिमुपलभ्य पुत्रपौत्रादिक्रमशः जियादाचन्द्रतारं श्रीमच्छारदाचन्द्रचूडादिदेवतानां तथास्मद्गुरूणामनुग्रहेणेत्याशास्महे ॥

இதை வாசித்து முடிந்ததும் அதை வாங்கி என் கையில் பலமந்த்ராக்ஷதைகளுடன் அனுக்கிரஹம் செய்து கொடுத்துவிட்டு தாங்கள் சொன்ன சுலோகத்தின் அர்த்தத்தைக் குறித்து அங்கு கூடியிருந்த சபையோருக்கு ஒரு விரிவான உபந்யாஸம் செய்தார்கள்.

பிறகு என்னை சுட்டிக்காண்பித்து "இவர்களைப் போல் குருபக்தியில் சிறந்தவர்களைக் காண்பதரிது. இவர்கள் ஸமீபத்திலிருந்தாலே எல்லோருக்கும் குருபக்தியதிகரிக்கும். பெரியவர்களுக்கு மிகவும் பிரியமான சிஷ்யர் இவர். இவரிடத்திலவர்களுக்கிருந்த அன்பிற்கோரளவில்லை. இவர் இப்பொழுது செய்துவந்திருக்கும் இக்காரியம் மிகப்பெரிதானது. இம்மஹத்தான காரியம் இவரால்தான் செய்யக்கூடுமென்பதை யறிந்தே பெரியவர்கள் அதைச்செய்யும்படி இவருக்கு உத்தரவு செய்தார்கள்.

அவர்களுடைய அனுக்கிரஹத்தாலேயே இவரும் இக்காரியத்தை செய்து முடித்தார். இச்சமயத்தில் இவருக்குச் செய்த மரியாதைகளெல்லாம் பெரியவர்களின் ஆக்ஞையை அனுசரித்தே செய்யப்பட்டன. இவ்விதமாக செய்யச்சொல்லி அவர்களாலேயே பிரேரணை செய்யப்பட்டது. இந்த ருத்திராக்ஷகண்டியானது அவர்கள் உபயோகப்படுத்தியது. இவருக்கு இன்னும் மேன்மேலும் அவர்களால் எவ்வளவோ அனுக்கிரகங்கள் ஏற்படப்போகின்றனவென்பதற்குச் சிறிதும் ஸந்தேகமில்லை" என்று சொன்னார்கள். உடனே நான் அன்று காலையில் கண்ட காக்ஷியைத்தெரியப்படுத்தினேன். அதை சிரித்துக்கொண்டு கேட்டுவிட்டு "அந்த மாதிரியே தான் நானும் கண்டேன். எனக்கும் இம்மாதிரியே உத்தரவாச்சுது. உங்களுக்குச் சொல்லவேண்டியதெல்லாம் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். பிறர் சொல்லுவதற்கு ஒன்றும் பாக்கியில்லை." என்றார்கள். பிறகு வழக்கம்போல் தர்பார் கலைந்தது. ஸ்ரீமகாஸ்வாமிகள் அக்கரை சென்றதும் அங்குவந்துகூடியுள்ள ராஜப்பிரதிநிதிகளெல்லாரும் என்னைவந்து கொண்டாடுவதும் எனக்குக் கிடைத்த ருத்திராக்ஷகண்டியை வாங்கிக்கண்களில் ஒத்திக்கொண்டு சிரஸில் வைத்துக்கொள்வதும், எனது பாக்கியத்தை மெச்சுவதுமாகவிருந்தார்கள். வெகுநேரம் கழித்து நானும் ஜாகைக்குத் திரும்பினேன். அங்கும் எல்லோரும் நான் காலையில் கண்டதாகச்சொன்ன காக்ஷி நிஜமென்று நம்புவதாகச் சொன்னார்கள். அன்று இரவு ஒரு பெருஞ்சுமை இறங்கினவனாக ஆனேன்.

மறுநாள் விஜயதசமியன்றைய தினம் அம்பாள் அம்புபோடுவதற்காகக் காளிகோவிலுக்குப்போய் வருவதுவழக்கம். அந்த உத்ஸவத்துக்கு கூடப்போயிருந்தேன்.

அதற்கு மறுநாள் தெப்போத்ஸவம். அவ்வூரில் தெப்போத்ஸவம் துங்காநதியில்தான் நடக்கிறது. இரண்டு தோணியின்பேரில் தெப்பத்தைக்கட்டி அலங்கரித்து அதில் அம்பாள் வந்ததும் அதை நடுநதிக்குக்கொண்டு போய் அங்கே சுத்துகிறார்கள். ஜனங்களெல்லாம் கரையில் படித்துறையிலிருந்து தர்சனம் செய்கிறார்கள். இக்காக்ஷி மிகவும் விநோதமாயிருக்கிறது. பிறகு ஐந்தாறு நாளங்கிருந்து விட்டு ஸ்ரீமகாஸ்வாமிகளிடம் விடைபெற்றுக்கொண்டு திரும்பவும் ஊர்வந்து சேர்ந்தேன்.

செல்வம்.

‘செல்வம்’ என்னும் பதத்தை செல்வோம் எனவும், அதற்கு நேர் பதமாகிய ‘தரித்திரம்’ என்னும் பதத்தை தரித்திரோம் எனவும், பலவிதமாக அழைத்து, மேற் சொன்ன பதங்கள் மாறிவந்தனவென்றும், லக்ஷ்மி ஒருவனிடத்து வந்தடையும்பொழுது அவனவனுடைய அதிர்ஷ்டவசாத் சிறிதுகாலம் நிலைபெற்றும், நீண்டகாலம் பெருதென்றும், செல்வம் வந்துற்ற காலத்து “செல்வோம், செல்வோம்” என்று சொல்லி தன் தமக்கையாகிய தரித்திரத்தை விட்டுச் செல்லுகிறதென்றும், செல்வவான் செல்வச் செருக்கால் தன்னிலை தெரியாது அதர்மம், பொய்மொழி கூறல், கோர்ட்டு வழக்குகளை கையாடுதல் முதலிய கெட்ட செய்கைகளை நடத்துவதால் அவன்பால் வந்துற்ற லக்ஷ்மி “செல்வோம்” என்றும், தரித்திரம் வந்ததும் பக்தியும், தயாளகுணமும், ஈசுவர பயமும் தர்மசிந்தனையும் அம்மனிதனிடத்து உண்டாகவே எளிமை என்னும் தமக்கை “தரித்திரோம்” என்று கதறிக்கொண்டே சென்று விடுகிறது என்றும் பலவாறு புலவர்கள் பொருள் செய்வர்.

செல்வம் என்னும் பதத்திற்கு ஐசுவர்யம், சம்பத்து, பாக்கியம் என்பதாக பொது அர்த்தங்கள் பல இருக்கின்ற

படியால் இச்செல்வம் பல சம்பத்துக்களையும் குறிக்கும் எனினும் முக்கியமாய் இதனை மக்கட்செல்வம், திடச்செல்வம், கல்விச்செல்வம், பொருட்செல்வம், தவச்செல்வம் என ஐந்து விதங்களாகப் பிரிக்கலாம். எல்லாச் செல்வங்களிலும் பொருட்செல்வமே சிறப்புற்றது. தற்காலத்து நாகரீக வர்த்தமானங்களை கவனிக்குங்கால் கல்விச்செல்வமும் ஒருவாறு தாழ்வுபடும். ஆனாலும் கல்விக்குக்காரணமாகிய புத்தியும், ஞானமும், முன் செய்த பாக்கியமும், இல்லாமல் ஒருவிதச் செல்வத்தையுமடைய முடியாது. பெரியோர்கள் அடிக்கடி சொல்லுகிற அதிர்ஷ்டமும்வேண்டும். அவ்வதிர்ஷ்டத்துக்குக் காரணமாயிருப்பதும் முன் ஜன்மத்தில் செய்த நல்வினைகளே. தீவினை செய்திருந்தோமாயின் அதிர்ஷ்டஹீனன் என்று பெயர் பெறல்வேண்டும். நல்வினைகளாலுண்டாகும் அதிர்ஷ்டத்தாலடையும் சகல சுகங்களும், பாக்கியங்களும், இன்பங்களும் செல்வத்தைச்சார்ந்து நிற்கும்.

வெளிப்படையிலும், வழக்கத்திலும் நூல்களிலும் பெரும்பாலும் செல்வமென்பதற்கு திரவியம், பணம், பொருள், கையிருப்பு என பலவிதமாக அர்த்தங்கள் வழங்கிவருகிறபடியால் நாமும் பொருட்செல்வத்தையே முக்கியமாய்க் குறிக்கவேண்டும். ஆயினும் சிறுபான்மை முன்னோர்கள் கருத்துக்கிசைய செல்வமென்பதை கல்விச்செல்வமாகவும், திடச்செல்வமாகவும், மக்கட்செல்வமாகவும், தவச்செல்வமாகவும் பகுத்துக்கொண்டு இவைகளைப்பற்றிச் சிறிது சொல்லிய பின்னர் பொருட்செல்வத்தைப்பற்றிப் பகருவாம்.

மனிதர்களுக்கு இன்பமேற்படுவது பலவிதத்தாலாயினும் மக்களால் ஜனங்களடையும் இன்பம் அதிகமே. புத்திரபாக்கியமில்லாதார் புத் என்னும் நரகத்துள் வீழ்

வார் என்பது ஹிந்து சாஸ்திர ஸம்மதம். மேலும் ஹிந்துக்களுடைய கொள்கையாகவும் கொள்ளலாம். ஆதலால் மக்களின்றி விண்ணுலகமடைவது அரிதாகும். நாமிறக்குங் காலத்தில் நாம் நற்கதியடையும் வண்ணம் நம்மக்கள் கடவுளிடம் செய்துகொள்ளும் பிரார்த்தனைகளுக்கும், கடவுளின் மனதை சந்தோஷிக்கச்செய்ய, அவர்கள் நம்பொருட்டுச்செய்யும் க்ரியைகளுக்கும் கணக்கில. நாமிறக்குங் காலத்து நம்மாத்மா நற்கதியடைய புத்திரர்கள் அவசியமே. நாம் உயிருடனிருக்கும் பொழுதும் அவர்களால் ஆனந்தமடைகிறோம். எப்படியெனில் நாம் துக்கமாயிருக்கும்பொழுது நம் குழந்தைகள் பாலகிருஷ்ணபருவத்தில் தத்தித்தத்தி விளையாடுவதைக் கண்ணுற்கண்டும் மிருதுவான, குளிர்ச்சி பொருந்திய, பஞ்சுபோன்ற, பளபளப்புள்ள இளம் சரீரத்தை கைகளினால் எடுத்து மார்போடணைத்து முத்தந்தந்து உச்சி முகந்து சீராட்டிப்பாராட்டி தேக ஸ்பரிசனை செய்வதாலும், குழந்தைகளினுடைய வாட்டமின்றி வளருந்தன்மையோடு கூடியதும் சந்த்ரனைபொத்த குளிர்ச்சி பொருந்திய சதா புன்சிரிப்புடன் தவிழ்ந்து விளையாடி இன்பத்தைத் தரவல்ல ரோஜாப்புஷ்ப இதழ்போன்று விளங்கும் முகத்தையும், அழகிய இனிய சிறு குரலையும், காதுக்கினிய மழலைச்சொற்களையும் பன்முறை கேட்டு ஆனந்திக்கிறோமன்றோ! அதனால் துக்கமும் மாறி அக்குழந்தையை வாரியெடுத்து முத்தமிட்டு,மார்போடு கட்டியணைத்துக்கொண்டு இன்பமாய்க்காலங்கழிக்கிறோம். அச்சமயத்தில் ஏதாவது துன்பம் தோன்றுகிறதா! 'கோடித் துக்கம் குழந்தை முகத்தில் தீரும்' என்கிறபடி அளவிலா ஆனந்தமுண்டாகிறது! சூரியனைக்கண்ட பனிபோல் வீட்டுக்குறைகளும், வெளிக்குறைகளும் நம்மை விட்டோடுகின்றன. இத்தனை வைபவ

ங்களையும் அனுபவித்தவனே மகானுபாவன். மக்கட்செல்வம் பெற்றோர்க்கே அதன் அனுபவம் தெரியும். இக்கருத்துக் கிசைந்தே,

"குழலிதளர் நடையைக்காண்டலினிதே
யவர்மழலை சொற்கேட்டலமிழ்தினு மினிதே"

எனப்பாடியுள்ளார் பெரியோர். அன்பர்களே! அம்மக்கட் செல்வம் மனிதர்களைத் துன்பக்கடலினின்றும் பல தடவைகளில் நீக்குகிறது. குழந்தைகள் பாலியப்பருவமடைந்ததும் பெற்றோர்கள் கலியாணவைபவங்களை நடத்தி மேலும் மேலும் தாங்களும் தங்கள் குழந்தைகளும் சந்தோஷமடைகின்றனர். பெற்றோர்கள் தள்ளாத வயதுகாலத்தை அடைந்ததும், குழந்தைகள் மனிதப் பருவமடைந்து அவர்களாலியன்றவளவு பொருள் சம்பாதித்துத் தம் பெற்றோர்களை போஷிக்கின்றனர். இது பெரும்பாலும் அவர்களது கடமையாகின்றது. ஆதலால் மக்கட் செல்வம் இன்றியமையாததே.

ஒருவனுக்கு மக்கட்செல்வம் உண்டானதும், அவன் தன் குழந்தையை "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக" என்றபடி குழந்தைக்கு யாதொரு குறைவுமுண்டாகாதபடி ஜாக்கிரதையாய்க் காப்பாற்றமுயலவேண்டும். குழந்தைகளுக்கும், மற்ற ஏனையபருவத்தாருக்கும் "நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்" என்றபடி சுகச்செல்வமாகிய திடச்செல்வத்தைக் கைக்கொள்ள முயற்சித்தலவசியம். நல்வர்ச் செல்வம் அடைந்து, பிறகு பொருட்செல்வத்தை நாடி, அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களை அடைய ஒருவன் விரும்பினால், அவன் சரீரத்தைப் பாதுகாப்பதற்காக இளமையிலேயே தகுந்தபடி கவலையெடுத்துக் கொள்ளவேண்டும். மனப்பயிற்சிக்கு தேகப்பயிற்சியே ஆதாரம். கெம்

டரத்தம் பரவாமலிருப்பதற்கும், பிணிகள் அடிக்கடி பீடித்து அதனல் அவஸ்தைப்படாமலிருப்பதற்கும், தேகத்திற்குள்ளேயிருக்கும் (தூர்நீரை) வேர்வையை வெளிப்படுத்தி உள்ளே நல்ல ரத்தம் வேகமாய் ஓடவும், பசி அதிகரிக்கவும், நரம்புகளும், சதைகளும், பருத்து பலப்படவும், கைகால்களுக்கு பலத்தைக் கொடுக்கவும், வேலைகள் செய்யவும், புஸ்தகங்கள் படிக்கவும் ஆசை கொடுப்பதுடன் மூளை நன்குவிசாரிக்கவும் சோம்பலன்றி சுறுசுறுப்பாய் காரியபரிசீலனைகள் செய்யவும் நல்லதூக்கம் ஏற்பட்டு அதனல் தேகத்துக்கு சுகம் கொடுக்கவும் காரணமாயிருப்பது தேகப்பயிற்சியே. இக்குறைவற்ற செல்வமாகிய நோயற்றவாழ்வை சிறுவர்கள் அனுபவித்தால் சகல சுகத்தையுமடைவர்கள்.

பிறக்கும் ஒரு குழந்தையின் தேகத்தை பெற்றோர் காப்பாற்றிய பின்னர், உலக வியவகாரங்களில் அடிபட வேண்டியதற்காக கல்வி புகட்டி அதன் ஜீவனோபாயத்தை தகுந்த வயதுகாலத்தில் தேடிக்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். ஓட்டிய இளமை ஓரைந்தாண்டும் சென்ற பின்னர் ஆக்கை இளமை ஐம்மூன்றாண்டினில் கல்வி பயில வேண்டும். கல்விச் செல்வத்தைக் கைக்கொண்டவனே புத்திமான். மேலும் புத்திமானே பலவான். "எண்ணுமெழுத்தும் ஒரு மனிதனுக்குக் கண்ணெனத் தகும்" கல்விகரையில. கற்பவர் நாள் சில. மெல்ல நினைக்கிற்பிணி பல வாதலான் 'இளமையிற்கல்' என்றபடி, இளமைப்பருவத்தில் தானே வித்தைவிரும்பி, கைப்பொருள்தன்னின் மெய்ப்பொருளாகிய கல்வியை, 'நூற்பல கல்' என்ற முதியோர் சொல்லுக்கிணங்கி பிச்சைபுகினும் கற்கைநன்றாதலான் வறியோராயினும், ப்ரபுவாயினும் கல்விகற்றலவசியம். இக்கல்விச் செல்வமோ அறம் பொருள்

இன்பம் வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களைத்தர வல்லது. மனிதர்களுக்குக் கீர்த்தியையும், மன்னுதி மன்னர்களின் சிநேகிதத்தையும், நற்புத்தியையும், நடையுடைபாவனைகளையும் கொடுப்பதோடு அநேகமாய் சகல இன்பங்களையும் அளித்து, பயனளிக்கின்றது.

கல்வி அறிவுபெற்ற ஒவ்வொரு மனிதனும் தன் வருங்கால ஜீவனத்துக்கு வேண்டியதைத்தேடலவசியம். அஃது பெருமைபெற்ற பொருட்செல்வமே. பொருட் செல்வம் எல்லாவிதங்களிலும் மனிதர்களுக்குச் சுகத்தைக் கொடுக்கிறபடியால் அதை அவசியம் சம்பாதிக்கவேண்டும். கொலை, களவு முதலியவைகள் செய்யாமலும் பிறரையேமாற்றாமலும் பொருள் சம்பாதிக்கவேண்டும். அன்னியர்களுக்குத் தொந்திரவும் செய்யக்கூடாது. "கொள்ளைவிரும்பேல்" என்ற வாக்கியப்படி நடந்துவருவது நல்லோர்க்குச்சான்றாகும். நாம் நம்முடைய நெற்றிவேர்வை நிலத்தில்விழ உழைத்துப் பொருள் சம்பாதிக்கவேண்டும். "ஏற்பதிகழ்ச்சி" என்னும் வாக்கியப்படி பிச்சையெடுப்பது அவமானமாகையால் நாம் நம்மாற்கூடிய வரையில் உழைத்தே ஜீவனம் செய்யவேண்டும்.

அப்படி ஜீவனம் செய்யத்தகுந்த சாதனங்களில்லாவிட்டால் "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற ஔவையின் சொற்படி சமுத்திரத்தைக் கடந்து சென்றாவது சம்பாதிக்கவேண்டும். பிறரிடமிருந்து சில கழனிகளையாவது (வயல்களையாவது) தோட்டம் முதலியவைகளையாவது குத்தகைக்குவாங்கி பயிர்செய்து அதன் வரும்படியைக்கொண்டு ஜீவனம் செய்யலாம். அன்றியும் அன்னிய தேசங்களுடனாவது தன்னாட்டோர்களோடாவது வியாபாரம் செய்து பொருள் சம்பாதிக்கலாம். இப்படிச்செய்வதால் சிற்சில சமயங்களில் செல்வவான்களா

வதுமுண்டு. ஒருவரிடத்திலிருந்து அவரிடத்திலே வேலை செய்து ஜீவனம் செய்வதானால் அவர் மனம் கோணாமல் இட்டவேலையைச் செய்து அவரைச் சந்தோஷப்படுத்தி அதிக சம்பளம் பெற்று பேர் கெடாமல் ஜீவனம்செய்து பொருள் சம்பாதிக்கவேண்டும். அதிக நன்மையையும், பெருமையையும் கொடுக்கக்கூடிய பயிர்த்தொழிலே மேன்மை பெற்றதென்றும் மற்ற தொழில்களுக்கெல்லாம் குற்றமுண்டென்றும் கருத்தையடக்கி,

"ஆற்றங்கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

என ஔவையும்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்"

எனத் திருவள்ளுவரும் கூறியுள்ளார்கள்.

இப்படிச் செய்யும் ஒவ்வொருவரும் தான் ஈட்டிய பொருளை முதலில் நான்கு பாகங்களாகப் பங்கிட்டு, இரண்டை வீட்டுச் செலவிற்கும், ஒன்றை தருமத்திற்கும், மற்றொரு பங்கை ஆபத்துக் காலத்தில் தன் உதவிக்கும் தனியே வைத்து, பின்னர் செலவு செய்யவேண்டும். "ஐயமிட்டுண்" என்றும்,

"ஐயமிடுமின் அறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வளவேனுமிட்டுண்மின்—தெய்வம்
ஒருவனே யென்றுணர வல்லீரேல்
அருவினைகளைந்துமறும்.

எனவும் கூறியுள்ளார் ஔவையாரும். பந்துக்கள் சிநேகிதர்கள் முதலியோர்களுக்கு ஆபத்துக் காலங்களில்

உதவிபுரிதலவசியம். "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்றார் ஆன்றோரும். பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைக்காமல் தருமத்திலோ, பாடசாலைகள் ஸ்தாபிப்பதிலோ, கோயில்கள் சத்திரங்கள் கட்டுவதிலோ, வாய்க்கால்கள், குளங்கள், கிணறுகள் வெட்டுவதிலோ, ரஸ்தாக்கள் போடுவதிலோ, வறியர்களுக்கு அன்னமளிப்பதிலோ, நமது சுற்றத்தார்களின் எளிமையை நீக்குவதிலோ இன்னும் வேறு நல்வகைகளிலோ செலவு செய்தல் மேன்மையுடைத்து. ஆனால் மிதமிஞ்சி செலவு செய்யக்கூடாது.

"ஆனமுதலிலதிகஞ் செலவானான்
மானமழிந்து மதிகெட்டுப் போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனா நாடு."

என்னும் செய்யுளை ஞாபகஞ்செய்தல் அவசியம். இப்படி மிதமாகச்செலவு செய்தால் செய்கிற அம்மனிதன் கொஞ்சகாலத்திற்கெல்லாம் செல்வவானாகின்றான். செல்வமுள்ளவனை கல்வி, அறிவு, பலம், அழகு, பெருந்தன்மை, நாகரீகம், சன்மார்க்கம், பக்தி முதலியன பொருந்தினவனாகவே ஜனங்கள் எண்ணுகிறார்கள். கீர்த்தியும் பெரும் பட்டப்பெயர்களும், தகுந்த மரியாதைகளும் கூடவே உண்டாகின்றன. தர்மத்தில் செலவு செய்தால் புகழ் உண்டாகிறது. செல்வவான்களே எத்தகையராயினும் எதற்கும் முன் மரியாதை பெறுகின்றனர். அவர்களே கிராமவழக்குகளைத் தீர்க்க முன் வருகின்றனர். எளியோர் பெரும்பாலார் அவர்களைக் கண்டு பயப்படுவதன்றி அவர்களிடம் மரியாதையுடனும், பலத்த குரலில் சம்பாஷணையின்றியும் பலவாறாக நடித்து வருகிறார்கள். ராஜசமூகங்களில் தகுந்த மரியாதைகள் பெறுகிறார்கள். எல்லாவிதங்களிலும் யாவராலும் கொண்டாடப்படுகிறார்கள்.

உதாரணமாய் ஒரு எளியோனுக்கு லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்படும்பொழுது, "சலே" என்ற சப்தம் போய், 'அடேய், அடே, உன்னைத்தாண்டா' எனமாறிப் பின்னர் 'உம்மைத்தான், உங்களுக்குன்னு, ஐயர்வாளுக்குன்னு, தங்களுக்குன்னு, அந்த இடத்திலேன்னு' கடைசியில் 'சமுகத்துக்குன்னு, சித்தத்துக்குன்னு" எனப் பலமொழிகள் காலக்கிரமத்தில் செல்வத்துக்குத் தகுந்தபடி ஏற்படுகின்றன.

"குணமிருந்தாலும் குலமிருந்தாலும் கொழுந்தமிழின்
மணமிருந்தாலும் மதியிருந்தாலும் வழித்திடவங்
கணமிருந்தாலுமோர் காசும்பெறாது சிங்காரவரைப்
பணமிருந்தாலவர்க் கெல்லாருமஞ்சலி பண்ணுவரே."

செல்வவான் ஒருவன் கல்விகல்லானாயின்,

"கல்லானே யானாலும் கைப்பொருளொன்றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்."

என்றபடி எல்லா ஜனங்களும் அவனைக் கொண்டாடி அவனைச் சுற்றிலும் சூழ்ந்து இருப்பார்கள். ஏழையாயிருந்தால்,

"—இல்லானை
இல்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாதவன் வாயிற் சொல்."

என்றபடி மனைவியும், பெற்றெடுத்த தாயும் விரும்பாள். நல்வழியில் செலவுசெய்து தானும் அநுபவிக்காவிடில் யாவராலும் நிந்திக்கப்படுவான். உண்மையில் பணமிலான் பிணத்துக்கொப்பாவன்.

ஆகையால் நாம் சம்பாதிக்கும் பொருளில் "பொருள்தனைப் போற்றிவாழ்" என்றபடி மிதமாகச் செலவிட்டே காப்பாற்றவேண்டும். ஆனால் சிலர்கள் செல்வச்செரு

க்குற்று கெட்டவழியில் பிரவேசித்து, தம் நிலைமை தெரியாது தங்கள் செல்வத்தையும் இழந்து, குலத்துக்குப் பெருங்கேட்டை விளைவிக்கின்றனர். கீர்த்திக்கும் கெடுதியுண்டாய் நாளடைவில் மங்கிப்போகின்றது. பொய் சொல்லுதல், மானத்தை மறத்தல், அஹங்காரத்தைக் கைப்பிடித்தல், வீண் வழக்குகளை விலைக்கு வாங்குதல், விபரீதபுத்தியை வியர்த்தமாய் மனதில் பதித்துக்கொள்ளுதல், ஆசாரநேமநிஷ்டாதிகளை அநியாயமாய் விட்டுவிடுதல் முதலிய பெரும் காரியங்கள் செல்வச்சிறுபாலாரின் முக்கிய கொள்கைகளாகின்றன. சில சமயங்களில் செல்வச்செருக்கே கொலைக்கும் ஆதாரமாகின்றது. உயிருக்கும் ஹானியை விளைவிக்கின்றது. ஆகலான் யாவரும் நல்வழியில் பொருள் சம்பாதித்து நல்வழியில் செலவிட்டு நல்லவர்களென்று பெயர்பெற்று வாழ்வார்களாயின் இம்மை மறுமை ஆகிய இரண்டிலும் பயனளிக்கும்.

இப்படி இல்வாழ்க்கையை ஒருவன் நடத்திய பின்னர் அவன் தன் வயது காலத்தில் ஈசுவரபக்தியை அதிகமாகக் கொண்டாடி ஆத்மா நற்கதியடைவதற்குத் தகுந்த சாதனங்களைத் தேடிக்கொள்ளுதல் இன்றியமையாதது. இஃதே தவச்செல்வமாகும். உலகஇன்பங்களாகிய மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய மூன்றையும் நீக்குவோர்களுக்கே தவச்செல்வம் தகுதியானது. அப்பொழுது தான் சத்தியம் ப்ரதானமாகவிருக்கும். பக்தியும் மேம்பாடடையும். க்ரியைகளும் சித்திக்கும். பாபங்களுக்கும் ஒருவாறு விமோசனம் ஏற்படும்.

எம். எஸ். ராமச்சந்திரன்.

சேஷப்பய்யர்.

அச்சன்னியாசிக்கு அவரைப்பார்த்த வுடனே ஒரு ரௌத்திராகாரமுண்டாகி அவரை சற்று நேரம் வெறிக்கப்பார்த்துவிட்டு பிறகு தான் ஒரு துறவியென்றும், இன்னகாரியத்தை உத்தேசித்து தான் இங்கே வரும்படி நேர்ந்ததென்றும், தான் வந்ததுமுதல் அதுவரையில் இன்னின்னது நடந்ததென்றும், விபரமாய் தெரிவித்தார்.

கிழவர்:—ஓய் சன்னியாசி, இப்பிச்சுவய்யர் உம்மை வெளியே போமென்று சொல்லியது நியாயமாகத்தான் தோணுகிறது. அவரை யாரென்று நினைத்தீர். அவருக்கு இந்த வீட்டில் சகல சுவாதீனமும் உண்டு. அவர் பார்த்து உம்மை இங்கே இருக்கக்கூடாதென்று சொல்லும்பொழுது நீர் அதை இலட்சியம் செய்யாமலிருந்தது தப்பிதம்தானே. அதிருக்கட்டும். சன்னியாசி என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கும் நீர் உம்முடைய கடமை இன்னதென்று கொஞ்சங்கூட கவனிக்காமல் ஒரு குடும்பத்தலைவன் செய்யவேண்டிய வேலைகளிலெல்லாம் தலையிட்டுக்கொள்ளும்படி எந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது? நீர் அம்மணியம்மாள் மனதை திருப்தி செய்யவேண்டியிருந்தால் அதற்காக என் வீட்டுப்பெண்ணை அவளுடைய பிள்ளைக்குத்தான் கொடுக்கவேணுமென்று உமக்கு எந்த மடையன் புத்திச்சொல்லிக்கொடுத்தானோ தெரியவில்லை. மேலும் அவள் ஒரு மானஸ்தியாயிருக்கும் பட்சத்தில் மறுப

டியும், அவள் இப்பெண்ணைப்பற்றி பேசுவாளா? ஒரு சமயம் அவளே உம்மை தெரியாத்தனமாய் அனுப்பியபோதிலும் நீரும் அதற்குள்பட்டு இங்கே வரலாமா?

சன்னியாசி:—நான் வந்தது நியாயமா இல்லையா என்பதைப்பற்றி பிந்தி பேசிக்கொள்ளுவோம். நீர் உம்முடைய பேத்தியை அந்தம்மாவினுடைய பிள்ளைக்கு கொடுக்கக்கூடாது என்பதற்கு என்ன காரணம் சொல்லுகிறீர். அப்பிள்ளை கூன் குருடு செவிடு முதலிய அங்கப்பழுதுள்ளவனா. எழுத்து வாசனையறியாத நிர்மூடனா. நரை திரை மூப்பு முதலியதுகளினால் பீடிக்கப்பட்டிருக்கும் வயோதிகனா. சரீரசம்பந்தமான எந்த பாகத்திலாவது இலட்சணப்பழுதுள்ளவனா. நடை உடை பாவனை முதலிய நாகரீகங்களை அறியாத காட்டுமிராண்டியா? உண்ணச்சோரு உடுக்கத்துணி தங்கநிழல் முதலியவைகள் இல்லாத பரமஏழையா? ஜாதி குலம் முதலியதுகளில் உங்களை விடத்தாழ்ந்தவனா. இதில் எந்த பாகத்தை உத்தேசித்து அப்பிள்ளை உதவாதென்று விலக்கியிருக்கிறீர்கள்.

கிழவர்:—நீர் மெத்தவும் பேசத்தெரிந்தவர் என்பதை நான் அறிந்துகொண்டேன். ஆகிலும் உம்முடைய வாய் சக்கிரவட்டங்கள் எல்லாம் என்னிடத்தில் பலிக்கப்போகிறதில்லை.

சன்னி:—அச்சமயம் தருமியம்மாவோடு அங்கு நடந்த பேச்சுக்களையெல்லாம் மிகக்கவனமாய் கேட்டுக்கொண்டே நின்ற இலக்ஷ்மியை சுட்டிக்காட்டி, ஐயோ பாவம் சுவர்ணவிக்கிரகம்போல விளங்கும் இக்குழந்தையை கொள்ளிக்கட்டையைப்போல் இருக்கும் மடையனும் சுயம்பாகியும் கடையனிலும் கடையனுமாகிய இப்பிச்சுவய்யனுக்கு கலியாணம் செய்துகொடுக்கப் போகிறீருமே. அது தெய்வசம்மதமாகுமா? அல்லது உலகம்தான் ஒப்புக்கொள்ளுமா? இந்த மிலேச்சனையும் இப்பெண்ணையும் மணவறையில் சேர்த்துவைக்கும் காலத்தில் அதைப் பார்ப்பவர்களனைவரும் உம்முடையவும் இச்சண்டாளனுடையவும் முகத்தில் தூத்து என்றுகாறி யுமிழ்வார்களே. இப்பெண்ணைப்பெற்ற தாயாவது அல்லது தகப்பனாவது இருந்தால்

அவர்கள் இந்த எற்பாட்டிற்கு அணுவ்வளவாகிலும் சம்மதிப்பார்களா? நீர் செய்திருக்கும் எற்பாட்டைப்பற்றி உம்மை கேட்கவாவது தடை செய்யவாவது ஒருவருமில்லை என்கிற தைரியம் தானே நீர் இவ்விதமாக முடிவு செய்திருக்கிறீர்.

கிழவர்:—நீர் கேட்கும் கேள்விகளுக்கு நான் ஜவாப்பு சொல்லவேண்டியது அவசியமில்லை.

சன்னி:—தற்காலம் நான் கேட்பது நியாயமில்லையென்றுதான் தோணும். ஆனால் விஷத்தெரிந்த ஒரு பெண்ணை அவளுடைய இஷ்டமில்லாமல் ஒருவருக்கு எப்படி கலியாணம் செய்து கொடுக்கலாம் என்பதை இனியாவது தெரிந்துகொண்டு அக்காரியத்தில் பிரவேசியும்.

கிழவர்:—அது விஷயத்தில் நீர் ஒன்றும் யோசனை சொல்லிக்கொடுக்கவேண்டாம். நீர் அம்மணியம்மாள் வீட்டிலிருந்து புறப்பட்டு வருங்காலத்தில் ஒன்று இப்பெண்ணை அந்தம்மாவினுடைய பிள்ளைக்கு கொடுக்கச்சொல்லி பார்ப்போம். அது பலிக்காவிடில் இப்படிப்பட்ட கலகத்திற்கான ஒரு வழியை இப்பெண்ணிடம் சொல்லிவிட்டாவது போவோம் என்கிற இரண்டுவித நோக்கத்துடன் வந்ததாகத்தோணுகிறது.

சன்னி:—ஐயா நான் ஒரு காரியத்தில் தலையிட்டுக்கொள்வதே மிக அபூர்வம். தலையிட்டுக்கொண்டுவிட்டாலோ அதை முடிக்காமல் வேறு வேலைகளில் பிரவேசிக்கிற வழக்கமில்லை. அதிலும் பூர்ணசந்திரனைப்போல முகத்தையுடைய இந்த இலட்சுமியைப் பார்த்தபின் இவளை இவளுக்கிஷ்டப்பட்ட புருஷனுக்கு கலியாணம் செய்துவைக்கவேண்டியது என்னுடைய முக்கிய கடமையாக எற்பட்டுவிட்டது.

சேஷப்பய்யர்:—சோறு கண்ட இடம் சொர்க்கமாக பாவிக்கும் நீர் இப்பெண்ணுடைய தாய் தகப்பனைப்போல் பாத்தியம் கொண்டாடுவதை யோசிக்குங்கால் உம்மை ஒரு பெரிய மோசக்காரனென்றே தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. இப்பிச்சுவய்யன் சொல்வதுபோல் நீர் கொலை செய்யக்கூட அஞ்சமாட்டீர் என்றும் நினைக்கிறேன்.

சன்னி:—ஓய் பெரியவரே! உலகவழக்கமானது யார் யார் என்னென்ன கெட்ட செய்கைகளில் விசேஷப்பயிற்சியடைந்திருக்கிறார்களோ அதே தான் பிறரிடத்திலும் இருப்பதாகச் சொல்வது அவர்களுடைய வழக்கமாயிருக்கிறது. மேலும் நான் ஒரு மோசக்காரனென்றும் கொலைசெய்யத்துணிந்தவனென்றும் கண்டுபிடித்த நீரே அத்தொழில்களை இன்னவிதமாய் நடத்துகிறதென்று என்போலியர்களுக்கு கற்பிக்கத்தகுந்த வல்லமையும் உம்மிடத்தில் இருக்குமெனக்கண்டுபிடிக்கிறேன்.

சேஷ:—நல்லது நீர் மெத்தவும் யோக்கியர்தான். இனி நீர் இங்கிருப்பது சரியல்ல.

சன்னி:—நான் யோக்கியனோ அல்லது அயோக்கியனோ அதைப் பற்றி பிற்பாடு பேசிக்கொள்ளுவோம். நான்வந்த விஷயத்திற்கு இப்பொழுது என்ன முடிவு சொல்லுகிறீர்.

கிழவர்:—எனக்கு விபசாரியான அந்தம்மாவுடன் சம்பந்தம்செய்ய இஷ்டமில்லை.

சன்னி:—மகா உத்தமியாகிய அந்தம்மாவைப் பார்த்து அப்படி சொல்லாதீர். எனக்கோ அச்சம்பந்தந்தான் சிலாக்கியமாகத் தோணுகிறது.

சேஷ:—நீர் அவளுடைய சிநேகத்தை விருத்தி செய்வதற்காக என் வீட்டுப்பெண்ணையா அங்கே கொடுக்கச்சொல்லுகிறீர்.

சன்னி:—நீர் அங்கே கொடுக்காமல் வேறே என்ன செய்துவிட முடியும்.

கிழவர்:—அது பிற்பாடல்லவா தெரியும்.

சன்னி:—பிற்பாடு தெரியக்கூடியது என்ன? இராஜாங்கத்தார் நீர் செய்வது தப்பிதமென்று கண்டுபிடித்து உம்மை சட்டப்படி சிக்ஷிப்பதுடன் இப்பெண்ணையும் அந்த அம்மணியம்மாவினுடைய பிள்ளைக்கே கலியாணம் செய்துகொடுக்கிறதென்று தீர்ப்புச்சொல்லிவிடுவார்கள். அவ்விசாரணைகாலத்தில் முந்தி நீர் செய்திருக்கிற தப்பிதங்களும் தனக்குத்தானே பஹிரங்கத்திற்கு வந்துவிடும்.

கிழவர்:—(இவ்வார்த்தையைக் கேட்டவுடன் சற்று மனக்குழப்பம

டைந்து) எனக்குத் தெரிந்தவரையில் நான் யாதொரு தப்பித மும் செய்ததேயில்லே. அப்படிக்கிருக்க என்பேரில் யார் குற்றம் சாட்டக்கூடும்.

சன்னி:—நீர் முந்தி செய்திருப்பதும் இப்பொழுது செய்துவருவது மான தப்பிதங்களோ ஆயிரக்கணக்காக சொல்லவேணுமே தவிர அதற்கு குறைந்து சொல்லி சாத்தியமில்லே.

கிழவர்:—ஓய் பரதேசி! நான் ஏதோ அநேக தப்பிதங்கள் செய்திருப்பதுபோலும் அதை நீர் கூடவிருந்து பார்த்ததுபோலும் பேசுகிறீரே.

சன்னி:—அப்படியேதான் வைத்துக்கொள்ளும்.

சேஷ:—அவைகளில் ஒன்றைப் பற்றியாவது சொல்லும் பார்ப் போம்.

சன்னி:—நான் சொல்லுகிறது என்று ஆரம்பித்தால் பிற்பாடு நீர் மீளப்போகிறதேது. உம்முடைய நடத்தைகள் ஒவ்வொன் றையும் நினைக்கும்பொழுது உம்மை சித்திரவதை செய்தா லும் தோஷமில்லே. நான் இங்கே வந்து உம்மை பார்த்த வுடனே நீர் யாரென்றும் மகாபாவியாகிய உம்மை மறுபடி யும் பார்க்கும்படி நேர்ந்ததே என்றும் வருத்தப்பட்டேன். அதை முன்னிட்டு அப்பொழுதே நான் இவ்விடம் விட்டுக் கிளம்பியிருப்பேனேயாகில் அது நான் வந்த காரியத்திற்கு பிரதிகூலம் செய்வதுபோல் ஆய்விடும். பிறகு அம்மணியம் மாள் இதென்ன இச்சன்னியாசி இவ்வளவு வைராக்கியக்கா ரனு? இவரை நம்பி ஒரு காரியத்திற்கு அனுப்பலாமா என்று பரிகாசம் செய்வார்கள். அதோகூட அந்தம்மாள் இந்த இலட்சுமி, மகாஉத்தமியாக காணப்படும் இத்தருமியம் மாள் முதலிய அனேவரும் உம்முடைய யோக்கியதை இவ்வ ளவுதானு என்று உம்மை அவமதித்து விடுவார்கள். இவை களை எல்லாம் யோசித்துத்தான் நான் உம்மிடத்தில் ஒரு புது மனிதனைப்போல் பேசிவந்தேன். நான் இதுவரையில் சொல் லிவந்த விஷயங்களைக்கொண்டாவது நான் இன்னுரென்று தெரிந்துகொண்டீரா.

கிழவர்:—(கொஞ்சநேரம் வரையில் அவரை உற்றுப்பார்த்துவிட்டு பிறகு) ஸ்வாமி! தாங்கள் யாரென்று தெரிந்துகொண்டேன். தங்களுக்குப் பதவிகிடைத்த விஷயத்தில் நான் நிரம்பவும் சந்தோஷப்படுகிறேன். ஏதோ நான் செய்தது முழுமையும் தவறுதலாயிருந்தாலும் அவைகளை மன்னித்து என்னை கௌரவப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். உங்களுடைய அபிப்பிராயப்படியே இந்த இலட்சுமியை அம்மணியம்மாளுடைய பிள்ளைக்கே கலியாணம் செய்துகொள்ளச் சொல்லுங்கள். ஆனால் அது விஷயத்தில் நான் ஒரு பைசாகூட செலவழிக்கக்கூடாதவனாய் இருந்து வருகிறேன். தயவுசெய்து நீங்கள் இப்பொழுதே இந்த இலட்சுமியை அம்மணியம்மாள் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய்விடுங்கள். அப்படியாக அழைத்துக்கொண்டு போகும்பொழுது அவளிடமிருக்கும் நகைகளை ஒரு திருகாணிகூட பாக்கியில்லாமல் என்னிடம் கொடுத்துவிட்டுத்தான் போகவேண்டும்.

சன்னி:—மறுபடியும் உமது தொழிலைக்காட்ட ஆரம்பித்துவிட்டீரே. நீர் அவ்விதமாக ஆரம்பித்தவரையில் நானும் உமது பூர்வசரித்திரங்களை வெளிப்படுத்தி உம்மை சந்தியில் இழுக்கவேண்டியவனாகை ஆய்விட்டேன். பிரஸ்தாப நகைகளில் ஒரு திருகாணியாவது உம்முடைய சம்பாத்தியத்தைக்கொண்டு செய்து போட்டிருக்கிறீரா? எவ்வளவோ அருமை பெருமையாய்ப் பிறந்த இக்குழந்தை அநேகம் சங்கதிகளுக்கு கொடுத்துவைக்காமல் போய்விட்டதே என்பதைப்பற்றி வருத்தப்படவேண்டியதாகயிருக்கிற நீர் இது தரித்துக்கொண்டிருக்கும் சொற்ப நகைகளைக்கூட பிடுங்கிக்கொள்ள நினைப்பது தருமமா? உம்முடைய அபிப்பிராயப்படியே நீர் இந்நகைகளை வாங்கிக்கொண்டுவிட்டால் அது உம்முடைய வாழ்நாளை இன்னும் கொஞ்சம் அதிகமாய் விருத்திப்படுத்துமோ? நீரோ ஒரு ஒண்டிக்காரர். உமக்கிருக்கும் ஆஸ்தியோ சொல்லிமுடியாது. நீர் நாளதுவரையிலும் எத்தனையோ காரியங்களில் உம்முடைய இஷ்டப்படியே நடத்தியிருக்கிறீரே. அவைகளினால் நீர் அடைந்திருக்கும் சுகங்கள் என்ன? என்றைக்கிருந்தாலும்

நமனுக்கு ஆளாகவேணும் என்கிற எண்ணம் உமக்கு எப்பொழுது ஏற்படுமோ தெரியவில்லை.

கிழவர்:—ஸ்வாமி! என்னை இன்னமும் தூரம் குலைக்கவேண்டாம். உமது இஷ்டப்படியே இந்த இலட்சுமியை அவள் போட்டுக்கொண்டிருக்கும் நகைகளோடு அழைத்துப்போய் அம்மணியம்மாளிடம் சேர்ப்பித்துவிடுங்கள். தாங்கள் வந்தோ வெகு நேரம் ஆய்விட்டது. அம்மணியம்மாளும் உங்களுடைய வரவை மிக ஆவலாய் எதிர்பார்த்திருப்பார்கள். மற்றும் நமது இரகசியங்களை மாத்திரம் எந்நாளும் பிறர் அறியாத விதமாய் காப்பாற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அவரை அனுப்பிவிட்டார்.

சந்நியாசியையும் இலட்சுமியையும் பார்த்த அம்மணியம்மாள் பார்வதி முதலானவர்கள் அவர்களை மிக ஆவலாய் நல்வரவு கூறினார்கள். சன்னியாசி அந்தம்மாவிடம் தான் போனதுமுதல் அதுவரையில் நடந்த யாவத்து விஷயங்களையும் விபரமாய் தெரிவித்தார். அவைகளை கேள்விப்பட்ட அம்மணியம்மாள் ஸ்வாமி தாங்கள் இல்லாவிடில் இக்காரியம் ஒருபோதும் நிறைவேறப்போகிறதேயில்லை. தாங்கள் எடுத்துக்கொண்ட பிரயாசைக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன். நான் இதுவிஷயமாக எதைச் சொன்னபோதிலும் அது ஒரு வீண் ஸ்தோத்திரமாக முடியும். இனி நாம் செய்யவேண்டியதெல்லாம் கலியாண காரியங்களை சீக்கிரத்தில் முடித்துக்கொண்டு ஒரு நல்ல நாள் பார்த்து முகூர்த்தத்தை நிறைவேற்றவேண்டியதுதான். நான் ஏற்கனவே சொன்னபடி இப்படிப்பட்ட காரியங்களை நிர்வகிக்கக் கூடியவர்களாக என்னைச் சேர்ந்தவர்களில் ஒருவரும் இல்லாததால் தாங்கள் தான் அவைகளை சிறப்பாய் முடித்து வைக்கவேண்டும் என்றாள். அதற்கச்சன்னியாசி அம்மா, இதைப்பற்றி தாங்கள் சொல்லாவிட்டாலும் எனக்கே அதில் ஒரு தனி பொருப்பு ஏற்பட்டிருக்கிறது, என்றார். மறுபடியும் அவள் ஸ்வாமி அக்கிழவர் உங்களுடைய வார்த்தைக்கு எவ்விதம் கட்டுப்பட்டார் என்பதை என்னிடம் சொல்லக்கூடாதா என்றாள். அதற்கவர் அம்மா அவைகளை நீங்கள் இப்பொழுது தெரிந்துகொள்ள வேண்டுமென்பது அவசியமில்லை. ஏதோ இம்மட்டாவது காரியானுகூலம் ஆயிற்றே என்பதைப்பற்றி

மாத்திரம் திருப்தியடைந்து கடவுளை துதி செய்யவேண்டியதே தவிர மற்ற சங்கதிகளை கவனிக்கக் கூடாது என்றார். அந்தம்மாவும் அது புத்திதான் என்று ஒப்புக்கொண்டாள். இலட்சுமி தனக்கிருந்த கஷ்டங்கள் எல்லாம் நிவர்த்தியாய் விட்டது என்கிற நிச்சயத்தினாலும் தான் கோரியிருந்த புருஷனே தனக்கு கிடைக்கப் போகிறார் என்கிற சந்தோஷத்தினாலும் பார்வதியுடன் ஸதா சிரிப்பும் விளையாட்டுமாகக் காலம் போக்கிக்கொண்டிருந்தாள். சன்னியாசியோ உலக வியவகாரங்களை துறந்தவராயிருந்தும், இலட்சுமியின் கலியாணத்தை சிறப்பிக்கவேண்டியது தன்னுடைய கடமை எனத் தீர்மானித்து அதற்குவேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் முன் சாக்கிரதை செய்யச் சொன்னார்.

இதற்கு ஒரு வாரத்திற்குப்பின் சென்னையில் படித்துக்கொண்டிருந்த பாலகிருஷ்ணனிடமிருந்து அவனுடைய தாயாருக்கு பின் வரும்விதமாக ஒரு கடிதம் கிடைத்தது. அதாவது

சென்னப்பட்டணம்

மாது ஸ்ரீ அம்மா அவர்களுக்கு பாலகிருஷ்ணன் நமஸ்கரித்த விக்கியாபனம்.

இவ்விடம் நானும் எனது போதகாசாரியர்களும் சிநேகிதர் முதலானவர்களும் க்ஷேமம். அதுபோலவே அவ்விடத்தில் தங்களுடையவும் ஸௌபாக்கியவதி இலட்சுமி முதலானவர்களுடையவும் க்ஷேமசௌக்கியங்களை கேட்க மிக ஆவலுள்ளவனாயிருக்கிறேன்

தங்களுடைய ஆசீர்வாதத்தினால் இங்கே எனது படிப்பு யாதொரு குறைவன்னியில் நிறைவேறி வருகின்றன. இப்பொழுது நானும் போன லீவில் நமது வீட்டிற்கு வந்திருந்த ஜகதீசய்யரும் இங்கே ஒரு தனி ஜாகை ஏற்படுத்திக்கொண்டு அதில் இருந்து படித்து வருகிறோம்.

அவர் என்னோடு தனித்து சம்பாஷிக்கும் காலங்களில் நமது பார்வதியைப்பற்றி அடிக்கடி மிக அன்புபாராட்டி பேசிக்கொண்டிருக்கிறார். அவர் பேசும் மாதிரிகளைப்பார்த்தால் அவருக்கு அவளை கலியாணம் செய்துகொள்ளவேணும் என்கிற அபிப்பிராயம் இருக்

கிறதாகத் தெரியவருகிறது. அவர் நம்மோடு இருக்கும் காலத்தில் நமது பார்வதியும் அவர் பேரில் பற்றுதல் வைத்திருப்பதாகத் தெரிந்துகொண்டிருக்கிறேன். இவ்விதமாக அவர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் பற்றுதலை பூர்த்திசெய்துவைக்கவேணும் என்பது பற்றித் தான் தங்களுக்கு இச்சமயம் இக்கடிதம் எழுதலானேன்.

அச்செகதீசய்யர் ஒரு சமயம் என்னிடத்தில்

"ஐயோ எனக்கெல்லாமிருந்தும், பெற்ற தாயார் ஒருவள் இல்லாததால் அவைகள் முழுமையும் நிஷ்பிரயோஜனமாய் போய் விட்டது. இந்த நிலைமையில் நான் எந்தவிடத்திலாவது அண்டி வயத்தை கழுவவேணும் என்கிற எண்ணம் கொண்டு, ஏகாங்கியாய் கிளம்பி, சுமார் 6 மாதம் வரையில் பலவிடங்களிலும் சுற்றி விட்டு, கடசியாக பிராணதாரை என்கிற பட்டணம் வந்துசேர்ந்தேன். அங்கே கோபாலய்யர் என்ற ஒரு பிராமண பிரபு எனக்கு பழக்கமானார். நான் அவரிடத்தில் எனது வரலாறுகளை தெரிவித்தேன். அவரும் மகா இலட்சுமிக்கு சமதையான அவர் சமுசாரமும் என்பேரில் இரக்கப்பட்டு என்னை அவர்களுடைய பிள்ளையைப்போல் அவர்கள் வீட்டிலேயே இருந்துவரும்படி உத்திரவு கொடுத்தார்கள். சிலநாள்வரையில் நான் இவ்விதமாக இருந்து வருகையில் ஒரு பிராமணோத்தமர், அவரை மானிடர்களுக்குள் சிரேஷ்டமானவரென்றே சொல்லலாம், அவர், "காக்கை ஏறிய தால் பனம்பழம் விழுந்தது" என்பதுபோல் என்னுடைய ஒத்தாசையைக்கொண்டு பிழைப்பு மூட்டப்பட்டார் என்று எனக்கு ஒரு பெருமை ஏற்பட்டது. உற்றுப்பார்க்கப்போனால் நான் அவர் விஷயமாக செய்த ஒத்தாசையோ மிகஅற்பமானது. அதுவும் நான் என் போலியர்களுடைய கடமையாக நினைத்து செய்தேனே தவிர வேறு எவ்விதமான பெருமை பிரதிபிரயோஜனம் முதலியதுகளை நாடிச்செய்ததல்ல. அப்படிக்கிருந்தும் அப்புண்ணியவான் அதை ஒரு பெரிதாக நினைத்து ஒரு பெருந்தொகையாகிய மூவாயிர ரூபாயை எனது முதலாக ஏற்படுத்தி, அதை என்னை ஆதரித்துவரும் கோபாலய்யரிடம் கொடுத்து அதன் விருத்தியாம் சத்தைக்கொண்டு என்னுடைய படிப்பை கவனித்துவரவேணுமென்று கேட்டுக்கொண்டார். அதுமாத்திரமா? அத்தருமவானே மேற்படி கோபாலய்யருடைய ஒரே புத்திரனாகிய இராமச்சந்திர

ய்யர் என்பவரைப்பற்றி தயைபுரி இராஜாவுக்கு ஒரு சிபார்சு கடிதம் கொடுத்து அவரை ஒரு பெரிய உத்தியோகத்தில் அமர்த்தியும் வைத்திருக்கிறார். இவ்வளவு தூரம் நடத்திய அவர் இன்னுரென்று எனக்காவது அல்லது அக்கோபாலய்யர் முதலியவர்களுக்காவது தெரியவே தெரியாது. அப்படிப்பட்டவரை மறுபடியும் தரிசிப்பதற்கு நாங்கள் எவ்வளவு ஆவலுள்ளவர்களாயிருப்போமென்பதை சொல்லவும் வேண்டுமோ? அது நிற்க, என்னை ஒரு அபிமான புத்திரனுக பாவித்திருக்கும் ஷை கோபாலய்யர் அப்பிரபு கொடுத்த தொகையை என்பேரில் வட்டிக்குவிட்டு அந்த வட்டியையும் போறுததற்கு தன் கைப்பணமும் போட்டு என்னைப் படிக்கவைத்து ஸம்ரக்ஷித்தும் வருகிறார். அவருடைய உதவியும் விசாரணையும் இல்லாதவரையில் நான் எக்கதியாயிருப்பேனே தெரியவில்லை. நான் இவ்விருத்தாந்தங்களை உங்களிடம் இவ்வளவு தூரம் வெளியிட்டதற்குக் காரணம் என்னவெனில் உங்களுடையவும் உங்களுடைய தாயார் தங்கை முதலியவர்களுடையவும் பழக்கம் ஏற்பட்ட காலம் முதல் அது வரவர விருத்தியாகி என்நாளும் நீடித்திருக்க வேணும் என்கிற எண்ணமே தவிர வேறில்லை. ஏதோ சுஜாதியாயும் மிக நல்லவர்களாயும் என் மனதிற்கு பிடித்தவர்களாயுமிருக்கிற நீங்கள் எனது நெருங்கிய பந்துக்களாயும் ஆய்விட்டால் அதைவிட மேலான பாக்கியம் வேறொன்றில்லை." என்று தெரிவித்திருக்கிறார். அவரோ இந்த வருஷம் பீ. ஏ. கிளாசில் வாசிக்கிறார். அவரொத்த மாணுக்கர்களும் இக்கலாசாலையின் உபாத்தியாயர்களும் அவர் அப்பரிட்சையில் முதலிலேயே தேற்சியடைவாரென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட இச்செகதீசய்யருக்கு நமது பார்வதியை கொடுத்துவிட்டால் அவள் ஒரு நல்ல அதிர்ஷ்டசாலியாய் ஆய்விடுவாள் என்பதில் சந்தேகமேயில்லை. அது விஷயத்தில் உங்களுடைய அபிப்பிராயத்தை தெரிவிக்கும்படிக்கும், இலட்சுமி, நமது வீட்டில் வந்திருக்கும் சின்னம்மா, இவர்களை நான் விசாரித்ததாகச் சொல்லும்படிக்கும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வேணும்
அநேக நமஸ்காரம்,
பாலகிருஷ்ணன்.

அம்மணியம்மாள் படிக்கத் தெரியாதவள் ஆனதால் வழக்கம் போல் அதை பார்வதியினிடம் கொடுத்து வாசிக்கச் சொன்னாள். அவள் அதை வாசிக்கும்பொழுது தன்னுடைய எண்ணம் இன்னதெனக் கண்டுபிடித்து எழுதியிருப்பதைப் பார்த்து அந்த இடத்தில் ஒருவிதமான புன்சிரிப்புடன் வாசித்தாள். அது முழுமையும் வாசித்து முடிந்தவுடன் அவள் முகத்தில் ஒரு சந்தோஷக் குறிப்பும் உண்டாயிற்று. அதை மிக ஊகமாய் கவனித்துவந்த அம்மணியம்மாள் அப்பெண்ணைப் பார்த்து 'குழந்தாய், உன் தமயன் அனுப்பிய கடிதத்திற்கு நீ தான் பதில் எழுதவேண்டும். அதில் என்னைக் கலந்து எழுதவேண்டிய பாகம் ஒன்றுமில்லை. நீ பார்த்து எது எழுதியபோதிலும் எனக்கு சம்மதம்தான்' என்று சொல்லிவிட்டு சன்னியாசியவர்களிடம் தன்னுடைய குமாரன் இன்னவிதமாய் கடிதம் எழுதியிருக்கிறான் என்கிற விபரத்தை தெரிவித்தாள். அவர் அக்கடிதத்தை தன்னிடம் கொண்டுவரச்சொல்லி வாசிக்கச் சொன்னார். பார்வதியும் அந்தப்படியே அதை வாசிக்க அவர் என் ஆண்டவனே என்று கண்ணீர்விட்டு கதற ஆரம்பித்தார். இதைப்பார்த்துக்கொண்டு நின்ற அம்மணியம்மாள் ஸ்வாமி தாங்கள் துயரப்படும்படியாக அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று மிக ஆவலாய் விசாரித்தாள். பிறகு கால்மணி நேரத்திற்கெல்லாம் அவர் தனது கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அம்மா அக்கடித வாசகங்களில் சிலது ஈசுவரனுடைய திருவிளையாடல்களாக இருக்கின்றன. அதனால்தான் அதில் எனக்கு ஒரு ஆனந்தபாஷ்பம் உண்டாயிற்று. தங்களுடைய குமாரன் அச்செகதீசனுடைய வரலாறுகளை பிரஸ்தாபித்திருப்பதைப் பார்க்க அச்செகதீசனுக்கு கடவுளினுடைய அநுக்கிரகம் பூரணமாயிருக்கிறதென கண்டுபிடித்தேன். அவன் அவனுடைய ஆயுள் உள்ளமட்டும் க்ஷேமமாயும் சுகமாயும் காலம் தள்ளுவானென்றே அபிப்பிராயப்படுகிறேன். ஆகையினால் அவனுக்கே நமது பார்வதியை கன்னிகாதானம் செய்துகொடுப்பதில் சம்மதம்தானென்று உங்களுடைய பிள்ளைக்குத் தெரிவித்து அது விஷயத்தை கூடிய சீக்கிரம் பேசிமுடிக்கச் சொல்லுங்கள். இலட்சுமி கலியாணத்தோடு பார்வதியின் கலியாணத்தையும் முடித்துவிடலாம் என்றார். பிறகு மறுநாள் பார்வதி தன் தாயார் உத்திரவிட்ட பிரகாரம் தன் தமயனுக்கு அடியில்கண்ட விதமாகக் கடிதம் எழுதினாள்.

வீராஜபுரம்.

எனதன்பிற்குரிய அண்ணா அவர்களுக்கு.

பார்வதி அநேககோடி நமஸ்காரம். உபயக்ஷேமம். நீங்கள் பட்டணம் போனபிறகு நமது சின்னம்மாவை இலட்சுமியினுடைய பாட்டனார் அவர் வீட்டில் சிலநாள் வந்திருந்து அவளுடைய கலியாண காரியங்களை சீரிட்டு வைக்கும்படி கேட்டுக்கொண்டதால் அவர்கள் அங்கே போயிருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் போன சிலநாளைக்கெல்லாம் நமது வீட்டில் ஒரு சன்னியாசி வந்திருக்கிறார். அவர் நமது இலட்சுமியை உங்களுக்கு கலியாணம் செய்துவைக்கவேண்டியதற்காக எடுத்துக்கொண்டிருக்கும் பிரயாசை அளவு சங்கையில்லை. இது விஷயத்தில் நடந்திருக்கும் தகரார்களை உங்களிடம் நேரில் சொன்னால் மாத்திரம் தான் திருப்திப்படுமே தவிர இக்கடித மூலியமாக தெரிவித்து ஸாத்தியமில்லை. அவர் எவ்விதமாகவோ அக்கிழவரை வசப்படுத்தி இலட்சுமியை நமது வீட்டிற்கே அழைத்துக்கொண்டு வந்துவிட்டார். உங்களுடைய இஷ்டப்படி உங்களுக்கும் என்னுடைய இஷ்டப்படி எனக்கும் கூடிய சீக்கிரத்தில் ஒரே தேதியில் நமது வீட்டிலேயே கலியாணம் நடக்கும்போல் தோணுகிறது. நீங்கள் அம்மாவுக்கு எழுதிய கடிதத்திற்கு அவர்கள் பதில் எழுதவேண்டியதாயிருக்க அதைவிட்டு நான் எழுதவானேயென்று ஆலோசனை செய்ய வேண்டாம். உங்களுடைய கடிதத்தில் கண்ட சங்கதிகள் என்னைப் பற்றி எழுதப்பட்டிருந்ததால் அவர்கள் அதற்கு நான் தான் பதில் எழுதவேணுமென்று உத்திரவு கொடுத்தார்கள். மற்றபடி இவ்விடத்திய க்ஷேமசவுக்கியங்களையும் உங்களுடைய சிநேகிதரை நான் அடிக்கடி மனக்கண்ணினால் தியானம் செய்துகொண்டிருக்கிறேன் என்பதையும் அவர்களிடம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இக்கடிதத்தில்கண்ட சங்கதிகளை அம்மாவிடமும் வாசித்துக்காட்டியாய் விட்டது.

இந்தப்படி தங்கள் பிரிய சகோதரி

பார்வதி.

இக்கடிதம் பாலகிருஷ்ணனிடம் போய்ச்சேர்ந்தவுடன் அவன் அதை தன் அருமை சிநேகிதனாகிய ஜகதீசனுக்கு காட்டினான். பிறகு அவ்விருவரும் வீராசபுரத்திற்கு அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டேயிருந்தார்கள். சன்னியாசியும் அம்மணியம்மாளும் கலியாண காரியங்களை மிக துரிதமாய் முடித்து விட்டார்கள். ஆனால் அந்தம்மா பள்ளிக்கூடம் சாத்துவதற்கு முந்தி கலியாணத்தை வைத்துக்கொண்டால் அது பிள்ளையினுடையவும் மாப்பிள்ளையினுடையவும் படிப்புக்குக் கெடுதலாயிருக்கும் என்று அக்கலியாணத்தை கோடைலீவில் நடத்துவதாக முடிவுசெய்தாள்.

6-வது அத்தியாயம்.

ஓர் அதிகாரி:—அம்மா, இன்று நடந்த ஆச்சரியத்தைக் கேள். ஒரு பிராமணஸ்திரீ. அவளை ஒரு மத்திம வயதுள்ளவளாகச் சொல்லலாம். அவளுடைய இலட்சணங்களைப் பற்றி பேசுவதாயிருந்தால் அதற்கு ஈடு ஜோடாக எந்த ஸ்திரீகளையும் ஒப்பிட்டுச் சொல்லமுடியாது. அந்தம்மா தற்கொலை புரிந்துகொள்ள யத்தனப்பட்டாளெனக் குற்றம் சாட்டப்பட்டு எனது முன்பாக விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டாள். அதன் வாதி தரப்பில் மூன்றுபேர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டார்கள். அதில் முதலாவது சாக்ஷி.

"நான் ஒரு போலீஸ் கான்ஸ்டபிள். நேற்றையதினம் நான் கிராமாந்தர பீட்டுக்கு போய்விட்டு மாலை சுமார் 5-மணிக்கு இவ்விமோசனபுரி ஆற்றின் லயன்கரை வழியாக ஸ்டேஷனுக்குத் திரும்பிவந்தேன். அப்பொழுது இந்தம்மா பிரவாஹமாக ஓடும் அவ்வாற்றோரத்தில் நிற்பது தென்பட்டது. உடனே நான் இதென்ன ஒரு பெண்பிள்ளை இவ்வத்துவானமான இடத்தில் நின்றுகொண்டிருக்க நியாயமில்லையே. இதில் ஏதோ நூதனமிருக்கிறது. எல்லாவற்றிற்கும் கிட்டப்போய் அந்தம்மாவையே விசாரிப்போம் என்று எனக்குள்ளேயே முடிவு செய்துகொண்டு இந்தம்மா இருந்த இடத்திற்கு சமீபமாக வந்தேன். இதற்குள் இந்தம்மா என் கண்

பார்க்க திடீரென்று தண்ணீரில் விழுந்துவிட்டார்கள். பிறகு சுமார் நாலைந்து விநாடிவரையில் இவர்கள் அத்தண்ணீரினின்றும் வெளிக்கிளம்பாததால் என்னையறியாமல் எனக்கு ஒரு பரபரப்புண்டாய் நானும் இவர்கள் விழுந்த இடத்திலேயே குதித்து இவர்களை கண்டுபிடித்து கரையேற்றினேன். ஆனால் கரையேற்றினேன் என்பதை இங்கே ஒரே வார்த்தையாக சொல்லிவிட்டபோதிலும் அதில் நான் பட்ட அவஸ்தை கடவுளுக்குத்தான் தெரியும். நிலைகொள்ளாத அந்நீரோட்டத்தில் நான் இந்தம்மாவை இழுக்க இந்தம்மா என்னை குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டு, விடாமல் பற்றிக்கொள்ள இந்தம்மாவினுடைய மடியில் மிக உறுதியாய் கட்டி வைக்கப்பட்டிருந்த சுமார் 30 அல்லது 35 சேர் நிறையுள்ள சிறு கற்களும் கூழாங்கற்களும் எங்கள் இருவரையும் தண்ணீருக்குள் அமிழ்த்த இவ்வித பிராணசங்கடங்களுக்கெல்லாம் உட்படும்படி நேர்ந்தது. இவ்வளவு பிரயாசையோடு கரையேற்றப்பட்ட இவர்கள் ஆற்றில் விழுந்தபின் குடித்திருந்த தண்ணீரை வெளிப்படுத்துவதற்குவேண்டிய யத்தனங்கள் எல்லாம் செய்யப்பட்டன. பிறகு இவர்களுக்கு நல்ல பிரஞ்ஞை வந்தவுடன் இவர்களை ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டுபோய் எனது ஆபீசரிடம் நடந்த சங்கதிகளைத் தெரிவித்தேன். அவர் இவர்களை நீங்கள் யாரென்றும் உங்களுடைய வரலாறுகள் என்னவென்றும், நீங்கள் பிராணனை துறக்கும்படியாக நேர்ந்த மனவருத்தம் என்னவென்றும் விசாரித்தார். அதற்கு அந்தம்மா அது என்னுடைய இஷ்டமென்று பதில் சொல்லிவிட்டார்கள். நான் அந்த ஆபீசர் முதலான அனைவரும் இவர்கள் ஒரு தக்க மனுஷியாளாயிருந்திருக்கக் கூடுமென்றும் ஏதோ தாங்கக்கூடாத மனவருத்தத்தினால் இவ்விதம் செய்ய மனந்துணிந்தார்கள் என்றும் அபிப்பிராயப் பட்டோம். கடைசியாக நாங்கள் எங்களுடைய கடமைகளை செலுத்திவிடவேண்டியவர்கள் ஆனதால் அதை நிறைவேற்றும் பொருட்டு இவர்களை சமுகத்தில் ஆஜர் படுத்தினேன்" என்றான்.

2-வது சாக்ஷி தான் இந்தம்மா நின்றுகொண்டிருந்த இடத்திற்கு சமீபமாயுள்ள ஒரு தோட்டக்காரன் என்றும் இந்தம்மா நேற்று பகல் இரண்டுமணிமுதல் அப்பக்கங்களில் உலாத்திக்கொண்டு சிறுசிறுகற்களை பொருக்கிச் சேர்த்துக்கொண்டிருந்ததை தான்

பார்த்ததாகவும், யாரோ பெரிய இடத்துப் பெண்பிள்ளையாய் இருக்கக்கூடும் என்கிற பயத்தினால் வார்த்தை கொடுக்க அஞ்சி தன் தோட்டவேலையைப் பார்க்கப் போய்விட்டதாகவும், முதல் சாக்ஷியாகிய கான்ஸ்டேபிளும் இன்னும் யாரோ ஒரு வழிப்போக்கரும் இந்தம்மாவுக்கு நல்ல நினைவுண்டாகும்படி பிரயாசைப்பட்டுக்கொண்டிருந்த காலத்தில் தான் திரும்பிவந்து தனக்குத் தெரிந்த சில பக்குவங்களையும் செய்ததாயும் வாக்குமூலம் கொடுத்தான்.

3-வது சாக்ஷி தான் அந்த ஆற்றங்கரை வழியாக வந்த ஒரு வழிப்போக்கனென்றும், தன்னை முதல் சாக்ஷி அவசரமாய் கூப்பிட்டு சங்கதிகளை தெரிவித்ததாகவும் அதன்பேரில் தானும் அவருமாக அதற்குவேண்டிய பரிஹாரங்களை எல்லாம் தேடினதாகவும் தெரிவித்தான்.

பிறகு நான் எனது அதிகாரஸ்தானத்தில் அந்தம்மாவைப் பார்த்து, 'அம்மா நீங்கள் தற்கொலை புரிந்துகொள்ள யத்தனப்பட்டதாக உங்கள்பேரில் குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டிருக்கிறது, நீங்கள் குற்றவாளியா அல்லவா' என்றேன். அதற்கு அவள் 'நான் குற்றவாளிதான். அது விஷயத்தில் கோர்ட்டார் பார்த்து என்ன தண்டனை விதித்தபோதிலும் அதற்குட்படவேண்டியதே தவிர வேறென்ன மறுத்துச் சொல்லப்போகிறேன்' என்றாள். மறுபடியும் நான் 'அம்மா நீங்கள் உங்களுடைய உயிரை மாய்த்துக்கொள்ளும்படியாய் உங்களுக்கு ஏற்பட்ட வருத்தமென்ன' என்றேன். அந்தம்மா 'யஜமானே அவைகளைப் பற்றியெல்லாம் சொல்லுவதாயிருந்தால் அது நானே எனது துக்கங்களை மறுபடியும் ஞாபகப்படுத்திக்கொள்வதுபோல் முடியும். மேலும் அவைகள் இந்த சந்தர்ப்பத்தில் வெளியிடக்கூடிய விஷயங்களுமல்ல. ஆகையினால் தாங்கள் தயவுசெய்து அது விஷயங்களைக் கேட்காமல் நான் செய்த குற்றத்தைப்பற்றி மாத்திரம் தண்டிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்' என்றாள். அந்தம்மா இவ்விதமாக அடைத்த பொருப்பாய் பதில் சொல்லிவிட்டதால், நான் அந்தம்மா விஷயமாக ஏதோ என்னாலான சகாயங்களை மாத்திரம் செய்யவேணுமே தவிர மற்ற பாகங்களைப்பற்றி விசாரிப்பது உசிதமல்லவென்று தள்ளி

விட்டு 'அம்மா நீங்கள் செய்த குற்றத்திற்காக சட்டப்படி உங்களை தண்டிப்பதாயிருந்தால் அதை நீங்கள் தாங்கமாட்டீர்கள். ஆகிலும் அக்காரணத்தை உத்தேசித்து உங்களை ஒருவித தண்டனையுமன்னியில் விடுதலை செய்துவிடவும் கூடாது. ஆகையினால் உங்களுக்கு பத்துரூபாய் அபராதம். நீங்கள் அதை செலுத்தத் தவறினால் 10 நாள் வெறுங்காவலில் இருக்கவேண்டும்' என்று தீர்ப்பு சொன்னேன். அதைக் கேட்டவுடனே அந்தம்மா 'என் ஜன்மத்திற்கு இத்தண்டனை ஒன்று பாக்கியிருந்ததுபோல் தோணுகிறது. நான் ஜீவனோடு இருக்குமளவும் இன்னும் எதற்கு உட்படவேணுமோ தெரியவில்லை. ஆனால் அவைகளை எல்லாம் இந்த விடத்தில் முறையிட்டுக்கொள்வது நியாயமில்லை என்பதை நான் அறியாதவள் அல்ல. ஆகிலும் என்னுடைய தற்கால அந்தஸ்தோ நான் போட்டுக்கொண்டிருக்கும் திருமங்கலியத்தைத் தவிர வேறு ஜீவேஜியில்லாதவளாகயிருக்கிறேன். இந்த நிலைமையில் நான் இப்போது கோர்ட்டாரவர்களால் விதிக்கப்பட்டிருக்கும் அபராதத்தை செலுத்தவேண்டும். அதற்காக எனது பர்த்தாவின் அறிகுறியாயிருக்கும் இத்தாலிச்சரட்டை கொடுப்போமென்றால் என் குடல் நடுங்குகிறது. அதைக் கொடுக்காமலே தங்கள் தீர்ப்பில் கண்டபிரகாரம் 10 நாள் வரையில் காராக்கிரகத்தில் இருந்துவருவோமென்றால் அதைவிட மானிடஜன்மத்திற்கு குறைவான விஷயம் வேறொன்றுமில்லை. அதோடுகூட பிராமண ஜாதியில் பிறந்து பலவித துன்பங்களுக்கெல்லாம் ஆளாகி கடைசியாக ஏற்பட்ட சொற்பபுத்திக் குறைவினால் இவள் ஜயிலில் இருந்தவள் என்று எனக்குப் பிற்காலத்தில்கூட சொல்லும்படியான ஒருவகைச் சொல்லுக்கு உட்படவேணுமே என்பதும் என் மனதில் போராடிக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட தருமசங்கடத்திற்கு நான் என்ன செய்யலாம்' என்று துயரப்பட்டாள். அதைப் பார்த்த நான் என் மனம் தாளாமல், 'அம்மா நீங்கள் இனி வருத்தப்படவேண்டாம். நான் என்னுடைய அதிகாரஸ்தானத்திலிருந்து சற்று முன் உங்களுக்கு அபராதம் விதித்த போதிலும் இப்பொழுது உங்களை ஒரு சகோதரியாக பாவிக்கவேணுமென்று எண்ணம் கொண்டிருக்கிறேன். ஆகையினால் நீங்கள் இராஜாங்கத்தாருக்குக் கொடுக்கவேண்டியதாயிருக்கிற அபராதத் தொகையை என் சொந்தப்பணத்திலிருந்தி

செலுத்திவிடுகிறேன். அதற்காக நீங்கள் கவலைப்படவேண்டாம். உங்கள் மட்டில் எனக்கு இவ்வளவு சிரத்தையும் தயவும் ஏற்படு வானேன் என்று கேட்கக்கூடும். அதற்குக் காரணம் என்னவெனில் நான் உங்களைக் கண்டதுமுதல் எனக்கு உங்களிடத்தில் ஒருவித மதிப்பும் மரியாதையைப் பொருத்த அச்சமும் உண்டாயிருக்கிறது. தவிரவும் முந்தி நீங்கள் கேட்டுக்கொண்டபடி உங்களுடைய பூர்வ சரித்திரங்களைப்பற்றி யாதொரு கேள்வியும் கேட்காமலே உங்களை என்னுடைய தங்கை அல்லது தமக்கையாக நினைத்து உங்களுக்கு ஆகவேண்டியதை முடித்துக்கொடுக்கவேணுமென்று அபிப்பிராய ப்படுகிறேன். எனக்கோ தாய் தகப்பன் ஸம்ஸாரம் இளைய சகோ திரன் சகோதிரிகள் சகலரும் இருந்துகொண்டிருக்கிறார்கள். நீங் களும் அவர்களோடு ஒருவராய் என் வீட்டிலிருந்தாலும் சரி அல் லது தனிஜாகை வைத்துக்கொள்ளவேணுமென்று பிரியப்பட்டா லும் சரி அந்தப்படியே உங்கள் வாழ்நாள் முழுமையும் தங்களு டைய காலக்ஷேப சம்பந்தமாய் என்னுடைய உதவிகளை அங்கீகா ரம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்' என்றேன். அதற்கந்த ம்மாள் 'யஜமானே, நான் இருந்த தருமசங்கடமான நிலைமையில் என்னை மானம் காத்த தங்களுடைய கருத்திற்கு நான் ஒன்றும் ஆக்ஷேபனை சொல்லப் போகிறதில்லை. ஆகிலும் எனக்கோ தையல் வேலைகளில் கொஞ்சம் அப்பியாசம் உண்டு. அதைக் கொண்டே நான் இதுவரையில் காலம் தள்ளிவந்தேன். இப்பவும் அத்தொழில் ஒன்றே என் ஒரு ஜீவனைக்காப்பாற்றுவதற்குப் போது மானது. ஆகையினால் தாங்கள் என் விஷயமாக செய்யவேண்டிய ஒத்தாசை எல்லாம் கூடி கேவலம் அநாதையாயிருக்கிற எனக்கு தங்களுடைய ஜாகைக்கு சமீபமாகவே ஒரு வீடு அமர்த்தி அதில் குடியிருந்துவரும்படி ஏற்படுத்தி என்னை அடிக்கடி மேல்விசாரணை செய்துவர வேண்டியதுதான். அவ்விதமாக திட்டப்படுத்தும் ஜாகைக்கு என்ன வாடகை ஏற்படுகிறதோ அதை நானே கொடு த்துவிடுகிறேன். மற்றப்படி எனக்கு ஒழிந்த நேரங்களில் நான் தங்களுடைய ஜாகைக்குவந்து அவ்விடத்திலேயே பொழுதுபோக் கிக்கொண்டிருக்கிறேன்' என்றாள். அதன்பேரில் நான் அந்தம் மாவை இன்றிரவு மாத்திரம் எனது ஆபீசுக்கு சமீபத்திலிருக்கும் நமது எட்கிளார்க்கு வீட்டில் இருங்கள் என்றும் நாளை அஸ்தமன

த்திற்குள் நமது வீட்டண்டையிலேயே ஒரு வசதியான ஜாகை அமற்றிவிடுகிறேனென்றும் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அதிகாரியினுடைய தாயார்—'எனது ஸத்புத்திரா, உனது சிந்தைக்கு ஸ்வாமி இன்னும் மேன்மேலும் உயர்ந்த பதவியில் வைத்து இரட்சிப்பார். நாம் முந்தி ஒரு சமயம் வறுமையை அனுபவித்தகாலத்தில், வியாதியாயிருந்த என்னையும் கண்தெரியாத உன் தகப்பனாகிய என் பர்த்தாவையும், சில ஆக்கையிளமை சில ஒட்டிய இளமைகளாயிருந்த உனது சகோதரர் சகோதரிகளையும், நீ தான் காப்பாற்றினாய். பிறகு நீ ஒரு சர்க்கார் அலுவலில் அமர்ந்து அதிலிருந்த உனக்கு வரவர பெரிய உத்தியோகம் உயர்ந்து இப்பொழுது ஒரு டிப்டிக்கலெக்டராக இருந்து வருகிறாய். ஈசுவரனுடைய அனுக்கிரகத்தினால் நீ எவ்வளவுக்கெவ்வளவு நல்ல ஸ்திதியை அடைந்தாயோ அவ்வளவுக்கவ்வளவு உன்து நற்குண நற்செய்கை முதலியதுகளும் விருத்தியம்சத்தை அடைந்துகொண்டே வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட நீ இன்று நடந்துகொண்டதாகச் சொன்னவிஷயம் எனக்கு ஒரு ஆச்சரியமல்ல. நீ இதுவரையில் பிரஸ்தாபித்த அந்தம்மாவை அவளுடைய கருத்துப்படியே நமது பக்கத்து வீட்டில் குடியிருந்து வரும்படி ஏற்பாடு செய்வோம். அவர்கள் சம்பந்தமாய் நீ என்னை எவ்வித ஒத்தாசை செய்யச்சொன்ன போதிலும் அந்தப்படியே நடத்தக் காத்திருக்கிறேன். அதற்காக நீ கொஞ்சம்கூட கவலைப்படவேண்டாம்' என்றாள்.

அதற்கு மறுநாள் போக மறுநாள் மேற்சொன்னவிதமாகவே அந்தம்மா அதிகாரி வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் குடித்தனம் வந்தார்கள். அவர்களுடைய நற்குணங்களை உத்தேசித்து அவர்களை குணவதியம்மாளென்று பெயரிட்டழைப்போம். அந்தம்மா அங்கே வந்த பிறகு அவ்வதிகாரி வீட்டாருக்கு மாத்திரமல்ல அப்பட்டணத்திலுள்ள அனைவருக்கும் ஒரு சகோதரிபோல் ஆய்விட்டாள். அவள் பேருக்கு மாத்திரம் ஒரு தனி ஜாகை ஏற்படுத்திக்கொண்டிருந்தாளே ஒழிய அவளுடைய பொழுது முழுமையும் அவ்வதிகாரி வீட்டிலேயே செலவழிக்கப்பட்டு வந்தது. இவ்விதமாக அவள் வந்து சுமார் ஆறுமாதம் ஆனபிறகு ஒருநாள் மாலை 6½-மணிக்கு அவள் சமீபத்திலுள்ள ஒரு குளத்தில் தண்ணீர் மொண்டுகொண்டு வீட்டுக்குத் திரும்பும்பொழுது அப்பாதையில் ஒரு சிறு மூட்டை ஒன்று கீழே

கிடந்தது. அதைப் பார்த்த அவள் அதற்குடையவர்கள் யாராவது வருவார்களோ என்று சற்றுநேரம் காத்திருந்தாள். அப்படிக்கொருவரும் தென்படவில்லை. அதற்குமேல் அவள் அம்மூட்டையை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து தண்ணீர்க் குடத்தை வைத்துவிட்டு அம்மூட்டையை பிரஸ்தாப அதிகாரியிடம் கொடுத்து நடந்த சங்கதியையும் தெரிவித்தாள். அவர் அதை தன் சேவகர்களில் ஒருவனைக்கொண்டு அவிழ்த்துப் பார்க்கச் சொல்ல அதில் 1000 ரூபாய்க்கு சில நோட்டுகளும் வேறு சில தஸ்தவேஜிகள் பிரூது நகல் முதலியதுகளும் இருந்துகொண்டிருந்தன. அவ்வதிகாரி அத்தஸ்தாவேஜிகள் ஒவ்வொன்றின் தலைப்பையும் வாசித்துப் பார்க்க அவைகள் சிறுகாட்டூர் சீனுவய்யர் குமாரர் சாமினாதய்யர் என்ற ஒருவருக்கு ஸாதகமாயிருந்தது. பிறகு பிரூது நகலை வாசித்துப் பார்க்க அதில் ஷை சாமினாதய்யர் வாதி என்றும் அரகூருக்கடுத்த வீரராஜபுரத்திலிருக்கும் நாணுவய்யர் குமாரர் சேஷப்பய்யர் பிரதிவாதி என்றும் கண்டிருந்தது. மறுபடியும் அவர் அதன் உள்வயண சங்கதிகளை வாசித்துப் பார்க்க அதில் அப்பிரதிவாதியாகிய சேஷப்பய்யர் அவரிடம் மெய் நம்பிக்கையாக வைக்கப்பட்டிருந்த சில ஸ்தாவர சொத்துக்களை சொந்தத்தில் ஆக்கிரமித்துக் கொண்டதாகவும், அச்சொத்துக்களை திருப்பிக் கொடுப்பதாக அவர் எழுதிக் கொடுத்திருந்த வர்த்தமானத்தை வாங்கிப் பார்ப்பதுபோல் பார்த்துவிட்டு பரிகரித்து விட்டதாகவும், ஆகையினால் அடியில் கண்ட விபரப்படிக்குள்ள அச்சொத்துக்கள் சாமினாதய்யர் என்ற தனக்கே திரும்பவும் கிடைக்கும்படி தீர்ப்பளிக்க வேணுமென்றும் எழுதப்பட்டிருந்தது. அவ்வதிகாரி அவைகளை முழுமையும் வாசித்துப் பார்த்தபின் அக்குணவதியம்மாளிடம் அதன் விபரம் இன்னதென்றும் அம்மூட்டை சிறுகாட்டூர் சாமினாதய்யர் என்ற ஒருவருக்குச் சொந்தமாய் இருக்கலாமென்றுதான் ஊகிப்பதாகவும் தெரிவித்தார். அதற்கந்தம்மாள், 'ஐயோ இதைத் தவிரவிட்ட அப்பிராமணன் எங்கெங்கே தேடிக்கொண்டு அலைகிறாரோ. அவருடைய பிரூது நகலில் கண்டபடி சேஷப்பய்யர் என்ற ஒரு மகா துரோகியினால் அவர் நஷ்டமடைந்திருப்பது ஒருபங்கும், இப்பொழுது இதிலுள்ளவைகள் காணாமல் போய்விட்டதே என்பது பத்து பங்குமாக வருத்தப்பட்டுக்கொண்டு அவர் யாது செய்கிறாரோ தெரியவில்லையே' என்றாள்.

அதற்கவ்வதிகாரி 'அம்மா இதிலுள்ளவைகளை அவரிடம் சேர்ப்பிக்கச் செய்வது நமக்கு ஒரு பெரிய காரியமல்ல. ஏனெனில் எப்பொழுது நமக்கு பேர்வழி தெரிந்து போய்விட்டதோ இனி நாம் அதைப்பற்றி அதிக கவலை வைக்கவேண்டியதேயில்லை. நாம் தற்காலம் செய்யவேண்டியதெல்லாம் கூடி இதை இந்த ஊர் போலீசாமீசரிடம் அனுப்பிவிடவேண்டும். பிறகு அவர் எப்படியாவது இதன் சொந்தக்காரர்களை வரவழைத்து இதிலுள்ளவைகளை அவரிடம் சேர்ப்பித்துவிடுவார்கள்' என்றார். அவர்கள் முடிவு செய்துகொண்ட பிரகாரமே மறுநாள் காலமே ஷை மூட்டையானது இன்ன விதமாய் கிடைத்தது என்கிற விபரத்துடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பப்பட்டது. அதற்கு சுமார் ஒரு மணி நேரத்திற்கு முந்தியே அதன் சொந்தக்காரர் அந்த ஸ்டேஷனுக்கு வந்து அங்குள்ள ஆபீசரிடம், தான் ஒரு வியாஜ்ஜியம் செய்யவேண்டிய நிமித்தம் தன்னைச் சேர்ந்த உறன்முறையார் ஒருவரிடத்தில் ரூபாய் ஆயிரம் கடன்வாங்கி வந்ததாகவும் அது பல சில்லரை கோட்டுகளாக இருந்ததாகவும், அவைகளையும் வேறு சில தஸ்தாவேஜிகளையும் ஒரு வேஷ்டியில் வைத்துக்கொண்டு ஒரு ஜட்காவண்டியில் ஏறிவந்ததாகவும் தான் வண்டியேறும்பொழுது இருந்த அம்மூட்டை பிறகு அவ்வண்டியை விட்டிறங்கும்பொழுது இல்லை என்றும் அம்மூட்டை காணமல் போயிருக்கும் விஷயத்தில் தன்னுடன் கூட வந்த பிரயாணிகளிடத்திலாவது அல்லது வண்டிக்காரனிடத்திலாவது தனக்குச் சந்தேகம் இல்லை என்றும் ஆகையினால் அது வண்டியில் வரும்பொழுதுதான் கீழே தவரிவிழுந்திருக்கக்கூடுமென்றும் அதை விசாரித்து தன்னுடைய சொத்துக்கள் தனக்கு கிடைக்கும்படி முயற்சி செய்யவேணுமென்றும் அவைகளைக்கண்டு எடுத்துக்கொடுத்தவர்களுக்கு ரூபாய் 250 இனும் கொடுப்பதாகவும் பதியவைத்துக் கொண்டிருந்தார். அவர் வாக்குமூலம் முடியும் நேரமும் டிப்டிகலெக்டருடைய சேவகன் ஸ்டேஷனுக்குவந்த நேரமும் ஒன்றுக்கொன்று ஒத்துக்கொண்டது. அந்த ஸ்டேஷன் அவுஸ் ஆபீசர் அம்மூட்டையை அவிழ்த்துப் பார்க்க அதில் அவ்வாக்குமூலக்காரர் பதியவைத்த யாவத்து சொத்துக்களும் சரியாகவேயிருந்தன. அதன் பேரில் அவர் அப்பிராமணனை நோக்கி 'ஸ்வாமி, நீங்கள் ஒரு நல்ல அதிர்ஷ்டசாலிதான். இவ்விதமாக

கைதவறிப்போன சாமான் அல்லது வஸ்துக்கள் திரும்பி அகப்படு வதே துர்லபம். அப்படியே அகப்பட்டபோதிலும் அது இவ்வளவு சீக்கிரமாகவும் சுலபமாகவும் கிடைக்க மார்க்கமில்லை. என்று சொல்லிவிட்டு அச்சொத்துக்களை அவரிடம் ஒப்பித்து சாட்சிகளு டன் ரசீது வாங்கிக்கொண்டார். பிறகு அப்பிராமணன் இவைக ளைக்கொண்டு வந்த சேவகனுடன் டிப்டிகலெக்டர் ஜாகைக்கு வந்தார். அக்கலெக்டர் அவரைக் கண்டவுடனே உட்காரச்சொ ல்லி நீர் யாரென்று விசாரிக்க அவர் தான் இன்னாரென்பதை விபரமாய்ச் சொல்லிவிட்டு அதற்கு முதல் நாள் காணுமல் போன தன் சொத்துக்களை கண்டெடுத்தவர்களுக்கு தான் இருநூற்றைம் பது ரூபாய் கொடுப்பதாக சங்கற்பித்துக்கொண்டபடி அதை நிறை வேற்றும்பொருட்டு தான் வந்திருப்பதாகவும் தெரிவித்தார். உட னே அவ்வதிகாரி குணவதியம்மாளை வரவழைத்து அப்பிராமணனு டைய கருத்தைத்தெரிவித்தார். அந்தம்மா அப்பிராமணனைப் பார் த்து, 'ஸ்வாமி, நீர் சொன்னதே எனக்குப் போதுமானது. காணுமல் போன உம்முடைய பொருள் எப்பொழுது திரும்பவும் அகப்பட் டதோ அது முதலே உமக்கு நற்காலமும் பிறந்துவிட்டது. நீர் உம்முடைய வார்த்தையைக்காப்பாற்றும்பொருட்டு என்னைத் தேடி வந்ததைக்கொண்டே நீர் ஒரு யோக்கியரென்றும் அஸத்திய வழிக ளில் பிரவேசிக்கமாட்டீரென்றும் உம்முடைய பிருது நகலில் கண் டபிரகாரம் வீராராஜபுரம் சேஷப்பய்யர் என்ற ஒருவரால் நீர் மோச ம்போயிருப்பது உண்மையென்றும் கண்டுபிடித்தேன். அப்படிப் பட்ட உமக்கு முடிவில் எல்லாம் அனுகூலமாகவே முடியும் என்ப தில் சந்தேகமேயில்லை. நிற்க நீர் இப்பொழுது என் நிமித்திய மாக ஏதோ செய்யவேணுமென்று உத்தேசித்துவந்த விஷயத்தில் நான் நன்றியுள்ளவளாக இருக்கிறேன். ஆகிலும் நான் அதை அபேக்ஷித்தவள் அல்ல. ஆகையினல் அத்தொகையை தயவுசெய்து நீரே உமது சொந்த உபயோகப்படுத்திக் கொள்ளும்' என்று கேட் டுக்கொண்டாள். இவைகள் அனைத்திற்கும் கூடவிருந்த டிப்டி கலெக்டர் அவரைப்பார்த்து 'ஐயா' இந்தம்மா சொல்வதற்கு ஒன் றும் ஆக்ஷேபனை சொல்லாதீர்கள். மேலும் நான் இவர்களைப்பற்றி தெரிந்துகொண்டிருக்கும் வரையில், இவர்கள் இதுமாத்திரமல்ல இன்னும் இதைப்போல் ஆயிரம் மடங்கு தொகை கொடுக்கிறேனெ

ன்றபோதிலும் அதை அங்கீகரிக்கக் கூடியவர்களுமல்ல. ஆனது பற்றி அதை மறந்து நான் சொல்லுவதுபோல் நடவுங்கள். எனது மைத்துனர் ஒருவர் உம்முடைய ஊருக்குச் சமீபத்திலுள்ள அரகுரில் வக்கீலாக இருந்துகொண்டிருக்கிறார். அவர் ஒரு ஐக்கோர்ட்டு வக்கீல். நீர் இப்பொழுது செய்ய உத்தேசித்திருக்கும் வியாஜ்ஜியத்தை ஒழுங்காய் நடத்தும்படி அவருக்கு ஒரு சிபார்சு கடிதம் கொடுக்கிறேன். அதோடுகூட அதில் உங்களுடைய வியாஜ்ஜியம் ஜயமடைந்து சொத்துக்கள் உங்கள் வசப்படும் வரையில் அவ்வக்கீல் உங்களை பீஸ் கேட்கக்கூடாதென்றும், அவ்வியாச்சியம் ஒரு சமயம் தோற்றுப்போய்விட்டாலும் அவர் எடுத்துக்கொள்ளும் பிரயாசைக்குத்தகுந்த பரிஹாரங்களை எனது சொந்த ஐவேஜியிலிருந்து நானே செய்துவிடுகிறேனென்றும் கண்டெழுதுகிறேன்' என்று சொல்லி அந்தப்படியே ஒரு காகிதம் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்ட அப்பிராமணன், 'பிரபுவே, சற்றுமுன் இந்தம்மா சொன்னபிரகாரம் எனக்கு நற்காலம் ஆரம்பத்திருப்பதினால் தான் ஒப்புவமை சொல்லமுடியாத இந்தம்மாவினுடைய தர்சனமும் தங்களுடைய பேட்டியும் கிடைக்கலாயிற்று. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வாழ்த்தலரிது என்னும் முன்னோருடைய மொழிப்பிரகாரம் பரோபகார நிமித்தியமாகவே சகோதரி சகோதரராக ஜன்மம் எடுத்திருக்கும் உங்கள் இருவர் விஷயத்தில் நான் என்ன பிரதி உபகாரம் செய்யப்போகிறேன்' என்று சொல்லிவிட்டு அவர்களிடம் உத்திரவு வாங்கிக்கொண்டு போய்விட்டார்.

அவர் போனபின்பு அந்தம்மா அவ்வதிகாரியைப் பார்த்து, 'ஸ்வாமி, மனுஷிய சுபாவம் என்னென்ன விதமாக ஏற்பட்டிருக்கிறது. ஒருவர் வயரு எறிய மைற்றொருவர் மோசம் செய்யத் துணிகிறார்களே. அவ்விதமாக மோசம் செய்பவர்கள் முடிவில் என்ன சுகமடையப் போகிறார்கள் என்பதுதான் கண்டுபிடிக்கக் கூடவில்லை. ஒருவர் இறந்துபோனபின்பு அவரைப்பற்றி பிறர் ஐயோ இன்னார் இறந்தா போய்விட்டார்கள் என்று பரிதாபத்தோடு துக்கப்படுவது அல்லது பாவி தொலைந்தான் இனி எல்லோருக்கும் க்ஷேமந்தான் என்று சந்தோஷம் கொண்டாடுவது ஆகிய இரண்டில் ஒன்றுதான் அவரவர்கள் வைத்துவிட்டுப்போகும் ஆஸ்தியே தவிர மற்றப்படி வீடுவாசல் நிலபலம் ரொக்கம் முதலியதுகளை எல்லாம் ஒரு

ஆஸ்தியாகச் சொல்வது அவ்வளவு நியாயமில்லை என்பது தங்களுக்குத் தெரியாததல்ல. இப்போது இங்கே வந்துவிட்டுப்போன பிராமணனை ஏமாற்றிய சேஷப்பய்யரைப்போல் பலர் பலவிதமாய் சொத்துக்களை சேர்ப்பதில் மாத்திரம் புத்திசாலிகளாய் இருந்து வருகிறார்கள். வேறு சிலர் வியாபாரம் கைத்தொழில் விவசாயம் உத்தியோகம் முதலிய எதையாவது ஒன்றைச் செய்து அதன் மூலமாயும் பொருளைச் சேர்க்கிறார்கள். அது சம்பந்தமாய் அறிவை செலுத்தும் அவர்களில் சிலர் மாத்திரம் தாங்கள் இறந்துபோன பிறகும் தங்களுடைய பெயரானது அழியாமல் இருக்கவேணுமென்பதாக அதற்குவேண்டிய நல்வழிகளிலும் அவ்வறிவை உபயோகிக்கிறார்கள். மற்றவர்களோ தங்கள் நினைவுதடுமாற்றம் காணும் வரையில் மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை முதலிய பலவித மாயாசம்பந்தமான உலக வாழ்க்கையில் உழன்று கடைசியாக இங்குங்கெட்டு அங்குங்கெட்டு திண்டாடுகிறார்கள். நல்லவனென்று ஒருவன் பெயரெடுக்க வேணுமானால் அதற்கு பணம், காசு, ஊரைப்பகட்டத்தக்க வெளிப்பூச்சு முதலிய ஒன்றும் தேவையேயில்லை. அவன் எந்த காரியத்திற்கும் தெய்வத்திற்கு பயந்து நடக்கக்கூடிய சுபாவமுள்ளவனாயும் பொதுநலத்தையே நாடியவனாயும் இருந்துவந்தால் அவனுக்கு மிஞ்சிய நல்லவன் இல்லை என்கிற பெயர் தனக்குத்தானே ஏற்பட்டுவிடும். அதோடுகூட அவன் பக்தகோடிகளில் ஒருவனாகவும் ஆய்விடுகிறான். அதுமாத்திரமா, அவன் ஜீவனோடிருக்குமளவும் அவனுக்கு யாதொரு குறைவும் ஏற்படமாட்டாது. ஆனால் தன்னை ஒரு பக்திமானென்றும் பொதுநலம் கருதியவனென்றும் பிறர் மதிக்கவேணும் என்கிற நோக்கத்துடன் மாத்திரம் ஒருவன் அதற்குவேண்டிய வழிகளை அநுசரிப்பானேயாகில், அதை இரண்டாம்பட்சமாகத்தான் சொல்லவேண்டும். நம்மிந்தியர்களில் தேசாபிமானி அல்லது ஜனானுகூலன் என்று பெயர் வாங்கியிருக்கும் கனவான்களில் அநேகருடைய உட்கருத்தோ உற்றுப்பார்க்கும் பட்சத்தில் தம்தம் சுயநலத்தையும் கௌரவத்தையும் நாடியதாகத் தான் இருந்துகொண்டிருக்கிறதே தவிர முடிவில் உள்ளபடியே பொதுநலம் கருதியதாகத் தோணவில்லை' என்றாள். அவர்கள் இவ்விதமாக சம்பாஷித்துக்கொண்டிருக்கும்பொழுது மணி பத்தாய்விட்டது. அவ்வதிகாரி தன் ஆபீஸ்

வேலைகளையும், குணவதியம்மாள் அவளுடைய சமையல் சாப்பாடு முதலிய கிரககிருத்தியங்களையும் பார்க்கப் போய்விட்டார்கள்.

இது நடந்து சுமார் ஒரு மாசத்திற்குப் பின், பிரஸ்தாப குணவதியம்மாளுடைய உள்ளங்காலில் ஒரு மூங்கில் முள் தைத்தது. உடனே அவள் அதை மெதுவாய் வெளிப்படுத்தியும் அதில் ஏதோ கொஞ்சம் சேஷம் இருந்ததுபோல் தோணுகிறது. அதுவும் பிறகு அதில் புகுந்துகொண்ட மண்ணுமாகச் சேர்ந்து அந்த இடத்தில் சற்று உபத்திரவத்தை உண்டாக்கிக்கொண்டேயிருந்தது. பிறகு 2, 3 நாளுக்குள் அவ்வுபத்திரவம் வரவர அதிகப்பட்டு கடைசியாக தாங்கக்கூடாத குத்தல் வலி முதலியதுகளில் கொண்டு வந்துவிட்டது. அதோடுகூட புறங்காலில் கொஞ்சம் வீக்கமும் கண்டிருந்தது. இந்த நிலைமையில் அவளுக்கு நடமாட்டம் என்பதே அற்றுப்போயிற்று. அதன்பேரில் அவள் ஸ்நானம் சாப்பாடு முதலிய வேலைகளுக்குக்கூட இன்னொருவருடைய உதவியை அபேக்ஷிக்கவேண்டியதாயிற்று. ஆனல் அது விஷயங்களில் அவளுக்கு யாதொரு குறைவும் ஏற்படவில்லை. ஏனெனில் மேற்சொன்ன அதிகாரியினுடைய தாயார் சமுசாரம் முதலானவர்கள் அவளண்டையிலேயே ஸதா காத்துக்கொண்டு அவளுக்காக வேண்டிய மேற்சொன்ன விஷயங்களை எல்லாம் சாக்கிரதை செய்துகொண்டுமிருந்தார்கள். அவ்வதிகாரியோ தன்னுடைய சர்க்கார் வேலைகளை கவனித்த நேரம் போக பாக்கிக் காலங்களில் அந்தம்மாவினுடைய தேகசம்பந்தமாய் வைத்தியரைக்கொண்டு என்னென்ன சிகித்ஸைகள் செய்யவேணுமோ அவைகளை யாதொரு குறைவன்னியில் பார்த்துவரும்படி ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். விஷயங்கள் இவ்வாருக நடந்து வருகையில் மேற்சொன்ன வைத்தியர் அக்குணவதியம்மாளுடைய காலானது கையாடவேண்டிய நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறதென்றும், அப்படி செய்யாத வரையில் அது பலவித விபரீதங்களை உண்டுபண்ணுமென்றும் தெரிவித்தார். அதற்கவ்வதிகாரி அக்கையாடலானது தன் முன் நடக்கவேணுமென்பது பற்றி அதற்கு மறுநாள் போக மறுநாள் நாயிற்றுக்கிழமையானதால் அன்று தனக்கு சாவகாசமாயிருக்குமென்றும், அதுவரையில் ஏற்கனவே செய்துவந்த வெளிப்பிர

யோகங்களையே செய்துவரும்படிக்கும் கேட்டுக்கொண்டார். பிறகு நாயிற்றுக்கிழமை வந்தவுடனே அன்று காலை 8 மணிக்கெல்லாம் அந்த வைத்தியர் அவ்வதிகாரி முதலானவர்களுடைய முன்னிலையில் முள் தைத்திருந்த அக்குணவதியம்மாவினுடைய காலை பரிசோதித்துப் பார்க்கையில் அதில் அரையங்குலம் மடித்த முள்ளும் சீ இரத்தம் முதலியதுகளும் வெளிப்பட்டன. உடனே அவர் பாக்கியிருக்கும் மஷ்டுகளை வெளிப்படுத்துவதற்கும் உள் வினைகள் இன்னும் அதிகப்படாமலிருப்பதற்கும் அதன் உட்புறத்தில் கொஞ்சம் காரமும் மேல்புறம் மாவுமாக வைத்துக் கட்டுக்கட்டிவிட்டுப் போய்விட்டார். அன்றிரவு சத்திரம் வைத்த அந்தம்மாவினுடைய காலில் தாங்கக்கூடாத குத்தல் வலி முதலியன ஏற்பட்டன. அதன்பேரில் அங்கு கூடியிருந்த அதிகாரி முதலியவர்கள் அவர்களால் கூடியமட்டும் அந்தம்மாவுக்கு தைரியம் சொல்லிக்கொண்டேயிருந்தார்கள். அதற்கந்தம்மா அவ்வதிகாரியை நோக்கி 'ஸ்வாமி, தாங்கள் எனக்கு எவ்வித சமாதானம் சொன்னபோதிலும், ஒருவர் படும் தொந்திரவை மற்றொருவர் வாங்கி அனுபவிக்கக்கூடுமோ? உலக வழக்கமோ எவர்களுக்காவது ஒரு துக்கம் அல்லது துன்பம் நேரும் காலத்தில் பிறர் உள்ளபடியே அவர்களுக்கேதாவது ஒருவித சமாதானம் அல்லது பரிஹாரம் சொல்வது சகஜந்தான். அப்பரிஹாரம் அல்லது சமாதானங்களோ சிற்சில காரியங்களுக்கு மாத்திரம் பிரயோசனப்படுமே தவிர தெய்வீகமான கட்டளைகளை ஒன்றும் செய்துவிட முடியாது. ஆனால் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அத்தெய்வத்தை அந்தரங்க மன உருக்கத்தோடு தியானிக்கும் பட்சத்தில் இவைகள் மாத்திரமல்ல, இன்னும் இவைகளைப்போல் ஆயிரம் மடங்கு துன்பங்கள் நேர்ந்தபோதிலும் அவைகள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் தனக்குத்தானே மாறி இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடிப்போகும். ஆகையினால் எல்லோரும் தயவுசெய்து சற்று நான் ஏகாந்தமாய் இருக்கும்படி அனுமதி கொடுங்கள்' என்று கேட்டுக்கொண்டாள். அந்தப்படியே அவர்களும் அவரவர்கள் படுத்துக்கொள்ளுமிடத்திற்கு படுக்கப் போய்விட்டார்கள். பிறகு அந்தம்மா எங்கும் நிறைந்த பரிபூரணவஸ்துவாகிய கடவுளை நோக்கி பின்வருமாறு முறையிட்டுக்கொண்டாள். 'ஓ ஜகதீசா! என்னுடைய நிலைமை இன்

னதென தாங்கள் அறியாததல்லவே. இந்த அந்தஸ்தில் எனக்கு இச்சரீரவார்த்தையையுமா ஏற்படுத்தவேணும். நானோ எனது ஜீவாத்மாவினால் ஓர் நாமரூபத்தை அடைந்திருக்கும் ஜடவஸ்துவாகிய இச்சரீரத்தை வீணில் ஏன் சுமக்கவேணும் என்கிற எண்ணத்தின் பேரில் அதை ஒழித்துவிடத்துணிவுகொண்டேன். அதை அறிந்த தாங்கள் கான்ஸ்டேபிள் ரூபமாய் வந்து தடுத்து, நான் செய்தது தப்பிதம் என்பதை சாக்ஷி ரூபங்களாக நிரூபித்து பிறகு அதிகார ஸ்தானத்திலிருந்து எனக்கு அபராத தண்டனையும் விதித்திருக்கிறீர்கள். அத்தண்டனைக்குள்ளான நான் தங்களது திருவிளையாடல்களில் ஒன்றாகிய இச்சரீரத்தை நான் என்கிற மமதையினால் அழிக்கவாவது நாசப்படுத்தவாவது கூடாதென்று தாங்கள் கட்டளையிட்டதாக உணர்ந்து, நீங்கள் ஆட்டிவைக்கும் கூத்துக்கெல்லாம் உட்பட்டுக்கொண்டே வருகையில் இப்பொழுது இத்தேக ஹிம்சையை உண்டுபண்ணியிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட சமயத்தில் உங்களன்னியில் நான் யாரிடத்தில் முறையிட்டுக் கொள்வேன். எல்லோருக்கும் பொதுவாய் தெய்வம் என்னும் பெயரை வகித்த உங்களுடைய நிச்சயத்தை அறிவதற்கோ அளவற்ற மார்க்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை முழுமையும் விஸ்தரிப்பதாயிருந்தால் அதற்கு இந்த ஆயுளே போறாது. ஆகிலும் அவைகளில் ஒன்றையாவது ஞாபகப்படுத்திக் கொள்ளாமலிருப்பதற்கு மனம் வரவில்லை. அது யாதெனில் பிரதி மனிதனுடைய ஐம்புலன்களில் ஒன்றாகிய நேத்திரங்களை எடுத்துக்கொள்ளுவோம். அக்நேத்திரங்களோ இரண்டு வெண்மையான சிறு கோளங்களாயும், அவைகளின் மத்தியில் தனித்தனி நாகைப்பழத்தைப்போல் உருட்சையாயும் கருத்தும் அவைகளின் நடுவில் சொற்ப நீலம் மஞ்சள் முதலிய பல வர்ணங்களோடு கலந்தும் இருக்கும் கருவிழிகளாயும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அக்கருவிழிகளோ மேற்சொன்ன வெண்மையான கோளவடிவங்களுக்குள் இஷ்டப்பட்ட வாகில் சுழன்று வரும்படிக்கும் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து யோசிக்கும பட்சத்தில் அக்கருவிழிகளுக்குத்தான் பார்வை சக்தி ஏற்பட்டிருக்கிறதாகவும் தெரியவருகிறது. அதிலிருந்து மறுபடியும் யோசிக்கும் பட்சத்தில் அக்கருவிழிகளுக்கும் அப்பார்வை சக்தி இல்லை என்றே நிச்சயிக்கவேண்

டியிருக்கிறது. ஏனெனில் பிறவிக்குருடரின் கண்களோ கிரமமாக பார்வை சக்தி உடையவர்களுடைய கண்களைப்போல் வெண்மை கருப்பு ஆகிய இரண்டு விழிகளோடும் யாதொரு பின்னமன்னி யில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படிக்கிருந்தும் அவைகளின் பார்வை சக்திக்கு குறைவு வருவானேன். இதைக்கொண்டே இப்பார்வை சக்தி என்பது மேற்சொன்ன கருவிழிகளன்னியில், ஒரு சூட்சுமமாக இருக்கிறதென நிர்ணயிக்கவேண்டியிருக்கிறது. இப்படிப்போலவே உலகசிருஷ்டியிலுள்ள ஒவ்வொரு வஸ்துவிலும் சூட்சுமம் ஒன்றுயிருக்க அதை தன்னுள் அடக்கிக்கொண்டிருக் கும் ஸ்தூலத்தையும் சேர்த்துத்தான் ஒவ்வொரு பெயர் ஏற்பட்டி ருப்பதாக தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. இவ்வித லீலாவினோ தங்களுக்கெல்லாம் காரணகர்த்தராயிருக்கும் நீங்கள் இப்பொ ழுது நான் படும் அவஸ்தையை நிவர்த்தி செய்வது ஒரு பெரிதா. நானே எனக்கு அறிவு தெரிந்தது முதல் நல்ல புருஷனை அடைய வேணுமென்று உங்களை பிரார்த்தித்துக் கொண்டேயிருந்தேன். தாங்களும் அதை அங்கீகரித்து அந்தப்படியே அநுக்கிரகித்தீர்கள். அது முதல் நாங்கள் ஒருவருக்கொருவர் அத்தியந்தப்பிரியமாய் இருந்துவந்தோம். ஆனால் என்னுடைய துரதிர்ஷ்டமோ நாங்கள் பெரும்பாலும் சுயேச்சையாய் இருந்ததேயில்லை. நாங்கள் இவ்வித மாக இருந்து வருகையில் அவர்கள் என்னைவிட்டு பிறியும் காலமும் நேர்ந்துவிட்டது. எனக்கு கலியாணம் ஆன ஒரு வருஷத்திற்கெ ல்லாம், நான் என் பிறந்த வீட்டைவிட்டுப் புகுந்த வீட்டை அடை ந்தேன் என்பதும் அதுமுதல் நாளது வரையில் அப்பிறந்த வீட்டை நாடவேயில்லை என்பதும் தாங்கள் அறியாததல்லவே. நான் எனது பர்த்தாவுடன் வாழும் காலத்தில் எனது பிறந்த வீட்டை ப்பற்றி எப்பொழுதாவது பெருமை பேசியதுண்டா? அல்லது அங்கே போக்குவரத்தாயிருக்கவேணுமென்று அபேக்ஷித்ததாவ துண்டா? நான் எனது பிராணநாதனோடு இல்லறம் நடத்தும் காலத்தில் அவர்களுக்காவது அவர்களைச் சேர்ந்தவர்களுக்காவது நான் செய்யவேண்டிய சிச்ருஷைகளில் ஏதாவது குறைவு செய் தேனு. அப்பிராணநாதரைப் பார்க்கிலும் நான் சில உலகதருமங் களில் தேர்ச்சியடைந்தவளாக இருந்தபோதிலும் அவர்கள் அல்லது பலருடைய முன்னிலையிலும் அவைகளை காட்டிக்கொள்ளவேணு

மென்றும் அதன் மூலமாய் கௌரவப்படுத்திக் கொள்ளவேணு மென்றும் எண்ணியதுண்டா? நான் புகுந்த குடும்பத்தில் எத்த னையோ தவறுதல்களும் குறைகளும் ஏற்பட்டிருந்தும் அவைகளை ப்பற்றி யாரிடத்திலாவது பிரஸ்தாபித்ததுண்டா? நான் ஒரு மானிட யோனியில் பிறந்தும் ஸ்திரீஜன்மம் அடைந்திருப்பதினால் அதினின்றும் கடைத்தேறுவதற்கு பர்த்தருசிச்ரூஷைதான் முக் கிய ஆதாரமென்றும் அதைத் தவிர வேறு எவ்வளவு கல்வி அறிவு ஞானம் முதலியவைகளாவது அல்லது அவைகளை பிரசங்கிக்கத் தகுந்த திறமையாவது இருந்தாலும் அவைகள் நிஷ்பிரயோஜன மாய் முடியுமென்றும், அண்டபிண்ட சராசரங்கள் அனைத்திற் கும் மூலகாரணமாயிருக்கும் தங்களுடைய பாதாரவிந்தமாகிய முக்தியை அடைவதற்குக்கூட அக்கணவர்தான் காரணபூதமாக இருந்து வருகிறாரென்றும் நான் தெரிந்துகொண்டு அதற்குத் தக் க்கபடி நடந்துவரவில்லையா. இன்னும் நான் அப்புருஷனோடு எப்பொழுதாவது எதிர்த்து வாயாடியதுண்டா? அல்லது அவர் களைப்பற்றி யாரிடத்திலாவது புறம் கூறியதுண்டா? அவர்க ளோடு நான் இருக்குமளவும் அவர்கள் தான் தெய்வமென்றும் அத ற்கு பிந்தித்தான் தாங்கள் என்றும் மதித்திருந்த நான் இப்பொ ழுது அவர்களை இழக்கும்படி ஏற்பட்டுவிட்டது. அத்துக்கமோ ஸதா என்னை வருத்திக்கொண்டேயிருக்கிறது. மற்றும் எனக் கிருக்கும் கஷ்டதசையோ அளவு சங்கையில்லை. நான் இப்பொ ழுது இருந்து வருவதோ பரஸ்தலம். நான் குடியிருந்துவரும் வீட்டிற்கோ சென்ற ஆரேழுமாதமாய் குடக்கூலி செலுத்தவில்லை. இந்த ஆரேழு மாதக்காலத்திலும் நான் செய்துவரும் தையல் வேலைகள் கூட சரிவர கிடைக்காததினால் அது பலசமயம் என்னு டைய காலக்ஷேபத்திற்கே கஷ்டப்படும்படி ஏற்பட்டிருக்கிறது. மேலும் பெண்பாலாயிருக்கும் நான் எனது அங்கங்கள் வெளிப்ப டாமல் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டியது எவ்வளவு அவசியமென்பது தங்களுக்குத் தெரியாததா? அதற்கோ இப்பொ ழுது தினம் ஒன்றாக மாற்றிமாற்றி கட்டிக்கொண்டிருக்கும் இர ண்டு மதுரை பழைய குசும்பாசேலைகளைத்தவிர வேறு வஸ்திரம் கிடையாது. அப்புடவைகளோ நூற்றுக்கணக்காக தைக்கப்பட் டிருக்கும் கந்தல்களாக இருக்கின்றன. அதற்கு மாற்றுதலாய்

சொற்பவிலையிலாவது வேறு இரண்டு புடவைகள் வாங்குவோமெ ன்றாலோ அதற்கும் என்னிடம் ஐவேஜியில்லை. என்னுடைய தேக ஸ்திதியோ சரியாய் சொஸ்தமாகி எப்போதும்போல் நட மாடிக்கொண்டு என்னுடைய காலக்ஷேபத்தையும் நடத்திக்கொள் வதற்கு இன்னும் எத்தனை நாள் சொல்லுமோ தெரியவில்லையே? ஒரு சமயம் இத்தொந்திரவே எனது முடிவுகாலமாய் இருக்கலாம் என்றுகூட சந்தேகிக்கிறேன். ஆனால் அது என்னுடைய யத்த னம் அல்லவென்பதையும் நான் அறியாதவள் அல்ல. ஆகிலும் மேலே காட்டியபடி நான் செம்மையாய் நடமாடும் வரையில் அல் லது இத்தொந்திரவு மூலமாய் இச்சரீரம் லயமாகும் வரையில் தினம் ஒன்றுக்கு ஒரு வேளையாவது ஆகாரம் செய்யவேண்டும். நான் இவ்வூரில் காலடி வைத்ததுமுதல் என் நிமித்தியமாக அள வற்ற உபகாரங்களை செய்துவரும் பிரஸ்தாப அதிகாரியும் அவர் குடும்பத்தாரும் அது விஷயமாக எனக்கு யாதொரு கவலையும் வைக்காமலே காப்பாற்றி வருகிறார்கள். அவ்வதிகாரிக்கோ நான் இதுவரையில் சுமார் ஐம்பது ரூபாய்க்குக் குறைவன்னியில் கடன் கொடுக்கவேண்டியிருக்கிறது. அக்கடனோ அவர் எனக்காக செலு த்தியிருக்கும் அபராதம் ரூபாய் பத்து பிறகு அவரிடம் நாளடை விலேயே எனது காலக்ஷேபத்திற்காக கைமாத்து வாங்கியது ரூபாய் நாற்பது ஆக ஐம்பது. அக்கடனோ நிராபட்சமாய் ஏற்பட் டதென்பதும் அவைகளை வாங்கும் ஒவ்வொரு சமயத்திலும் நான் எவ்வளவு அசம்மதமாயும் வெட்கப்பட்டுக்கொண்டும் வாங்கினேன் என்பதும் சர்வசாக்ஷியாயிருக்கும் உங்களுக்குத் தெரியாததல்ல. அவரோ அதை ஒரு பெரிதாக நினைக்கவும் இல்லை. அல்லது அதைத் திரும்பவும் வாங்கவேணுமென்கிற எண்ணமும் அவருக்குக் கிடையாது. எனது அபிப்பிராயமோ எப்படியாவது அந்த இரண த்தை நிவர்த்திக்கவேணுமென்று தீர்மானித்திருக்கிறேன். அப்ப டிப்பட்டவரையும் அவருடைய குடும்பத்தாரையும் இன்னும் எனக் காக வேண்டிய காரியங்களுக்கெல்லாம் எதிர்பார்ப்பது தருமமா? அப்படி எதிர்பார்ப்பேனேயாகில் அது கரும்பு ருசியாயிருக்கிற தென வேரோடு கெல்லிய கதைபோல் ஆகுமல்லவா? என்னுடைய நிலைமைகளை யோசிக்குங்கால் விநோதரஸமஞ்சரியில் அடங் கிய பாடல்களில் ஒன்றாகிய ஆவீனமழைபொழிய என்னும் பாட

லானது எவர்களை உத்தேசித்து பாடப்பட்டதோ அந்த மனுஷியா ளுடையவும் அரிச்சந்திரன் சந்திரமதி இவர்களுடையவும் துக்க ங்களும் துயரங்களும் ஞாபகத்திற்கு வருகிறது. ஆனல் அக்கா லத்திய மனுஷியாளுக்கும் இக்காலத்தியவர்களுக்கும் பலவித வித் தியாசங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்களோ திடவைராக் கியம் செலுத்தக்கூடியவர்கள். அவர்களுக்கு அச்சாமர்த்தியம் இரு ந்ததினுல்தான் அவர்களுடைய கஷ்டங்களும் அதிசீக்கிரத்தில் நீங் கிவிட்டன. இக்காலத்திலோ அவ்வித வைராக்கியம் செலுத்தக் கூடியவர்களே மிக சொற்பம். அதிலும் கேவலம் பெண்பிள்ளை யாகிய நான் எவ்வித ஸாதனைகளை செய்து ஈடேரக்கூடும். ஆனு ல் பொதுவாய் எனக்குத் தெரிந்தது யாதெனில் எல்லாம் ஜகதீச னுகிய உங்களது விலாசமென்றும் அவைகளில் எதை நீங்களாக பாவித்து கசிந்துருகியபோதிலும் அதற்கோர் நல்வழி ஏற்படாமல் இருக்கமாட்டாதென்பதும்தான். ஆகையினுல் இன்றுமுதல் நான் எதைப்பார்த்த போதிலும் அவைகளெல்லாம் உங்களை தரிசனம் செய்ததுபோல் ஆகவேண்டும். எதை உட்கொண்ட போதிலும் அவைகளை எல்லாம் மனப்பூர்வமாய் அவ்விடத்திற்கு நிவேதனம் செய்ததாக அங்கீகரிக்கவேண்டும். மற்றும் எதை உச்சரித்தபோ திலும் அதுகள் எல்லாம் அவ்விடத்தை உத்தேசித்து செய்யும் ஸ்தோத்திரம் அல்லது நிந்தாஸ்துதியாகவும் நடமாடுவதை பிரத க்ஷணங்களாகவும், படுப்பதை நமஸ்காரங்களாகவும், நித்திரையை நிஷ்டையாகவும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். தவிரவும் தெரிந்தோ தெரியாமலோ நான் செய்யும் பாவங்களை மன்னித்து ரட்சிக்கும்படிக்கும் பிரார்த்திக்கிறேன்' என்று சொல் லிக்கொண்டே அயர்ந்து நித்திரை போய்விட்டாள்.

மறுநாள் பொழுது விடிந்தவுடனே ஷை அதிகாரி வைத்தியர் முதலான எல்லோரும் குணவதியம்மாளை பார்க்க வந்தார்கள். அவர்களைக் கண்டவுடனே அந்தம்மா மெதுவாய் நகர்ந்து வந்து வைத்தியரிடம், தான் அதற்கு முதல் நாள் இரவு நல்ல நித்திரை செய்ததாகவும் தனக்கிருந்த குத்தல் வலி முதலியன முக்கால் வரிசை சௌக்கியமாயிருக்கிறதென்றும் தெரிவித்துக்கொண்டாள். பிறகு அவ்வைத்தியர் காலில் கட்டியிருந்த கட்டை யவிழ்த்து

அதிலிருந்த சீ காரச்சீலை முதலியதுகளை எடுத்து சுத்தப்படுத்தி மறுபடியும் மாவையே கிளறி அப்புண்ணில் கட்டுக்கட்டினார். அன்றுமுதல் அந்தம்மாவுக்கு யாதொருவித தொந்திரவாவது வலியாவது எற்படவேயில்லை. இவ்விதமாக நாலைந்துநாள் கட்டுக்கட்டியதின் பேரில் கையாடிய மேற்படி ரணமானது முழுமையும் சொஸ்தமாகி தாராளமாய் நடமாடும்படிக்கும் இடமுண்டாயிற்று. பிறகு அந்தம்மாவுக்கு நாள் தவறாமல் எதாவது வேலைகள் கிடைத்துக்கொண்டிருந்ததுடன் அதன் மூலமாய் அவர்கள் காலக்ஷேபம் முதலியதுகளை செய்துகொள்ளும்படிக்கும் மாசாமாசம் எழெட்டு ரூபாய் வரையில் மீதியாக்கும்படிக்கும் எற்பட்டது. இவ்விதமாக மீத்துவந்த தொகையானது ஐம்பதுரூபாய் ஆனவுடனே அதை அந்தம்மாள் ஒரு காகிதத்தில் சுருளாய் மடித்து மேற்படி அதிகாரி தனியாய் இருக்கும் சமயம் பார்த்து அவரிடம் கொண்டுபோய் வைத்தாள். அவர் அதைப் பிரித்துப் பார்த்துவிட்டு இதை எதற்காக என்னிடம் கொடுத்தீர்கள் என்றார். அதற்கந்தம்மாள் ஸ்வாமி அவ்விடத்திற்கு நான் கொடுக்கவேண்டியிருக்கிறது என்றாள். அவர் எந்த வகையிலென்றார். அக்குணவதியம்மாள் தாங்கள் எனக்காக செலுத்திய அபராதத்தொகைக்காகவும், பின்தி பலசமயம் வாங்கிக்கொண்டிருக்கும் முகதலை பாபத்திலும் தங்களுக்கு நான் கொடுக்கவேண்டியதில்லையா என்றாள். இவ்வார்த்தை காதில் விழுந்தவுடனே, அவ்வதிகாரி மிக மனவருத்தத்துடன் ‘அம்மா, எல்லாம் தெரிந்த தங்களிடம் நான் என்ன அதிகமாய் சொல்லக் கூடும்? தாங்கள் இவ்வளவு காலமாக எங்களோடு பழகியும் எங்கள் ஒவ்வொருவருடைய சுபாவமும் இன்னதெனக்கண்டுபிடித்திருப்பீர்களே. நான் தங்களை தரிசனம் செய்ததுமுதல் தாங்கள் வேறு என்னுடைய சகோதரிகள் வேறு என்று வித்தியாசம் பாராட்டியதுண்டா? அவர்கள் விஷயமாக நான் செய்ய கடமைப்பட்டிருக்கும் செலவுகளை செய்யும்பட்சத்தில் அதை யவர்கள் திருப்பிக் கொடுப்பார்களா? அப்படியே கொடுத்தபோதிலும் நான் அதைப் பெற்றுக்கொள்ளலாமா? இவ்விதமாக ஒவ்வொருவரும் கணக்குப் பார்க்கும்பட்சத்தில், பிறகு உலகத்தில் ஒருவருக்கொருவர் எற்பட்டிருக்கும் பாந்தவியம் சிநேகம் முதலியன நிலைநிற்குமா. என்னுடைய சுபாவம் இன்னதென்பதை தாங்கள் அநேகமாய் அறிந்

துகொண்டேயிருப்பீர்கள். ஆகிலும் அது சம்பந்தமாய் இன்னும் இரண்டொரு விஷயம் தெரிவித்துக்கொள்ளவேண்டியவளுக இருக்கிறேன். அவைகள் யாதெனில், நான் யாரோடாவது நெருங்கிய பழக்கம் அல்லது சிநேகம் வைத்துக்கொள்ளும் பட்சத்தில் அவர்களை என்னுடன் பிறந்தவர்கள் அல்லது நெருங்கிய பாந்தவியம் இவர்களில் எவர்களாயாவது தீர்மானித்து விடுவது வழக்கம். ஆனல் அவ்வித வழக்கம் அல்லது சிநேகம் என்பது ஏற்படுவதன் முன் அவர்கள் அந்தஸ்தானத்திற்கு அருகர்களா இல்லையா என்பதை எனக்குள் செம்மையாய் நிச்சயித்துக்கொண்ட பிறகு தான், மேற்சொன்ன விதமாக அவர்களைக் கொண்டாடுவேன். என்னுடைய கருத்தில் அவர்கள் ஐவேசியுடையவர்களாய் இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. ஒவ்வொருவருக்கும் ஏற்படவேண்டிய மதிப்பும் கௌரவமும் ஐவேசியையாவது அல்லது அதிகாரம் செல்வாக்கு முதலிய டாம்பீகத்தையாவது பொருத்ததல்லவென்பதும், யாராயிருந்தாலும் அவர்கள் பொய், சூது, வஞ்சனை, திருட்டு, பொருமை. புறங்கூறல், திருப்தியில்லாமை முதலிய கெட்டசெய்கைகளை விலக்கியவர்களாயும், தெய்வபக்தி, தன்னைப்போல் பிறரை மதிக்கும் தன்மை, தயை, தாட்சணியம், பொருமை இன்சொல் முதலிய சற்குணங்கள் நிறைந்தவர்களாயும் இருக்கவேண்டுமென்பதும் என்னுடைய சித்தாந்தம். அப்படிப்பட்ட சுபாவங்களோடு கூடிய ஒருவன் அன்றன்று காலக்ஷேபத்திற்கே கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாலும், அவனை ஒரு சக்கிரவர்த்திக்கு மேலாகவே சொல்லலாம். அவனுக்கு ஏற்பட்டிருக்கும் அவ்வேழ்மைத்தனமோ அவனுடைய செய்கையினுல் உண்டாயிற்றென்றும் சொல்லிவிட முடியாது. அவ்வேழ்மையிலும் எவனொருவன் தன் மானத்தைக் காப்பாற்றிக்கொண்டு ஜீவனம் செய்கிருனே அவனே எல்லோரிலும் உத்தமன். அவனைப்பற்றி பிறர் அவமதித்தால் அவர்களுக்கு அவ்வேழ்மைத்தனம் மாத்திரமல்ல இன்னும் பலவித துன்பங்களும் வந்துசேரும். தாங்கள் என்னுடைய பூர்வோத்திரங்களைக் கேட்கும்பட்சத்தில் என்னைப்போல் ஏழையும் வருமையை அனுபவித்தவனும் ஒருவருமில்லை. அவ்வித நிலைமையில் இருந்து வந்த நான் இன்று வரையில் என்னையே நம்பியிருக்கும் ஒரு அபாரசம்சாரத்தையும் காப்பாற்றிக்கொண்டே வருகிறேன். ஆனல் எல்லா

வற்றிற்கும் ஈசுவரசகாயம் என்பது ஒன்று இல்லர்தவரையில் நானுள்பட என்னுடைய குடும்பத்தை ஸம்ரட்சிப்பதற்காவது அல்லது நான் இப்பொழுது பார்த்துவரும் சர்க்கார் அலுவலை அடையவாவது கூடுமோ? அப்படிப்பட்ட எனக்கு மேன்மேலும் பெரிய வேலை கிடைத்த போதிலும் அப்பொழுதுகூட நான் என்னுடைய பழமையை நினைத்துத் தான் ஒவ்வொருவரோடும் வார்த்தையாடுவேன். இவ்வளவு தாழ்மையாகப் போகும் நீர் உம்மை நம்பி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை தாட்சணியமன்னியில் எப்படி நிறைவேற்றக்கூடும் என்று தாங்கள் ஒரு சமயம் கேட்கக்கூடும். நான் இதுவரையில் சொல்லிவந்ததோ எனது சொந்த வியவகாரம். அதற்கும் சர்க்கார் வேலைகளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. நான் அடைந்திருக்கும் டிப்டிகலெக்டர் ஸ்தானமோ, இராஜாங்கத்தாருடைய வேலை. அதில் அணுவளவாகிலும் தவறி நடந்தால் அது ஒரு இராசத்துரோகம் ஆவதுடன் பலவித வாதைகளுக்கும் உள்ளாக்கும். சிலர் உத்தியோகஸ்தர் அல்லது அதிகாரியாயிருப்பவர்களுக்கு என்ன கவலை என்றும் அவர்களைப் போல் கொடுத்துவைத்தவர்கள் ஒருவரும் இல்லை என்றும் வம்பளப்பது வழக்கம். அதுவிஷயத்தைப்பற்றிப் பேசுங்கால் அதிலுள்ள சிரமங்களைச் சொல்லி ஸாத்தியமில்லை. அவைகள் யாதெனில் அவர்கள் அநேக விஷயங்களுக்கு ஜவாப்புதாரியாயிருந்து வகை சொல்லவேண்டும். மேல் அதிகாரிகள் திருப்திப்படும்படி நடந்துவரவேணும். பொதுஜனப்பிரியத்தை இழக்கக்கூடாது. அவர்களுக்கோ யாராவது சத்துருக்களாய் இருந்துகொண்டேயிருப்பார்கள். அச்சத்துருக்களோ அவர்களை எந்த வழியில் கெடுக்கலாமென்று வழி தேடிக்கொண்டேயிருப்பார்கள். தவிரவும் அவ்வதிகாரி அல்லது உத்தியோகஸ்தர்களால் பிரதிகூலம் அடையும் பிரதி மனுஷியாளும், அவர்கள் பேரில் ஏதாவது ஒரு தோஷம் கல்பிக்காமல் இருக்கிறதுமில்லை. இன்னும் அவ்வுத்தியோகஸ்தர்கள் உபகாரசம்பளம் பெற்றுக்கொண்டோ மனோராஜியாகவோ அல்லது வேறு முகாந்திரங்களாலோ வேலையில்லாமல் இருந்தால் அவர்களை ஜனங்கள் அவர்களுக்கு உத்தியோகம் இருக்கும் காலத்தில் எவ்வளவு பயபக்தி விசுவாஸத்தோடு கொண்டாடுவோர்களோ அவ்வளவு கொண்டாடுகிறதுமில்லை. ஆகையினால் பிரதி அதிகா

ரியும் அவர்கள் வேலையிருந்தாலும் சரி அல்லது வேலையைவிட்டு நீங்கிய காலமாயிருந்தாலும் சரி இந்த இரண்டு காலங்களிலும் அவர்களை பொதுஜனங்கள் ஒரேவிதமாக கொண்டாடும்படி செய்வதற்கு மார்க்கம் யாதெனில் அவரவர்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட மனச்சுதந்தரத்தைக் கூடியமட்டும் தயவாகவே உபயோகிக்கவேண்டுவதுதான். அவ்விதமாக உபயோகிக்கப்படும் சுதந்திரத்தைப்பற்றி சட்டங்களும் இடம் கொடுத்திருக்கின்றன. நான் இதைப்பற்றி இவ்வளவு தூரம் பிரஸ்தாபிப்பானேன் என்றாலோ, சொற்பகாலத்திற்கு முந்தி தரிசு நட்டுப்பாழ் சம்பந்தமாக பல ஒழுங்கீனங்கள் நடந்ததென, ரெவினியூ மேஜிஸ்டிரேட் என்னும் இரண்டு அதிகாரங்களையும் சேர்த்து பார்த்துவந்த சில அதிகாரிகள் வேலையினின்றும் விலக்கப்பட்டிருந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் பட்டபாடு கடவுளுக்குத்தான் தெரியும். அவர்களை பார்க்கும் ஜனங்கள் அவர்கள் கதி இவ்வாறாயிற்றே. அவர்கள் தலை குனிவாய் போவதைப் பாருங்கள். ஓடம் வண்டியில் ஏறும் வண்டி ஓடத்தில் ஏறும் என்னும் பழமொழிக் கிணங்க அவர்கள் தங்களுக்குத் திரும்பவும் வேலை கிடைக்கவேணும் என்று அப்பீல் செய்யும் பொருட்டு அவர்களுடைய சமயம் பார்த்துக் காத்துக்கொண்டிருந்த வக்கீல்கள் வீடுகள் தோறும் போய் அவ்வக்கீல்களுடைய பேட்டிக்காக எதிர்பார்க்கும்படியான காலம் வந்துவிட்டதே. அதிகாரம் இருக்கும் காலத்தில் சொற்பதூரம்கூட கால் நடையாய் நடக்காமல் இருந்துவந்த அவர்கள் இப்பொழுது காற்றோ மழையோ வெய்யலோ இவைகளில் ஏதாயிருந்தாலும் அதை கொஞ்சம்கூட இலட்சியம் செய்யாமல் ஓட்டமும் நடையுமாய் திரிந்துகொண்டிருக்கிறார்களே. அவர்கள் வேலை பார்க்கும் காலத்தில், அது எக்காலத்திலும் அழியாதது, அப்படிக்கிருக்க நாமேன் ஒருவரை மதித்து வார்த்தை சொல்லவேண்டும் என்றும் பலவிதமான அகம்பாவத்தோடும் யாராவது வலுவில் வார்த்தை சொல்லவரும் காலத்தில் அதற்காக என்ற ஒரு தொனியினுடனும் பேசிவருவார்களே. அவர்களில் சிலர் கிராமந்திரங்களுக்கு வந்துவிட்டால் மிராசுதார்கள் என்ன, கிராம சிப்பந்திகள் என்ன இவர்கள் அனைவரையும் அவர்களுடைய அடிமைபோல் பாவித்து டாப்பட்டம் கொடுத்

தும் வார்த்தையாடுவார்களே. அந்த ஜோர் எல்லாம் இப்பொழுது எங்கே அடங்கிவிட்டது என்பதுதான் கண்டுபிடிக்கக்கூடவில்லை என்றும் இன்னும் இதைப்போலொத்த வார்த்தைகளாலும் சிலர் உள்ளபடியே இரக்கப்பட்டும் சிலர் ஏச்சாகவும் பேசிக்கொண்டிருப்பதை என் கண்ணாரப் பார்த்திருக்கிறேன். இது காரணங்களை எல்லாம் உத்தேசித்துத்தான் நான் எல்லா விஷயத்திலும் கூடிய மட்டும் ஜாக்கிரதையாகவே நடந்துவருகிறேன்.

நிற்க, தாங்கள் இப்பணத்தை கொண்டுவந்து கொடுத்திருப்பதைப் பார்த்தால் இனி என்னுடையவும் என் குடும்பத்தாருடையவும் சம்பந்தமே கூடாதென்று விலக்கிவிட கருத்துக்கொண்டிருக்கிறீர்கள் போல் காணப்படுகிறது என்று மனஸ்தாபமாய் கேட்டார். அதற்கந்தம்மாள் 'ஸ்வாமி, நான் நியாயமாக நடந்துகொண்ட விஷயத்தில் தாங்கள் இவ்வளவு தூரம் வளர்த்தலாமா. இத்தொகையோ நான் தங்களிடம் கைமாத்தாக வாங்கிக்கொண்டது. இதையே நான் இன்னொருவரிடம் வாங்கியிருந்தால் நான் அதை திருப்பிக்கொடுக்காமல் இருப்பது நியாயமாகுமா? இப்பணமன்னியில் நான் தங்கள் மூலமாய் அடைந்திருக்கும் பலவித உபகாரங்களை அங்கீகரித்துக்கொள்ளவில்லையா? அவைகளில் எதைப்பற்றியாவது நான் கணக்குப் பார்த்து திருப்பிக்கொடுக்க வந்திருந்தால் அது என்பேரில் ஒரு தப்பிதம்தான். அப்படிக்கெல்லாமில்லாமல் நான் எனது கடமைகளை நிறைவேற்றிய விஷயத்தில் தாங்கள் ஆக்ஷேபிப்பது சரியல்ல. இன்னும் இது சம்பந்தமாகவே தாங்கள் எவ்வளவு தர்க்கித்த போதிலும் முடிவில் நான் சொல்வதுதான் நியாயமென கண்டுபிடிப்பீர்கள். ஆகையினால் தாங்கள் அவ்வழிகளிலெல்லாம் புத்தியை செலவழிக்காமல் இத்தொகையை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்' என்றாள். கடைசியாக அவ்வதிகாரி ஒன்றும் பதில் சொல்லமாட்டாமல் அத்தொகையை எடுத்துக்கொண்டார். இதற்கு சுமார் நாலைந்து நாளுக்குப் பின் பிரஸ்தாப குணவதியம்மாள், அவ்வூரில் அவளுக்கு பரிச்சயமுள்ள வேறொரு பிராமணர் வீட்டிற்குப் போயிருந்தாள். அவ் வீட்டில் மகாஞானியாகிய ஜானகியம்மாள் என்று ஒரு சுமங்கலியம்மா இருந்துகொண்டிருந்தாள். அவளுக்கு சுமார் எழுபது வயதிருக்கும். அந்தம்மாவும் குணவதியம்மாவும் ஒருவருக்கொருவர்

அவ்வூரிலுள்ள கோவில்களில் அடிக்கடி சந்தித்து சம்பாஷித்துக் கொண்டிருந்ததினால் அவ்விருவருக்கும் ஒரு சிநேகம் உண்டாயிற்று. அதுமுதல் அவள் இவள் வீட்டிற்காவது இவள் அவள் வீட்டிற்காவது போய் ஒருவருக்கொருவர் வேதாந்த விஷயமாக பேசிக்கொண்டிருப்பது வழக்கம். மேலே சொன்னபடி குணவதியம்மாள் அங்கே போயிருக்கும்பொழுது அச்சானகியம்மாள் ஏதோ ஒரு புராணசிரவணம் செய்துகொண்டிருந்தாள். அவள் இவளைக் கண்டவுடனே அவ்வாசிப்பை நிறுத்திவிட்டு இருவருமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அச்சம்பாஷணைக்கு பின்வருவிதமாக ஒரு விக்கினம் ஏற்பட்டது. அது யாதெனில் அந்த வீட்டிற்கு அடுத்த வீட்டில் ஒரு பையன் 'ஐயோ, நான் இதற்கா பிள்ளைபிறந்தேன். என்னைப்போல் உங்களுக்கு பிள்ளை குட்டிகள் இல்லையா? இதோ நெஞ்சழுத்தமாய் நின்றுகொண்டிருக்கும் இந்தம்மா நியாயமாகப் பேசிய என்னை ஒரு விரோதியாக மதித்துத் துன்பப்படுத்த வேணுமென்று கங்கணம் கட்டிக்கொள்ளலாமா? அதற்கு நீங்களும் உடந்தையாயிருந்தால் என்னால் செய்யக்கூடியது என்ன இருக்கிறது. உங்களில் எவர்களுடைய தேகத்திலாவது ஒரு துரும்பு குத்தப்பொறுப்பீர்களா? அப்படிப்பட்ட நீங்கள் உங்கள் மனதில் தோணியபடிக்கெல்லாம் என்னை அடிக்கிறீர்கள், கிள்ளுகிறீர்கள், உதைக்கிறீர்கள், குத்துகிறீர்கள். நீங்கள் இவ்விதமாய் சித்திரவதை செய்வதைப்பார்க்கிலும் ஒரே அடியில் கொன்றுபோடலாமே' என்று புலம்பிக்கொண்டிருந்தான். அப்புலம்பலோ பிறர் பரிதாபப்படக்கூடிய நிலைமையில் இருந்தது. அது காதில் விழுந்தவுடனே அந்த இரண்டு சுமங்கலிகளும் அவர்களது சம்பாஷணையை நிறுத்திவிட்டு அம்மெத்தையிலிருந்தே பக்கத்து வீட்டில் என்ன நடக்கிறதென தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு ஜென்னலண்டையில் வந்து நின்றுகொண்டிருந்தார்கள். அச்சமயம் மேலே சொன்ன அப்பையன் அப்பக்கத்துவீட்டு முற்றத்தைச்சேர்ந்த தாழ்வாரத்துத் தூண்களில் ஒன்றில் பின்கட்டுமாறாக கட்டப்பட்டிருந்தான். அவனைச் சுற்றிலும் பல ஜாதியாரான சுமார் நாலைந்துபேர் ஆண்பிள்ளைகளும் ஒரு பிராமண விதவையும், நின்றுகொண்டிருந்தார்கள். அப்பையனைப் பார்க்கும் காலத்தில் அவன் ஒரு பிராமணப்பையனாக இருக்கலாமெனத் தோன்றியது

ஏனெனில் அவன் மார்பில் சுத்த தாவள்யமான ஒரு பூணூல் விளங்கியதுடன் அவன் பேசும் வார்த்தைகளும் பிராமணப்பாங் காகவே இருந்துகொண்டிருந்தன. அவன் மறுபடியும் அங்குள்ள வர்களை நோக்கி 'ஐயா இப்பொழுதோ பொழுதுபோவதற்கு இன் னும் நாலைந்து நாழிகைதான் இருந்துகொண்டிருக்கிறது. நானோ காலை முதல் பச்சைத் தண்ணீர்கூட பல்லில் ஊற்றவில்லையே. எனக்கோ கண்ணை இருட்டிக்கொண்டு வருகிறது. தாகமோ தாங் கவில்லை. என்னை கொஞ்சநேரமாவது கட்டவிழ்த்துவிட்டால் இரண்டுகை சுத்தஜலமாவது அள்ளிக்குடித்துவிட்டு வந்துவிடு கிறேன்' என்று கேட்டுக்கொண்டான். இதற்குள் அங்கிருந்தவர் களில் ஒருவனான இராவுத்தன் மூர்த்தி சொல்லப்பட்டிருக்கும் பிரா மணவிதவையைப் பார்த்து, 'அடியே பொன்னு, உலகம் இன்ன தென்று தெரியாத இச்சிறுவனை வீணில் என் தொந்திரவு செய் கிறாய்? அவனை கட்டவிழ்த்துவிட்டு பசியாற்று. நாம் இவனை இன்னும் சற்றுநேரம் வரையில் இப்படியே வைத்திருந்தால் ஒரு சமயம் இவன் இறந்துபோனாலும் போய்விடுவான். நீ இவனுக்கு ச்சோறு போடுவதற்கு இஷ்டப்படாவிட்டாலும் இவனுடைய தாக ம் அடங்கும்படி கொஞ்சம் நல்ல தண்ணீராவது கொண்டுவந்து கொடு' என்றான். அதற்கந்தம்மாள் 'இராவுத்தரே, இவனுடைய பாசாங்கு உங்களுக்குத் தெரியாது. நாமல்ல இன்னும் எப்படிப் பட்டவர்களாயிருந்தாலும் இவன் ஏமாற்றிவிடுவான். இந்தப் பாவி க்கிரங்கலாமா? இவனுக்கிருப்பதாகச் சொல்லும் தாகவரட்சை யை சாணியை கரைத்துக்கொண்டாவது அல்லது தொல்லையில் மலஜலத்தோடு தேங்கிக்கிடக்கும் சாக்கடை நீரைக்கொண்டாவது இதோ தணித்துவிடுகிறேன்' என்றாள். உடனே ஷை இராவுத்தன் மிகக்கோபத்துடன் 'அடி பாவி, இப்பையன் என்ன தப்பிதம் செய் தானென்று இவனை காலைமுதல் இதுவரையில் நிர்ப்பந்தித்து வருத் துகிறாய். நீ சொல்லியபடியே இவன் உனக்கும் நமக்குமுள்ள சிநே கத்தைப்பற்றி பஹிரங்கப்படுத்த யத்தனப்பட்டதாகவே வைத்துக் கொள்ளுவோம். அதனால் நீ அடையக்கூடிய நஷ்டமென்ன. இவன் ஏதாவது இல்லாத சங்கதியை சொல்லியிருந்தால் நீ வரு த்தப்பட வேண்டியது நியாயந்தான். நமக்குள் ஏற்பட்டிருக்கும் நேசத்தை இவன் வெளியிட்டான் என்று தானே உனக்கு இவ்

வளவு ஆத்திரம் உண்டாயிருக்கிறது. இவனன்னியில் உனக்காவது எனக்காவது கட்டுப்படாத ஒரு மூன்றுவது மனுஷன் இதைபற்றி பிரஸ்தாபித்தால் நீயாவது அல்லது நானுவது என்ன செய்துவிட முடியும்? உன்னைப்பற்றி பிறர் கௌரவமாய் மதிக்கவேணுமென்றும், நீ மாத்திரம் அடக்கமாய் உன் இஷ்டபோகங்களை அனுபவிக்க வேணுமென்றும் நினைத்தால் அது கூடுமோ? உன்னைப் போல் நானும் ஒரு தாயாரிடமிருந்துதானே வெளிப்பட்டிருக்கிறேன். அதிலும் நானே ஒரு ஆண்பிள்ளை. சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளைகளுக்குள்ள கௌரவமும் மதிப்பும் வேறென்பதை நீ கேள்விப்பட்டதில்லையா. அப்படிப்பட்ட நான் உன் நிமித்தியமாக எவ்வளவு சௌகரியங்களை இழந்திருக்கிறேனென்பதும் என் அருமைப் பெண்சாதி பிள்ளைகள் உற்றார் உரன்முறையார் முதலியவர்களோடு நான் எவ்வித ஒத்துமையாக இருந்துவரவேணுமோ அவைகளுக்கெல்லாம் குறைவு உண்டாயிருக்கிறதென்பதும் உன் மனதாரத் தெரியாதா. மேலும் நீ ஏற்கனவே பலபேரிடம் சிநேகம் செய்துவிட்டு கடைசியாக என்னை நேசிக்கவந்தாய். அப்படிப்பட்ட எனது சிநேகமோ என் தேகத்தில் இரத்தத் திமிர் உள்ள வரையில் தான் நிலைபெற்றிருக்கும் என்றும் நிச்சயமாய் சொல்லுவேன். ஏனெனில், எனக்குத் தெரிந்த வரையில், நீ முந்தி சிநேகம் செய்திருந்தவர்களில் சிலர் வியாதிஸ்தர்களாயும் பலவீனர்களாயும் போய்விட்டார்கள் என்பது பற்றியே நீ அவர்களை விலக்கியிருக்கிறாய். அவர்கள் ஒவ்வொருவரோடும் நீ ஒரு நிமிஷமாவது அன்னியோன்னியமாய் இருந்ததில்லையா? அப்படிக்கிருக்க நீ இப்பொழுது அவர்களில் யாரையாவது போய் எட்டிப்பார்க்கிறாயா? நூற்றோடு ஒன்று சேர்ந்தால் நூற்றொன்று ஆவதுபோல என்னையும் நீ அவர்களோடு ஒருவனாய் சேர்த்துவிடலாம் என்கிற எண்ணத்தோடு சிநேகம் செய்திருக்கிறாய் என்று சொல்லத்தடையென்ன? ஏனெனில் நீயே உன்னைச்சேர்ந்த ஊரார் உரன்முறையார் முதலியவர்கள் வேற்றுமதஸ்தனாகிய என்னோடு பழக்கம் வைத்துக்கொண்டிருப்பதைப் பற்றி எங்கே ஒருகால் கைகொட்டப்போகிறார்களோஎன்கிற கருத்துக்கொண்டு பிறர் அறியாத விதமாகவே என்னோடு உரவாடி வருகிறாய். தற்காலம் நீ இப்பையனை இம்சிப்பதும் அதற்காகத்தானே. மேலும் நீ என்னோடு சிநேகித்த பிறகு

என் வீட்டில் சமையலான சாப்பாடுகளை சாப்பிட்டதில்லையா. மற்றும் எந்த பாகத்தில் தான் நீ உனது பிராமணுசாரப்படி நடந்து வந்திருக்கிருய்? அப்படிக்கிருந்தும் நீ உனது சாமர்த்தியத்தினுல் நாளது வரையில் அவைகளை எல்லாம் பிறர் அறியாத விதமாகவே நடித்துக் காட்டுகிருய். உனது அந்தரங்க எண்ணம் இன்னதென நான் இவ்வளவு தூரம் எடுத்துக் காட்டியும் நீ இங்கே பலபேர் அறிய இப்பொழுது என்னுடன் தாராளமாய் இருந்தவரவில்லையா என்று ஒரு கேள்வி கேட்கக்கூடும். அதற்குக் காரணம் யாதெனில்:— இதுவோ உன்னைச் சேர்ந்தவர்கள் ஒருவருமில்லாத ஒரு வேற்றூர். இதற்கும் உனதிருப்பிடத்திற்கும் சுமார் 30 காதவழி தூரத்திற்குக் குறைவில்லை. இங்கே நீ எதைச் செய்தபோதிலும் உன்னைக் கேட்பார் ஒருவருமில்லை. அப்படிக்கிருந்தும் நான் உன்னை இங்குள்ளவர்கள் எல்லோரும் உன் ஜாதிக்குரிய மரியாதையோடு கொண்டாடவேணும் என்கிற நோக்கத்தின் பேரில் யோக்கியமாய் இருந்து இவ்வக்கிராமத்திற்கு மத்தியில் உனக்கு ஜாகை ஏற்படுத்தினேன். நீயோ அதை கொஞ்சமாவது யோசியாமல் தனக்குத் தானே அவமானத்தை வருவித்துக்கொள்ள வழிபார்க்கிருய். நமது பக்கங்களில் இருக்கும்பொழுது உன்னிடம் வருவதாயிருந்தால் எவ்வளவு பயந்துகொண்டு வரவேண்டியதாயிருந்தது. அப்படியாகவரும் ஒவ்வொரு சமயங்களிலும் நான் ஏதாவது மாறுவேஷம் அல்லது ரூபபேதமாக மாத்திரம் வந்துகொண்டிருந்தேனே தவிர நாலு பேர் அறிய வெளிப்படையாயும் அச்சமின்னியிலும் வந்ததுண்டா? நீயோ இவைகள் எல்லாவற்றையும் ஆராய்ந்து பாராமல் இங்கே தங்கச்சி வீட்டிற்கு விருந்தாளியாக வந்திருக்கும் என்னைத் தேடிக்கொண்டு வந்து என் மானத்தை போக்கிவிட்டாய். அது தொலைந்து போனுலும் போகிறதென்று ஒன்றுக்கும் வாய்திறவாமல் இருந்து வந்த நான் இன்று நீ நடத்தியிருக்கும் கொடுமைதனை யோசிக்குங்கால் அது எந்த விதத்திலும் சமாதானத்திற்கு இடமில்லாமலே இருந்துகொண்டிருக்கிறது. அப்படிக்கிருந்தும் நான் அவைகளை ஒருவாராய் மறந்து இப்பொழுது உன்னைக் கேட்டுக்கொள்வது யாதெனில், நீ இன்று முதலாவது இப்பையன் பேரிலுள்ள வர்மத்தை மாற்றி அவன் சந்தோஷமாய் இருக்கும்படி செய்யவேண்டுவது தான்' என்று தெரிவித்துக்கொ

ண்டான். அதற்குப் பொன்னம்மாள் 'இராவுத்தரே, தாங்கள் என்ன சொன்ன போதிலும் இவனை இம்மட்டோடு விடுவதில் எனக்குச் சம்மதம் இல்லை. இவனும் இவனுடைய தமயனைப் போல் இருக்குமிடம் தெரியாமல் தரிகெட்டு எங்கேயாவது ஓடிப் போகவேண்டிய ஸ்திதியில் இருந்து வந்தான். அப்படிப்பட்ட இவனுக்கு நான் என்னாலான நன்மைகளை செய்ய உத்தேசித்தேன். அதற்கோ இவன் அருகன் இல்லாமலே போய்விட்டான். ஊரில் கழிசடையாய் திரியும் கழுதைகள் அதைச் சொல்லுகிறது இதைச் சொல்லுகிறது என்று என்னிடமே இவன் எப்பொழுது நாக்கு மேல் பல்போட்டு சொல்லவந்தானோ அந்நாக்கில் கரண்டிக்காம் பைப் பழுக்கப்பழுக்கக் காய்ச்சி நாலைந்து சூடாவது போடாத வரையில் என் மனம் திருப்தியடையாது' என்று சொல்லிவிட்டு அந்தப்படியே கரண்டியை எடுத்துக்கொண்டு அடுப்பங்கரைக்குப்புறப்பட்டாள். உடனே அந்த ராவுத்தன் அவள் அப்படியே செய்யக்கூடியவள்தானென்று தெரிந்துகொண்டிருப்பவன் ஆனதால் அதிவேகமாய் எழுந்து அவளை உள்ளே போகவிடாமல் தடுத்து அவள் கையிலிருந்த் கரண்டியைப் பிடுங்கி அதின் காம்பினாலேயே அவளை பலமாய் இரண்டு மூன்றடி அடித்து 'அடியே சண்டாளி, துரோகி, கொலைபாதகி, நீ கெட்டுப்போவதுமல்லாமல் நானுள்பட இங்குள்ளவர்கள் எல்லோரையும் கெடுத்துவிடவா பார்க்கிறாய். நான் இதுவரையில் எனது தொண்டையை பரிகொடுத்தும் நீ அதைக் கொஞ்சமாவது லக்ஷியம் செய்தாயா. ஏதோ இது வரையில் பொருத்துப் பொருத்துப் பார்த்தேன். இனிமேல் நான் எனது கைவரிசைகளைக் காட்டாமல் இருக்கிறதில்லை' என்று சொல்லிவிட்டு பையனைக் கட்டியிருந்த தூணண்டையில் வந்து அவனை அவிழ்த்துவிட ஆரம்பம்செய்தான். அவ்விதவை அவள்பட்ட அடியை துடைத்துவிட்டு கட்டவிழ்க்கப்போன இராவுத்தன் கைகளை உடும்பு பிடிப்பதுபோல் பிடித்துக்கொண்டு 'என் இராஜாவே, நீங்கள் இந்த சங்கதியில் மாத்திரம் பிரவேசிக்கவேண்டாம். உண்டவீட்டுக்கு இரண்டகம் நினைத்த இந்தச் சதிகாரனை இன்னும் நாலுநாள் வரையிலும் இக்கட்டவிழ்க்காமலும் சோறு தண்ணீர் காட்டாமலும் வைத்திருந்தபோதிலும் இவன் சாகப்போகிறதில்லை. அப்படியிருக்க நீங்களேன் இதைப்பற்றி கவலைப்படவேண்டும்.

மேலும் இதனால் வரப்பட்ட லாபநஷ்டங்களுக்கு நான் ஒருவள் தான் பாத்தியப்பட நேருமே தவிர உங்களில் ஒருவரையும் காட்டிக்கொடுக்கப் போகிறதில்லை. தவிரவும் நான் செய்வது முழுமையும், நீங்களும் உங்களுடைய பிள்ளைகுட்டிகளும் இன்னும் மேன்மேலும் சவுக்கியம் அடையவேணுமென்கிற கருத்துக்கொண்டு செய்துவருகிறேனென்பதை என் கண்டுபிடிக்கவில்லையோ தெரியவில்லை' என்று அந்த இராவுத்தனை மேலொன்றும் சொல்லவிடாமல் தடுத்துவிட்டாள். இதற்குள் அஸ்தமன காலம் நெருங்கிவிட்டது. இச்சம்பவங்கள் அனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்த குணவதியம்மாள் தன்னுடன் கூடவிருந்த ஜானகியம்மாளைப் பார்த்து 'அம்மா உலகசுபாவம் போகிற வழியை கவனித்தீர்களா, இந்த அம்மா யார்' என்று விசாரிக்க அவ்வீட்டம்மாள் தனக்கு அவ்விதவையம்மாளைப் பற்றி ஒன்றும் தெரியாதென்றும் ஆனால் அந்தம்மாளை ஏழெட்டு நாளாக அந்த அடுத்த வீட்டில் பார்ப்பதாகவும், மைத்த விபரங்களெல்லாம் தான் விசாரிக்கவில்லையென்றும் தெரிவித்தார்கள். உடனே குணவதியம்மாள் அவ்வீட்டம்மாளிடம் தான் அந்தக்ஷணமே அப்பிராமணப்பையனை விடுவிக்க வேண்டிய மார்க்கங்களை தேடவேண்டுமென்றும் அதற்காகத்தான் அவசரமாய் வீட்டுக்குப் போகவேண்டுமென்றும் சொல்லவிட்டுத் தெருவில் நின்ற வண்டிகளில் ஒன்றை வாடகைக்குப் பேசி ஏறிக்கொண்டு போய்விட்டாள். இவள் வீடுபோய்ச்சேருவதற்கு முந்தியே பிரஸ்தாப டிப்டிகலெக்டர் அவருடைய ஆபீசு வேலைகளை முடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்திருந்தார். நமது குணவதியம்மாள் வண்டியைவிட்டு இறங்கியவுடனே தனது ஜாகைக்குக்கூடப்போகாமல் அவ்வதிகாரி வீட்டிற்கே போய் அவரிடத்தில் தான் அன்று இன்னஇடத்துக்குப் போயிருந்ததாகவும் அங்கே இன்னின்னது நடந்ததென்றும் அது விஷயமாக உடனே ஏதாவது ஒரு ஏற்பாடு செய்யாத வரையில் மிகப் பரிதாபமான நிலைமையில் இருக்கும் அப்பிராமண வாலிபன் அநியாயமாய் இறந்துபோய்விடுவானென்றும் தெரிவித்தாள். அவ்வதிகாரி உடனே போலீஸ்ஸ்டேஷக்குப்போய் அங்கிருந்த ஆபீசர் சில கான்ஸ்டபிள்கள் முதலானவர்களை அழைத்துக்கொண்டு குணவதியம்மாள் சொன்ன அடையாளப்படிக்குள்ள வீட்டிற்குள் போனார்கள்.

அங்கே அப்பொழுது கூட அந்தப் பையன் தூணில் கட்டின படியேதான் இருந்துகொண்டிருந்தான். கலெக்டரோ இதை பார்த்தவுடனே மனம் தாளாமல் தன்னுடன் கூடவந்த ஆர்டர்லியை கூப்பிட்டு அக்கட்டை அவிழ்க்கச் சொல்லி அப்பையனை ஒரு இடத்தில் உட்காரவைத்து அங்குள்ள எல்லோரையும் வெளியில் போகாதபடி காபந்தாய் பார்த்துக்கொள்ளச் சொன்னபின் அப் பையனண்டையில் வந்து அவனை பல் தேய்க்கச் சொல்லி அவன் களையடங்கும்படி ஆகாரம் கொடுக்கும்படிக்கும் ஏற்பாடு செய்தார். அவன் சாப்பிட்டவுடனே அவனை அவ்வதிகாரி ஒரு தனி அறைக் குள் அழைத்துப்போய் மிகப் பிரிய வசனமாய், 'அப்பா உன் பெய ரென்ன? நீ யார்? உனக்கு எந்த ஊர்? உன்னை யார் தூணில் கட்டினார்கள்? அப்படி கட்டும்படி நீ என்ன தப்பிதம் செய்தாய்? உன்னை கட்டியபின் நீ யார் யாரால் உபத்திரவிக்கப்பட்டாய்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விபரமாயும், தெளிவாயும், பொய் சொல்லாமலும் பயமன்னியிலும் பதில் சொல்லு' என்று வாக்கு மூலம் வாங்கினார். அதற்கு அந்தப் பையன்,

"யஜமானே, என் பெயர் சீதாராமன். நான் இங்கிருந்தவர்க ளில் பிராமண விதவையாயிருந்த பொன்னம்மாள் என்பவளுடைய ஸ்வீகார புத்திரன். நாங்கள் இருப்பது தெற்கே அரசூர் ஜில்லா சோதனைபுரம். அந்தம்மாள் அவர்களோடு காபந்தில் இருக்கும் இராவுத்தரைப் பார்க்கவேணுமென்று என்னையும் அழைத்துக்கொ ண்டு இவ்விமோசனபுரிக்கு வந்து எழெட்டு நாளாயிற்று. நேற்று இரவு நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது, அந்தம்மா அடே சீதாராமா நீ நமது ஊரில் இருக்கும்பொழுது கோடி வீட்டு மீனு ஒருநாள் உன்னைக் கூப்பிட்டு பேசிக்கொண்டிருந்தாள் என்று சொன்னாயே அவள் என்ன சொன்னாள் என்று கேட்டாள். அத ற்கு நான் அம்மா அவள், நமது வீட்டிற்கு யாரோ ஒரு மனிதன் ஸதா வந்துபோய்க் கொண்டிருக்கிறானே அவன் யாரென்றும், அவன் ஒருநாள் இராத்திரி எதிர்க்குளத்தில் புடவை துவைத்துக் கொண்டிருந்த அவளை நீயாயிருக்கலாமென்றெண்ணி பொன்னு, பொன்னு, என்று கூப்பிட்டதாகவும் அதற்கவள் ஒன்றும் பதில் சொல்லாமல் இருந்ததாகவும், மறுபடியும் அவன் என்ன ஒன்றும் பதில் சொல்லாமல் இருக்கிறாயே. உன் வீட்டில் விருந்தாளியாக

வந்திருப்பவர்கள் எப்பொழுது ஊருக்குப் போகிறார்கள்? அவர்கள் போகிறபடி போகட்டும். அதுவரையில் நான் வரத்தப் போக்கா யிருப்பதற்குக் கூட சரிப்படவில்லையே. எனக்கும் உன்னைப் பாரா விட்டால் ஒரு நிமிஷம் ஒரு யுகமாக வளருகிறது. மற்ற சங்கதி களைப்பற்றி பேசுவதாயிருந்தால் அதற்கு இது இடமுமல்ல. இப் பொழுதோ எனக்கு சாவகாசமும் இல்லை. நேற்று நான் உன் னிடம் சொல்லியிருந்தபடியே வருகிற ருத்பா பண்டிகைக்கு ஆக வேண்டியதை எல்லாம் நாளைக்கே சாக்கிரதை செய்யவேணும். அதற்கோ முப்பது ரூபாய்க்குக் குறைவன்னியில் செல்லும் என்று சொல்லியிருந்தேனே. அதைக் கொண்டுவந்து கொடு. நான் இந்த மரத்தடியிலேயே உலாத்திக் கொண்டிருக்கிறேன் என்றானும். அதற்கந்தம்மாள் உனக்கு இருக்கும் அவசரத்தில் இன்னார் இனி யார் என்று கூட கண்டுபிடிக்கக் கூடவில்லையா? நீ உத்தேசித்த பொன்னம்மாள் நான் அல்ல என்று சொல்லி வாய் மூடுமுன் அவன் வெட்கி ஓடிப்போய்விட்டானும் என்று சொன்னதாக தெரி வித்தேன். உடனே எனக்குச்சனியன் பிடித்ததுபோலாய் விட்டது. அப்பொழுது அந்தம்மா நான் சாப்பிட்ட சாதத்தை காலால் உதை த்து தள்ளிவிட்டு முன் சொன்னது பின் சொல்லாமலே சுமார் ஒருமணிநேரம் வரையில் என்னையும் அந்த மீனு அம்மாவையும் ஒரு அத்தியாயம் வாயில் வந்தபடி திட்டினாள். அப்படியும் அவளு டைய ஆத்திரம் அடங்கவில்லை. மறுபடியும் அவள் நீ இவ்வளவு தூரம் பேசும்படியாக ஆய்விட்டதா? உன்னை இலேசாக விட் டேனு பார் என்று இரவுமுழுமையும் அடித்தாள், உதைத்தாள், குட்டினாள். தொடைகள் முழுமையும் கறு இரத்தம் பாயும்படி பல முறை நிமிண்டினாள். இந்த நிலைமையில் நான் இன்று வெடிய ஒரு நாழிகையிருக்கையில் எங்கேயாவது ஓடிப்போய் விடுவோம் என் கிற எண்ணம் கொண்டு அதை இலேசாக வெளியிட்டேன். அதைக் கேள்விப்பட்ட இந்தம்மா என்னை வெளியில் விடாமல் இன்னமும் உபத்திரவிக்கவேணுமென்கிற எண்ணம் கொண்டு அப் பொழுதே என்னை தூணில் கட்டி அதுமுதல் இதுவரையில் படாத பாடெல்லாம் படுத்தி வந்தாள். மத்தியில் நான் என்னை கட்ட விழ்த்து விடும்படிக்கும் இனி துன்பப்படுத்தாமலிருக்கும்படிக்கும் பலமுறை கெஞ்சியும் அவள் மனது இறங்கவில்லை. இவைகள்

அனைத்திற்கும் கூடவிருந்த இராவுத்தரோ என் விஷயமாக இந் தம்மாவுடன் கூடியமட்டும் நயபயமாகவே சுகூஷியாடியும் அது பலிக் கவில்லை.'' மற்றும் அங்குள்ளவர்களில் இன்னார் தன்னை கட்டும் பொழுது ஒத்தாசையாயிருந்தார்கள் இன்னாரின்னார் அடித்தார்கள் என்றும் வாக்குமூலம் கொடுத்தான்.

பிறகு அவ்வதிகாரி காபந்தில் இருந்த இராவுத்தரை வரவழை த்து 'இராவுத்தரே, உமது விருத்தாந்தம் யாது? உமக்கும் சோத னைபுரம் பொன்னம்மாவுக்கும் உண்டான பழக்கத்தின் விபர மென்ன? இங்கே தூணில் கட்டப்பட்டிருந்த சீதாராமன் என்பவன் விஷயமாக நேற்று விளக்கு வைத்தது முதல் நான் வருமள வும் என்ன நடந்தது? உமது வேதமாகிய கொருனை மனதினால் நினைத்து அதன்பேரில் பிரமாணம் செய்து உண்மையை சொல்லும்' என்றார்.

அதற்கு இராவுத்தர் 'துரையே, நான் மஸ்தான்சாவடி. அதற் கும் சோதனைபுரத்திற்கும் சுமார் ஒரு மைல் தூரமிருக்கும். நானே வெற்றிலை பயிரிட்டு வியாபாரம் செய்கிறவன். எனக்கு ஒழிந்த நேரங்களில் நான் பக்ஷி குருவி முதலியன வேட்டையாடு வது வழக்கம். சுமார் இரண்டு வருஷத்திற்கு முந்தி ஒரு நாள் நான் ஷை சோதனைபுரத்து தோப்புகளில் அவ்விதமாக வேட்டை யாடி வருகையில், ஒரு குயில் எனது குறிக்குத் தப்பி இந்தப்பொ ன்னம்மாள் வீட்டுக்கொல்லையிலுள்ள ஒரு மரத்தில் வந்துட்கார்ந் தது. நான் அதை அடிக்கவேணுமென்கிற ஆவலுடன் இலக்குப் பார்த்துக்கொண்டே அம்மரத்தடியில் உலாத்திக் கொண்டிருந் தேன். அப்பொழுது முன்பின் தெரியாத இந்தம்மாள் இராவு த்தரே இந்த உச்சி உருமத்தில் இங்கே என்ன செய்கிறீர் என்றாள். நான் இன்ன வேலையாக அலைந்து திரிகிறேன் என்றேன். அந் தம்மாள் காலை முதல் ஒன்றும் ஆகாரம் பார்க்காமலா இவ்விதமாய் அலைகிறீர் என்றாள். நான் கொஞ்சம் பசியாறிவிட்டுத்தான் வெளி க்கிளம்பினேன் என்றேன். உடனே அதற்கவள் நமது வீட்டில் கொஞ்சம் தாகத்திற்கு சாப்பிடுகிறீரு என்றாள். அதற்கு நான் கொடுத்தால் யாராவது வேண்டாமென்று சொல்லுவார்களா என் றேன். உடனே அவள் என்னை கொல்லைப்புறமாகவே வீட்டிற்

குள் அழைத்துக்கொண்டு போய் ஒரு இலையைப்போட்டு அதில் இரண்டு மூன்று இட்டலியும் அப்பொழுதுதான் கடைந்து எடுத்த அரைச்சேர் வெண்ணெயும் வைத்து சாப்பிடச் சொன்னாள். நான் அதை சாப்பிட்டவுடனே குழம்புபோல் கெட்டியாயிருந்த மோரை ஒரு நயச்செம்பு நிறைய ஊற்றி அதைக் குடிக்கச் சொன்னாள். நானும் அந்தப்படியே குடித்தேன். ஆனால் அதைக்குடிக்கும்பொழுது எங்கள் சாதி வழக்கப்படி உதட்டில் வைத்துத் தான் குடிக்கவேண்டியிருந்தது. ஆகிலும் அந்தம்மா அதைப்பற்றி ஒன்றும் வித்தியாசமே நினைக்கவில்லை. பிறகு அவள் கைகழுவ தண்ணீர் கொடுத்துவிட்டு அதிசீக்கிரமாய் ஒரு அரைக்குள்போய் வெற்றிலை பாக்கு கிராம்பு ஏலக்காய் ஜாதிக்காய் சாதிப்பத்திரி வால்மிளகு முதலியதுகளை கொண்டுவந்து வைத்து அதைப்போட்டுக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டாள். நானும் அந்தப்படியே போட்டுக்கொண்ட பின், நான் அந்தம்மாவைப் பார்த்து அம்மா பாப்பாரஜாதிக்குள் உங்களைப்போல் ஒருவரும் பேதமன்னியில் இருக்கமாட்டார்கள். நான் அக்கிராரங்களுக்கு வெற்றிலை கொண்டுபோனால் அங்குள்ளவர்கள் என்னை வாசற்படியண்டையிலேயே நிறுத்தித்தான் வியாபாரம் வாங்குவார்கள். அவர்களில் சிலர் நான் கொடுக்கும் வெற்றிலையை கீழே வைக்கச்சொல்லி அதைத் தண்ணீர்விட்டுக் கழுவிய பிறகுதான் கையினால் தொடுவது வழக்கம் என்றேன். அதற்கந்தம்மாள் அது அவரவர்களுடைய இஷ்டத்தைப் பொருத்ததே தவிர வேறில்லை. எனக்கோ உம்மைப் பார்த்த பிறகு நீர் என்னைத் தொட்டபோதிலும் நான் பேதமாய் நினைக்கப்போகிறவள் அல்ல. ஆனால் ஒரு தரம் தொட்டுவிட்டால் பிறகு அதை ஒட்டியே எந்நாளும் தொட்டுக்கொண்டிருக்க வேணுமென்பதும் இச்சரீரத்தையே அவ்விடத்திற்கு அடிமையாக்கிவிடவேணும் என்பதும்தான் எனது கோரிக்கை என்றாள். அந்தம்மாவினது நோக்கம் இன்னதென கண்டுகொண்ட நான் அம்மா உங்களுடைய கருத்தை அறிந்துகொண்டேன். ஆகிலும் நானோ ஒரு பெரிய சமுசாரி. அதைக் காப்பாற்றுவதற்கோ மாதம் ஒன்றுக்கு இருபது ரூபாய் இருந்தாலும் போதாது. அதற்காக நான் ஏதோ சொற்பநிலத்தை பதிக்கி வாங்கி அதில் வெற்றிலை பயிர் செய்து ஜீவனம் செய்துவருகிறேன். உங்களுடைய இஷ்டப்படி

நான் இங்கே வரத்துப்போக்காயிருந்தால் என் பெண்சாதி பிள்ளைகள் எல்லோரையும் சோற்றுக்குத் தவிக்கவிட வேணுமே என்பதைத் தவிர வேறு தடை ஒன்றுமில்லை என்றேன். அதற்கந்தம்மாள் ஐயா சாயபு நீர் அதற்காக கவலைப்படவேண்டாம். எனக்கோ வருஷம் ஒன்றுக்கு நாலாயிரம் ரூபாய் வரும்படி வரக்கூடிய நிலபலமும் பதினாயிரரூபாய் ரொக்கமும் இருந்துகொண்டிருக்கிறது. நீர் மாசாமாசம் உமது குடும்பத்திற்கு செல்லுமென்றுசொன்ன இருபதுரூபாய் மாத்திரமல்ல. இன்னும் பத்துரூபாய் சேர்த்து மாசம் ஒன்றுக்கு முப்பதுரூபாய் கொடுத்து விடுகிறேன். அதை உங்களுடைய சம்சாரத்தினிடத்தில் கொடுத்துவிட்டால் பிறகு இங்கே வரத்துப் போக்காயிருப்பதற்கு தடையில்லையே என்றாள். நான் சரி என்று சம்மதித்தேன். அதுமுதல் இதுவரையில் நான் அந்தம்மாவினுடைய மனம் கோணாமல் நடந்துவருகிறேன். அவளும் சொன்ன சொல் தவறாமல் மாசாமாசம் முதல் தேதி பிறந்தவுடன் 30 ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கிறாள். ஆனால் அவளுக்கும் எனக்கும் இவ்வளவு அந்நியோன்னியம் ஏற்பட்டிருந்தும் அவள் என்னுடைய சிநேகத்தை மறைபொருளாகவே கொண்டாடி வருகிறாள். இன்று அவள் அவளுடைய பிள்ளையை கண்டித்ததுகூட எங்கள் இருவருக்கும் உள்ள இரகசிய சிநேகம் இன்னதென பிறர் வம்பளக்கலாயிற்றே என்பதைப்பற்றியே தவிர வேறில்லை' என்றபின் முதலில் விசாரிக்கப்பட்ட சீதாராமய்யனுடைய வாக்குமூலத்திற்கு அனுசரணையாகவும் அவன் அம்மாதிரியே இன்னும் சிலநேரம் கட்டிவைக்கப்பட்டிருந்தால் இறந்துபோயிருப்பானென்றும் வாக்குமூலம் கொடுத்தான். மறுபடியும் அவ்வதிகாரி இராவுத்தரே பிரஸ்தாப சீதாராமனை பொன்னம்மாள் ஸ்வீகாரம் செய்துகொண்டு எத்தனை நாளாயிற்றென அவன் யஜமானே, நான் அந்த வீட்டுக்குப் பழக்கமாய் இரண்டு மாதமானவுடனே, பெற்ற தகப்பனால் கர்லா காலத்தில் சோறுகூட போடப்படாமல் திரிந்துகொண்டிருந்த இந்தப்பையனை அப்பொன்னம்மாள் அழைத்துவந்து பிறகு பிள்ளையாக எடுத்துக்கொள்வதற்கு என்னென்ன சடங்குகள் உண்டோ அதையும் செய்து பூணூல் கலியாணமும் நடத்தியிருக்கிறாள். ஆனால் அதற்காக எழுத்துப்பட யாதொரு தஸ்தாவேஜியும் ஏற்படவில்லை

என்றான். பிறகு அவர் அதற்குப் பக்கத்து வீட்டு ஜானகியம்மாளை வரவழைத்து விசாரிக்க அவள் குணவதியம்மாள் தெரிவித்த சங்கதிகளுக்கு ஒத்ததாகவே வாக்குமூலம் கொடுத்தாள். கடைசியாக அவர் பொன்னம்மாளை தன் முன்பாக கொண்டுவரச்சொன்னார். அவள் வரும்போழுதே ஒரு பெண்பிள்ளைக்கிருக்கவேண்டிய நாணம் மடம் அச்சம் என்பது அணுவளவுமில்லாமல் மிக தைரியமாய் வந்து நின்றாள். அவளைப் பார்த்து அவ்வதிகாரி அம்மா நீங்கள் உங்களுடைய பிள்ளையை இறந்துபோகும்படியான ஸ்திதியில் ஏன் உபத்திரவித்தீர்கள் என்றார். அதற்கந்தம்மாள் ஐயா இப்படிப்பட்ட பிள்ளை இருந்தாலென்ன அல்லது செத்தால்தான் என்ன? உமக்கும் இப்படி ஒரு பிள்ளையிருந்து உம்மை பலவிதமாய் தூஷித்து உம்முடைய சமுசாரத்திற்கும் வேசிப்பட்டம் கட்டினால் நீர் அப்பிள்ளையை பத்திரபுஷ்பங்களினால் அர்ச்சித்து பூஜை செய்வீர்போல் தோணுகிறது. அப்படியாவது இவனை நான் பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்தேனா. உண்ணச் சோறன்னியிலும் உடுக்கத்துணியன்னியிலும் பஞ்சத்தில் அடிபட்டதுபோல் கேள்வி முறையற்றுக் கிடந்த இக்கழிசடையை நாலுபேர் ஒரு பிராமணப்பையன் தான் என்று மதிக்கும்படி இவனை ஆளாக்கிவிட்டேன். அப்படிப்பட்ட இவன் வளர்த்த கிடா மாரில் பாய்ந்தது என்பது போல் எனக்கே ஒரு கெட்ட பெயரை உண்டாக்கத் தலைப்பட்டு விட்டான். அப்படிப்பட்ட இவனை நான் கண்டிக்கும் விஷயத்தில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாகிய நீங்கள் பிரவேசிப்பதற்கு நியாயமில்லையே என்றாள். அதற்கவ்வதிகாரி அம்மா நாங்கள் பிரவேசிக்கத்தகாத காரியங்களில் ஒரு போதும் பிரவேசிக்கமாட்டோம். நான் இங்கே வருவதற்கு முந்தியே இந்த இடத்தில் இன்ன நடக்கிறது என்பதாக ஒரு தக்க மனுஷியாள் என்னிடம் வந்து தெரிவித்ததின்பேரில் தான் இங்கே வரும்படிக்கும் உங்கள் அனைவரையும் சட்டப்படி விசாரிக்கும்படிக்கும் இடமுண்டாயிற்று. அதோடு கூட இப்பொழுது விசாரிக்கப்பட்ட சாக்ஷிகளால் ருசுவாகிறபடி உயிர்போகும் தருவாயிலிருந்த உங்கள் பிள்ளையாண்டானை நானே கட்டவிழ்த்தும் விட்டிருக்கிறேன். இவ்வளவிற்கும் மூலகாரணமாயிருக்கும் உங்களை தக்கபடி சிட்சிக்கப்போகிறேன். அவ்விதமாக சிட்சிக்காமலிருப்பதற்கு தக்க நியாயங்கள் ஏதாவதுண்டா சொல்லுங்கள்

என்ருர். அதற்கப்பொன்னம்மாள் நான் பார்த்து ஸ்வீகாரம் செய்துகொண்டிருக்கும் பிள்ளை உமக்குத்தான் பிறந்திருக்கிறது போல் தோணுகிறது. அப்படியானல் நீரே இவனை அழைத்துக் கொண்டுபோய் ஸம்ரட்சணை செய்யும். என்னுடைய எண்ணத் திலும் இவனை எந்த விதத்தில் கழித்துவிடலாமென்றே கவலைப் பட்டுக்கொண்டிருக்கிறேன். நீரோ அதை நிவர்த்திசெய்ய வந்து விட்டீர். எப்படியாவது இப்படுபாவி என்னைவிட்டுத் தொலைந்து போய்விட்டால் பிறகு நீங்கள் சொல்லுகிறபடியே நான் தண்ட னைக்குள்படுவதில் தடையேயில்லை என்ருள். மறுபடியும் அவ்வதி காரி அம்மா நீங்கள் எதற்கும் துணிந்தவர்கள் என்றே கண்டுபிடி த்தேன். அப்படிப்பட்ட நீங்கள் என்னை இன்னும் எவ்வளவு குறை வாய் பேசியபோதிலும் அதை நான் ஒரு குற்றமாக பாராட்டப் போகிறதில்லை. மேலும் தற்காலம் நிராதரவாயிருக்கும் இப்பை யனை நீங்கள் சொல்லுவதற்கு முந்தியே நான் என்னேடுகூட அழைத்துக்கொண்டுபோய் என்னுடைய போஷணையில் வைத்து க்கொள்ளுகிறதென்று தீர்மானித்திருக்கிறேன். மற்றும் உங்க ளால் இவனுக்கு யாதொன்றும் கிடைக்கமாட்டாது என்று சற்று முன் நீங்கள் சொல்லிய கட்சியானது இவனுக்கு போதுமான வயது வந்தவுடன் எம்மட்டும் நிலை நிற்கும் என்பதை பிந்தி தெரி ந்து கொள்ளுவீர்கள். நிற்க:—

நீங்கள் கொஞ்சமாவது இரக்கமில்லாமல் இன்று இவனுக்கு பிராணுபாயம் உண்டாகக்கூடிய நிலைமையில் துன்பப்படுத்திய குற் றத்திற்காக உங்களுக்கு ஒரு வருஷம் கடினகாவலும் ஐந்நூரு ரூ பாய் அபராதமும் அவ்வபராதத்தை செலுத்தத்தவறினல் அதற்காக பிரத்தியேகமாய் கடினகாவலும் தண்டனை விதித்திருக்கிறேன். தவிரவும் நீங்கள் உங்களுடைய பிள்ளையை கட்டும் காலத்திலும் அடி க்கும்பொழுதும் உங்களுக்கு உதவிசெய்த எதிரிகளும் நியாயமான எதிர்வாதம் ஒன்றும் சொல்லாததால் அவர்களுக்கு தலைக்கு அன் பது ரூபாய் அபராதமும் அதை செலுத்தத்தவரினல் ஆறுவாரம் கடினகாவல் என்றும் தீர்மானித்திருக்கிறேன், என்று சொல்லி விட்டு அங்கு நின்ற இராவுத்தரை பார்த்து ஓய் சாகிப், நீர் இந்த ம்மாவுடன் நேசித்த உலகாசாரமான தவறுதலை நீக்கி மற்ற பாகங் களில் உம்மை ஒரு ஸத்தியஸந்தனென்றே மதித்திருக்கிறேன்.

இனி நீர் உமது வேலைகளை பார்க்கப்போகலாம் என்று உத்திரவு கொடுத்தார். பிறகு பொன்னம்மாவும் அச்சமயம் அபராதம் செலுத்த அசக்தர்களாயிருந்த மற்ற எதிரிகளும் ஜயிலுக்குக்கொண்டுபோகப்பட்டார்கள். அவர்கள் போனபின்பு அந்த டிப்டிகலெக்டர் மேற்படி பிராமணப்பையனாகிய சீதாராமனை தன்னோடு வண்டியில் ஏற்றிக்கொண்டு ஜாகைக்குப் போய் குணவதியம்மாவிடம் தான் போனதுமுதல் இன்னது நடந்தது என்று சவிஸ்தாரமாய் தெரிவித்தார். அந்தம்மா அந்தப்பையனுடைய முகத்தில் நல்ல களை இருக்கிறதென்றும் அவனை சுகமாக போஷித்து படிக்கவைத்தால் அவன் தக்கபடி முன்னுக்கு வருவான் என்று தோணுகிறதென்றும் அபிப்பிராயம் கொடுத்தாள். அந்தப்படியே அவன், அவ்வதிகாரி குணவதியம்மாள் முதலியவர்களுடைய விசாரணையிலேயே இருந்துவந்தான்.

(இன்னும் வரும்.)

எம். எஸ். சுப்பிரமணியய்யர்.

பாம்பின் விஷம்.

(ஓர் வியாபாரப் பொருள்)

ஸாதாரணமாக உஷ்ணப்பிரதேசங்களில் விஷப்பாம்புகள் அதிகமாகவிருக்கின்றன. அதிலும் இந்தியாவில் உயிரை நொடிப் பொழுதில் போக்கக்கூடிய விஷத்தையுடைய கொடிய பாம்புகள் மிகவும் விசேஷித்திருக்கின்றன. தற்காலத்தில் குறவர்களும், பாம்பாட்டிகளும் விஷப்பாம்புகளைப் பிடித்துத் தங்கள் ஜீவனார்த்தமாக தெருக்களில் கொண்டுவந்து வித்தைகள் காட்டி அரிசி வாங்கிக்கொண்டு போகிறார்கள். அவர்கள் பாம்பு விஷத்தின் பொருமானத்தை அறிந்து கொண்டிருந்தால், தங்கள் தொழிலை விருத்திசெய்து ஏராளமான திரவியத்தை ஸம்பாதித்துக் கொள்ளுவார்கள். நவீன கிளர்ச்சியில் இந்தியர்கள் தற்சமயம் அதிக ஊக்கத்தைக் காட்டிக்கொண்டு வருகிறபடியால் தேற்சியடைந்தவர்கள் இப்புதிய வியாபாரப் பொருளைச் சேகரித்து அயல்நாடுகளில் விற்றுமுதல் செய்து திரவியம் சம்பாதித்துக்கொள்வார்களென்று நம்புகிறோம்.

இப்பொழுது இத்தொழிலை ஆஸ்திரேலியர்கள் மாத்திரம் கைக்கொண்டிருக்கிறார்கள். பாம்பு விஷத்திற்கு கிராக்கியும் அதிகமாகவிருக்கிறது. ஐரோப்பிய ரஸாயன சாலைகளிலும், மருந்துசாமான் செய்யும் பெரிய ஆபீஸ்களிலும், இப்பாம்பு விஷத்தை விசேஷமாக உபயோகப்படுத்துகிறார்கள். விசித்திரப் பொருள்களைச் சேகரிப்பவர்களும், லோகோபகாரமாக உழைத்துவரும் ரஸாயன நிபுணர்களும், பாம்பு விஷத்தை ஏராளமான திரவியம் கொடுத்து வாங்குகிறார்கள். பாம்பின் விஷம் அதிகமாகக் கிடைக்குமென்று மாத்திரம் ஏற்பட்டால் இன்னும் புதிய உபயோகங்கள் கண்டுபிடிக்கப்படுமென்று நம்பப்படுகிறது. ஸமீபத்தில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த நியூ ஸௌத் வேல்ஸ் என்னும் நாட்டில் சேகரிக்கப்பட்ட பாம்பு விஷத்தின் கிரயம் மிகவும் அதிகமாகவிருந்தபடியால் அனேக ஆஸ்திரேலியர்கள் இத்தொழிலைக் கையாளத்தலைப்பட்டு விட்டார்கள். நிறைமூலமாக இப்பாம்பு விஷத்தின் விலையை மதித்தால், அது வைரக்கல்களின் விலையைக்காட்டிலும் அதிகமாகவிருக்கிறது. ஸிட்னீ நகரத்தில் நடந்த வியாபாரத்தில் பாம்பு விஷத்தின் விலையைச் சற்று கவனிப்போம். பொன், வெள்ளி முதலிய உயர்ந்த உலோகங்கள் நிறுக்கப்படுகிற நிறையால் ஒரு கிரெயின் பாம்பு விஷம் பதினைந்து முதல் இருபது ரூபாய் வரையில் விலை போயிற்று. அதாவது, ஒரு பவுண்டு பாம்பு விஷத்திற்கு ஸுமார் தொண்ணூராயிரம் அல்லது லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு பணம் கொடுத்து இவ்விசித்திரப் பொருளை வாங்கினபோதிலும், எவ்வளவு தேவையோ அவ்வளவு விஷம் அகப்படுவதில்லை. ஆகையால், இந்தியாவில் பாம்பு பிடிப்பதில் கைதேர்ந்தவர்கள் அதிகமாகவிருப்பதாலும் பாம்பு பிடிப்பதையே தொழி

லாக அனுஸரித்துவரும் ஏழை ஜனங்கள் மிகுந்திருப்பதாலும் இப்பொருளை நவீன முறைகளால் சேகரித்து விலை செய்வதற்கு அனேகர் முன் வந்து ஏழை ஜனங்களின் ஸ்திதியை செம்மைப்படுத்துவார்களென்று நம்புகிறோம்.

பாம்பு விஷத்தைச் சேகரிப்பதால் ஏராளமான ஐசுவரியம் கிடைக்கும் பக்ஷத்தில் ஏன் எல்லாரும் இந்தத் தொழிலை ஆரம்பிக்கக் கூடாதென்று கேட்கலாம். இதற்கு அனேக காரணங்களுண்டு. தண்ணீர்ப் பாம்பு முதலான ஸாதாரண பாம்புகளின் விஷம் அதிகக் கொடூரமாகவில்லாததால் வாங்குகிறவர்கள் அவைகளை அபேக்ஷிக்கிறதில்லை. கொடுமையான விஷமுள்ள பாம்புகளைப் பிடிப்பதில் அதிக உயிர்ச்சேதம் வந்துவிடுமாகையால் அனேகர் அத்தொழிலை கைக்கொள்வதற்கு அஞ்சுகிறார்கள். தேற்சியடைந்தவர்கள் பாம்புகளைப் பிடித்தால், அப்பாம்புகளிடத்திலிருந்து விஷத்தை எவ்விதம் எடுக்கிறதென்றும், அதை எவ்விதம் விலையாக்குவதென்றும் தெரிந்துகொள்ளாதவர்களாக விருக்கிறார்கள். ஆகையால், மேற்கண்ட விஷயங்களைப்பற்றிச் சற்று விசாரிப்போம்.

பாம்புகளை அபாயமன்னியில் பிடிப்பதற்குத் தகுந்த ஆயுதங்களில்லாததால் அனேகர் இத்தொழிலை யனுசரிப்பதில்லை. விஷங்களை ஸரியாகச் சேர்க்கத் தகுந்த ஸாதகங்களில்லாததால் பயின்றவர்கள் கூட தயங்குகிறார்கள். விஷப்பாம்புகள் புற்றுகளிலும் புதர்களிலும் சப்பாத்திக்கள்ளிகளிலும் ஜலப்புழக்கமுள்ள விடங்களிலும் தென்னைமரங்களின் உச்சிகளிலும் விசேஷமாக வியாபித்திருக்கின்றன. அருணோதய காலத்திலும், அஸ்தமயவேளைகளிலும் தான் பாம்புகள் வெளியில் வருகின்றன. இக்காலங்கள் தவறிப்போனால் பிடிப்பவர்களுக்கு விசேஷித்த

ஆபத்து நேரிடும். வெளிச்சமாய் விட்டால் பாம்புகள் இருப்பிடம் போய்விடும். இருட்டிவிட்டாலோ அவைகள் எந்தவிடத்திலிருந்தாலும் பிடிக்கவருபவர்களைக் கடித்துவிடும். விஷம் விற்பனைக்காக எடுக்கவேண்டுமானுல் பாம்புகளை உயிருடன் பிடிக்கவேண்டும். புற்றுகள் புதர்கள் முதலியவிடங்களில் பரிச்சயமுள்ளவர்கள் பாம்புகளை எளிதில் அடித்துக் கொன்றுவிட முடியும். ஆனுல், உயிருடன் பிடிப்பதற்கு ஸாமர்த்தியமும் தைரியமும் விசேஷித்த ஊக்கமும் வேண்டும். பொதுவில் பாம்புகள் எதிரிகளுடன் சண்டை செய்யும் ஸ்வபாவமுள்ளதல்ல. தங்களுடைய எதிரிகளிடத்திலிருந்து தப்பித்துக்கொண்டோடுவதற்குத்தான் வழிபார்க்கும். ஆனுல், சிற்சில ஸமயங்களில் எதிரிகளை மிகவும் கோபத்துடன் சீறிக்கொண்டு துறத்தும். முட்டையிடும் காலத்தில் பாம்புகள் அடங்காத தைரியத்தைக் கொண்டுவிடும். வீராவேசத்துடன் எதிரிகளின் பேரில் பாயும். ஓடும் பாம்புகளைப் பிடிப்பதற்குக்கூட சுறுசுறுப்பும் ஊக்கமும் வேண்டும். ஆனுல், வேடிக்கை பார்ப்பவர்கள் பாம்புகளைப் பிடிப்பது இலகுவான காரியமென நினைக்கக்கூடும். பாம்பு பிடிப்பவர்களின் வழக்க பழக்கங்களே அவ்விதம் நினைக்கும்படி செய்கிறது. பாம்பாட்டிகளின் கைகள் அவர்களுடைய கண்களைப்போல் கூர்மையாயும், சப்தமில்லாமலும் சுறுசுறுப்புடனும் வேலை செய்யும். சிலர் கைவிரல்களால் மாத்திரம் பாம்பைப் பிடிக்கிறுர்கள். வேறு சிலர், கிடுக்கிகளை வைத்துக்கொண்டு தலைப்பக்கத்தை கீழே தொங்கும்படி பிடித்து கைகளால் மென்னியை இறுகப்பிடிக்கிறுர்கள். பிடித்த பாம்பை பைக்குள் அல்லது பெட்டிக்குள் போடும்வரையில் கைகள் தலைப்பக்கத்தை தளரவிடாமல் இறுகப்பிடித்துக்கொண்டிருக்கவேண்டும். கிடுக்கிகளாலும் தடி

களாலும் பிடிக்கப்படும் பாம்புகள் சில ஸமயத்தில் நமக்கு உபயோகமுள்ளதாக ஆகிறதில்லை. ஏனெனில், பாம்புகள் இவ்வாயுதங்களைத் தங்களின் எதிரிகளென நினைத்து அவைகளுடன் மன்றாடியும் சண்டை செய்தும் பற்களை ஒடித்துக்கொண்டு விஷத்தைக் கக்கவிட்டு பிராணனையும் சிலஸமயங்களில் வீரியத்தையும் விட்டுவிடுகின்றன. ஆகையால் அப்பாம்புகள் வியாபாரதோரணைகளுக்கு உபயோகப்படாது. ஸ்வபாவமாகத் திரிந்துகொண்டிருக்கும்பொழுது பிடிபடும் பாம்புகள்தான் நம்முடைய காரியங்களுக்குப் பிரயோஜனப்படும். பிடிப்பவர்கள் பாம்புகளை விஷமெடுப்பவர்களிடத்தில் ஒப்புவிக்கும் வரையில் அவைகளுக்கு யாதொரு அதிர்ச்சியையும் பயத்தையும் கொடுக்கக் கூடாது. ஆனால், இந்த நிபந்தனைகளுக்குள் பாம்புகளைப்பிடிப்பது மனுஷியர்களால் அஸாத்தியமான காரியமல்ல.

பாம்புகளைப் பிடித்த பிறகு அவைகளிடத்திலிருந்து விஷத்தை எவ்விதம் எடுப்பது என்ற விஷயத்தைப் பற்றி சற்று விசாரிப்போம். சிலர் பாம்புகளின் விஷப்பைகளை நன்றாக அறுத்து எடுத்துவிடுகிறார்கள். அவர்கள் பாம்புகளின் தலைகளைக்கிழி விஷப்பைகளையெடுத்து ஜாக்கிரதையாகக் காற்றுப்புகாதிருக்கும் தயாரித்த கண்ணாடி சீசாக்களில் போட்டு மூடி வியாபாரத்திற்கு ஸித்தப்படுத்திவிடுகிறார்கள். மற்றும் சிலர், பாம்புகளுக்குக் கோபத்தையும் ஆக்கிரகத்தையும் உண்டுபண்ணி சீறவிட்டு ரப்பர் நாடாக்களைக்கடிக்கும்படி செய்து கண்ணாடித்தட்டு ஒன்றைக் கீழே வைத்து விடுகிறார்கள். பாம்புகள் கோபத்தால் ரப்பர் நாடாக்களை யெதிர்த்து அதில் துவாரங்கள் செய்து விஷத்தைக் கண்ணாடித் தட்டில் கக்குகின்றன. ஆனால், இம்முறையால் விஷத்தை யெடுப்பவர்கள் அதில் அசுத்த பதார்த்தங்கள் ஒன்றும் சேராதபடி மிகவும் கவனமாகப்

பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். பாம்புகளால் கடிக்கப்பட்ட சரீரத்தில் நாம் இரண்டு பற்களின் பதிவுகளைப் பார்க்கலாம். ஏனெனில் விஷப்பாம்புகளின் மேலுதட்டில் இரண்டு விஷப்பற்களிருக்கின்றன. விஷமெடுப்பவர்களால் தூண்டப்பட்டவுடன் இப்பற்கள் ரப்பர் நாடாவில் இரண்டுவிடங்களில் துவாரம் செய்து இரண்டு துவாரங்களின் வழியாகவும் விஷத்தைக் கக்கும். கண்ணாடித்தட்டில் கக்கியிருக்கும் விஷத்தைக் கத்தியால் எடுத்து காற்றுப் புகாதிருக்கும் கண்ணாடிப் பாட்டில்களில் அடைத்து விலைக்கு விற்கப்படுகிறது. ஸித்தப்படுத்துகிறார்கள். சில விஷயங்களில் விஷமெடுப்பவர்களின் காரியம் மிகவும் ஆபத்தைத் தரக்கூடியதாகவிருக்கிறது. பிடிப்பவர்களைக் காட்டிலும் விஷமெடுப்பவர்கள் மிகுந்த அபாயத்துக்குள்ளாகிறார்கள். பாம்புகள் பைகளிலிருந்து உக்கிரகமாக வெளிக்கிளம்புகிறது. கோபாவேசத்துடன் தான் உள்ளேயும் போகிறது. சில ஜாதி பாம்புகளிடத்தில் உயிரை அபகரிக்கக்கூடிய அவ்வளவு உக்கிரமான விஷம் இருக்கிறதில்லை. ஆயினும் அவைகளிடத்தில் ஏராளமான விஷமிருப்பதால் வியாபாரத்திற்காக அவைகள் தள்ளுபடியான பாம்புகளல்ல. விரியன், சாரை, ஓலைப்பாம்பு, கொம்பேறிமொக்கன் முதலியவைகள் இவ்வகையைச் சேர்ந்தன. இருந்தாலும் அதிகமாகவும் மிகவும் கொடுமையாகவுமிருக்கிற பாம்பு விஷங்களின் விலை மிக்க அதிகமாகவேயிருக்கும்.

சாவு பாம்பு அல்லது "டெத் ஆடர்" என்ற ஜாதிப் பாம்பானது ஆஸ்திரேலியாவிலுள்ள மற்றப் பாம்புகளைக் காட்டிலும் மிகவும் கொடுமையானது. அதை நம்முடைய தேசத்து நல்லபாம்புகளுக்கு ஒப்பிடலாம். இப்பாம்பு கடியால் மரணம் சீக்கிரம் வந்துவிடுகிறது. 1906ம் வருஷத்து ஆஸ்திரேலிய தேசத்து பாம்பு கடி ரிபோர்டின்

படி 190 பேர்கள் பாம்புகளால் கடிக்கப்பட்டார்களென்றும் "டெத் ஆடரால்" கடிக்கப்பட்ட 10 பேர்வழிகளில் 5 பேர் இறந்ததாகவும் புலிப்பாம்பு "டைகர் ஸ்நேக்" என்ற பாம்பால் கடிக்கப்பட்ட 33 பேர்களில் 15 பேர்கள் இறந்தார்களென்றும் "ப்ரௌன் ஸ்நேக்" என்ற பாம்பால் கடிக்கப்பட்ட 32 பேர்களில் 16 பேர்கள் மரித்தார்கள் என்றும், மிகவும் பயத்தைக்கொடுக்கக்கூடிய கரும்பாம்பால் கடிபட்ட 87 பேர்வழிகளில் ஒருவரும் சாகவில்லையெனவும் தெரியவருகிறது. பயங்கர ஆகிருதியுள்ள பாம்புகளிடத்தில் விஷம் அதிகமாகவிருக்கிறது. ஆறு ஜாதி தண்ணீர்ப் பாம்புகளில் நான்கு ஜாதிகளில் விஷம் கடுமையாகவிருக்கிறது. இந்தியாவிலும் பாம்பு கடியால் மடியும் ஜனங்களும் ஜந்துக்களும் கணக்கில்லாமலிருக்கின்றன. நம்மிடத்தில் இந்தியா மாகாணரிபோர்ட் இல்லாதிருந்தாலும் தினஸரி பத்திரிகைகளிலிருந்து அடிக்கடி பாம்பு கடியால் மரிக்கும் ஜனங்களைப்பற்றி விசனத்துடன் கேள்விப்படுகிறோம். நல்ல பாம்புகளில் கரும்பாம்பு அல்லது பரப்பாம்பு மிகவும் கொடியது. அது ஸத்தியத்திற்குக் கட்டுப்படாது என நாம் மந்திரவாதிகளிட மிருந்து கேள்விப்பட்டிருக்கிறோம். வெண் பாம்பு அல்லது பிராமணப்பாம்பால் கடிபட்டவர்கள் இவ்வுலகைவிட்டுச் சீக்கிரம் போய்விடுகிறார்கள். குப்பைக் கிடங்குகளிலும் வரளி விறகு முதலியன அடுக்கியிருக்கும் பரண்களிலும் சாக்கடைத் துவாரங்களிலும் காடுகளிலும் இப்பாம்புகள் விசேஷமாக உலாவும். இவைகளுக்கு எலியின் மீது அபிமானம் அதிகம்.

ஆகையால், இந்தியாவில் இத்தொழிலை அப்பியஸிப்பதற்கு வேண்டிய ஸாதகங்களிருக்கின்றன. கடித்தால் உயிருக்கு ஹானி உண்டாக்கக்கூடிய பாம்புகளின் விஷத்

தைத்தான் ரஸாயன சாஸ்திரிகள் மிகவும் அபேக்ஷிக்கிறார்கள். ரஸாயன ஆராய்ச்சிகளில் ஸாதாரண விஷம் உபயோகப்பட்டாலும் அதற்கு அதிக பணம் கொடுத்து வாங்குகிறதில்லை. ஆகையால் இத்தொழிலை எடுக்க ஆரம்பித்தவுடனே மிகவும் ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும். ஒரு பவுண்டு பாம்பு விஷத்தின் நிறையை லட்சம் ரூபாய்க்கு விற்கலாம் என்னும் விஷயத்தைக் கவனிக்கும் பொழுது நாம் மிகவும் ஸந்தோஷப்படலாம். ஆனல், அவ்வளவு ஜாஸ்தி விஷம் இலகுவில் கிடைக்கிறதில்லை. ஆஸ்திரேலியாவில் கூட ஒரே ஸமயத்தில் அவ்வளவு விஷம் சேர்க்கக்கூடவில்லை என வியாபாரத்தால் தெரிகிறது. திடகாத்திரமுள்ள மிகவும் கொடிய பாம்பினிடத்திலிருந்து ஒரே ஸமயத்தில் மிகவும் ஜாக்கிரதையுடன் சேகரித்தால் ஒரு கிரெயின் விஷந்தான் கிடைக்கும். இவ்விதமாக எடுக்கப்படுகிற ஒரு கிரெயின் விஷத்திற்கு முன் சொல்லியபடி 15 முதல் 20 ரூபாய் வரையில் ஸம்பாதிக்கலாம். அதிலும், விஷத்தில் யாதொரு விதமான அசுத்தங்களுமிருக்கக் கூடாது. இந்தப் பதினைந்து ரூபாயை பாம்பு பிடிப்பவர்கள் முதல் விலைக்கு வாங்குகிறவர்கள் வரையில் பகிர்ந்துகொள்ளவேண்டும். பாம்பு பிடிப்பவர்கள் தான் அதிக சிரமப்படுகிறார்கள். அவர்கள் சதுப்பு நிலங்களிலும் கள்ளிக்காடுகளிலும் வாஸம் செய்துகொண்டிருந்து தகுந்த ஸமயத்தை எதிர்பார்க்கிறவர்களாக விருக்கவேண்டும். விஷப்பைபோன பாம்புகளைவிட்டு கொரோமான பாம்பை யாதொரு அபாயமுமின்றி விஷமெடுப்பவர்களிடத்தில் ஒப்புவிக்கவேண்டும். விஷமெடுப்பவர்கள் பாம்பின் விலையை மதிப்பவர்களாக ஆகிவிடுகிறார்கள். ஸுமார் 4 அல்லது 5 ரூபாய்க்கு அவர்கள் வாங்கலாம். விஷமெடுப்பவர்கள் பாக்

கிப்பணத்தை வியாபாரிகளுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

ஆனால் ஒரே ஸமயத்தில் ஒரே பாம்பினிடத்திலிருந்து கிடைக்கக்கூடிய விஷத்திற்கு நாம் மேற்கண்டபடி கணக்கிட்டு இருக்கிறோம். பாம்பின் விஷத்தை எடுத்தவுடன் பாம்பாட்டிகளுக்கும் உயிர் பிராணி காட்சிசாலைகளுக்கும் அவைகளை விற்றுவிடலாம். மாட்டிலிருந்து பால் கறப்பதுபோல் பாம்புகளிடத்திலிருந்து விஷத்தையும் கறக்கலாம். அதாவது, பாம்பினிடத்திலிருந்து ஒரு தடவை விஷத்தை எடுத்தவுடன் அதை பெட்டியில் அல்லது பையில் வைத்திருந்து நாலைந்து நாளைக்குப் பிறகு கொண்டுவந்து மறுபடியும் விஷத்தைக் கக்கும்படி செய்யலாம். ஆயினும் முதல் தடவை கக்கும் விஷத்தின் வீரியம் இரண்டாவது மூன்றாவது தடவைகளில் கக்கும் விஷத்தில் இருக்காது. நாலைந்து நாள் பாம்பை பெட்டியில் உயிருடன் வைத்திருப்பதற்கு ஆகாரம் நன்றாகப்போட வேண்டும் என்று நாம் சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம். நிறையிலும் குணத்திலும் இரண்டாவது தடவை கிடைக்கும் விஷம் தாழ்ந்ததுதான். பாம்புகளை நீண்ட நாள் காப்பாற்றி மாஸத்திற்கு ஒரு முறை விஷத்தைக் கக்கும்படி செய்தல் நல்லது. ஏனெனில், தகுந்த காலம் கொடுக்கும் பக்ஷத்தில் பாம்புகள் தங்களுடைய ஸ்வபாவ வீரியத்தைத் திரும்பவும் அடைந்து விடுகின்றன. பாம்புகள் சிலரைக் கடித்தால் மரணம், சிலரைக் கடித்தால் அவ்வளவு அபாயத்தைக் கொடுக்கிறதில்லை. அதன் ரகஸியம், விஷத்தின் வீரிய சக்தி இரண்டாவது தடவையில் குறைவதனால் தான் பாம்பின் விஷசக்தியை அறிந்த சிலர் அவைகளைச் செல்லப் பிராணிகளாக வளர்த்து வருகிறார்கள். பாம்புகளிடத்திலிருந்து விஷத்தை ஸரியான காலத்தில் கக்கும்படி பழக்கி வைத்துவிடலாம். அப்பொழுது

வியாபாரமானது வலுவை அடையும். பாம்புகளைக் காப்பாற்றுவதற்கு கட்டிடங்கள் தேவையாகும். மூலதனம் போட்டு இவ்வியாபாரத்தைக் கையாளவேண்டி வரும். இதுவரையில் ஒழுங்காக ஒருவரும் இத்தொழிலைக் கைக்கொள்ளவில்லை. ஏற்பாடாக இவ்வியாபாரத்தைக் கைகொண்டால் நாம் லாபத்தை அடையமுடியுமா? அப்படி அடைந்தால், ஆடு மாடுகளைப்போல் பாம்புகளும் விலையுள்ள பிராணிகளாக ஆகிவிடுமா? இக்கேள்விக்குப் பதில் காலக்கிரமத்தில் தான் சொல்ல முடியும்.

முக்கியமாக இத்தொழிலை யனுஸரிக்கவேண்டுமானால், அனேகவித பாம்பின் விஷங்களின் வீரியத்தை அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். விஷங்களை ஒழுங்குபடுத்தும் காரியமானது தற்போது ஆஸ்திரேலியாவில் நடந்துவருகிறது. ஆயினும் திருப்திகரமான பரிசோதனை நடக்கவில்லை. ஆஸ்திரேலியா டாக்டர் ஒருவர் பாம்பு விஷங்களைக் குழிமுயல்களில் செலுத்தி ஒருவாறு பரீக்ஷை செய்துகொண்டு வருகிறார். அவர் ஆஸ்திரேலியாவிலுள்ள புலிப்பாம்பு விஷத்திற்கு வீரியம் அதிகமென்றும், கரும்பாம்பு விஷத்தைவிட 14 மடங்கு பலம் ஜாஸ்தியென்றும், ப்ரௌன் ஸ்நேக் டெத் ஆடர் விஷத்தைக் காட்டிலும் 4 மடங்கு பயங்கரமானதென்றும் தெரிவிக்கிறார். ஒரே தடவையில் டெத் ஆடர் புலிப்பாம்பைக் காட்டிலும் 3 மடங்கு அதிக விஷத்தைக் கக்குகிறது, கரும்பாம்பைக் காட்டிலும் 7 மடங்கு விஷத்தைக் கொடுக்கிறது, ப்ரௌன் ஸ்நேக்கைக் காட்டிலும் 17 மடங்கு விஷம் வருகிறது. இவ்வித பரிசோதனையானது சாஸ்திர முறைகளுக்கு விநோதமாக விருந்தபோதிலும் பாம்பு பிடிப்பவர்களுக்கு இக்கணக்கு உபயோகமுள்ளதாகவிருக்கும்.

இந்தியா தேசத்து பாம்பு விஷங்களின் வீரியத்தைக்

கண்டுபிடிக்க ஒரு ரஸாயன சாஸ்திரியாவது முன் வந்திருப்பதாக நமக்குத் தெரியவில்லை. உஷ்ணப் பிரதேசங்களில் அதிகவிஷமுள்ள ஜந்துக்களிருப்பதால் ஆபிரிக்காவிலும் இத்தொழிலை விருத்திசெய்வதற்கு அநேக ஸௌகர்யங்களிருக்கின்றன. ஆனால், இந்தியர்கள் இத்தொழிலைக் கையெடுப்பார்களோவென ஸந்தேகிக்கலாம். அவலக்ஷணமாயும் கோரரூபமாயும் பயங்கரமாயும் ஆபத்தை விளைவிக்கக் கூடியதுமாயுமுள்ள பாம்புகளைப் பிடித்து தொந்திரவு செய்து விஷத்தை எடுப்பது என்ன காரியமென அனேகர் பரிகாஸம் செய்யலாம். விருதா காலக்ஷேபம் செய்து இவ்விஷயத்தை ஆராய்ந்து பார்த்து வியாஸம் எழுதினவரை மனதிற்குள்ளோ வெளிப்படையாகவோ ஏளனம் செய்யலாம். இவைகளெல்லாம் மிகவும் எளிதான காரியம். ஆனால், ஊக்கத்துடன் இத்தொழிலைக் கைக்கொள்வது பரிஹஸிக்கக் கூடிய காரியமன்று. நாம் தொழிற்சாலைகளில் ஐரோப்பியர்களுடன் போட்டி போடவேண்டுமென்றால் அவர்கள் தலையெடுக்கும் ஒவ்வொரு நவீனகாரியங்களிலேயும் நாம் ஊக்கத்தைக் காட்டவேண்டும். பின் தங்கினால் நஷ்டமடைபவர்கள் நாமே. இந்தியாவிற்கு திரவியத்தால் க்ஷேமம் வரவேண்டுமென்ற கோரிக்கை நமக்கு இருக்கும் பக்ஷத்தில், வீணாகப் போய்க்கொண்டிருக்கிற நமது பொருள்களைச் சேகரித்து விலைப்படுத்தல் நமது முதல் கடமையாகும். ஆகாயக் கப்பல்களைக் கண்டுபிடிக்க எவ்வளவு ஐரோப்பியர்கள் தங்களுடைய உயிரை நத்தம் செய்திருக்கிறார்கள்? பாம்பு விஷங்களைச் சேகரிக்க உயிர்ச்சேதமிருக்கவேண்டியது அவசியமா?

நா. ராமபத்ர தீக்ஷிதர்.

அன்பின் வலிமை.

XV. கடைசியில் ஐயம்.

மலையின் அடிவாரத்தில் ஒரு சிறிய தெருவின் நடுவில் ஒரு நடுத்தரமான வீடு இருந்தது. பக்கத்து வீடுகள் நெருங்கியிராமல் இடையில் சந்திருந்தன. சில இடங்களில் சந்துகள் பெரியவையாய் தோட்டமாக அமையும். இரவில் 8 மணியிருக்கலாம். தெருக்கோடியில் இருவர் மெதுவாய் நடந்துவந்தார்கள். மேற்கூறிய வீட்டின் மேற்குப்புறத்தில் உள்ள சந்தில் நுழைந்தார்கள். அவர்கள் நடையால் சிறிதும் சத்தமுண்டாகவில்லை. சிறிது தூரம் நடந்ததும் ஒரு மூலை தென்பட்டது. அதில் ஒளித்துக்கொண்டார்கள். ஒரு மணி நேரம் அங்கேயே காத்திருந்தார்கள். ஒரு சத்தமும் கேட்கவில்லை. எல்லாம் நிச்சத்தமாயிருந்தது. பிறகு அவ்வீட்டின் வாயில் கதவு திறக்கப்பட்டது. யாரோ ஒருவர் நுழைந்த சத்தம் காதில்கேட்டது. உள்ளே சென்று சற்று நேரத்திற்கெல்லாம் வெளியில் வந்தார். வந்து நின்றுகொண்டிருந்தார் போலும். வேறொருவர் வந்து "ஏன் நிற்கிறாய்? வெங்கிட்டராமய்யர் எங்கே." என நின்றுகொண்டிருந்தவர்

"அவன் இன்னம் வர நேரமாகும். நாம் இருவரும் சென்று அவனைக்கூட்டிவருவோம்." என்று சொல்ல இருவரும் வெளியில் சென்றார்கள்.

அங்கு நின்றுகொண்டிருந்தவர்களில் ஒருவர் வெளியில் எட்டிப்பார்த்து அவர்கள் போய்விட்டதை யறிந்து உடனே தம் நண்பரிடம் சைகை காட்டினார். உடனே அவர் சுவற்றில் கையால் தடவவே ஒரு கயறு தென்பட்டது. அதின் வழியாக ஏறினார். ஏறி மெதுவாய் உட்புறத்தில் குதித்தார். அவருடன் அவர் நண்பரும் ஏறி உள்ளே சென்றார். முதலில் சென்றவர் தமது மறைப்பு லாந்தரைக் கையிலெடுத்து மறைப்பை யெடுத்துவிடவே உள் முழுவதும் வெளிச்சமாயிற்று. அவர் யார்? அவர் தான் துப்பறியும் புலியாகிய சுந்தரமய்யர். அவருடன் கூட வந்தவர் யார். சுப்பிரமணிய அய்யர் என்று சொல்லவேண்டுமோ. வீட்டைச் சோதித்தார்கள். ஒரு கட்டில் ஒரு பெண் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் சுப்பிரமணிய அய்யருக்கு மனம் கலங்கிற்று. தாம் பார்த்தபோது இருந்த முக அழகையும் தேக காந்தியையும் காணோம். அவள் கையில் ஒரு விலங்கு இடப்பட்டிருந்தது. கால்களும் அக்கதியாயின. தலைமயிர் அலங்கோலமாயிருந்தது. முகம் வாட்டமாயிருந்தது. தேகம் இளைத்திருந்தது. அவர் தம்மையறியாமல் "உனக்கு இப்படியும் நேரவேண்டுமா?" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார். உடனே சுந்தரமய்யர் "ஏ. மணி! என்ன உன்னுடைய காதலை இங்குதான் காட்டவேண்டுமா. சும்மா இரு." "விலங்கைப் பார். அப்புறம் உன் கல் நெஞ்சம் எங்கே பார்ப்போம்" "அடா இந்த வேளையில் நாம் ஜாக்கிரதையாகவல்லவா இருக்கவேண்டும்" இதற்குள் லக்ஷ்மி விழித்துக்கொண்டாள். திரும்பிப் பார்

த்தாள். இருவர் நின்றார்கள். ஒருவர் முகமாவது பழகியதாக இல்லை. இருவரும் உருவம் மாறியிருந்ததனால் வேற்று முகமாகத் தோன்றிற்று. அவள் பயமடைந்தாள். பெருமூச்சு விட்டாள். அவள் தேகம் நடுங்கிற்று. "என்னைக் கொண்டுபோகவல்லவா வந்திருக்கிறீர்கள். ஆ. தெய்வமே. இனி என்ன செய்வது. உயிரை மாய்த்துக் கொள்வோமென்றாலும் முடியவில்லையே. என்னவேண்டுமென்றாலும் செய்யுங்கள்."

உடனே சுந்தரமய்யர். "ச்சு பேசாதே" என்று சொன்னார்.

"என்னுடைய அன்புக்குரிய சுப்பிரமணிய அய்யரே கைவிட்டு வேறொருத்தியை மணந்துகொள்ள உத்தேசித்தார். இனி எனக்கென்ன? என்னைக் கொன்றுவிடுங்கள். பேசாதேயா. எனக்கு வாய்ப்பூட்டிடுங்கள். வாயில் துணியடையுங்கள். அப்பொழுது தான் நிற்கும். ஆஹா, சிவா! இந்தப்பாவி கோவிந்தனையர் இன்னம் பார்ப்பது. அதற்குள் நான் உயிரை மாய்த்துக்கொள்ளவேண்டியது தான்." என்று தடுமாற்றத்துடன் சொன்னாள்.

சுப்பிரமணிய அய்யர் அவளுடைய துக்கத்தால் மனம் சகிக்காமல் இன்னதுசெய்வது என்று தோன்றாமல் திகைத்து நின்றார். சுந்தரமய்யர் சுறுசுறுப்பாய் வேலை செய்துகொண்டிருந்தார். என்ன செய்தார்? கொல்லைக்கதவை திறந்து வைத்தார். தமது வேலைக்கு யாதொரு தடங்கலும் நேரிடா வண்ணம் ஜாக்கிரதை செய்துகொண்டார். பின்பு சுப்பிரமணிய அய்யரை அழைத்து "மணி, இனி நாம் வேலையாரம்பிக்க வேண்டும். நீ யாரென்பதை லெக்ஷ்மியிடம் தெரிவித்துக் கொள். அவர்கள் வந்து உன் காதலியைக் கொண்டுபோமுன் நீ ஜாக்கிரதை செய்யவேண்டும்" என்றார்.

சுப்பிரமணிய அய்யர் அவளண்டை சென்றார். மெதுவாய் லக்ஷ்மியென்றழைத்தார். குரல் பழகினதாயிருக்கவே ஏறிட்டுப் பார்த்தாள். "நான்தான் சுப்பிரமணிய அய்யர். நீ காணமற் போனையென்று தெரிந்து தேடி வந்தேன். என்னை யடையாளம் தெரிகிறதா. மாறுவேஷம் பூண்டிருக்கிறேன்" என்றார். லக்ஷ்மி அவர் முகத்தை உற்றுப்பார்த்தாள். எழுந்திருக்க யத்தனித்தாள். முடியவில்லை. மறுபடியும் கட்டிலில் சாய்ந்தாள். உடனே சுப்பிரமணிய அய்யர் அவளை இருகையாலும் சேர்த்தணைத்து உட்காரவைத்து அவள் கைவிலங்கையும் கால் விலங்கையும் ஆயுதம்கொண்டு தரித்தெறிந்தார். அவர் பக்கமுட்கார்ந்து "உன்னைக் காப்பாற்ற வந்தேன். என்னுடன்—" என்றவுடனே வெளியில் சத்தம் கேட்டது. உடனே சுந்திரம் "மணி, சீக்கிரம் லக்ஷ்மியை தூக்கிக்கொண்டு போ. போகும்போது புறக்கடைக் கதவைச் சாத்திச்செல்" என்றார். உடனே சுப்பிரமணிய அய்யர் அவளை அப்படியே செந்தூக்காய்த் தூக்கி சீக்கிரம் கொல்லைக் கதவைச் சாற்றிக்கொண்டு வெளியில் போய் விட்டார்.

சுந்தரமய்யர் லக்ஷ்மி படுத்திருந்த படுக்கையில் படுத்துக்கொண்டு ஒரு போர்வையால் போர்த்திக்கொண்டார். அவருடைய மறைப்புலாந்தர் அவருடைய இடையில் மறைத்திருந்தது. ஒரு எழுகுழல் கைத்துப்பாக்கி அவர் கையில் இருந்தது. கையில் ஒரு ஊதுகுழலும் வைத்திருந்தார். எல்லாம் இருட்டாயிருந்தது. இவரும் நன்றாய்ப் போர்த்திக்கொண்டு படுத்திருந்தார்.

இவைகளெல்லாம் ஒரு நிமிஷத்தில் செய்யப்பட்டன. அடுத்த நிமிஷம் கதவு திறக்கப்பட்டது. மூவர் உள்ளே நுழைந்தார்கள். அவர்களிடம் வெளிச்சமில்லை. வந்

நதும் ஒருவன், 'விளக்கேற்று' என்றான். விளக்கு ஏற்றப்பட்டது. சுந்தரமய்யர் மெதுவாகப் போர்வையைச் சிறிது நீக்கிப்பார்த்தார். நரசிம்மராவ் கம்பீரமாக உட்கார்ந்தார். கோவிந்தன் சாய்ந்துகொண்டிருந்தான். மற்றவர் நின்றுகொண்டிருந்தார். கோவிந்தன் 'வெங்கிட்டராமய்யர், ஏன் உட்காரலாமே. நிற்பானேன்' என்றான். வெங்கிட்டராமய்யர் உட்கார்ந்துகொண்டார்.

"ஒரு வழியாய் சுப்பிரமணிய அய்யர் ஒழிந்தார். அவர் கலியாணம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டாராகையால் இனி லக்ஷ்மி வழிக்கு அவர் வரமாட்டார். துப்பறியும் ராஜம் தொலைந்துவிட்டான். இனிமேல் பெண்ணை பங்களூருக்குக் கொண்டுபோய் தந்தையிடம் ஒப்புவித்துக் கலியாணம் செய்யக்கேட்கலாமன்றோ?" என்றான் கோவிந்தன். "இரு பொறுத்துக்கொள். முதலில் சென்னைக்கு அவளைக்கொண்டுபோவோம். பிறகு நீ அவளைக்கண்டுபிடித்ததாகப் பாவித்து பங்களூருக்குச் சமாசாரம் அனுப்பு. குப்புஸாமி அய்யர் சென்னைக்கு வருவார். அப்பொழுது உன்னுடைய வீரத்தைக் காட்டி அவர் பெண்ணை கலியாணம் செய்துகொள்ளலாம். சுப்பிரமணிய அய்யருக்குக் கலியாணம் ஆகவேண்டும். அதற்குப் பிறகுதான் நாம் எதுவும் செய்யவேண்டும்."

"ஆனால் லக்ஷ்மி இன்னம் பிடிவாதமாய்த் தானிருக்கிறாள். என்ன சொல்லியும் கேட்பதில்லை. என்னைக் கண்டால் மிகவும் தூஷிக்கிறாள். அவளை எப்படிக் கொண்டுபோவது?"

"அவளை அப்படியே தூக்கி ஒரு வண்டியில் போட்டுக்கொண்டு போகவேண்டும். வாயில் துணியை அடைத்துவிடுவோம். அவள் பேசமாட்டாள்."

"வீட்டுக்குப் போனதும் அவள் தந்தையிடம் எல்லாச் சங்கதிகளையும் கூறிவிட்டால், அனர்த்தமாகவல்லவா முடியும்."

"ஒரு காரியம் செய்வோம். இரண்டு வைதீகப் பிராமணர்களைக் கொண்டு ரகசியமாகக் கல்லியாணத்தை வேத விதிப்படி அவளைக் கட்டாயப்படுத்தி நடத்திவிடுவோம். பின்பு நமக்குக் கவலையில்லை. அவள் கழுத்தில் தாலியேறி விட்டால் பின்பு பேச்சென்ன. இப்பொழுது திண்டுக்கல்லுக்குப் போய், அதற்கருகிலுள்ள எனது சிநேகிதனுடைய கிராமத்தில் இரகசியமாக நடத்திவிடுவோம். இப்பொழுதே நாம் அவளைத் தூக்கிச் செல்லவேண்டும். இருட்டில்தான் இக்காரியங்களை நடத்தவேண்டும்." கோவிந்தன் எழுந்தான். வெங்கிட்டரமணய்யர் அவனைத் தடுத்தார். "நீ போனால் உன்னைத் திட்டிக் கூச்சலிடுவாள். நான் போகிறேன்" என்று எழுந்தார்.

உடனே வாயிலில் யாரோ ஒருவர் வரும் சத்தம் கேட்டது. மூவரும் சிறிதுநேரம் மௌனமாய் சத்தத்தைக் கவனித்தார்கள். சுந்தரமய்யர் மெதுவாய்த் தமது போர்வையை எடுத்துவிட்டு உட்கார்ந்து தமது ஊதுகுழலை வாயில் வைத்து ஊதினார். மூவரும் திரும்பிப் பார்த்து எழுந்தார்கள். சுந்தரமய்யர் எழுந்து நின்று "கீழே உட்காருங்கள். இல்லாவிட்டால் சுட்டுவிடுவேன்" என்று சொல்லிக்கொண்டே தமது கைத்துப்பாக்கியைக் காட்டினார். அதே நிமிஷத்தில் வாயிற்புறத்திலிருந்து வந்தவர் தாமும் ஒரு துப்பாக்கியைக் காட்டி அதே சொற்களைச் சொன்னார்.

மூவரும் அரை நிமிஷம் திகைத்து நின்றார்கள். பின்பு நரசிம்மராவ் கீழே கிடந்த ஒரு தடியை எடுத்துக்கொண்டு சுந்தரமய்யர் பக்கம் ஓடி அவர்மேல் அடித்தார்.

அந்த அடியை தமது துப்பாக்கியால் தேக்கும்போது துப்பாக்கி வெடித்து ஒரு குண்டு கோவிந்தனுடைய கையில் அடித்தது. உடனே நரசிம்மராவ் சுந்தரமய்யரைப் பிடித்துக் கீழே தள்ளினார். அவர் நரசிம்ம ராவினுடைய முகத்தில் ஓங்கி ஒரு அறை வைத்தார். இதற்குள், வெளியிலிருந்து வந்தவர் உள்ளே வந்து வெங்கிட்டரமணய்யரை எதிர்த்து அவர் கையில் ஒரு விலங்கை மாட்டினார். கோவிந்தன் குண்டின் அடி வலியைப் பொறுக்கமாட்டாமல் மூர்ச்சையாய் விழுந்தான். நரசிம்மராவ் அறையினாலுண்டான மயக்கத்திலிருந்து தெளிந்து "உன்னை விட்டேனா பார்" என்று சுந்தரமய்யருடன் கைகலந்தார். வெளியிலிருந்து வந்தவர் ஒரு போலீஸ் அதிகாரி. அவரும் நரசிம்மராவை எதிர்த்தார். சண்டை செய்யும்போது சுந்தரமய்யருடைய துப்பாக்கி கீழே கிடந்தது. அவர்களைத் திமிறிக்கொண்டு ராவ் அவர்கள் சாமர்த்தியமாகக் கையில் துப்பாக்கியெடுத்து மறு குண்டை சீக்கிரம் அதில் வைத்து நின்றுகொண்டு சுந்தரமய்யரை நோக்கி "அப்படியே நில். இல்லாவிட்டால் சுட்டுவிடுவேன்" என்றார். இதற்குள் போலீஸ் அதிகாரி திடீரென்று அவரைப் பின்புறமிருந்து தாக்கினார். நரசிம்மராவ் குப்புற விழுந்தார். விழும்போது துப்பாக்கி வெடித்து அக்குண்டு சாய்ந்தவண்ணமாகச் சென்று கோவிந்தன் மார்பில் அடித்தது. கோவிந்தன் "அப்பா" என்று சொல்லி உயிரைவிட்டான். இதற்குள் வெங்கிட்டரமணய்யர் எப்படியோ விலங்கைத் தரித்துக்கொண்டு சண்டைக்கு வந்தார். நால்வரும் கைகலந்தார்கள். துப்பாக்கியை உபயோகிக்க முடியவில்லை. சுந்தரமய்யர், வெங்கிட்டரமணய்யர் மார்பில் ஓங்கியடித்தார். அதற்குப் பதிலாய் நரசிம்மராவினிடமிருந்து ஒரு வலிமையான குத்து முது

கில் கிடைத்தது. ஒவ்வொருவரும் தமது உயிருக்காக அன்று பாடுபட்டார்கள். போலீஸ் அதிகாரி நரசிம்மராவைக் கீழே தள்ளினார். அவர் ஒரு பாராங்கல்லில் விழுந்து மண்டை காயப்பட்டது. காயப்பட்டும் ஆவேசம் குறையாமல் எழுந்து மறுபடியும் சண்டை செய்தார். சுந்தரமய்யர்மேல் தடியால் அடித்தார். அவர் தோள்மேல் பட்டுக் காயப்படுத்தியது. இதற்குள் நான்கு போலீஸ் கான்ஸ்டபிள்கள் வந்தார்கள். வரவே நரசிம்மராவுக்கு பயம் அதிகரித்து இருவரையும் ஒரே தள்ளாகத் தள்ளி விட்டுத் துப்பாக்கியைக் கையிலெடுத்து "என்னை உங்களால் பிடிக்கமுடியாது" என்று சொல்லி தன் மார்பில் துப்பாக்கியை வைத்துக்கொண்டு சுட்டார். அடுத்த விநாடியில் அவர் தரையில் இரத்தம் ஆறாய் ஓடப் பிணமாய்க் கீழே விழுந்திருந்தார். வெங்கிட்டராமணய்யர் எழுந்து போலீஸ் அதிகாரிமேல் தாக்கினார். அவருக்குப் பலமான அடி விழுந்தது. அதற்குள் நால்வரும் அவரைப் பிடித்துக்கொண்டார்கள்.

ஆறு பேரும் வெங்கிட்டரமண அய்யரைப் பிடித்து வெளியில் கொண்டுவந்தார்கள். சுந்தரமய்யருக்கு தேகம் களைத்தது. நடக்கமுடியவில்லை. போலீஸ் அதிகாரியோ மிகவும் சிரமப்பட்டார். இரண்டு வண்டி வெளியில் வந்துநின்றது. அதில் ஏறிக்கொண்டார்கள். உடனே வண்டிகள் அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓட்டப்பட்டன.

போ. அதிகாரி:—நான் இன்னம் ஒரு நிமிஷம் முன்பு வந்திருந்தால் இவ்வளவு சிரமப்பட வேண்டியதில்லை. அவர்கள் சாகாமலே உயிருடன் பிடித்திருக்கலாம்.

சுந்தரமய்யர்:—வீணாக அவர்கள் மாண்டார்கள். கான்ஸ்டபிள்களும் முன்னமே வந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். நமக்கும் அடி விழுந்திருக்காது. தங்

களுக்கு அடி பலமோ?

போ: அதி:—இல்லை. தங்கள் காயமெப்படி.

சுந்த:—பலம்தான். இரத்தம் அதிகம் சேதம். அவர்கள் இருவரையும் என்ன செய்கிறது.

போ: அதி:—போகும் வழியில் ஒரு வைத்தியர் இருக்கிறார். அவரை யழைத்துக் கொண்டு அவர்களைப் பார்க்கச் சொல்லுவோம். சற்று உயிரிருந்தால் பிழைக்கவைக்கலாமன்றோ.

சுந்த:—ஏது, எனக்குத் தோன்றவில்லை.

இதற்குள் வண்டி ஒரு வீட்டண்டை வந்தது. போலீஸ் அதிகாரி கீழே யிறங்கி உள்ளே சென்றார். இரண்டு நிமிஷத்திற் கெல்லாம் அவர் ஒரு வைத்தியருடன் வெளியில் வந்தார்.

'ஏ வடிவேல், நீ டாக்டருடன் போய் அந்த ஆசாமிகளைக்காட்டு. நான் ஸ்டேஷனுக்குப் போய் இந்த அய்யரை யடைத்துவிட்டு வருகிறேன்." என்றார்.

ஒரு கான்ஸ்டபிள் வண்டியிலிருந்து இறங்கினன். அவனுடன் வைத்தியர் சண்டை நடந்த வீட்டுக்குச் சென்றார். போலீஸ் அதிகாரியும் சுந்தரமய்யரும் முதல் வண்டியில் முன்னால் சென்றுகொண்டிருந்தார்கள். பின்னால் இரண்டாவது வண்டியில் வெங்கிட்டரமணய்யரும் இரண்டு கான்ஸ்டபிள்களும் வந்தார்கள். ஒரு கான்ஸ்டபிள் சண்டை வீட்டிற் காவலாக வைக்கப்பட்டிருந்தான் என்று நமக்குத் தெரியும்.

சிறிது தூரம் சென்றதும் வெங்கிட்டரமணய்யர் விலங்கை மெதுவாகக் கழற்றினர். மேலும் அவருக்கு அதிக பலம் உண்டு. அவரை பீமஸேனன் என்று நரசிம்மராவே சொல்வதுண்டாம்.

"என்ன பார்ப்பான் என்ன செய்கிறாய்" என்று கேட்டார்கள் போலீஸ் கான்ஸ்டபிள்கள்.

"என்ன செய்கிறேனா" என்று சொல்லி இருவரையும் மார்பில் குத்தி வண்டியில் தள்ளி கீழே குதித்து ஓடினார். வண்டிக்காரன் சத்தமிட்டான். எல்லாரும் வண்டியிலிருந்து இறங்கித் தேடினார்கள். எங்குமகப்படவில்லை. மேலுமிருட்டாயிருந்தது. இரவு முழுவதும் தேடினார்கள். பிரயோஜனப்படவில்லை.

காலையில் அவர்கள் மறுபடியும் அவ்வீட்டுக்குப் போகையில் அங்கிருந்த இரண்டு பிரேதங்களும் காணாமல் போயினவென்று தெரியவந்தது. போலீஸ் கான்ஸ்டபிள் விழித்துக்கொண்டிருந்த போதும் அவனை ஏமாற்றி அப்பிணங்களை யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். ஒருக்கால் வெங்கிட்டராமய்யர் சங்கதியை மறைக்கும்படி அவைகளைக் கொண்டுபோய் மறைத்து வைத்திருக்கலா மென்று எண்ணினார்கள். மறுபடியும் காலையில் தேடியும் பயன்படவில்லை. கடைசியாக அம்முயற்சியை விட்டுவிட்டார்கள்.

XVI. முடிவு.

தன் காதலியைத் தூக்கிக்கொண்டு வெளியில் சென்ற சுப்பிரமணிய அய்யர் தெருவின் கோடியை அடைந்ததும் ஒரு வண்டி நின்றுகொண்டிருக்கக் கண்டார். வண்டியின் முன்புறத்தில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. ஒரு வண்டிக்காரன் பக்கத்தில் நின்றுகொண்டு இவர்கள் வரும் திசையை நோக்கிக்கொண்டிருந்தான். வண்டியில் பூட்டப்பட்டிருந்த குதிரை அடிக்கடி தன்னுடைய கால்களைப் பூமியினின்றும் எடுத்து சத்தத்துடன் வைத்தது. பக்கத்தில் எவரும் இருந்ததாகத் தெரியவில்லை. வண்டி

யின் அருகே வந்ததும் சுப்பிரமணிய அய்யர் "கருப்பா" என்று அழைத்தார். வண்டிக்காரன் "ஐயா, நான் தயார்" என்முன். அவனுக்கும் சமாசாரம் தெரியுமோ. இல்லாவிட்டால் ஏன் தயாரென்று சொன்னுன். சுப்பிரமணிய அய்யருடைய கைகளில் லக்ஷ்மி தூங்கிக்கொண்டிருந்தாள். ஏன்? அவள் தூங்குமூஞ்சியா? இல்லை. அவள் அத்தகையள் அல்லள். அவள் முகத்தைப் பார்த்தால் மிகவும் களைப்படைந்திருந்தாள் என்று தெரியவரும். அல்லது அவளைக் கேட்டால் தெரியும். வண்டியின் கிட்ட வந்து நின்று மெதுவாய் அவளைக் கீழே இறக்கி நிறுத்தினர். லக்ஷ்மியென்று கூப்பிட்டார். அவள் விழித்துக்கொண்டு "நாதா, நாம் எங்கிருக்கிறோம்" என்றாள்.

"அதைப்பற்றிக் கேட்கவேண்டாம். இந்த வண்டியிலேறு. நாம் சீக்கிரம் ஊருக்குப் போகவேண்டும். பின்பு நாம் பேசிக்கொள்வோம்."

இருவரும் வண்டியிலேறினர்கள். வண்டி வேகமாய் புறப்பட்டுச் சென்றது. இரண்டு நிமிஷம் சென்றதும் ஒரு கடையண்டை வந்து நின்றது. கடைக்காரன் வண்டி வந்ததைக் கண்டதும் அவசரமாய் ஒரு சிறிய கூடை நிறைய பண்டங்களை நிரப்பி அக்கூடையை வண்டியில் வைத்தான். உடனே வண்டி புறப்பட்டது.

"லக்ஷ்மி, நீ இரவில் இன்னம் சாப்பிடவில்லையல்லவா. இப்பொழுது சிறிது சாப்பிடு. பிரயாணம் மிகக்கடினம். நீ இளைத்திருக்கிறாய்."

லக்ஷ்மி ஒன்றும் பதில் பேசவில்லை. சுப்பிரமணிய அய்யருடைய முகத்தைப்பார்த்தாள். அவர் சில பழங்களை உரித்து அவளுக்குக் கொடுத்து உண்ணச்செய்தார். அவள் நாணவுமில்லை. பயப்படவுமில்லை. கூசவுமில்லை.

சுப்பிரமணிய அய்யர் அவளுக்கு உணவு அளிப்பதில் மிகவும் கவலையாகவிருந்தார். அதிக ரஸம்பொருந்திய ஆரஞ்சு பழங்களும் வாழைப்பழங்களும் இன்னம் மற்ற தின்பண்டங்களும் அக்கூடையில் இருந்தன. பிறகு சிறிது பானம் கொடுத்தார். இவைகளை சாப்பிட்டதும் அவளுக்கு முகத்தில் களையுண்டாயிற்று. ஆயினும் சாப்பிட்டதும் களைப்பு மேலிட்டது.

“எனக்குக் களைப்பாயிருக்கிறது” என்றாள்.

“சிறிது படுத்துக்கொள். பிறகு சங்கதிகளைச் சொல்லுகிறேன்” என்றார். லக்ஷ்மி அவர் மடியில் தலையை வைக்கப்போனாள். ஆயினும் நாணம் என்னும் கொடியபாதகன் பின்னாலிருந்து இழுத்தான். கல்நெஞ்சையுடைய சுப்பிரமணிய அய்யர் இவள் பொருட்டு இளமனமுடைய வராயினாரன்றோ. எவ்வளவோ படாத பாடுபட்டு அவளைத் தேடிப் பிடித்திருக்கிறார் அல்லவா. லக்ஷ்மி காணாமற் போனாளென்ற சங்கதியைக் கேள்விப்பட்டவுடன் அவர் பட்டபாடு அவருக்கன்றோ தெரியும். நாமென்ன அறிவோம். ஒரு வேளை சுந்தரமய்யர் அறிந்திருக்கக்கூடும். அவர் தேற்றாவிட்டால் லக்ஷ்மியின் மேல் பைத்தியம் கொண்டன்றோ திரிவார். எவ்வளவு ஜாக்கிரதையாகவிருக்கச் சொல்லியும் அவர் அவள் மேலிருந்த அன்பை மறந்தாரா! அவர் அவள்மேல் காதலின் உறுதியைக்காட்டியதாலன்றோ அவருடைய எதிரிகள் விஷயங்களை அறிந்து கொண்டார்கள். அன்பின் வலிமையை யார் தான் அறியக்கூடும். அது அன்புடையாருக்கே தெரியும். யாவராயினும் தமது அன்புக்குரிய தாய் தந்தை மனைவி, மக்கள், நண்பர் ஆகிய இவர்களில் எவரையேனுமிழக்க அல்லது விட்டுப்பிரிய நேரிட்டால் அப்பொழுது அனுபவித்த சோகத்தையும் அவர்மேலுண்டான

பிரியத்தையும் கவனியுங்கள். அல்லது ஞாபகத்துக்குக் கொண்டு வாருங்கள். இல்லாவிட்டால் நமக்குத் தெரியாது. மாம்பழம் எப்படி ருசிக்கிறதென்றால் என்ன பதில் சொல்ல முடியும். தித்திக்கிறதென்னலாம். கற்கண்டைப்போல் இருக்கிறது, தேனைப்போலிருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் கற்கண்டு, தேன் இவைகளைப் போலவா மாம்பழம் இருக்கிறது. இல்லையே. ஏதோ சுமாராக மாம்பழத்தின் ருசியை வர்ணிக்கலாமேயன்றி முழுதும் விரித்துச் சொல்லமுடியாது. அதுபோல் அன்பு இன்னதென்று அறியவேண்டுமானல் அனுபவித்தே சொல்லவேண்டும். ஆகையால் சுப்பிரமணிய அய்யர் தன்னுடைய காதலுக்குரியவள் காணுமற் போகவே அவர்பட்ட விசனத்துக்கு அளவேயில்லை. அவளைக்காணவே அவரடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. ஆனல் அதைக்காட்டிக்கொள்ள இயலவில்லை. லக்ஷ்மி ஒருவாரமாக நல்லசோறும் தண்ணீரும் அற்று உடம்பு மெலிந்து களைத்திருக்கும் போது அவளுடன் விளையாடுவது எப்படி. அதனல் அவளுடன் சிறிதும் பேசாமல் அவளை வண்டியிலேற்றும் வரை கொண்டுவந்தார். அவளோ தன்னுடைய கணவன் கையில் தானிருப்பதை யுணர்ந்து கவலைதீர்ந்து குளிர்ந்த காற்றினுலும் சத்தமின்மையாலும் சிறிது தன்னையறியாமல் தூங்கினள். ஆகாரம் சிறிது சாப்பிட்டதும் களைப்பெடுத்தது. தூங்க எண்ணங்கொண்டாள். ஆயினும் தன் கணவன் முன்னிலையில் எப்படித் தூங்குவது. இதை சுப்பிரமணிய அய்யர் அறியாதவரல்ல. அவளை இருகையாலும் அணைத்துத் தன்னுடைய மார்பில் சாத்தி தன் மேல்ஆடையால் விசிறினர். அவளும் தூங்கிவிட்டாள். அவருக்கு அடங்கா ஆனந்தமாயிருந்தது ஆனல் வெளிக்காட்டவில்லை. காலமும் இடமும் ஒத்துக்

கொள்ளவேண்டுமல்லவா.

வண்டி வேகமாய் ஓடிற்று. வண்டிக்காரன் குதிரையின்மேல் பக்ஷமாயில்லை. ஏன்? பணம் அதிகம் வாங்கியிருக்கிறான். இக்காலத்தில் பணந்தானே பெரியது. கையில் வளையப்பிள்ளையைக்கண்டவுடன் அவன் மனம் கூத்தாடியது நமக்கெப்படி தெரியும். சுமார் நாலைந்து மணிக்குப் பிறகு ஒரு கிராமத்தில் நுழைந்தது. சிறிது நேரம் சென்றதும் ஒரு வீட்டுவாயிலண்டை வந்து நின்றது. வெளியில் கட்டில் போட்டு ஒருவர் படுத்திருந்தார். வண்டிச்சத்தம் கேட்டதும் விழித்துக் கொண்டார். எழுந்து நின்று "சுந்தரமய்யரா?" என்று வினவினர். வண்டியினுள்ளே உட்கார்ந்துகொண்டிருந்த சுப்பிரமணிய அய்யர் "இல்லை நீலகண்டா" என்றார்.

சுப்பிரமணிய அய்யர் லக்ஷ்மியென்று கூப்பிட்டு அவளை எழுப்பினர். லக்ஷ்மி மெதுவாய் தூக்கம் நீங்கினள். சரியாய் உட்கார்ந்து தன் கண்ணைத் துடைத்து சுப்பிரமணிய அய்யரைப் பார்த்தாள்.

"நாம் வரவேண்டிய இடத்திற்கு வந்துவிட்டோம். கீழே இறங்கு." லக்ஷ்மி இறங்கினள். அவரும் அப்படியே செய்தார். நீலகண்டய்யர் வீட்டைத் திறந்து விளக்கேற்றினர். வண்டிக்காரன் குதிரையை வண்டியினின்றும் அவிழ்த்து ஒரு தூணில் கட்டி அதற்குப் புல் வைத்தான்.

"வண்டியிலேயே படுத்துக்கொள்ளுகிறேன் ஐயா" என்று சொல்லி வண்டியில் படுத்துக்கொண்டான்.

உள்ளேயிருந்து ஒரு மாது வந்தாள். "நீலகண்டா. அவர்கள் வந்துவிட்டார்களா" என்று கேட்டாள்.

"ஆம். மணி வந்துவிட்டான். லக்ஷ்மியும் வந்துவிட்டாள். சுந்தரமய்யர் காலையில் வருவார்."

லக்ஷ்மி வந்ததும் அம்மாது அவளை யணைத்து முத்தமிட்டு உள்ளே கூட்டிச் சென்றாள். லக்ஷ்மிக்கு அவள் யாரென்று தெரியவில்லை. அவளை அண்ணாந்து பார்த்தாள். நான் உனக்குத் தெரியாது. மணியின் சிறிய தாயார். உனக்குச் சிறிய மாமியார்." என்றாள். நீலகண்டய்யரும் சுப்பிரமணிய அய்யரும் உள்ளே சென்றார்கள்.

இவ்விடத்தில் நாம் நமது வாசகர்களுக்குச் சிலவிஷயங்களைச் சொல்ல வேண்டும். அவகாச மின்மையால் சொல்ல மறந்துவிட்டோம். சுப்பிரமணிய அய்யர் தமது சிறிய தந்தைமேல் தொடுத்த வழக்கு மேல் கோர்டில் முடியுமுன்னமே சிறிய தந்தையின் பக்கத்து வக்கீல் "இது அப்பீலில் தள்ளிவிடப்படலாம்" என்று சொல்லியிருந்தார். அன்றியும் அவருடைய மூத்தபையன் நீலகண்டன் ஒரே பிடிவாதமாய் சமாதானம் செய்வதென்று தீர்மானித்திருந்தான். தந்தை கீழ்படியவேண்டியதாயிற்று. சுப்பிரமணிய அய்யரைக் கேட்டதில் அவரும் சம்மதப்பட்டார். அடுத்த நாள் அகஸ்மாத்தாய் நீலகண்டய்யர் ஸ்டேஷனில் சுப்பிரமணிய அய்யரைப் பார்க்கவே இருவரும் வார்த்தையாடினார்கள். இருவரும் சேஷய்யரிடம் சென்று பேசவே எல்லாரும் சமாதானமடைந்தார்கள். பெண்ணைப்பற்றிய சங்கதியை சுப்பிரமணிய அய்யர் சொன்னார்.

"இன்று கடைசிதினம். இன்று இரவு எப்படியும் பெண்ணைக் கண்டுபிடிப்போம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நாங்கள் போய் திரும்பும்போது இங்கு வருகிறேன்" என்றார்.

நீலகண்டய்யர் "நானும் வருகிறேன். கூடுமானால் என்னாலாகிற உதவியையும் செய்யலாமன்றோ."

சுந்திரமய்யர் சம்மதித்தார். சேஷய்யருடைய மனைவியும் திண்டுக்கல்லிற்கு அருகிலுள்ள ஊரில் இருந்தாள் என்று சொல்லவே காரியங்கள் சௌகரியமாயின.

வண்டி தயாராக காத்துக்கொண்டிருக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். கடைக்காரன் தின்பண்டங்களுடன் காத்துக்கொண்டிருந்தான். இவர்கள் வந்ததும் இவர்களுக்குச் சௌகரியங்கள் செய்ய சிறிய தாயாரும் நீலகண்டய்யரும் காத்துக்கொண்டிருந்தார்கள்.

மறுநாட் காலையில் சுந்தரமய்யரும் வந்துசேர்ந்தார். நால்வரும் திருச்சிக்குச் செல்வதாக ஏற்பாடாயிற்று. எல்லோரும் வண்டியேறிச் சென்றார்கள். போகும்போது லக்ஷ்மி "அவர்கள் கதி என்ன ஆயிற்று" என்று கேட்டாள். சுந்தரமய்யர் எல்லா சங்கதிகளையும் சொன்னார். போலீஸ் அதிகாரியினிடம் எல்லா சங்கதிகளையும் சொன்னாராம். அவர் ஆச்சிரியப்பட்டாராம். ஆனால் அவர்கள் இறந்தது வெளிக்கு வரவில்லை. அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

சுப்பிரமணிய அய்யர் லக்ஷ்மியை நோக்கி "உன்னை அவர்கள் எப்படிக் கொண்டுபோனார்கள்" என்றார். அவள் சொல்லத் தொடங்கினாள்

"நான் 3-ம்உ ஞாயிற்றுக்கிழமை காலையில் தந்தையிடமிருந்து நீங்கள் வந்திருப்பதாக அறிந்தேன். யாரோ சொன்னாராம். வெகு நேரம்வரை தங்களுக்காகக் காத்திருந்தும் நீங்கள் வரவில்லை. இனி வரமாட்டீர்கள் என்று எண்ணி சாப்பிட்டோம். சாப்பிட்ட பின்பு நான் வாயிலில் உட்கார்ந்திருந்தேன். ஒரு பையன் என்னிடம் வந்து

சிறு கடிதமொன்றைக் கொடுத்தான். இதோ இருக்கிறது" என்று கசங்கிய கடிதமொன்றைக் காட்டினாள். சுப்பிரமணிய அய்யர் அதை வாங்கி வாசித்தார்.

என்னுயிர்க்குயிரான லக்ஷ்மி,

நான் இன்று காலே இவ்வூருக்கு வந்தேன். அவசர காரியத்தால் உன்னையும் உன் தந்தையையும் பார்க்கமுடியவில்லை. உன்னைப் பாராதிருந்ததற்காக என்னை நீ மன்னிப்பாய். அன்பு என்பது வெளிக்காட்டினால்தான் அன்பாகுமோ. இல்லையே. உன்னிடம் அன்புகொண்டிருப்பதை நீயே அறிவாய். நான் இப்பொழுது வருவதற்கில்லை. உன்னைப் பார்க்க எனக்கு ஆவலாயிருக்கிறது. என்பேரில் அன்புகொண்டிருப்பது உண்மையானால் என்னை நீ பார்க்க வருவாய் என்றெண்ணுகிறேன். நீ வராமலிருக்கமாட்டாயென்று எனக்கு நிச்சயம் தெரியும் நான் உன்னை நினைத்து எவ்வளவு உருகுகிறேனோ அவ்வளவு நீயும் உருகுவாய் என்று அறிந்திருக்கிறேன். கீழ்ப் புறமாக நீ வந்தால் ஒரு வண்டி நின்றுகொண்டிருக்கும். அதனுடைய எண் 70. அதில் நீ ஒன்றும் பேசாமல் ஏறிக்கொள். அவன் உடனே வண்டியையோட்டி என்னிடம் கொண்டுவருவான். உடனே வருவாய் என்றெண்ணி எழுதுகிற

உன்னுடைய காதலுக்கிடமான

சுப்பிரமணிய அய்யர்.

சுப்பிரமணிய அய்யர் கடிதத்தை வாசித்தானதும் லக்ஷ்மியை நோக்கினார். "மேலே சொல்" என்றார்.

"கடிதத்தை நான் பார்த்ததும் என்னையறியாமல் ஒரு ஆனந்தம் உண்டாயிற்று. இத்தனை நாளாகத் தங்களிருப்பிடமே எனக்குத் தெரியாமல் இருந்து அப்பொழுது

எனக்குக் கடிதம் எழுதினது எனக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது. நான் தங்களிடம் பாராட்டிய அன்பின் வலிமையால் இழுக்கப்பட்டு வேகமாய் நடந்து தெருக்கோடிக்குப் போனேன். ஒரு வண்டி நின்றுகொண்டிருந்தது. அதனுடைய எண் 70 என்பதை வாசித்துப் பார்த்தேன். உடனே அதில் ஏறிக்கொண்டேன். வண்டிக்காரன் நான் ஏறியதைப் பார்த்ததும் குதிரையை அடித்தான். வண்டி வேகமாய்ச் சென்றது. பத்துநிமிஷம் சென்றதும் ஒரு வீட்டண்டை வந்து நின்றது. உடனே இறங்கினேன். 'உள்ளே செல்லுங்கள்' என்று வண்டிக்காரன் சொன்னான். உள்ளே சென்றேன். அங்கிருந்த ஒருவர் 'உள்ளே செல்லுங்கள்' என்றார். அங்கு போனேன். யாரிருந்தார்? கோவிந்தனும் வேறொருவரும் இருந்தார். கோவிந்தன் என்னைப் பார்த்து 'லக்ஷ்மி, இப்பொழுது என்ன சொல்லுகிறாய்? என்னை மணந்துகொள். உனக்கு எல்லா சுகங்களும் கிடைக்கும்' என்றான். நான் சும்மா நின்றேன். அப்பொழுது தான் எனக்குப் புத்தி வந்தது. மேலநாட்டாரைப்போல் தன்னிஷ்டப்படி வெளியில் செல்லுவதால் அல்லவா எனக்கு இக்கதி கிடைத்தது. புருஷன் மேலுள்ள காதலை இவ்வளவு தூரம் வெளிக்காட்டினதால் அல்லவா இக்கஷ்டம் நேர்ந்தது. இந்து ஸ்திரீகளுக்கு முக்கியமான நாற்குணங்களையும் இழந்துவிட்டதனால் நான் கெட்டுப்போகத் தயாராயிருந்தேன் என்று எண்ணினேன். நான் மெதுவாய் வெளியில் செல்ல முயன்றேன். ஆனால் கோவிந்தன் என் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான். என்ன சொன்னாலும் விடுவதில்லை என்று சொல்லி என் கையிலும் காலிலும் விலங்கிட்டு வாயில் துணியை அடைத்துக் கட்டிப்போட்டான். பிறகு என் மூக்கில் ஏதோ

ஒரு மருந்தைக் காட்ட நான் மயக்கமடைந்துவிட்டேன். பிறகு இரவில் என்னை நோயாளியாகப் பாவித்து குற்றாலத்திற்கு அனுப்பினான். அங்கு நாலைந்து நாளிருந்தோம். பிறகு பழனிக்கு வந்தோம். நேற்று மாலையில் அவர்கள் பேசினார்கள். நீங்கள் கலியாணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்றும் அதனால் இனிமேல் பயமில்லை என்றும் சொல்லிக்கொண்டார்கள். அங்கிருந்தவரையில் எனக்கு சரியான ஆகாரம் கிடையாது. ஆகாரம் கெட்டதாயிருந்ததென்றல்ல. என்னுடைய துக்கம் என் பசியைக் கெடுத்தது. என்ன செய்வது? கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். கடைசியில் என்னை ரக்ஷிப்பதற்குப் பாத்தியப்பட்டவர்களே ரக்ஷித்தார்கள்" என்று சுப்பிரமணிய அய்யரைப் பார்த்து புன்சிரிப்புக்கொண்டு சொல்லி முடித்தாள். சற்று சும்மாயிருந்து பிறகு "கலியாணம் செய்துகொள்வதாக ஏற்பாடு செய்தீர்களாமே. அதென்ன விஷயம்" என்றாள்.

"ஆம்! உன்னைக் கலியாணம் செய்துகொள்ளத்தான் ஏற்பாடு செய்தேன்" என்றார் சுப்பிரமணிய அய்யர்.

சுந்தரமய்யர் "ஆம் அப்படித்தான் சொல்லிக்கொள்ளவேண்டியிருந்தது. மணி கலியாணம் செய்துகொள்ள உத்தேசித்திருப்பதாக அவர்கள் எண்ணினால் தான் அவர்கள் கவலையற்று இருப்பார்கள். அப்போது நாம் யாதொரு தடையுமில்லாமல் உன்னைக் கண்டுபிடிக்கலாம். அதற்காக நான் மணிக்குக் கடிதம் எழுதினேன்" என்றார்.

திருச்சியிலெல்லோரும் இறங்கி அங்கொரு நாள் தங்கினார்கள். அன்று குப்புஸாமி அய்யருக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டது. லக்ஷ்மி அகப்பட்டாள் என்றும் அவள் சௌக்கியமாய் இருக்கிறாள் என்றும் சீக்கிரம் அங்கு வருவதாகவும் சமாசாரம் தெரிவித்தார்கள்.

குப்புஸாமி அய்யருக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. தன் பெண் திரும்ப வீட்டுக்கு வந்தது அவர் தேவலோகத்திலிருந்தது போலாயிற்று. சீக்கிரம் கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். சுந்தரமய்யரும் சிறிய தந்தையும் மற்ற சுற்றத்தாரும் கலியாணத்திற்கு வந்திருந்தார்கள். கலியாணம் வெகு விமரிசையாய் நடந்தது. சுப்பிரமணிய அய்யர் சீக்கிரம் பங்களூரில் வந்து குடி கொண்டார்.

"ஒரு நாள் பேசிக்கொண்டிருந்தபோது சுப்பிரமணிய அய்யர் "சுந்தரம் எல்லாவிடங்களிலும் பணம் வாங்குகிறுயே. நான் என்ன உனக்குக் கொடுக்கட்டும்" என்றுர்.

" என்ன கொடுக்கவா. நான் அயலாருக்குப் பாடுபட்டிருந்தால் கூலி வாங்கி யிருந்திருப்பேன். உனக்கு —என்னுடைய மணிக்கல்லவா—நான் பாடுபட்டது. உன்னிடம் நான் ஒன்றும் வாங்கமாட்டேன். அன்றியும் உன் மனைவி காணமற் போனுள். அவள் உன் மேல் கொண்ட அன்பால் உன்னைத் தேடிச் சென்றுள். நீ அவள் மேல் கொண்ட அன்பால் என் மூலமாய் அவளைத் தேடிச்சென்றுய். நான் உன்மேல் கொண்ட அன்பால் உனக்காக சிறிது சிரமப்பட்டேன். அன்புக்கு அன்பே விலை" என்றுர்.

லக்ஷ்மி கலியாணம் ஆனபின் சீக்கிரமே ருதுவாய்த் தன் புருஷனை யடைந்தாள். அவர்கள் விளையாட்டாய் இல்லாத நாள் கிடையாது. எப்பொழுதும் வேடிக்கைதான். கலியாணமாகுமுன் நடந்தவை யெல்லாம் ஞாபகத்துக்குக் கொண்டுவந்து இன்பமடைந்திருந்தார்கள்.

நான் ஒரு நாள் என் தம்பியுடன் சென்னைக்குப் போய்க் கொண்டிருந்தேன். வண்டி ஒரு ஸ்டேஷனில்

நின்றது. ஒருவர் ஏறினர். நான் வண்டியில் படுத்துக்கொண்டிருந்தேன். சிறிது தூக்கக்கலக்கமாயிருந்தது. வந்தவர் "என்ன கிருஷ்ணஸ்வாமி அய்யர். அதிக தூக்கமாயிருக்கிறீர்களோ" என்ருர். நான் நிமிர்ந்து பார்த்தேன். அவரை எங்கேயோ பார்த்த ஞாபகமாயிருந்தது. "இல்லை தூக்கமில்லை" என்று சொல்லிப் பின்பு வந்தனமளித்து "உட்காருங்கள்" என்றேன். சம்பாஷணை தொடங்கிற்று. உடனே அவரை எனது பள்ளிக்கூட நண்பரென்று தெரிந்துகொண்டேன். ஆனல் இக்காலத்தில் மறதி அதிகமாய் விட்டது. அவர் தமது கதையெல்லாம் சொன்னர். மிகவும் சந்தோஷமடைந்தேன். அவர் தான் சுப்பிரமணிய அய்யர்.

"இப்பொழுது திருச்சியிலிருந்து காஞ்சிபுரம் வந்து இப்பொழுது சென்னைக்குப் போகிறேன்" என்ருர். அவருடன் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தேன். பின்பு "என்னுடைய சரித்திரம் நன்ருயில்லையா? நான் என்னுடைய ஜீவியசரித்திரம் என் கையால் எழுதவேண்டும் என்றெண்ணினேன். தற்புகழ்ச்சி கூடாதென்று எண்ணி உம்மிடம் சொன்னேன். என்னிலும் சிறியவன், மேலும் நண்பன். நான் கட்டளையிடுகிறேன். நீ என் சரித்திரத்தை எழுது" என்ருர். சற்று நேரம் சென்றதும் வேறு ஒரு ஸ்டேஷன் வரவே அவர் கீழே இறங்கினர். பின்பு எனது தம்பி என்னைத் தட்டினன். "அடே தூங்காதே ஸ்டேஷன் வந்துவிட்டது. எழுந்து இறங்கு" என்ருன். "யாராவது என்னிடம் பேசிக்கொண்டிருந்தார்களா" என்றேன். இல்லை நீ தான் குறட்டைவிட்டுத் தூங்கினயே என்ருன். அவன் ஒருக்கால் வேடிக்கைக்காகப் பொய் சொல்லியிருக்கலாம் என்று நினைத்து வண்டியினின்றும் கீழேயிறங்கி வந்தவரைத் தேடினேன். அவர் கண்ணு

க்குத் தென்படவில்லை. மறுபடியும் வண்டியிலேறி வண்டியிலிருந்த மற்றவர்களை விசாரிக்க அவர்கள் இரண்டு மணிநேரமாய் ஒருவருமே வண்டியிலேறவில்லை யென்றும், நான் அதுகாறும் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்ததாகவும் கூறினார்கள். என்றாலும் அவர்கள் சொல்வதில் எனக்கு நம்பிக்கையில்லாமல் என்னுடன் பேசிக்கொண்டிருந்தவர் சொல்லியவை யனைத்தையும் ஞாபகப் படுத்திக்கொண்டு பிற்பாடு அவற்றை ஒரு கதையாக எழுதினேன். இதில் கூறப்படும் ஸம்பவங்களில் பெரும் பாகம் அன்பின் வலிமையால் நடந்தனவாதலால் இந்தக் கதைக்கு "அன்பின் வலிமை" என நாமமும் சூட்டினேன்.

முற்றிற்று.

எம். எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
22 JUN 1916
MADRAS.

"தேவி"

அல்லது

"கற்பின் உறுதி."

(அக்பர் சக்ரவர்த்தி காலத்தில் நடந்த ஓர் உண்மை சரித்ரம்).

அதி பராக்ரமமுள்ள பேபர் எனும் வீரனால் ஸ்தாபிக்கப்பட்ட மொகலாய அரசாட்சியை, அவன் மகன் உமாயூன் இழந்து, மறுபடியும் சக்ரவர்த்தியாய் வந்த நாள் முதல், இப்பெரும் ராஜ்ஜியத்தில் சதா கலகங்களும் சண்டைகளுமாகவே இருந்தன. மாட்சிமை தங்கிய அக்பர் சக்ரவர்த்தி பட்டத்திற்கு வருமுன்னமேயே ராஜ்ஜியம் இவ்வண்ணமிருந்ததால், அந்த பாலன் ஆக்ஷியின் முற்பாகமுழுதும், இவைகளையடக்கி நாட்டை ஒழுங்கிற்குக் கொண்டுவருவதிலேயே கழிந்தது. ஒவ்வொரு சிற்றரசரும், ஒவ்வொரு ராணுவத்தலைவரும் தாங்கள் தாங்கள் சுயேச்சையாய் ராஜ்ஜிய பரிபாலனம் செய்யவேண்டிய அவாவினால் சக்ரவர்த்தி இளம்பிராயமாயிருந்ததால் அவரை அலட்சியம்செய்து அவரவர்களிருந்த நாடுகளை கைப்பற்றி அரசு செலுத்தி வந்தார்கள். அச்சமயத்தில் சக்ரவர்த்தி அக்பராயில்லாமல் வேறு யாராயிருந்தாலும் அந்த மோகலாய வம்சமே அழிந்துபோயிருக்கும். அக்பர் தன் பராக்ரமத்தினாலும், கருணையாலும், மதபேத பக்ஷபாதமின்மையாலும், ஜீவகாருண்யமே எல்லாமதங்களிலும் உயர்ந்த மதமென்பதை உணர்ந்து குடிகளை ஒன்று சேர்த்து ஆண்டமகிமை

யாலும், நமது இந்துதேசம் அதுவரையிலுமாவது, அதற்குப்பின் எப்போதுமாவது, கண்டறியாத சிறப்பை, அப்போது பெற்று விளங்கிற்று.

சக்ரவர்த்தியை எதிர்த்தவர்களுள் பாஸ் பகதூர் என்னும் வீரன் மால்வா தேசத்தை கைப்பற்றி அதை தான் சுயேச்சையாய் ஆளுவதாக அக்பாது அதிகாரத்தை எதிர்த்து போர்புரியச் சித்தமானன். இச்செய்தி சக்ரவர்த்திக்கெட்டியவுடன் அவனை அடக்குவதற்குத் தகுந்த தலைவன் யாரையனுப்பலாமென அவர் சிந்தித்துக் கொண்டிருக்கையில், அவரைச் சூழ்ந்நிற்கும் வீரர்களில் ஒருவனான ஆதம்கான் என்னும் ராணுவத்தலைவன் அவரை வணங்கி "இது காறும் நான் தங்களுக்காக எவ்வளவோ போர்க்களங்களில் என்னுயிரை ஒரு பொருட்டாக மதியாது என்னுடைய விசுவாசத்தையும் பராக்ரமத்தையும் ரூபித்திருக்கிறேன். இங்ஙனம் தங்களுக்கு நான் செய்த ஊழியத்திற்காக எனது வேண்டுகோளை நிறைவேற்றும்படி பிரார்த்திக்கிறேன்" என, அக்பர் "உமது பராக்ரமம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். நீர் கேட்கும் பிரதியுபகாரம் என்னாலளிக்க இயன்றால் உம்மை திருப்திசெய்வதில் எனக்கு மெத்தசந்தோஷம். அது என்ன" என்றுகேட்க,

ஆதம்கான்:—"என் வேண்டுகோள் சாதாரணமானதே. இப்போது மால்வாவில் பாஸ்பகதூர் தங்களை எதிர்க்கத் தயாராயிருக்கிறதாக நமக்கு செய்தி யெட்டிற்றே. அவனை யடக்கி அவனுக்கு சக்ரவர்த்தியவர்களால் விதிக்கப்படும் தண்டனையை நிறைவேற்றுவதற்கு என்னையே அவ்விடமனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று கூற,

அக்பர்:—"பாஸ்பகதூர் பேர்பெற்ற வீரனென்றும், அவனது குடிகளவனிடத்தில் விசுவாசத்தோடு இருக்கிறார்கள் என்றும், அவனுடைய ஸைந்யம் யுத்தங்களில் தேர்ந்ததென்றும், நாம் கேள்விப்படுகிறதால், நாமே நேரில் அங்குபோகலாமென்று உத்தேசித்தோம்."

ஆதம்கான்:—"சக்ரவர்த்தியே நேரில் வந்தாலொழிய தன்னையடக்க வல்லவர்கள் வேறெவருமில்லை என்னும்படி அவ்வளவு பெரிய தலைவனா பாஸ்பகதூர்? அல்லது அவனையடக்கும் திறமை

எனக்கில்லையென்று தாங்கள் நினைக்கும் வண்ணம் நான் எப்போதாவது நடந்திருக்கிறேனா? இப்படி தாங்கள் என்னை மானபங்கம் பண்ணுவீர்களென்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை.''

அக்பர்:—"நீர் அப்படி வித்தியாசமாய் எண்ணிக்கொள்ளக்கூடாது. உமது திறமையைப்பற்றி நான் சந்தேகிக்கவே இல்லை'' என்று கூறி, தன் பக்கத்திலிருந்த ராஜபுத்ர வீரனொருவனை நோக்கி "இவன் ஏன் மால்வாவுக்குபோக இவ்வளவு விருப்பப்படுகிறான். ஒருவேளை பாஸ்பகதூரை மால்வாவைவிட்டு துரத்தி, பிறகு தானே அங்கிருந்துகொண்டு நம்மை எதிர்க்கலாம் என்று எண்ணுகிறானோ'' என்று ரகஸியமாய் கேட்க,

அவ்வீரன்:—"அப்படி இருந்தாலுமிருக்கலாம். அல்லது பாஸ்பகதூர் அரண்மனையில் அழகிலும் கல்வியிலும் பிரசித்திபெற்ற ஹிந்துமாது ஒருவளிருப்பதாக வதந்தி. அவளழகைப்புகழ்ந்து பாடாத புலவர்களும், அவள் கவனம்செய்த பாடல்களை மெச்சாத வித்வான்களும் ஹிந்துக்களிலில்லை. அவளைக்கைப்பற்றும்பொருட்டு அவன் அங்கு செல்ல விருப்பங்கொண்டிருந்தாலுமிருக்கலாம்'' என மெதுவாய் பதிலுரைத்தான்.

அக்பர் இங்ஙனம் தயங்குவதைக்கண்டு ஆதம்கான்,

"சக்ரவர்த்தி அவர்களே என்னைப்பற்றி சந்தேகப்படுவதால் இனி எனக்கு வேறொரு கௌரவமும் வேண்டியதில்லை. என்னை ராணுவத்தலைவன் வேலையிலிருந்தும் நீக்கிவிடுங்கள்'' என்று சொல்ல,

அக்பர், இச்சமயம் இவனது வேண்டுகோளுக்கு இணங்காது இருப்பின், சபையிலுள்ள மற்ற வீருக்கும் அதிருப்தியுண்டாகுமென்பதை யுணர்ந்து "நீர் மால்வாவுக்குச்செல்ல ஏன் இவ்வளவு பிடிவாதமாய் கேட்கிறீர்'' என்று வினவ "வீரருக்கு போரென்றால் உற்சாகமில்லையா? மேலும் சக்ரவர்த்தியினிடத்தில் அசைவற்ற விசுவாசம் வைத்த எனக்கு, தங்களை அலட்சியம்செய்து எதிர்க்கத்துணிந்த ஒருவனை அடக்க ஆத்திரமாயிராதா'' என்று ஆதம்கான் சாதுரியமா

யுரைத்த பதிலைக்கேட்டு சபையோரனைவரும் மெச்சுவதைக் கண்டு,

அக்பர்:—"சரி, நீரே வேண்டிய ஸைந்யத்தை யழைத்துச்சென்று அந்த பாஸ் பகதூரைச் சிறையாக்கி நமது சமூகத்திற்குக் கொண்டுவாரும்" என உத்திரவளித்தார்.

மால்வாநகரத்தின் கோட்டை வாயில்களின் முன் நடந்த பெரும்போரில், பாஸ்பகதூரும் அவன் ஸைந்யமும், உயிரைக் கவனியாது வெகு தைரியத்துடன் யுத்தம்செய்தும் அக்பர் சக்ரவர்த்தியாலனுப்பப்பட்ட ஆதம்கான், அவன் ஸைந்யத்தை சின்னா பின்னமாக்கி சண்டையில் ஜயம் அடைந்தான். பாஸ்பகதூர், தனது ஸைந்யம் நாசமானவுடன் இனி போர்க்களத்திலிருப்பதால் பிரயோசனமில்லையென்றுணர்ந்து தன்னை சூழ்ந்து நிற்கும் நண்பர்களைப் பார்த்து "ஸைந்யம் நாசமாயிற்று, மால்வாவையுமிழந்தோம். இனி அவரவர்கள் தனித்தனியே ஓடிச்சென்று தங்கள் தங்கள் சாமர்த்தியத்தால் பிழைத்துக்கொள்ளவேண்டும். ஐயோ! தேவி சொன்னபடி சக்ரவர்த்தியோடு நாம் சமாதானம் செய்துகொண்டிருக்கலாமே! தேவியைப்பற்றி நினைக்கும்போது மனம் பதைக்குதே! அந்தப்பெண்மணியின் கதி என்னவாகுமோ தெரியவில்லையே!" என்று கதறி கண்ணீர் சொரிந்து மெய்மறந்து நின்றான்.

சூழவிருந்த வீரர் இவன் வருத்தத்தைக் கண்டு மனஞ்சோர்ந்து சற்றுநேரம் ஒன்றும் பேசமுடியாதிருந்தபோதிலும், அதிலொருவர் அச்சமயத்தின் அவசரத்தையறிந்தவராய் "தலைவரே! இப்படி இங்கு மனமுருகி நின்றால் ஆதம்கான் கையால் உயிரைத்துறப்பதே நம் கதியாகும். அபஜயமடைந்த காலத்தில் மனம் தளராது மறுபடி யுத்தத்துக்கு தயாராவதே சித்தவீரரினியல்பு" என்று கூற,

பாஸ்பகதூர் தனது துக்கத்தை உதறிவிட்டு ஒரு நண்பனைப் பார்த்து "நண்பரே, தேவியிடம் உடனே சென்று அவளுக்கு அபஜயச் செய்தியை தெரிவித்து, இன்றைக்கில்லாவிடினும் என்றைக்காவது ஒரு நாள் நான் அவளை திரும்பவும் பிரியத்தோடு அழைப்பது நிச்சயமென்பதை சொல்லித்தேற்றி, அவளும் என்னிடத்தில் கொஞ்சமேனும் குன்றாத அன்பும் விசுவாசமும் வைக்கும்படியும்

இதுகாறும் இருந்ததுபோல் இனிமேலும் என்னிடத்தில் உண்மை யாகவே இருக்கும்படியும் கேட்டுக்கொள்ளும். பிறகு நீர் மற்றொரு வழியாய் ஓடி நாம் முன்னேயே குறிப்பிட்ட ஊருக்கு வந்து நம் முடன் சேர்ந்துகொள்ளும்" என்று சொல்லிவிட்டு எல்லோரும் போர்க்களத்திலிருந்து அதிவேகமாய் ஏகினார்கள்.

பாஸ்பகதூரால் அனுப்பப்பட்ட நண்பர் கோட்டைக்குட் புகுந்து பாஸ்பகதூரின் அரண்மனைக்கு அடுத்தாற்போல் அமைக் கப்பட்டிருந்த ஒரு சிறிய அழகான பங்களாவிற்குபோய், வெளியிலி ருந்த வேலைக்காரரிடம் 'தேவி' எங்கேயிருக்கிறாள் என்பதை விசாரித்தறிந்து மிகுந்த அவசரத்துடன் குதிரையை அவரிடம ஒப்பு வித்து உள்ளே புகுந்தான்.

இவர் இவ்வளவு அவசரத்தோடு தேவியிடம் போனாலும், நமக் கு 'தேவி' என்பவளைப்பற்றி இதுவரையிலும் ஒன்றுந்தெரியாததால், நாம் சற்று அவளைக்குறித்து விஸ்தரித்துவிட்டு, இவர் அவள்சமுகம் போகுமுன் நாமும் அங்கே போயிருப்போம்.

அம்மாளிகையின் உத்தியானவனத்தில் தனியே ஒரு மரத்தி ன் நிழலில் சுயராஜ்ஜியத்திற்காக போர்புரிய சென்ற வீரன் பாஸ் பகதூரைப்பற்றி சிந்தித்துக்கொண்டு மனங்கலங்கி வாடிய முகத் தோடும், சுருங்கிய புருவத்தோடும் தனியே கவலைப்பட்டுக்கொண்டி ருக்கும் வனப்பில் மிகுந்தமாதே அந்நாடுமுழுவதிலும் 'தேவி' என்றழைக்கப்படும் பெண்ணரசி. பாஸ்பகதூர் முன்னொரு காலத்தி ல் ஒரு ஹிந்துநாட்டின்மேற் படையெடுத்து சென்றபோது அங்கே கொள்ளையிட்ட பொருள்களுள் முதன்மையாக, தன்மீது காதல் கொண்ட இப்பெண்ணை தன்னுடன் அழைத்துச் சென்றான். எல்லாதேசங்களிலும் பேர்பெற்ற, குங்குமங்கலந்த வெண்மை நிறத் தையுடைய இந்துதேசப் பெண்ணின் வனப்பின் மகிமையை ரூபிப் பதற்கென்று பிரமனால் ஒரு பிசகுகூட இல்லாமல் சிருஷ்டிக்கப் பட்ட இவளது அழகியரூபம் அப்போது இருந்த வருத்தத்தினால் இயற்கை அழகைக் காட்டிலும் அதிகமாய் பல்லாண்டுகள் யோக நிலையில் மூழ்கியிருக்கும் தபஸ்விகளின் மனதையும் கவரும் சக்தி யையுடையதாயும் காணப்பட்டது. அவளது முத்துநீர் ததும்பும் விசாலமான கரியவிழிகளில், ஆழ்ந்த அன்பும், சாந்தகுணமும் வர

கவிகளுக்குரிய மனோ வுணர்ச்சியும் இவளைப்பார்ப்போர் யாருக்கும் எளிதில் புலப்படும். சீதை, ஊர்வசி, முதலானவர்களால் அழகிலும், ஔவை, மைத்ரேயி, முதலானவர்களால் கல்வித்திறமையிலும், சாவித்திரி, சந்திரமதி முதலானவர்களால் கற்பின் உறுதியிலும், பத்மினி, ச்சாண்ட்பீபி, மங்கம்மாள் முதலானவர்களால் ராஜ்ஜிய பரிபாலன சாதுர்ய தைரியத்திலும் நமது இந்துதேச ஸ்திரீகளே மேலானவர்களென்று நாம் கூறுவதற்கு ஒரு அத்தாக்ஷியாய் இவ்வளவு குணங்களும் ஒருங்கே வாய்ந்து இவள் ஒருவளிடத்திலேயே விளங்கினவென்றால், மேகத்தைப் பழிக்கும் இவளது கருங்கூந்தலெனும் மோக வலையில் சிக்கி இளநிலவை ஒத்த இவளது மந்த ஹாஸமென்னும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கி ஆடவரெவரையும் மனங்கலங்கச் செய்யும் இவளது கண்களினின்றும் வீசும் கருணை ஒளியால் உளம் பூரித்து நின்ற இவளோடுகூட வாழ்ந்த ஜனங்கள் இவளை 'தேவி' என்றழைத்ததும் ஆச்சரியமோ!!

தோல்வியடைந்த செய்தி யறிவிக்கவந்த நண்பரின் முகத்தைக் கண்டவுடனே தேவி "ஐயா! நீர் ஒன்றும் சொல்லவேண்டாம். நமது ஸைந்யம் சின்னா பின்னமாயிற்றென்று உம்முடைய அவசரத்தினாலும் முகக்குறியாலுமறிந்துகொண்டேன். நம்முடைய பிரபுவின் கதி என்ன" எனத் தனது இருதயத்தின் படபடப்பை கையை மார்பில் வைத்து அடக்கிக்கொண்டு கதறுவதைக்கண்ட நண்பருக்கு வாயிலிருக்கவேண்டிய நீரெல்லாம் கண்களுக்கு ஓடிவிட்டாப்போல் நாவுலர்ந்து, கண்ணீர்பெருக ஆரம்பித்ததே ஒழிய தான் கூறவந்த செய்தியை உச்சரிக்கமுடியவில்லை. கண்களைத் துடைத்துக்கொண்டு விம்மலையடக்கி, கனைத்துக்கொண்டு, அவர் பேசுவதற்கு ஆரம்பிக்குமளவும், பயத்தோடு இவர் முகத்தில் ஊன்றிய கண்களையுடைய பெண்ணின் மனம் பட்டபாடு கொடும் நரகாவஸ்தையை ஒத்தது. "பிரபு இருக்கிறார். மீளவும் ஸைந்யம் சேர்க்கலாமெனும் தைரியத்தினால் போர்க்களத்திலிருந்து தப்பித்து போயிருக்கிறார். நீங்கள் எப்போதும் போலவே அவரிடம் அன்பும், விசுவாசமும் வைக்கும்படி கேட்டுக்கொண்டார்."

"ஆகா! அதை எனக்குச் சொல்லவும்வேண்டுமோ!"

"தான் கூடிய சீக்கிரத்தில் ஜயத்தோடு தங்களை மீளவும்

சந்திப்பதாய் சொன்னார்."

"இனி அவரை நான் இவ்வுலகில் பார்ப்பதில்லையென்று என் மனதில் உதிக்கிறதே. அவருயிருக்கு ஆபத்து வந்து அப்படி சம்பவிக்குமோ—" தேவி முடிக்குமுன் தெருவில் ஒரு பெரிய ஆரவாரமுண்டாக நண்பர் 'இனிநான் இங்கே தாமதிப்பது தற்கொலைக்கு சமானம்' என்று சொல்லிக்கொண்டு வெளியேவிட்டிருந்த குதிரையையும் லட்சியம்செய்யாமல் வீட்டின் பின்புறமாய் ஓட்டம் பிடித்தார்.

போர்க்களத்திலிருந்து பாஸ்பகதூர் தப்பித்து ஓடியது எளிதாய் இருந்ததற்கு முக்கிய காரணமென்னவென்றால் அவனைவென்ற ஆதம்கான் யுத்தமுழுதிலும் முடிவதற்கு முன்னமேயே தன்னுடன் தன் ஸைன்யத்தில் ஒரு சிறு பிரிவை அழைத்துக்கொண்டு அவ்விடம் விட்டு கோட்டையை நோக்கிச்செல்ல யத்தனப்பட்டுவிட்டான். அப்போது அவனிடம் அவனுடைய முக்கிய மனிதரில் ஒருவர் "பாஸ்பகதூரை சிறையாக்கிக் கொணரும்படி சக்ரவர்த்தி ஆக்ஞாபித்திருக்கிறாரே. அவனைப் பின்பற்றி செல்லவேண்டாமா." என்று கேட்க, ஆதம்கான் "சக்ரவர்த்தியை திருப்திசெய்ய நான் இங்கே வரவில்லை. பாஸ்பகதூரையும் தேடிவரவில்லை. நான் இலக்கு வைத்து வந்த பறவை யுத்தத்தின் செய்திகேட்டு தன் கூட்டிலிருந்து பறந்தோடுமுன் நான் அதை கைப்பற்றவேண்டும். ஆகையால் தான் இதோ அவசரமாய் போய்க்கொண்டிருக்கிறேன். நீர் வேண்டுமானல் பாஸ்பகதூரைத் துரத்திச்செல்லும்" என்று சொல்லிவிட்டு கோட்டைக்குட் புகுந்தான். தலைவனே பாஸ்பகதூரை பிடிப்பதில் இவ்வளவு அலட்சியம் பாராட்டியதால் அவனுடைய சிப்பாய்களும் அதே அலட்சியம் பாராட்டி யுத்தத்திலுண்டான களைப்பை தீர்த்துக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

மால்வாநகரில் புகுந்த ஆதம்கான் பாஸ்பகதூரின் வசத்திலிருக்கும் அழகிய இந்தப்பெண்ணிருப்பிடமெதுவென விசாரித்துக்கொண்டு வெகுவேகமாய் தேவியின் மாளிகையை அடைந்து வாயிலிலிருக்கும் வேலைக்காரனை மீறி உள்ளே புகுந்ததினுலுண்டான கூச்சலை கேட்டுத்தான், பாஸ்பகதூரால் தேவியிடம் அனுப்பப்

பட்ட நண்பர் அவ்விடம் விட்டு அகன்றார். மாளிகையின் உத்தியானவனத்தில் தேவியிருப்பதையறிந்து, ஆதம்கான் அங்கே ஒருவரையும் வரவொட்டாது தடுக்கும் வண்ணம் தன்னுடன் வந்த மனிதர்களை மாளிகைக்குள் நிறுத்திவிட்டு, தான் தனியே தோட்டத்திற்குள் பிரவேசித்தான். கனவிலும் எண்ணவொண்ணாத தேவியின் அழகிய ரூபத்தை அவன் கண்டவுடன் பிரமித்து நின்று ஆச்சரியத்தோடு அவளை உற்றுநோக்கி, பேச நாவெழாது ஸ்தம்பம்போல் நின்றுகொண்டிருப்பதை தேவி பார்த்தவுடன்

"நீர் யார்? எங்கு வந்தீர்?" என வினவ, ஆதம்கானுக்கு நாப்பூட்டவிழ்ந்து அவன் பேசத்தொடங்கினான். "அம்மணி, நான் உன்னை இதுகாறும் துன்பத்தக்குள்ளாக்கி வைத்துக்கொண்டிருந்த பாஸ்பகதூரை வென்றவீரன்."

"நீர்தானா சக்ரவர்த்தியால் அனுப்பப்பட்ட ஆதம்கான் என்பவர்?"

"ஆம். என்னை சக்ரவர்த்தி அனுப்பவில்லை. உன்னுடைய ரூபலாவண்ணியத்தைப்பற்றி அநேகர் சொல்லக் கேட்ட நானே உன்னை நேரில் காணும் அவாவினால் சக்ரவர்த்தியை கட்டாயப்படுத்தி இவ்விடம் வருவதற்கு உத்தரவு பெற்றேன். நேரிலுன்னைக் கண்டதும் சகல ஜனங்களும் உன்னைப்பற்றி புகழ்ந்துரைப்பது ஆச்சரியமில்லை என்று உணர்ந்தேன்."

"ஐயா, என் பிரபு பாஸ்பகதூர் கதி என்னவாயிற்று?"

"இனி உனக்கு பிரபு பாஸ்பகதூரல்ல. இதுகாறும் பாஸ்பகதூரிடம் எப்படியிருந்தாயோ அதுபோல் இனி என்னிடம் இருக்கப் போகிறாய். ஆகையால் பாஸ்பகதூர் கதி என்னவானால் உனக்கென்ன கவலை. அவன் அநேகமாய் போர்க்களத்தில் மரித்திருப்பான்."

"ஐயா, நீங்கள் இப்படிச்சொல்வது நியாயமன்று. அக்பர் சக்ரவர்த்தி தயாளகுணமும் நியாய உறுதியும் கொண்டவரென்றும் விரோதிகளையும் இம்சிப்பதில்லை என்றும் பிரசித்தமாயிருக்கிறதே. நீங்கள் இங்ஙனம் என்னிடம் கூறுவது தகுதியோ?"

"அக்பர் அப்படியிருக்கலாம். நான் அக்பரல்ல. சக்ரவர்த்தியே

உன்னைப்பார்த்தால் எப்படியிருப்பாரென்பது எனக்கு சந்தேகமுண்டாகிறது."

"ஐயா நான் பாஸ்பகரனரை நாடிவந்தேன். வேறொருவரிடமிருக்க எனக்கு விருப்பமில்லை. என்னை விட்டு விடுங்கள். நான் எங்கேயாவது போய் என் வாழ்நாளைக் கழிக்கிறேன்."

"ஓகோ! அநேகர் கூடிய சபையில் தேவதைகளை சாக்ஷியாகக்கொண்டு கலியாணம் செய்துகொண்ட ஸ்திரீகளே என்போலும் அரசர் பதவியை எளிதில் அடையக்கூடிய வீரரைக்கண்டால் சந்தோஷத்துடன் ஆக்ஷேபிக்கமாட்டார்கள். நீயோ, கேவலம் ஒரு தாசிபோன்ற நீயோ, இங்ஙனம் பேசுவது" எனப் பரிகசிக்க,

தேவியின் கண்களினின்றும் தீப்பொறி பறக்க அவள் "நான் மணம்புரிந்த பத்னியாயில்லாவிடினும் எனது கற்புநிலைமைக்கு இதுகாறும் ஒரு பங்கமும் ஏற்படவில்லை. நான் இனிமேலும் உம்மோடாவது அல்லது வேறொருவனோடாவது கூட வாழ்ந்திருக்கப் போவதில்லை."

ஆதம்கான் "ஓகோ இதுவரையில் நான் சரசரவென்று கூறி வார்த்தைகளால் வேண்டினேன். இனி நீ என்மேல் மனதிறங்காமல் என்னோடு வசிக்க மறுத்தால் அதற்குத் தகுந்தபடி நீ போதும், போதும் என்று கதறும்படி சிக்ஷிக்க என்னால் கூடும்." என சினந்துகூற தேவி "என்ன செய்வீர், எனக்கு என்னுயிரில் அவ்வளவு ஆசையில்லை" என,

ஆதம்கான் க்ரூர நகையுடன் "உன் உயிரை யார் வாங்கப்போகிறார்கள். உன்னை சித்திரவதை செய்வேன். ஆடவர் கையில் சவுக்குகளைக் கொடுத்து இந்த ஊரில் உன்னை நிர்வாணமாய் தெருத்தெருவாய் விரட்டச் செய்வேன். மேலும்—"

இதைக்கேட்டவுடன் தேவியினுடல் நடுங்கி அவள் மிகுந்த பீதியடைந்து "ஐயா போதும் போதும். இப்படி ஒரு அனாதை ஸ்திரீயை வருத்த மனம் துணியும் நீரே நல்ல—"என்று கதற, ஆதம்கான் "அப்படிப்பட்ட உபத்திரவங்களுக்கெல்லாம் இடம் கொடுக்காமல் என்னுடன் கூடி சுகமாக இத்தேசத்து ராணியாக வாழும்படி நீ புத்திசாலியாதலால் என்னிடம் நடந்துகொள்ள நன்றாய்த் தெரியும். அப்படி நடப்பாயா" என, தேவி சற்று சிந்தித்து நின்று

"அப்படியே ஆகட்டும். உம்மை தகுந்த மரியாதையோடு அழைக்க அதற்கு ஏற்ற ஆடை ஆபரணங்களைப் பூண்டு இன்றிரவு தங்கள் வரவை எதிர்பார்த்திருக்கிறேன். தாங்கள் அஸ்தமித்து இரண்டு நாழிகைக் கெல்லாம் மீளவும் வாருங்கள்" என்று பதிலுரைக்க,

ஆதம்கான் "இப்போது தான் உன்னுடைய வார்த்தைகளால் நான் மகிழ்ந்தேன்" என்று சொல்லி விடைபெற்று வெளியேகினான்.

ஆதம்கான் சென்றபின் வெகுநேரம் அந்த இடத்தில் உட்கார்ந்து துக்கத்தில் மூழ்கினவளாய் ஒன்றும் தோன்றாதிருந்து கடைசியில் புன்னகையுடன் மாளிகைக்குட்சென்று தன் ஆடை ஆபரணங்களுக்குள் சிறந்தவை யாவற்றையும், தன்னை சிங்காரிக்கும் சேடியை எடுத்துக்கொண்டு வரச்சொல்லி தன் சயனவறைக்குச் சென்றாள். தேவலோகத்தின் ஒரு பாகத்தைப்போல் காணப்பட்ட அவ்வறைக்குட் சேடி நுழைந்தவுடன் "இன்னும் கொஞ்ச நேரத்திற்குள் நம்மை இப்போது ஆளும் ஆதம்கான் இங்கே வருவதாக உத்திரவு செய்திருக்கிறார். என்னை உன் சாமர்த்தியத்தால் எவ்வளவு அழகாய் சிங்காரிக்க முடியுமோ அவ்வளவு அழகாய் செய்" என்ற உத்திரவைக் கேட்டு ஆச்சரியப்பட்டும் அதைக் காட்டிக்கொள்ளாமல் அங்ஙனமே செய்தாள். சேடி அலங்கரித்தவுடன் தேவி அவளைப் பார்த்து உன் கைத்தொழிலை மெச்சினேன். அதற்கு இனமாக இந்த கமலமோதிரத்தை நீ எடுத்துக்கொள். ஆதம்கான் வந்ததும் அவரை மாத்திரம் இங்கே அனுப்பு. வேறு எவரும் இங்கே வரவேண்டாம். எனக்கு அதிக களைப்பாய் இருப்பதால் நான் சற்று படுத்து உறங்குகிறேன்" என்று சொல்லியவளை அனுப்பிவிட்டாள். சேடி சென்று மற்ற வேலைக்காரருக்கு நடந்த செய்தியைத் தெரிவிக்க அனைவரும் "ஆகா! உலகம் இங்ஙனமே. நேற்று பாஸ்பகதூர் இன்று ஆதம்கான். இவளும் இப்படித்தான் என்று நாம் இதுவரையிலும் கொஞ்சங் கூட சந்தேகிக்கவில்லையே" என்று உலகத்தின் மோசமான நடத்தையைப்பற்றி வேதாந்தம் பேசினர். தேவியோ, சேடி சென்றவுடன் ஒரு பெரிய நிலைக்கண்ணாடியின் எதிரே சென்று தன்னழகையே கண்டு பிரமித்து "ஆகா! நான் இவ்வளவு அழகு என்று, இன்றுதானுணர்ந்தேன். 'புலையனும் விரும்பா புன்புலால் யாக்

கை' என்று ஞானிகள் பாடியும், ஆடவர் அதை கவனியாதிருப்பது ஒரு ஆச்சரியமன்று." என்று நகைத்து அவ்வறைக்குள்ளிருக்கும் ஒரு வெள்ளிப் பெட்டியை திறந்து அதிலிருந்த அநேக விலையுயர்ந்த வாசனைத்திரவியங்களை தன் உடலின்மேல் அணிந்து, துருக்க ஸ்திரீகள் முகத்தை மூடுவதற்கு அணிந்துகொள்ளும் விலையுயர்ந்த ஒரு துணியையும் கையிலெடுத்து மீளவும் கண்ணாடியண்டை வந்து "இவ்வளவழகிருந்துமென்னை விவாகமாகாத வேசியென்று ஆதம்கானைப்போலவே தானே உலகமும் நம்மை நிந்திக்கும். வேசிக்கும் கற்பு என்பதுண்டு என்றால் எல்லோரும் நகைப்பது சகஜமாயிருக்கிறதே. ஒரு ஜன்மத்திற்கு ஒரே புருஷன் என்பதை அநேக குடும்பமாதர்கள் கூட மறந்திருப்பதாலல்லவோ நம்மைப்பார்த்து ஆதம்கான் நகைத்தான். இன்றுமுதல் வேசியாயிருக்கும் நான் கற்பிக்கும் கற்பினுறுதியை யுணர்ந்தாவது இனி அதுதவறின மாதர்கள் ஒழுங்காயிருக்கட்டும். என்னைக்கண்டு கொடிய பாம்பைக்கண்டதுபோல் எட்டி விலகி என்னை பயிரங்கமாய்ப் பரிகஸித்தும், ரகஸியமாய் என் நிலைமைதங்களுக்குக் கிடைக்கவில்லையே யென்று பொச்சரிப்புகொண்ட மாதர்களுக்கு இந்த ஆதம்கானல் நான் இன்று வழிகாட்டும்படியான பாக்கியம் எனக்குக் கிடைத்தது. மகா புத்திமானென்றும், அதிக தயாளகுணமுள்ளவனென்றும், சுத்தவீரனென்றும் பேர்பெற்ற அக்பர் சக்ரவர்த்தி ஆதம்கானிடத்தில் நம்பிக்கை வைத்து எங்ஙனம் மால்வாவிற்கு அனுப்பினார். அவனைப் பார்த்த மாத்திரமே அவன் மோசக்கருத்துடையவனென்றும், என் பிரபுவை சக்ரவர்த்தி யாட்களைக்கொண்டு துறத்திவிட்டு, பின்னர் தானே இந்நாட்டைக் கைப்பற்றி சக்ரவர்த்தியை அசட்டைசெய்து எதிர்க்கச் சித்தமாயிருக்கிறனென்றும் எனக்குப் புலப்படுகிறதே. ஐயோ? நமது பிரபுவும் ஏழையென்புத்திமதியைக் கேளாது அந்நற்குணமுள்ள சக்ரவர்த்தியை, சுயராஜ்ஜியத்திறுசையால் விரோதியாக்கிக் கொண்டாரே. இருந்தாலும் கடைசியில் இவ்விருவரும் நேசமாகி விடுவார்களென்றும் ஆதம்கான் நாசமாகி விடுவானென்றும் என் மனதிலுதிக்கிறதும் ஈசனே, உன் கருணையாலோ. ஈசனென்றுரைத்தவுடன், நான் அவர் சந்நிதானத்தின் முன்னின்று என் கர்மாக்களுக்காக அவர் கருணை சொரி வாதாடும் தருணத்தை நினைக்கும்பொழுதே படபடப்பாயி

ருக்கிறதே. ஆதம்கான் வரும் தருணம் ஆய்விட்டதே. இம்மாதரி படபடப்புக்குத் தக்க மருந்து நாம்முன்னமேயே தயாராய் வைத்திருக்கிறோமே. அதை இப்போது உபயோகிப்போம்'' என்று புன்னகையுடன் ஒரு பெட்டியைத் திறந்து அதினின்று ஒரு பொன் டப்பியில் வைத்திருந்த ஒரே ஒரு மாத்திரயை எடுத்து சற்றுநேரம் அதை உற்றுப் பார்த்துவிட்டு பெருமூச்செறிந்து, அதை வாயில் போட்டு விழுங்கி கையிலிருக்கும் துணியை முகத்தில் போட்டுக் கொண்டு, கட்டிலிலேறி சயனித்தாள். இவள் கூறிய வண்ணமே ஆதம்கான், பாஸ்பகதூர், இருவர் கதியுமாயிற்றென்பது இந்துதேச சரித்திரத்தினால் சகலரும் அறியலாம். சாயங்காலம் பேசியபடியே கொஞ்சநேரத்திற்கெல்லாம் ஆதம்கான் தேவியின் மாளிகையை யணுகி, தேவி தன் வரவை எதிர்பார்த்து ஆடையாபரணங்கள் பூண்டு சயனித்திருப்பதைக்கேட்டு உள்ளம்பூரித்து, தன்னுடன் வந்த சேடியை அவ்வரையின் வாயிலிலேயே விடை கொடுத்தனுப்பிவிட்டு தேவி நித்திரை செய்யும் அழகை சற்றுநோக்கி அகமகிழ்ந்து மெல்லிய குரலோடு "கண்மணி" என்றழைத்து கட்டிலண்டை சென்றான். பதிலொன்றும் உரையாததால் "அயர்ந்த நித்திரைபோலும்" என்று சொல்லிக்கொண்டு அவளது புன்னகை பூண்ட முகத்தைமூடும் மெல்லிய ஆடையைக் கழற்றி அவளது நித்திரையைக் கலைக்க அவள் கன்னத்தில் கையை வைத்தான்.

'தேவி' பாஷாணத்தை உண்டு திரும்பி எழுந்திருக்காத நித்திரையிலிருந்தாள்.

அம்புஜம்.

D31n2 11, SV
N13.5
84358

உத்தராராம சரிதம்.

(அருந்ததி, கௌஸல்யை கஞ்சுகி இவர்கள் பிரவேசிக்கிருர்கள்.)

அருந்ததி:—நீ தானுகவே போய் வைதேஹரைப் பார்க்க வேண்டுமென்று உங்களுடைய குலகுருவின் கட்டளையென்று நான் சொல்லவில்லையா? அதற்காகவேதான் நானனுப்பப்பட்டேன். அப்படிக்கிருக்க அடிக்கடி ஏன் இவ்வளவு விளம்பம்?

கஞ்சுகி:—அம்மா, தங்களைத் தாங்களே ஸமாதானப்படுத்திக்கொண்டு பகவான் வஸிஷ்டருடைய ஆக்ஞையை அனுஸரிக்கவேண்டுமென்று தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

கௌஸல்யை:—இப்படிப்பட்ட சமயத்தில் மிதிலாதிபர் என்னுல் பார்க்கப்படவேண்டுமென்று எல்லா துக்கங்களும் ஒரே காலத்தில் வந்து சேருகின்றன. அதனுல் என் மனம் கட்டவிழ்ந்து விழுகிறதே. என்னுல் அடக்கமுடியவில்லையே.

அருந்ததி:—இதில் ஸந்தேகமென்ன? பொதுவாகவே ஜனங்களுக்குத் தங்களுக்கு பிரியமானவர்களுடைய பிரிவால் உண்டாகும் துக்கமானது எப்பொழுதும் உள்ளுக்குள் இருந்துகொண்டிருந்த போதிலும் யாராவது வேண்டியவர்களைப் பார்த்துவிட்டால் அடக்க

முடியாமல் ஆயிரக்கணக்காக ஆறுகப் பெருகிவிடு கின்றது.

கௌஸல்யை:—குழந்தையாகிய என் நாட்டுப்பெண் காட்டுக்குப் போயிருக்கும் இச்சமயத்தில் எப்படி நான் அவளுடைய தகப்பனாரின் முகத்தைப் பார்ப்பேன்?

அருந்ததி:—இவர்தான் உங்களுடைய சிலாக்கியமான ஸம்பந்தி; ஜனகவம்ச சிரேஷ்டர்; இவருக்குத்தான் யாஞ்ஞவல்க்யமுனியானவர் வேதாந்தம் சொல்லி வைத்தார்.

கௌஸல்யை:—இவர்தான் மஹாராஜாவுக்கு மிகவும் அந்தரங்கமாயுள்ளவரும், குழந்தை ஸீதையினுடைய தகப்பனாரும், ஸீரத்வஜமுடையவருமான விதேஹ ராஜர். ஆ! கவலையில்லாததும் மிகவும் ரமணீயமானதுமான முன்னாள்களெல்லாம் நினைவுக்கு வருகிறது. ஸ்வாமி, அதெல்லாம் ஒன்றையும் காணோமே.

ஜனகர்:—(ஸமீபத்தில் வந்து) அம்மா அருந்ததி, ஸீரத்வஜனான வைதேஹன் நமஸ்காரம் பண்ணுகிறான். பரிசுத்தத்திற்கும் புண்ணியத்திற்கு மிருப்பிடமாயும் பிராசீனமான ஆசார்யர்களுக்கெல்லாம் ஆசார்யராயுமுள்ள தங்களுடைய பர்த்தா கூட எவர்களால் தம்மை பரிசுத்தமானவராக நினைக்கிறாரோ, எவர்களால் மூன்று உலகங்களுக்கும் மங்களமுண்டாகிறதோ அப்பேர்க்கொத்த ஜகத்துக்கெல்லாம் பூஜ்யையாயிருக்கப்பட்ட தங்களை, விடியற்காலம் ஸந்தியா தேவியை நமஸ்கரிப்பதுபோல், பூமிபர்யந்தம் வணங்கிய சிரஸ்ஸுடன் நமஸ்கரிக்கிறேன்.

அருந்ததி:—அக்ஷரமான ஜ்யோதிஸ்ஸானது உங்களுக்கு பிரகாசிக்கட்டும். எவரொருவர் ரஜஸ்ஸுக்கெல்

லாம் மேல்பட்டு பிரகாசிக்கிறாரோ அவர் உங்களைப் பரிசுத்தம் செய்யட்டும்.

ஜனகர்:—அப்பா கிருஷ்டி, பிரஜைகளை ரக்ஷிக்கிறவருடைய தாயாருக்கு உடம்பு ஸௌக்கியமாயிருக்கிதா?

கஞ்சுகி:—(தனக்குள்) பாக்கியன்னியில் மிகவும் நிஷ்டூரமான வார்த்தைகளால் கண்டிக்கப்பட்டோம். (வெளியில்) ராஜரிஷியே, வெகுகாலமாக ராமபத்ரரைப் பார்க்காமல் விட்டுப்பிரிந்து அதனால் ஏற்கனவே அதிகமான துக்கத்தை யடைந்திருக்கும் தேவியை தாங்கள் இத்தகைய கோபத்தால் மறுபடியும் துக்கப் படுத்துவது உசிதமல்ல. ராமபத்ரனுக்கும் இது ஏதோ போறுதவேளை. ஏனெனில் நாலாபக்கத்திலும் ஜனங்கள் மிகவும் ஜுகுப்ஸைப்படவேண்டிய பேச்சுக்களை சொல்லவாரம்பித்தார்கள். இந்த பரம அல்பர்கள் அக்னியில் பரிசுத்தம் செய்யப்பட்டதை நம்பவில்லையென்று தான் தேவரால் இந்த கொரோமான காரியம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஜனகர்:—(கோபத்துடன்) அடே, நம்முடைய குழந்தையைப் பரிசோதிக்கும் விஷயத்தில் இந்த அக்னி என்கிறது யாரடா? கஷ்டம், கஷ்டம். ராமபத்ரனுல் அவமானப்பட்டிருந்த போதிலும் இவ்வாறு சொல்லும் ஜனங்களால் மறுபடியும் அவமானப்படுகிறோம்.

அருந்ததி:—(பெருமூச்சுவிட்டு) வாஸ்தவந்தான். நம்முடைய குழந்தை விஷயத்தில் அக்னி அக்னி என்னும் அக்ஷரங்கள் பிரயோஜனமில்லைதான். ஸீதையென்பதே போதுமானது. அடி குழந்தாய்! நீ எனக்குக் குழந்தையென்பதோ அல்லது சிஷ்யையென்பதோ அது அப்படியே தனியாக இருக்கட்டும். உன்னுடைய

விசேஷமான சுத்தியின் மேன்மையானது எனக்கு உன்னிடத்தில் அதிகமான பக்தியை உண்டாக்குகிறது. நீ குழந்தையாயிருந்த போதிலும், அல்லது ஸ்திரீயாயிருந்தபோதிலும் நீ உலகம் முழுமையும் பூஜிக்கத் தக்கினவள். ஏனெனில் குணங்கள் தான் பூஜாஸ்தானமேயொழிய லிங்கமும் வயஸூம் கவனிக்கப்பட வேண்டியவையல்ல.

கௌஸல்யை:—ஐயோ, வேதனையானது என்னை வேரோடு பிடுங்குகிறாப்போல இருக்கிறதே. (என்று மூர்ச்சையடைகிறாள்.)

ஜனகர்:—அடே அடே! இது என்னது இது?

அருந்ததி:—ராஜரிஷியே, வேறு என்ன. அந்த ராஜா, அந்த ஸௌக்கியம், அந்தக் குழந்தை ஜனங்கள், அந்த நாள்கள், இவைகளெல்லாம் ஸ்நேகிதராகிய தங்களைக் கண்டதும் நினைவுக்கு வந்துவிட்டன. இப்படிப்பட்ட கோரமான மாறுபாடுகள் ஆயிருப்பதில் உங்களுடைய ஸகியானவள் துக்கப்படாதவளென்பதில்லை. உத்தம ஸ்திரீகளுடைய சித்தமானது புஷ்பம்போல் மிருதுவான தன்மையையுடைத்தானதல்லவா.

ஜனகர்:—அடே, எந்தப் பிரகாரத்தாலும் குரூரனுக ஆய்விட்டேனே. ஏனெனில் வெகுகாலமாக பார்க்காமலிருந்த பிரியமான ஸ்நேகிதருடைய பிரியமான பத்னியிடத்தில் என்னமோ பழகாதவன்போலிருக்கிறேனே. அவர்தான் சிலாக்கியமான ஸம்பந்தி. அவர்தான் பிரியமான ஸ்னேகிதர். அவர்தான் மனஸுக்கு மனஸு. அவர்தான் ஸாக்ஷாத்தாய் வந்த ஆனந்தம். அவர்தான் ஜீவித்திருப்பதின் ஸமஸ்த

பலனும். இந்த சரீரமாகட்டும், ஜீவனாகட்டும், அல்லது இவைகளைக் காட்டிலும் இன்னுமதிகப் பிரியமானது எதுவான போதிலும் அவையெல்லாம் அந்த ஸ்ரீமான் மகாராஜாவே. அந்த தசரதர் எனக்கு என்னவாக இல்லை? அந்த கௌஸல்யை இவள் தானென்பதை பார்க்கும்பொழுது மிகவும் கண்ட்ராவியாக விருக்கிறது. இவளுக்கும் இவளுடைய பர்த்தாவுக்கும அந்தரங்கத்தில் ஏதாவது கலஹங்கள் ஏற்பட்டால் அச்சமயம் ஒவ்வொருவரும் தனித்தனியே அதை என்னிடம் வந்து சொல்லிக் கொள்வார்கள். அப்பொழுது அவர்களுக்கு கோபஸமயமாயிருந்தாலும் அல்லது ஸந்தோஷஸமயமாயிருந்தாலும் அவர்களுடைய தகராரை நான்தான் தீர்த்துவிட வேண்டும். அந்நாட்களை நினைப்பது போதும். ஏனெனில் அவைகளை நினைத்தால் ஹிருதயத்தைப் பிளந்துகொண்டு எரிகிறது.

அருந்ததி:—என்ன கஷ்டமிது. ரொம்ப நாழிகையாக மூச்சில்லாமல் அடங்கியிருப்பதால் இவளுடைய ஹிருதயம் அசைவற்று நின்றுவிட்டதே.

ஜனகர்:—அடா! என் அருமைத் தோழியே (என்று தன் கமண்டலுவிலிருந்து தீர்த்தத்தை எடுத்து ப்ரோக்ஷிக்கிறார்.)

கஞ்சுகி:—விதியானது முதலில் ஒரு ஸ்நேகிதனைப்போல ஒரே மாதிரியான ஸுகத்தைக் கொடுக்கும் அனுகூலங்களையெல்லாம் உண்டாக்கிவிட்டு பிறகு அகாரணமாக விபரீதமானதும் மிகவும் குரூரமானதுமான மனதின் வருத்தத்தை மிச்சமாக்கியிருக்கிறதே.

கௌஸல்யை:—[மூர்ச்சை தெளிந்து] அடி குழந்தை ஜானகி, எங்கே இருக்கிறாய்? புதிதாக கல்யாணமாகப்போவ

தாலுண்டான உத்ஸாகத்தால் மிகுந்த சோபையுடன் கூடிய மங்களகரமான உன் முகம் அப்பொழுது தான் மலர்ந்த தாமரை புஷ்பத்தைப்போல் ரமணீய மானதாக இன்னமும் என்முன் தோன்றுகிறதே. சரத்காலத்திய சந்திரன்போல் அதிக ஸுந்தரமாயுள்ள அதை நான் நினைக்கிறேன். வாடி அம்மா குழந்தை மறுபடியும். என்னுடைய மடியில் உட்கார்ந்து அதை சோபிக்கச் செய். மஹாராஜா எப்பொழுதும் இப்படி சொல்லுவரே. இவள் இந்த ரகுவம்சத்தின் பெரியவர்களுக்கெல்லாம் நாட்டுப்பெண். நமக்கோ ஜனகருடைய பெண் நம்முடைய பெண்ணே என்று.

கஞ்சுகி:—தேவி சொல்வது வாஸ்தவமே. அந்த ராஜாவுக்கு அவருடைய ஐந்து குழந்தைகளுக்குள் ராமனிடம் விசேஷமான பிரீதி. அதேமாதிரி நான்கு நாட்டுப்பெண்களுக்குள்ளும் ஸீதைமாதிரியாக பிரியமான பெண் வேறொருவருமில்லை.

ஜனகர்:—ஹா! பிரியமான தோழனே. மஹாராஜாவான தசரதனே. இந்த மாதிரி எல்லா பிரகாரத்தாலும் மனதுக்கு ஒத்தவரை எப்படி மறக்கமுடியும். உலகத்தில் ஸாதாரணமாக பெண்ணின் ஜனங்கள் மாப்பிள்ளையின் ஜனங்களை உபசரிப்பது வழக்கம். நம்முடைய ஸம்பந்தத்திலோ இதற்கு நேர் விபரீதமாக ஏற்பட்டது. நீர் என்னை ஆராதித்துவந்தீர். அப்படியிருந்தபோதிலும் நீர் காலனால் அபஹரிக்கப்பட்டீர். அந்த ஸம்பந்தத்துக்குக் காரணமாயுள்ள ஸீதையும் அபஹரிக்கப்பட்டாள். அப்படியிருக்க இந்த கோரமான ஜீவலோகமாகிய நரகத்தில் நான் மட்டும் இருக்கிறேன். என் பிழைப்பை நானே வெ

றுத்துக்கொள்ளுகிறேன்.

கௌஸல்யை:—அம்மா ஜானகி! நான் என்ன செய்வேன். என்னுடைய இந்தபாவி உயிரை திடமான வஜ்ரத்தால் சேர்த்துக்கட்டி அசையாமலிருக்கும்படி செய்திருக்கிறதே. துரதிர்ஷ்டசாலியான என்னை அது விடமாட்டேனென்கிறதே.

அருந்ததி:—ஏ ராணி. ஸமாதானப்படுத்திக்கொள். நடுவில் நடுவில் கண்ணீரை துடைத்துக் கொள்ளவேண்டியதும் அவசியம் தான். இன்னென்று ஏன் உனக்கு நினைவு வரவில்லை? உங்களுடைய குலகுருவானவர் ரிஷிய சிருங்காச்ரமத்தில் சொன்னது ஞாபகமில்லையா? வரவேண்டியது வந்துவிட்டது; இனிமேல் எல்லாம் சுபமாக முடிந்துவிடுமென்று சொன்னரே.

கௌஸல்யை:—ஆசையெல்லாம் ஒழிந்த எனக்கு இன்னமே இது ஏது.

அருந்ததி:—அதென்ன ராஜாத்தி அப்படி எண்ணுகிருய்? அது பொய்யென்று நினைக்கிருய். அடி க்ஷத்ரியஸ்திரியே, அவ்விதம் நினைக்கக்கூடாது. பிரம்மஸ்வரூபத்தை நேரிலறிந்த பிராமணர்களுடைய பேச்சுக்களில் கொஞ்சமேனும் ஸம்சயம் வேண்டாம். அவர்களுடைய வாக்கில் மங்களகரமான லக்ஷ்மியல்லவோ வஸிக்கிருள். அவர்கள் ஒருக்காலும் வெட்டி வார்த்தை சொல்லமாட்டார்கள்.

[திரைக்குள் கலகலவென்று ஓசை கேட்கிறது. எல்லோரும் கவனிக்கிருர்கள்.]

ஜனகர்:—அடே. சிஷ்டாசாரப்படிக்கு இன்று அத்யயனமில்லையாதலால் பையன்களெல்லாம் தங்குதடையில்லாமல் திரிகிருர்கள். அவர்களுடைய சப்தமிது.

கௌஸல்யை:—குழந்தைப் பருவமானது எப்பொழுதும் ஸுலபமாக ஸௌக்கியமாக இருக்கக்கூடிய காலம். [உற்றுப் பார்த்து] இதென்ன ஆச்சரியம். இந்தப் பையன்களுக்குள் ஒருவன் ராமபத்ரனுடைய பால்ய சோபையையுடைத்தானவனும் மிருதுவான மனோஹரமான அங்கங்களோடுகூடி நம்முடைய கண்களை குளிரச் செய்கிறானே. அவன் யார்?

அருந்ததி:—(தனக்குள் ஸந்தோஷத்தோடும் உத்ஸாஹத்துடனும்) இது தான் பாகீரதியால் சொல்லப்பட்ட காதுக்கு அமிர்தம் போன்ற ரகஸ்யம். ஆனால் இவன் குசலவர்களுக்குள்ளாக யார் என்பது நமக்குத் தெரியவில்லை.

ஜனகர்:—குவலயதளம்போல் மனோஜ்ஞமான நிறமுடையவனும் ஜில்பாவால் அலங்கரிக்கப்பட்டு இந்தப் பையன்கள் கூட்டத்தை மிகவும் சோபையுள்ளதாக செய்துகொண்டு காந்தியுடன் விளங்குகிறான் அந்தப்பையன். என்னுடைய ரகுநந்தனனே மறுபடியும் குழந்தையாக ஆயிருக்கிறாப்போல் பார்க்குமுன் என் கண்களுக்கு அமிருதமாகிற மையிடுகிறானே. அவன் யார்?

கஞ்சுகி:—நிச்சயமாக இவன் ஒரு க்ஷத்திரியப் பிரம்மசாரிப்பையன் என்று எண்ணுகிறேன்.

ஜனகர்:—ஆம் வாஸ்தவந்தான். அவன் பின்னாடி இரண்டு பக்கங்களிலும் அம்பராத்தூணிகளைக் கட்டிக்கொண்டிருக்கிறான். அவைகளிலுள்ள பாணங்களினிறகுகள் அவனுடைய சிரஸ்ஸை எட்டுகின்றன. அவனுடைய மார்பிலோ விபூதி காண்கிறது. மான் தோலை தரித்துக் கொண்டிருக்கிறான். மூர்வியால் செய்த அரணாளால் தடுக்கப்பட்ட இடுப்புவஸ்திரத்

தோடு கூடியிருக்கிறான். அந்த வஸ்திரமும் மாஞ்ஜிஷ்ட ரக்தவர்ணமாயிருக்கிறது. ஒரு கையில் தநுஸ்ஸும் ஜபமாலையுமிருக்கிறது. மற்றொரு கையில் அசுவத்ததண்டமிருக்கிறது. அம்மா அருந்ததி, தங்களுக்கு என்ன தோணுகிறது. இவன் யாராயிருக்கலாம்.

அருந்ததி:—நாங்களும் இப்பொழுதுதானே வந்தோம்.

ஜனகர்:—அப்பா கிருஷ்டி. எனக்கு ரொம்பவும் ஆவலாயிருக்கிறது. ஆதலால் பூஜ்யரான வால்மீகியையே போய்க் கேள். வழியில்இந்த பையனிடத்தில் சொல் 'அப்பா, உன்னை யாரோ இந்த கிழவர்கள் பார்க்க வேணுமென்று ஆசைப்படுகிறுர்கள்' என்று.

கஞ்சுகி:—தங்களுத்தரவுப்படியே (என்று போய்விட்டான்.)

கௌஸல்யை:—என்ன நினைக்கிறீர்கள். இப்படி சொன்னால் அவன் வருவன் என்று அல்லது வரமாட்டான் என்று?

ஜனகர்:—இப்போர்க்கொத்த கிருஷ்டியினுடைய நன்னடத்தை பேதிக்குமா?

கௌஸல்யை:—(உற்றுப்பார்த்து) என்ன ஆச்சரியம். மிகவும் வணக்கத்துடன் கிருஷ்டியின் வார்த்தையைக் கேட்டுவிட்டு தனக்கு ஸமமான எல்லா பையன்களையும் விட்டுவிட்டு இந்தப் பக்கமாகவே அந்தக் குழந்தை வருகிறுனே.

ஜனகர்:—(வெகுநேரம் நன்கு கவனித்து) இதென்ன ஆச்சரியம். விநயத்தால் குளிர்ந்து பால்யத்தால் ஸுகுமாரமாயிருக்கும் இவனுடைய மஹிமையின் அதிசயமானது நல்ல புத்திசாலிகளால் தான் கிரகிக்கமுடியும். அசடுகள் அறியமாட்டார்கள். தற்காலம் மோகத்

தால் ஸ்தப்தமாயிருக்கும் என்னுடைய மனஸ்ஸைக் கூட இவன் இரும்புக்குண்டை காந்தத்துண்டு எவ்வாறு இழுக்குமோ அவ்வாறு இழுக்கிருனே.

லவன்:—(ப்ரவேசித்து) இவர்களுடைய வயசுக்கிரமத்துக் குத் தக்கினது இன்னதென்று தெரியாததால் இவர்கள் பூஜ்யர்களாயிருந்தபோதிலும் எம்மாதிரியாக இவர்களை நமஸ்காரம் செய்கிறது. (யோசித்து) இந்த மாதிரி செய்கிறேன். இது ஒன்றுக்கும் விரோதமில்லையென்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். (வணக்கத்துடன் கிட்ட நெருங்கி) இது தான் லவன் உங்களுக்கு சிரஸ்ஸினல் நமஸ்காரம் செய்கிறது.

அருந்ததி, ஜனகர்:—அப்பா, தீர்க்காயுஸ்ஸுடனிரு.

கௌஸல்யை:—குழந்தாய், சிரஞ்சீவியாயிரு.

அருந்ததி:—இங்குவா குழந்தாய் (லவனை மடியில் வைத்துக்கொண்டு, தனக்குள்) இப்பொழுது என் மடிமட்டும் பூர்த்தியாகவில்லை. என்னுடைய வெகுநாளைய மனோரதம் கூட தெய்வவசத்தால் இன்று பூர்த்தியடைந்தது.

கௌஸல்யை:—குழந்தாய் இங்கேயும் கொஞ்சம் வா. (மடியில் வைத்துக்கொண்டு) ஆச்சரியம். இவன் கேவலம் மலர்ந்திருக்கும் குவலயபுஷ்பத்தை யொத்த தேககாந்தியால் மட்டும் ராமபத்ரனை ஒத்திருக்கிருனென்பதில்லை. தாமரைப் புஷ்பத்தை விழுங்கி அதன் பொடிதுகளால் ஆக்ரமிக்கப்பட்ட கலஹம்ஸங்களின் கண்டத்திலிருந்துண்டாகும் த்வனியைப் போல் கம்பீரமான வெங்கலத்வனியினல் கூட ராமபத்ரனையே அனுஸரிக்கிருன். கடினமாயிருக்கும் தாமரைப் புஷ்பங்களின் உள் இதழ்களைப்போல்

தொடுவதற்கு மிருதுவாயிருக்கும் இவனுடைய சரீர ஸ்பர்சமும் அந்த மாதிரியேதானிருக்கிறது. அப்பா, உன் முகத்தைக் கொண்டுவா பார்க்கிறேன். (முகத்தை கையால் தூக்கி நன்றாகப் பார்த்து கண்ணீர் ததும்ப துக்கத்துடன்) ராஜரிஷியே. என்ன, உங்களுக்குத் தெரியவில்லையா? நன்றாகக் கவனித்தால் என் நாட்டுப் பெண்ணுடைய சந்திரன் போலொத்த முகத்துடன் கூட ஒத்திருக்கிறதே.

ஜனகர்:—பார்க்கிறேன் அம்மா. பார்க்கிறேன்.

கௌஸல்யை:—என்ன? பைத்தியம் பிடித்தாப்போல் என் மனது எங்கேயோபோய் பேத்துகிறதே.

ஜனகர்:—குழந்தை ஸீதையினுடையவும் ரகுகுலதிலகனாகிய ராமனுடையவும் ஸம்பந்தமானது கண்ணுடியில் பிம்பங்கள் பிரதிபலிக்கிறதுபோல பூர்த்தியாக இந்தக் குழந்தையிடத்தில் நன்றாகக் காண்கிறது. அதே ஆகிருதி, அதே காந்தி, அதே வாக்கு, அதே ஸ்வபாவமான விநயம். இது மிகவும் புண்யமான அனுபவமாயிருந்தாலும்கூட ஹா ஹா தேவி என்ன என் மனம் மிகவும் சஞ்சலப்பட்டு என்னென்னவோ வழிதப்பி தவிக்கிறதே.

கௌஸல்யை:—அப்பா, உனக்குத் தாயார் இருக்கிறாளா? உன் தகப்பனார் நினைவு இருக்கா உனக்கு?

லவன்:—இல்லை.

கௌஸல்யை:—ஆனால் நீ யாருடையவன்?

லவன்:—பகவானாகிய வால்மீகிமஹரிஷியினுடையவன்.

கௌஸல்யை:—அடே அப்பா, இன்னும் சொல்லக்கூடியதைச் சொல்லு.

லவன்:—இவ்வளவுதான் எனக்குத் தெரியும்.

[திரைக்குள்]

அடா ஸைன்யங்களே, ஆச்ரமத்துக்கு ஸமீபமாயுள்ள பூமிபாகங்கள் ஒருவராலும் ஆக்ரமிக்கப்படக் கூடாதென்று ராஜகுமாரனை சந்த்ரகேது கட்டளையிடுகிறார்

அருந்ததி, ஜனகர்:—அடே, அசுவமேதக் குதிரையை பிடிக்கும் வியாஜத்தால் இங்குவந்திருக்கும் குழந்தை சந்திரகேதுவைப் பார்க்கும்படி நேர்ந்தது இன்று ஸுதினம்.

கௌஸல்யை:—குழந்தை லக்ஷ்மணனுடைய பிள்ளை கட்டளையிடுகிறான் என்று அமிர்த பிந்துக்கள்போல் ரம்யமான சப்தம் காதில் விழுகிறதே.

லவன்:—ஐயா, சந்திரகேது என்னுமிவன் யார்?

ஜனகர்:—தசரதர் குமாரர்களாகிய ராமலக்ஷ்மணர்களைத் தெரியுமா?

லவன்:—அவர்கள்தான் ராமாயண கதாநாயகர்கள்.

ஜனகர்:—ஆம்.

லவன்:—அது எப்படி எனக்குத் தெரியாமலிருக்கும்.

ஜனகர்:—அந்த லக்ஷ்மணனுடைய பிள்ளை இந்த சந்திரகேது.

லவன்:—அப்படியானால் இவன் ஊர்மிளையின் புத்ரன். ராஜரிஷியான மிதிலாதிபதியின் பெண் வயத்துப் பேரன்.

அருந்ததி:—கதையிலுள்ள கெட்டிக்காரத் தனத்தை குழந்தை காண்பித்துவிட்டான்.

ஜனகர்:—[யோசித்து] நீ கதையில் இவ்வளவு தெரிந்தவனாயிருந்தால் நான் ஒன்றுகேட்கிறேன். சொல்லு

பார்ப்போம். அந்த தசரதருடைய புத்ரர்களுக்குள் யார் யாருக்கு எத்தெத்தனை குழந்தைகள் எந்தெந்த பாரியையிடத்தில் உண்டாச்சுதுகள்.

லவன்:—அந்த கதாபாகமானது எங்களாலாகட்டும் வேறு எவராலாகட்டும் இதுவரை கேட்கப்படவில்லை.

ஜனகர்:—கவி அதை செய்யவே இல்லையா என்ன?

லவன்:—செய்திருக்கிறார். ஆனால் வெளிப்படுத்தவில்லை. அதிலேயே ஏதோ ஒரு பாகத்தை நாடகரூபமாக எழுதி அதிக ரஸமுள்ளதாகத் தானே ஆடுவதற்கு உபயோகமாகும்படி செய்திருக்கிறார். அந்த பாகத்தையும் தன் கையாலேயே எழுதி பூஜ்யரான வால்மீகிமுனியானவர் நாட்யசாஸ்திரத்தில் நிபுணரான பரதருக்கு அனுப்பியிருக்கிறார்.

ஜனகர்:—எதற்காக?

லவன்:—அந்த பூஜ்யரான பரதரானவர் அப்ஸரஸ்ஸுகளைக் கொண்டு அதை நாடகமாகப்போடவேண்டுமென்று.

ஜனகர்:—இதெல்லாம் நமக்கு ரொம்பவும் உத்ஸாகமாகவிருக்கிறது.

லவன்:—இது விஷயத்தில் வால்மீகிபகவானுக்கு இருக்கும் ஆஸ்தையானது ரொம்பவும் அதிகம். ஏனெனில் சில சிஷ்யர்களின் கையில் அந்தப் புஸ்தகத்தைக் கொடுத்து பரதருடைய ஆச்ரமத்துக்கு அனுப்பினர். அதில் வழியில் பிரமாதங்கள் ஒன்றும் நேரிடாமலிருக்கும் வண்ணம் என்னுடைய ஸகோதரரை கூட அனுப்பிருக்கிறார்.

கௌஸல்யை:—உனக்கு சகோதரன்கூட இருக்கிறானா?

லவன்:— ஆமா, அண்ணா குசன் என்பவன் இருக்கிறான்.

கௌஸல்யை:— இதனால் மூத்தவன் என்று சொன்னதாக ஆச்சுது.

லவன்:—ஆமாம். பிரஸவத்தினுடைய கிரமத்தால் அவன் பெரியவன்.

ஜனகர்:—ஆனால் நீங்கள் என்ன இரட்டைப் பிள்ளைகளா?

லவன்:—ஆமாம்:

ஜனகர்:—அப்பா, கதை உங்களுக்கு எவ்வளவு தூரமாயிருக்கிறதென்று சொல்லு பார்ப்போம்.

லவன்:—பொய்யாகவாவது ஜனங்கள் சொன்ன அபவாதத்தால் ப்ராந்தியடைந்த மனதையுடைத்தான ராஜாவால் வீட்டைவிட்டு அனுப்பப்பட்ட யாகபூமியிலுண்டான தேவதாரூபமான ஸீதையை ஆஸன்னப் பிரஸவவேதனையுள்ளவளாயிருந்தபோதிலும்கூட ஒண்டியாக அரண்யத்தில் விட்டுவிட்டு லக்ஷ்மணர் திரும்பி வந்துவிட்டார். அதுவரையிலாயிருக்கிறது.

கௌஸல்யை:—அடி குழந்தாய், உன்னுடைய புஷ்பம்போலொத்த சரீரத்துக்கு இது என்ன கோரமான அவஸ்தை ஏற்பட்டது. ஒண்டியாக விடுவதற்கு இதுதானா சமயம்?

ஜனகர்:—ஆ குழந்தாய், உனக்கு ஏற்பட்ட இந்த அவமானத்தையும், அந்த பயங்கரமான காட்டையும் பிரஸவஸமயம் நெருங்கியதாலுண்டான அந்த அவஸ்தையையும் அடைந்த உன்னால் நாலா பக்கங்களிலும் காட்டுமிருகங்கள் வந்து சூழ்ந்துகொண்டதால் பயப்படுத்தப்பட்ட சமயத்தில் நிச்சயமாய் நான் நினைக்கப்பட்டிருப்பேன்.

லவன்:—அம்மா, இவர்களிருவரும் யார்?

அருந்ததி:—இவள் கௌஸல்யை. இவர் ஜனகர். (லவன் மிகவும் வெகுமானத்துடனும், கௌரவத்துடனும், வருத்தத்து டனும் பார்க்கிறன்.)

ஜனகர்:—ஐயோ இந்தப்பொல்லாத ஜனங்களுடைய கொடுமையை என்னென்று சொல்லுவேன். ஆஹா ராமபத்ரனுடைய படபடப்புத்தனத்தைத் தான் என்ன சொல்லுகிறது. இந்த இடி போன்ற பயங் கரமான மஹாவியஸனத்தின் ஸம்பவத்தால் அடிக் கடி என்னிடம் உண்டாகிற கோபாக்னியை சீக்கிரத்தில் பாணத்தாலாவது, சாபத்தாலாவது ஜ்வலிக்கச் செய்கிறதற்கு இது தகுந்த ஸமயம்.

கௌஸல்யை:—அம்மா, காப்பாத்தவேணும். கோபத்துட னிருக்கும் ராஜரிஷியை சாந்தப்படுத்தவேணும்.

லவன்:—இந்த மாதிரியாக சாந்தமடைகிறதுதான் அவமதிக்கப்பட்டபோதிலும் மஹான்களுடைய பெருமையான நடத்தை.

அருந்ததி:—ஏ ராஜாவே, ராமனும் உங்களுடைய பிள்ளை தானே. ஏழை ஜனங்களும் காப்பாற்றத் தக்கின வர்களே.

ஜனகர்:—அல்லது அது இரண்டும் ரகுநந்தனன் விஷயத்தில் ஓய்வை அடையட்டும். ஏனெனனில் அவன் எனக்கு புத்ரஸ்தானமல்லவா. ஊரிலுள்ள ஜனங் களோ பெரும்பாலும் பாலர்களாகவும், விருத்தர்க ளாகவும், ஸ்திரீகளாகவுமிருக்கிறார்கள்

(பரபரத்த குழப்பத்துடன் பையன்கள் பிரவேசித்து)

பையன்கள்:—அடே குமாரா, குதிரை குதிரை என்று ஒரு பிராணி விசேஷம் பட்டணங்களிலிருப்பதாக நாம் வாசித்திருக்கிறோமல்லவா? அதை நாங்கள் இப்பொழுது நேரில் கண்ணால் பார்த்தோம்.

லவன்:—குதிரை குதிரை என்பதாக பசு ஸமாம்நாயத்திலும், யுத்தத்திலும் வாசித்திருக்கிறோம். அது எப்படியிருக்கிறதென்று சொல்லுங்கள்.

பையன்கள்:—அடே, கேளு. பின்னடி அகலமான வால் இருக்கிறது. அதையும் அடிக்கடி ஆட்டுகிறது. கழுத்து நீளமாக இருக்கிறது. அதற்கு நான்கே குளம்புகள்தான். பில்லைத் தின்கிறது. மாங்காய் அளவு சாணி உருண்டை உருண்டயாக போடுகிறது. அடே அதைப்பற்றி விஸ்தரிப்பானேன். அது தூரமாகப் போய்விடும். வா, வா, போய் பார்ப்போம். (என்று கையையும் வஸ்திரத்தையும் பிடித்து இழுக்கிறார்கள்.)

லவன்:—(அடக்கிய ஆவலோடுகூடிய விநயத்துடன்) பூஜ்யர்களே, பாருங்கள். இவர்களால் பலமாக இழுக்கப்படுகிறேன். (என்று வேகமாக நகருகிறான்.)

அருந்ததி, ஜனகர்:—குழந்தைக்கு ரொம்பவும் உத்ஸாஹம்.

கௌஸல்யை:—இந்த அரண்யத்திலுண்டான குழந்தைகளுடைய ரூபத்தாலும் பேச்சாலும் நீங்கள் ஸந்தோஷமடைந்தீர்கள். நானோ அவனைப் பார்த்துக் கொண்டே வஞ்சிக்கப்பட்டதுபோல் தோணுகிறது. ஆதலால் இங்கிருந்து வேறொரு இடத்திற்குப்போய் ஓடுகிற அந்தக் குழந்தையைப் பார்ப்போம்.

ஜனகர்:—இது ரொம்பவும் அபூர்வமானதாகவும் கம்பீரமானதாகவும் இருக்கிறது. அம்மா அருந்ததி, தோழி கௌஸல்யை, அப்பா கிருஷ்டி, வாருங்கள் நாமே நேரில் போய் வால்மீகிபகவானை பார்ப்போம்.

(என்று கிழவர்கள் போகிறார்கள்.)

பையன்கள்:—இந்த ஆச்சரியத்தைக் குமாரன் பார்க்க வேணும்.

லவன்:—பார்த்தேன் தெரிந்துகொண்டேன். நிச்சயமாக இது அசுவமேத யாகத்துக் குதிரை.

பையன்கள்:—அது எப்படித் தெரிகிறது?

லவன்:—அடே முட்டாள்களா. நீங்களும் தானே அந்தக்காண்டம் படித்தீர்கள். என்ன உங்களுக்குக் கண்ணில்லையா? பிரத்யேகம் நூற்றுக்கணக்கான கவசத்தோடு கூடியவர்கள், தண்டமுடையவர்கள், வில்லாளிகள் அதை காத்துக்கொண்டு வருகிறது தெரியவில்லையா? அது மாதிரியே மைத்த லக்ஷணங்களும்காண்கின்றனவே. இன்னும் ஏதாவது ஸந்தேகமிருந்தால் கேளுங்கள்.

பையன்கள்:—ஓ! ஓ! எதற்காக இந்தக் குதிரையானது இவ்வாறு சூழப்பட்டுத் திரிகிறது.

லவன்:—(பொருமையுடன் தனக்குள்) அசுவமேதம் என்பதானது உலகத்தையெல்லாம் ஜயித்த க்ஷத்ரியர்களுடைய மஹாசிரேஷ்டமான சாணைக்கல். அது எவ்வித க்ஷத்திரியர்களையும் அவமதிக்கும்படியானது.

(நிரைக்குள்)

இந்த அசுவமேத அசுவமானது ஏழு உலகங்களுக்குள்ளும் ஒரே வீரனான ராவணகுலத்தை ஸம்ஹரித்தவனான ஸ்ரீராமனுடைய துவஜமல்லவா. அதாவது அவருடையவீரத்தன்மையைப்பிரவஸித்தி செய்யப்பட்டதல்லவா.

லவன்:—(கர்வத்துடன் கூடினவன்போல) அடே இந்த அக்ஷரங்கள் எவ்வளவு கோபத்தை மூட்டுகின்றன.

பையன்கள்:—என்ன சொல்லுகிறாய். குமாரன் எப்பொழுதும் புத்திசாலியாயிற்றே.

லவன்:—அடே, அடே, என்னடா, பூமியில் க்ஷத்திரியனே இல்லாமல் போய்விட்டதா. இந்த மாதிரி

யாக சத்தம் போடுகிறீர்களே.

(திரைக்குள்)

அடே, அடே, மஹாராஜாவுக்கு எதிராக க்ஷத்திரியன் எங்கு இருக்கிறான்?

லவன்:—சீ, போக்கிரிகளா! இல்லாமலென்ன? இருந்துகொண்டே இருக்கிறார்கள். எதற்காக இந்த பயமுறுத்தல்? வெட்டிப்பேச்சால் என்னகாரியம். உங்களுடைய கொடியை அபகரிக்கிறேன். அடே பசங்களா! இந்தக் குதிரையைச் சுற்றிக்கொண்டு தடிகளால் அதை அடித்து இங்கு ஓட்டிவாருங்கள். நமது ஆசிரம மிருகங்களுக்கு மத்தியில் இதுவும் ஸஞ்சரிக்கட்டும்.

(கோபத்துடன் பிரவேசித்து.)

புருஷன்:—சீ, அசடா! என்ன சொல்கிறாய்? அதி கூர்மையான ஆயுதங்களையுடைத்தான ஸைந்யங்கள் கொழுப்பான வார்த்தையை குழந்தைகளிடத்திருந்துகூட ஸஹிக்கமாட்டார்கள். ராஜபுத்ரனான சந்திரகேதுவோ அடக்கமுடியாதவன். அவன் இப்பொழுது இதற்குமுன் பார்த்திராத இந்த ஆரண்யத்தைப் பார்க்கப் போயிருக்கிறான். அவன் திரும்பிவருவதற்குள் இந்த மரங்களின் இடைவழியே வேகமாக ஓடிப்போ.

பையன்கள்:—அப்பா, இந்தக்குதிரை போதும் போதும். பளபளப்பான ஆயுதங்களோடு கூடிய ஸைந்யங்கள் குமாரனை அதட்டுகிறார்கள். ஆசிரமமோ தூரமாக இருக்கிறது. ஆகையால் வா. மான்போல துள்ளிக் குதித்து ஓடிப்போய் விடுவோம்.

லவன்:—சஸ்திரங்கள் பளபளப்பாக பிரகாசிக்கின்றனவா? (தனுஸ்ஸை ஆரோபணம் செய்துகொண்டு) நாணு

கிற நாக்கால் சூழப்பட்டதும், உயரமான நுனியாகிற பற்களோடு கூடியதும், அளவிலடங்காத கோரமான சப்தத்தை யுண்டாக்குவதுமான இந்த தனுஸ்ஸானது பரிஹஸிக்கும் யமனுடைய முக யந்திரத்தின் பிளப்பை யனுஸரித்து விஷமத்துடன் கூடிய மத்திய பாகத்தை யுடைத்தானதாய் ஆகட்டும்.

[எல்லோரும் உசிதப்படி போகிறார்கள்.]

நான்காவது அங்கம் முற்றிற்று.



சூரியபிம்ப லட்சணம்.

இப்பூமியிலுள்ள யானை முதலெறும்பீரான சகல உயிர்வர்க்கங்களும் புல் பூண்டு முதலாய தாவர வர்க்கங்களும் மற்றுமுள்ள சேதனா சேதனங்களும் இவைகள் யாவற்றிற்கு மேலான மானிடர்களும் சுகித்து வாழ்வதற்குச் சூரியன் அத்தியாவசியமானது. வானசாஸ்திரிகள் நெடுங்கால் ஆராய்ச்சியினாற் கண்டறிந்த சில அற்புதமான விஷயங்களை இங்கெடுத்துக்காட்டுகிறோம்.

சூரிய பிம்பம் குறுக்களவில் 763,000 மைலிருக்கிறது. நாம் வசிக்கும் இப்பூமியின் குறுக்களவோ 7950 மைலுக்கதிகமாயில்லை. ஆகவே இப்பூமியைப் பார்க்கிலும் சூரியபிம்பம் 1392,500 மடங்கு பெரிதாயிருக்கிறது. சூரியனோடும் இப்பூமியையும் ஒத்திட்டுப் பார்க்கையில் சூரியனை ஒரு கிச்சிலிப்பழமாகவும் பூமியை அதன் மீதுள்ள ஓர் சிறு மணலாகவும் சொல்லலாம். வாஸ்தவத்தில் இவ்வளவு பெரிதாயிருந்தும் சூரியன் இப்பூமிக்குச் சற்றேறக்குறைய ஒன்பதுகோடியே இருபதுலக்ஷம் மைலுக்கு அப்பாலிருக்கின்றபடியால் நமக்கு ஓர் சிறு உருண்டைபோல் தோன்றுகிறது. இவை போன்ற பெருத்த கிரஹங்களின் பருமன் முதலியவற்றைக் கணக்கிட்டு நிச்சயமாயறிதல் கூடும். இவை யாவற்றையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும் ஆகாய வெளிப்பரப்பை அளவிட்டுக்கூற ஒண்ணாது. அது காலத்தைப் போல் ஆதியந்தமற்றது. இப்பூமியிலிருந்து சூரியமண்டலம் வரையில் ககனமார்க்கமாய் இருப்புப்பாதை ஏற்படுத்தி அதன் மூலமாகப் புகைவண்டியிலேறி விடாது யாத்திரை செய்வோமாகில் சூரியமண்டலத்தைப் போய்ச்சேருவதற்குச் சற்றேறக்குறைய நானூறு வருஷம் பிடிக்கும். ஒரு நிமிஷத்தில் சுமார் எட்டு மைல் வீதம் போகத்தக்க வேகத்துடன் ஒரு பீரங்கிக்குண்டை இங்கிருந்து சூரியமண்டலத்துக்குச் செலவிடுப்போமாகில் அது சூரியனைப்போய்த்தாக்குவதற்குச் சுமார் இருபத்திரண்டு வருஷம் பிடிக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஓர் சூரிய கிரஹணம் பூமியிலுள்ள நம்மைத்தாக்குவதற்குச் சற்றேறக்குறைய எட்டு நிமிஷம் பிடிக்கிறது. ஆகவே சூரியன் உதயமாவதாக நமக்குத் தோன்றுகிற காலத்துக்கு எட்டு நிமிஷத்துக்கு முன்னரே அது வாஸ்தவத்தில் உதயமா

யிற்றென்று நாம் அறிந்துகொள்ளவேண்டியது.

நம்முடைய ஊனக்கண்ணினாலே பார்க்கமுடியாத அவ்வளவு பிரகாசமாய்ச் சூரியனிருக்கிறபடியினாலே அதன் பிம்பலட்சணத்தை நாம் கண்டறியவேண்டுமாயின், மங்கலான பச்சைக்கண்ணாடியமைந்த தூரதிருஷ்டிக்கருவியைச் சகாயமாய் வைத்துக்கொள்ளவேண்டியது. அதைக்கொண்டு சூரியபிம்பத்தைக் காணுகையில் அதில் சில விசித்திரங்கள் கண்ணுக்குப் புலப்படுகின்றன. சூரியபிம்பத்தைச் சுற்றிலும் ஒரு பெரும் சமுத்திரத்தைப்போல அக்கினி சூழ்ந்திருக்கின்றது. அன்றியும் அளவிறந்த உலோகங்கள் கொடிய உஷ்ணத்தினால் உருகி ஆவியாய் எழும்ப அந்த ஆவி சூரியபிம்பத்தை நாற்புறமும் சுற்றிக்கொண்டிருக்கிறது. தூரதிருஷ்டிக் கண்ணாடியைக்கொண்டு வானசாஸ்திரிகள் சூரியபிம்பத்தை ஆதியில் பார்த்தகாலத்திலே அதனிடத்துக் கறுத்த புள்ளிகளிருப்பதைக் கண்டு வியந்தார்கள். அக்கறுப்புக குறிகளைச் சில நாள் வரையில் விடாது தினம் பார்த்துக்கொண்டே வந்தபோது அவை கீழ்த்திசையினின்றும் மேற்றிசையாகச் சுழன்றுகொண்டு வந்து சில நாள் வரையில் அவர்கள் கண்ணுக்குப் புலப்படாமலேயிருந்து மறுபடியும் கீழ்த்திசையில் தோன்றின. இதனால் பூமியைப்போலவே சூரியனும் சுழன்றுகொண்டே வருகிறதென்றும் அது அந்தப்படி ஒரு விசை சுழலுவதற்கு நம்முடைய கணக்குப்படி இருபத்தைந்து நாளாகிறதென்றும் வானசாஸ்திர பண்டிதர்கள் கணக்கிட்டிருக்கின்றார்கள். இதை யோசித்துப்பார்க்குமிடத்து, சூரியன் நின்ற நிலையிலிருந்து தன்னிடத்து யாவற்றையும் இழுத்துக்கொள்ளும் சக்தியினால் பூமிமுதல் ஏனைய கிரஹங்கள் தன்னைச் சுற்றிவரச் செய்துகொள்ளுகிறதுபோலவே, அச்சூரியனைப்போன்ற

அனேக சூரியர்கள் தன்னைச் சுற்றிவரச் செய்துகொள்ளுகிற பெருத்த மத்திய சூரியபிம்பம் ஒன்று ஆதியந்தமில்லா வெளிப்பரப்பில் இருக்கவேண்டியதென்று எண்ணுவதற்கிட மிருக்கிறதல்லவா? அம்மத்திய சூரியன் எதுவோ? அது எவ்விடத்திலிருக்கின்றதோ? சின்னுட்பல்பிணிச் சிற்றறிவினனாகிய மானிடனுடைய மனதுக்கு அது எவ்வளவும் எட்டவில்லையே?

சூரிய பிம்பத்தின் மேற்புறம் மேற்கண்டபடி அக்கினிமயமான ஓர் பெருத்த சமுத்திரத்தில் முழுகி இருக்கிறபடியினாலே, நீர்மயமான சாதாரண சமுத்திரத்தில் பிரசண்டமாருதத்தால் ஜலம் நெடுந்தூரம் வரையில் நாற்புறமும் கொந்தளித்து எழுகின்றதுபோல் அவ்வக்கினிக் கடலும் ஒவ்வோர் காலத்தில் ஆரவாரித்தெழுகின்றது. அந்த சமயங்களில் சூரிய பிம்பத்திலிருந்து எழுகின்ற அக்கினிக்கொழுந்து சில நிமிஷங்களுக்குள்ளே இரண்டு லக்ஷம் மைல்தூரம் வரையில் மேலெழுந்து பாய்கின்றது. சில சமயங்களில் மேற்கண்ட அக்கினிமயமான சமுத்திரம் இடையிடையே விலகிவிலகித் தோன்றுதலினால் உட்புறத்துள்ள சூரிய பிம்பத்தின் யதார்த்தமான கருநிறம் நமக்குப் புலப்படுகின்றது. பகற் காலத்தில் மேகங்கள் ஆகாசத்திலே இடம் விட்டுச் சற்றே பெயர்கையில் அந்த இடைவெளி மூலமாக அதற்குமேலிருக்கும் ஆகாசத்தின் நீலவர்ணம் நமக்குத் தோன்றுவதுபோல் மேற்கண்ட அக்கினிக் கடலின் இடைவெளி மூலமாகச் சூரிய பிம்பத்தின் இயற்கைக் கருநிறம் வெளியே தோன்றுகின்றது. இந்த இடைவெளிகள்தான் மேலே சொல்லப்பட்ட கறுத்த புள்ளிகளாகத் தோன்றுகின்றனவென்று சில வானசாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். இவைகளில் சில வெகு சீக்கிரத்தில் மாறுகின்றன. மற்றும் சில இரண்டு மூன்று

வாரங்கள் மட்டும் அப்படியே இருக்கின்றன. பூமியைச் சுற்றிலும் வாயு இருப்பதுபோல சூரிய பிம்பத்தைச் சுற்றிலும் நெடுந்தூரம் வரையில் அக்கினி சொரூபமான ஒளி வீசும் ஓர்வித புகை சூழ்ந்திருக்கின்றது. பகற்காலத்தில் நாம் நட்சத்திரங்களை எப்படி காணமுடியாதோ அதுபோல், சூரியனைச் சூழ்ந்திருக்கும் மேற்படி அக்கினி மயமான புகையை நாம் சாதாரணமாய்ப் பார்க்க முடியாது. ஆயினும் கிரஹண காலங்களில் சந்திர பிம்பத்தினால் சூரியவொளி தடை படும்போது அவ்வக்கினிமயமான புகைகள் சூரிய பிம்பத்துக்கு இட்ட ஜோதிமயமான மணிமகுடம்போல் காணப்படுகின்றன. பெரும்புயலடிக்கும் காலத்துச் சமுத்திரத்தின் அலைகள் கொந்தளித்து மேலெழுந்து கீழே விழுவதுபோல் ஓர்வித அக்கினிப் பிரவாகம் சூரிய பிம்பத்தை எப்போதும் சூழ்ந்துகொண்டு இருக்கிறபடியினால் அதிலிருந்தும் கொழுந்துவிட்டு அக்கினி நாற்புறமும் மேலெழும்புவதும் அடங்குவதுமாய் இருக்கின்றது. சூரியனைச் சுற்றிலும் இந்தப்படியிருக்கும் அக்கினிக்குக் காரணம் இஃதென்பதை வானசாஸ்திர பண்டிதர்கள் சரியாய்க் கூறவில்லை. அவர்களுக்குள் வெகுவாய் இதுவிஷயத்தைக் குறித்து அபிப்பிராய பேதமுண்டாயிருக்கிறது. ஆயினும், பாரமான சில பெருத்த பொருள்கள் சதா சூரிய பிம்பத்திலே நாற்புறமும் அதிவேகத்துடன் வந்து வீழ்ந்துகொண்டே இருக்கிறபடியினாலேதான் மேலே விவரித்தபடி அபாரமான அக்கினி சூரிய பிம்பத்தைச் சூழ்ந்து உண்டாகின்றதென்று சில வானசாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். இவர்கள் இங்ஙனம் கூறுவது சரியாகத் தோன்றுகின்றது. ஏனெனில் இவ்வளவு பெருத்த உஷ்ணத்தைச் சூரியன் இயற்கையில் உடைத்தாயிருக்கினும் நாற்புறமும் வெளிப்படுப்

பிலே உஷ்ணம் ஆவியாய்ப் பரவிப் போய்க்கொண்டிருக்கி றபடியால் நாளாவர்த்தியில் உஷ்ணம் குறைந்து ஒருகாலத் தில் சூரியன் தணிந்துபோக வேண்டிவரும் குறைவு பட் டுக்கொண்டுவரும் உஷ்ணத்தைப் பூர்த்தி செய்துகொண் டே வருவதற்கு எவ்விதத்திலேனும் அதற்கு உஷ்ணவரு வாயிருத்தல் வேண்டும். ஆகையால் பாரமான சில பொ ருள்கள் சூரியனது கிராஹிய சக்தியினால் இழுக்கப்பட்டு சதா சூரிய பிம்பத்தில் வந்து தாக்கிக்கொண்டிருப்பதி னாலே உஷ்ணக் கொதிப்பு குறைவுபடாமல் மேலும் மே லும் உண்டாய்க்கொண்டே வருகிறதென்னும் சித்தாந்தம் சரியென்றே தோன்றுகின்றது ஆகாயத்திலுள்ள அள விறந்த நக்ஷத்திரங்களாகிய அண்டங்களுக்குள்ளே சூரி யன் இப்பூமிக்கு மிகவும் சமீபமானதாகையால் அது நம க்கு அவ்வளவு பெரிதாகவும் பிரகாசமுள்ளதாகவும் தோ ன்றுகின்றது. சூரியன் தன்னிடத்து ஜகதீசன் அமைத் துவைத்த பேராற்றலால்தான் இப்பூமண்டலமும் ஏனைய கிரஹங்களும் தன்னைச் சூழ்ந்து வருப்படியாகச் செய்து அவற்றில் வசிக்கும் சகல உயிர்வர்க்கங்களுக்கும் ஜீவாதா ரமாயிருந்துகொண்டும், அவ்வண்டங்களெல்லாம் தத்தம் நிலையிற்றிரியாமல் நிறுத்திச் செலுத்திக்கொண்டும் வரு கின்றது. இப்பூமண்டலத்திலுள்ள சகல உஷ்ணத்துக்கும் விளக்கு முதலிய வெளிச்சங்களுக்கும் சூரியனே ஆதிகார ணமாயிருக்கின்றது. உஷ்ணமிராவிடில் ஜலம் ஆவியாய் எழும்பி மேகமாய் மாறுவது காலத்திரயத்தும் இல்லை. மேகமில்லாவிடத்து மழை எங்ஙனம் உண்டாகும்? மழை யில்லாவிடத்து உலகத்திற்கு நேரிடும் அனர்த்தத்தை அள விட்டுக் கூறவொண்ணாததாகும் என்பது வெளிப்படை.

"நெடுங்கடலுந் தன்னீர் மைகுன்றும்"
"தானந் தவமிரண்டுந் தங்கா."
"விரிநீர் வியனுலகத் துண்ணின் றுடற்றும் பசி."

இதுகாறும் கூறப்பட்ட விஷயங்கள் யாவற்றையும் ஐரோப்பிய வானசாஸ்திரிகள் நெடு நாளைய ஆராய்ச்சியினாலும் நுட்பபுத்தியினாலும் அயர்விலா ஊக்கத்துடன் கண்டு தெரிந்து உலகத்துக்கு உபகாரார்த்தமாகத் தெரிவித்திருக்கிறார்கள். சூரியன் உலகத்திலுள்ள சேதனா சேதனங்களுக்கு இன்றியமையாத் துணையாயும் மகத்தாகிய ஜீவாதாரமாயுமிருக்கிற காரணத்தை இந்துக்கள் உணர்ந்தே சூரியனைக் கடவுளுக்கு இருப்பிடமாகக்கொண்டு அதை வழிபட்டு வருகிறார்கள். சைவர்கள் அதனிடத்துச் சதாசிவப்பிரமம் இருப்பதாகவும், வைணவர்கள் நாராயணமூர்த்தி இருப்பதாகவும் கூறுகிற்பர். அதன் பிம்பலக்ஷணத்தையும், அதற்கும் இந்தப் பூமிக்குமுள்ள தூரம் முதலிய விவரங்களையும், மற்றும் விசித்திரங்களையும் ஐரோப்பியர்களைப்போல் புராதன இந்துக்கள் ஏன் அறிந்திலர் என்று வினவி, அவர்கள் கேவலம் அவிவேகிகளானபடியினால் இத்தகைய அற்புதமான விசித்திரங்கள் ஐரோப்பியர்களுக்கு விளங்கியதுபோல புராதன இந்துக்களுக்கு விளங்கவில்லையென்று இப்போது பலர் ஏளனம் செய்கிறார்கள். புராதன இந்துக்களில் கல்வி, நுட்பபுத்தி முதலிய விசேஷங்கள் சால அமையப் பெற்ற சாதுக்கள் ஞானிகளாய் உலகப்பற்று ஒழிந்தவர்களாகிக் கடவுளின் திருவடியொன்றையன்றி ஏனையவற்றைப் பொருளெனமதியாதிருந்தபடியினாலும், இவ்வகிலாண்டத்தையும் அதற்குள் ஒடுங்கிய ஆதித்தன் முதலிய அண்டங்கள் யாவையும் நிலையில்லா மாயாகாரியங்களென்னும் சித்தாந்தத்தைக் கொண்டிருந்தபடியினாலுமே அவர்கள் மகாபுத்திமான்களாயிருந்தும் இவை போன்ற விஷயங்களில் மனதைச் செலுத்தாமற் போய்விட்டார்கள் போலும்.

"எங்கையுனக் கல்லாதெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண்மற் றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசேயெமக்கெங்கோ னல்குறியேல்
எங்கெழிலென் ஞாயிறெமக்கேலோ ரெம்பாவாய்"

என்று இந்துக்களுள் விவேகத்தில் சமானதிகமில்லாத மஹானொருவர் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார் அவர்கள் கொண்ட சித்தாந்தத்துக்கு ஏற்க அவர்கள் அந்தப்படி தானே இருக்கவேண்டியதவசியம். ஆகையால் அவர்களை எவ்வளவும் அவிவேகிகளென்று நிந்திப்பது தருமமன்று. உலகத்தையும் அதைச் சார்ந்த பொருள்களையும் நித்தியமானவைகளென்றும் சித்தாந்தத்தை அவர்கள் கொண்டிருந்தால் மேலே காட்டப் பட்டனவற்றை ஒத்த அளவிறந்த விசித்திரங்களை அவர்களும் கண்டுபிடித்தே இருப்பார்கள். ஏன் அங்ஙனம் கூடாது? விவேகமும் ஆராய்ச்சியும் தானே இப்படிப் பட்டனவற்றை அறிவதற்குக் காரணம்!

எ. கே. ஸுந்தர ராஜன்.

சிறுவர்க்கான பக்கங்கள்.

பொறுமையுள்ள க்ரிஸில்டா

'காமர் கயல்புரள காவிமுகை நெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலும் தகைமைத் தேசாகரஞ் சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு.'

என்று, பலரும் இயம்பத்தக்க, இதாலியாதேசத்தின் வடபுறத்திற்குச் சமீபத்தில் 'ஸாலஸ்' (Saluce) என்று ஓர் வளப்பமான நகருளது. அந்நகரிலுள்ள குடிகளை அப்போது ஆண்டு வந்த மார்க்விஸின் பெயர் வால்டரேயாம் (Walter). இவர் இயற்கையாகவே நற்குலத்தினின்றும் அவதரித்தவராகையால் அவரிடம் பெருந்தன்மை என்பது குடிகொண்டிருந்தது. அவர் காந்தவிளக்

குப்போல் ஜ்வலிக்கும் முகத்தினராய் மனோதைரிய மிகுந்தவராய் எல்லாரிடத்தும் மிக்க மரியாதையாகவும் அபிமானமுள்ளவராயும் நடந்துகொண்டார். இவரது ஆளுகையில் குடியானவர்களும் பலகன தனவான்களும் ஒரு மனத்தினராய் தங்களுக்கு வேண்டிய சௌகர்யங்களையெல்லாம் செய்துகொண்டு தங்களது மார்க்விஸினிடத்தில் அன்புபாராட்டி வந்தனர். இப்படி இந்நகர் விளங்கி வருகையில் ஜனங்களுக்கு மட்டும் தங்களது காவலனிடத்தில் ஓர் குறை உண்டாயது. அதாவது மார்கவிஸ்வால்டர் அதுவரையில் விவாகஞ்செய்து கொள்ளயில்லை என்பதே. இது குடிகளுக்கும் பொறுக்கமாட்டாமல் மார்க்விஸினிடத்தில் பின்வருமாறு முறையிட ஆரம்பித்தனர்:—

"எங்கள் கருணையுள்ள அரசே! தாங்கள் இதுவரையில் கலகம் சண்டை சச்சரவின்றியில் அரசாட்சி செய்துவருவதானது மிகவும் வியக்கத்தக்கதும் எங்களுடைய மனதைக் குளிரச் செய்கிறதாயுமிருக்கிறது. இதுவரைக்கும் நாங்கள் யாவரும் ஒன்றுஞ் சொல்லாதிருக்க முயன்றும் ஓர் ஆறுக்குறையொன்று மட்டுமிருக்கிறது. தாங்கள் நாளது தேதிவரையில் கல்லியாணமொன்றும் முடித்தருளாமலிருப்பது எங்களுக்கு மிக்க மனவருத்தமுண்டாகிறது. தாங்கள் எங்களுடைய விருப்பத்திற்கிசைந்தால் நாங்களே கூடியமட்டும் சரியான நற்குலத்திற் பிறந்த அழகுவாய்ந்த பெண்ணை தங்களுக்கு மனைவியாக்க பிரியப்பட்டிருக்கிறோம். இதற்குத் தங்களெண்ணம் இன்னதென்று வெளியிடவேண்டும்." என்று கெஞ்சிக் கேட்டார்கள். அரசன், தனது கம்பீரப் பார்வையுடன் தனது குடிகளெல்லாம் சந்தோஷப்படும்படி கட்டாயம் தான் கலியாணஞ் செய்துகொள்வதாகவும் ஆனால் அவர்கள் திட்டஞ்செய்கிற பெண் அவரது மனதுக்குப்

பிடிக்காதென்றும் சொன்னார். ஆயினும், குடிகள், மார்க்விஸ் அந்தமட்டிலாவது ஒற்றுக்கொண்டாரே என்று குதூகுலமாய் வீடு சென்றனர்.

அத்தியாயம் 2.

உடனே மார்க்விஸ்வால்டர் தனது விவாகத்திற்கு வேண்டிய விருதுகளையெல்லாம் திட்டஞ்செய்து தான் கலியாணஞ்செய்து கொள்ளப்போகிற தேதியையும் ஒருவாறு குறிப்பிட்டார். இதைக்கேட்ட குடிகள் யாவரும் ஆனந்தக்கடலில் மூழ்கியிருந்தனர். விவாகத்திற்கென குறிப்பிட்டிருந்த தேதிவரவே, காலையில், மார்க்விஸ் தனது ரத கஜ துரக பாதாதி களுடனே அரண்மனைக் கப்பாலுள்ள ஓர் சிறு ரம்யமான கிராமத்தை நோக்கிச் சென்றார். அக்கிராமத்திலுள்ளோரில் பெரும்பாலர் ஆடு மாடு மேய்ப்போரும் பயிர்த்தொழில் செய்வோருமே. அவர்களுள் 'ஜானுகூலன்' (Janicula) என்ற ஓர் மெலிந்த ஏழைக்கிழவனிருந்தான். அவனுக்கு 'க்ரிஸில்டா' என்று ஒரு பெண் இருந்தது. இப்பெண்ணோ சிறு வயது முதல் 'தந்தைதாய்ப்பேண்' என்னும் பெரியோர் வாக்கியப்படி தனது தந்தையைக் கண்போல பாவித்து, அவருக்கு ஒரு கஷ்டமுமின்றி கவலையாய்ப் பார்த்துவந்தாள். ஆகையால், ஜானுகூலனும் தனது குழந்தையினிடம் மிகுந்த அன்புமாதரவும் பாராட்டி வந்தான். இப்படி இவ்விருவர்களும் கர்வமென்பதே இல்லாமல் ஒரு மனத்தினராய் தங்களது வாழ்நாட்களைத் திருப்தியோடு கழித்து வருகையில் குப்பையில் மாணிக்கமொன்று தோன்றினாற்போல வால்டர் மார்க்விஸ் என்பவர் தனது படைகள் சூழ க்ரிஸில்டாவின் குடிசையில் வந்து நின்றார். கனவிலும் நினையாதிருக்க இம்மார்க்விஸ் தனது 'பொத்தல்' குடிசைக்கு வரப் பாக்கியம்பெற்ற க்ரிஸில்டா, உளமும்

மெய்யும் பூரித்து, அவரை சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, கைகட்டி வாய்புதைத்து நின்றாள். இப்படி இவளது சாந்தத்தையும் மரியாதையையும் அழகையும் கண்ட இம்மார்க்விஸ் இவளிடம் பின்வருமாறு வினவலானான்:—

"என்னருமைக்குழந்தாய்! உனது சிவந்தமேனியும் விசாலமான கண்களும் மெல்லியகுரலும் மரியாதையான நடத்தைகளும் எவர் மனத்தைதான் வெல்லாது? ஆகையால், நீ இன்றுமுதல் எனது மனைவியாகக்கடவாய். ஆனால், ஒன்றுமட்டும் சத்தியமாய்ச் சொல் நீ இந்த நிமிஷம் முதல் நான் சொல்வதை மறுக்காமற்கேட்டு கீழ்ப்படிந்து நடப்பாயா? உனது அபிப்பிராயம் யாது? இதைக் கேட்ட க்ரிஸில்டா (Grisilda) ஆனந்தக்கண்ணீர் பெருக "எனது மன்னவ! தாங்கள் இவ்வளவு தூரம் எனது தாழ்ந்த இல்லத்திற்கு வரப்பெற்ற பாக்கியமே பாக்கியம். இது மாத்திரமா, தாங்கள் நாயினுங் கடையாளாகிய என்னை மனைவியாகவேண்டுமென விரும்புகிறீர்கள். இதற்கு என்னைக்கேட்கவும் வேண்டுமோ? தாங்கள் என்னசொல்லுகிறீர்களோ அதைக்கேட்கச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் எனது தந்தையிடம் மட்டும் அனுமதிபெறல் வேண்டும்" என மொழிந்தாள். உடனே ஜானுகூலனைக் கூப்பிட்டு மார்க்விஸ் தனது எண்ணத்தை வெளியிட்டார். அதற்கு அத்தொண்டு கிழவன் தங்களுடைய நிழலின் கீழ் இவ்வளவு நாட்களாய்க் குடியிருந்து கொண்டு வருகிறோம். ஏழையாகிய எனக்கு தாங்கள் மருமகனாகவர என்னை பூஜை செய்திருந்தேனோ? தாங்கள் சொல்வதையும் மறுப்பேனோ?" எனவே மார்க்விஸின் ஆனந்த பரவசமுண்டாயது. அத்தக்ஷணமே மார்க்விஸ் அக்குடியானவன் பெண் க்ரிஸில்டாவின் கந்தலாடையை எடுத்துவிட்டு விலையுயர்ந்த பட்டாடை ஆபரணங்களைப் போடும்

படி உத்தரவளித்தார். நொடிப்பொழுதில் க்ரிஸில்டா அரசகுமாரியைக் காட்டிலும் அழகுடையவளானாள். பின்னர், மார்க்விஸ் தனது இரதத்தின்மீது ஏற்றி வைத்துக் கொண்டு நகர் முழுவதும் ஊர்வலம் வந்து மணி 12க்கு அரண்மனை வர அங்கு மார்க்விஸின் மந்திரி வாத்திய கோஷத்துடனே வால்டரையும் க்ரிஸில்டாவையும் எதிர் கொண்டழைத்தான். ஊரெங்கும் ஜயபேரிகை அடிக்க நாட்டார் சந்தோஷித்து மகுடாபிஷேகஞ்செய்தார். பின்பு க்ரிஸில்டா தனது நல்ல ஸ்திதிக்குத் தகுந்தபடி பழைய வறுமையை வெளிக்காட்டாது பெருந்தன்மையாய் நடந்துகொண்டாள். கொஞ்சநாளைக்கெல்லாம் இவ்விருவருக்கும் ஒரு ஸ்திரீ பிரஜை பிறந்தது. இது பிறந்ததில் ஜனங்களுக்குத் திருப்தி இல்லையாகிலும் கூடிய சீக்கிரத்தில் ஒரு பிள்ளை பிறக்குமென்று நிச்சயித்து எல்லாரும் சந்தோஷமாகவும் சுகமாகவுமிருந்தார்கள்.

அத்தியாயம் 3.

இப்படியிருக்கையில் தனது மனைவியின் கீழ்ப்படியுந் தன்மையைப் பரிக்ஷித்துப் பார்க்கவேண்டுமென்று ஓர் எண்ணம் அவர் மனதிலுதித்தது. ஆகவே, அவர் ஒரு நாள் மனையாளை தன்னிடம் கூப்பிட்டு "எனது செல்வப் பெண்ணே! நீ என்னிடம் நமது விவாகத்தன்று கொடுத்த உறுதிமொழியை இவ்வளவு சீக்கிரம் மறந்துவிடமாட்டாய என்பதற்குச் சந்தேகமில்லை. நீ முன்னிருந்த ஸ்திதியையும் இப்போது இருக்கிற ஸ்திதியையும், நினைத்து இதுவரையில் நான் சொன்னசொல் தவறாமல் நடந்து வருகிறாயென்பதில் மிகவும் சந்தோஷம். ஆனால், இச்சமயத்தில் உனது விவாகத்தால் நேர்ந்திருக்கும் கெடுதிகள் பல உள. திருஷ்டாந்தமாக:—நமது நாட்டிலுள்ள தனவான்கள் எல்லாரும் ஒருங்கே உன்னை அவமதித்துப் பரி

கசிக்கிறார்கள். குடிகளுக்கோ சந்தோஷமென்பது ஒரு வாறு குறைந்தபடிதானிருக்கிறது. ஆகையால், நமக்குப் பின்னர், இப்போது பிறந்திருக்கும் நமது புத்திரி பட்டந் தரித்தால் நாட்டுக்கென்ன கேடு சம்பவிக்குமென்பதை யோசித்துப்பார். நீ எனது உண்மையான மனைவியாயிருப் பாயானால், இத்தருணமே உன் குழந்தையின் தலையை வாங்கிவிடல்வேண்டும்." என்று சொல்லி வாய் மூடு முன் னமே, க்ரிஸில்டா "என் பிராணநாதா! நான் இச்சங்கதி களிற் சொல்லவேண்டியதென்னவிருக்கிறது. எப்போது நாமிருவரும் ஒன்று சேர்ந்தோமோ நம்முடைய எண்ண ங்களும் ஒற்றுமையாகவே இருக்கவேண்டும். ஆகையால் நீங்கள் எது செய்தாலும் உசிதமாகவே படும்: என்னைக் கொன்று பல காரியங்களைச் சாதித்துக்கொள்ளலாமெனி ன், நான் என் பிராணனைவிடத் தயாராயிருக்கின்றேன். என்று விடை சொன்னாள் இதைக்கேட்ட மார்க்விஸ் (Marquis) மிகவும் ஆச்சரியமடைந்து தனது அரண்மனை யில் வெகுநாளாய் நன்றிபாராட்டி வேலைசெய்து வந்த வேலையாளிடஞ்சென்று தனது செயலை வெளியிட்டான். இதைக்கேட்ட அவ்வேலைக்காரன், க்ரிஸில்டாவிடஞ்சென் று, அக்குழந்தையை வாங்கிக்கொண்டு, தனது எஜமான னிட்ட கட்டளைப்படி 'பொலூன்' (Boulone) நகரிலுள்ள 'கௌன்டஸினிடம்' (Countess) கொண்டு சேர்த்துவிட் டான். இது சங்கதி மார்க் விஸிக்கும், அவ்வேலையாளு க்கும் தெரியுமேயொழிய, வேறொருவருக்கும் தெரியாது. இதன் பிறகு க்ரிஸில்டா' (Grisilda) மனத்தளர்ச்சி கொ ஞ்சமேனுமில்லாமல் 'பொறுத்தார் பூமியாள்வார்; என்ப தை நினைத்து வெகு சாந்தமாகவிருந்தாள்.

அத்தியாயம் 4.

ஒரு வருஷ காலத்திற்கெல்லாம் 'வால்டருக்குப்

(Walter) க்ரிஸல்டாவுக்கும் ஒரு பிள்ளைக் குழந்தை பிறந்தது. இதைக்கேட்ட குடிகளுக்கிப்போதுதான் தங்களுடைய மன்னவனிடம் விஸ்வாஸமதிகரிக்க யாரம்பித்தது. பிறந்து 10 நாள் கூட ஆகவில்லை. உடனே வால்டர், 'தனது மனைவியை அழைத்து' எனது அருங்குழலாய்! நான் இப்புத்திரனையும் கூட, நமது புத்திரியைக் கொன்றாற்போல, கொல்லத் தீர்மானித்திருக்கிறேன். ஆகையால், நீயும் இதையும் பொறுக்கவேண்டியதுதான். இதற்கு நீ தயாராயிரு என்று இடிவிழுந்தாற்போல சொன்னார். இதற்கு க்ரிஸில்டாவா, பின்தங்குவாள்? அவள் இக்கஷ்டங்களையெல்லாம் நினையாது, பின் வருமாறு சொல்லிச் சும்மாவிருந்துவிட்டாள்:—

"இட்டமுடன் இவன் தலையில் இன்னபடியென்றெழுதி [விட்ட சிவனும்
செத்துவிட்டானோ முட்டமுட்டப் பஞ்சமே யானாலும்
பாரமவனுக்கே பிள்ளாய்,
நெஞ்சமே நீ யஞ்சாதே."

சற்று நேரத்திற்கெல்லாம் கோயிலில் அர்த்தஜாமத்திற்கு மணி 12 அடித்தார்கள். முன்னே பெண் குழந்தையைத் தூக்கிப்போன வேலையாளே அன்றும் வந்து இவள் குமாரனையும் வாரியெடுத்து முத்தமிட்டுக்கொண்டே சென்றான். நாட்களாக ஆக, குடிகளனைவரும் தங்கள் கோமான் தனது இரண்டு குழந்தைகளையும் உண்மையாகவே கொலை செய்துவிட்டாரென நம்பிவிட்டனர். மார்க்விஸ், வேண்டிய அளவு பெண்சாதியின் பொறுமையை பரிக்ஷித்துப் பார்த்தாற்போல, இன்னும் ஒரு தடவை பார்க்கவேண்டுமென்று ஓர் உபாயஞ் செய்தார். இவரது மதத்தின் குருவான 'போப்பை (Pope) தனது பெண்சாதி க்ரிஸில்டா, சொந்தமான பெண்சாதி யல்லவென்று,

சொல்லும்படி ஓர் ஏற்பாடு செய்து நாட்டாரெல்லோரையும் நம்பச் செய்துவிட்டார். பின்னர் தான் இதுவரைக்கும் தனது தங்கையிடம் கொன்றதாகச் சொல்லி, விட்டிருந்த பெண்ணையும் பிள்ளையையும் 'Saluce'க்கு அனுப்பிவிடும்படி எழுதினர். உடனே, அவள் அவ்விருவர்களுக்கும் நல்ல ஆடை ஆபரணங்களைப் போட்டு. இரட்டைக் குதிரை பூட்டிய பீடனில் அனுப்பிவிட்டாள்.

அத்தியாயம் 5.

இது நிற்க. மார்க்விஸோ ஒருநாள் தனது கோர்ட்டார் சபைகூடிப் பேசிக்கொண்டிருக்கையில், க்ரிஸில்டாவை யழைத்து "எனதருமை மனையாளே! ஏதோ இத்தனை நாளாய் நானும் உன்னை அன்போடு வைத்திருந்தேன். இப்போது குடிகளெல்லாம் உன்னை எனக்குத் தகுந்த மனைவியல்லள் எனக் கருதுகிறுர்கள். ஆகையால் மற்றெருரு மனைவியைக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். இத்தருணமே, நீ எனது அரண்மனையை விட்டு அகன்று உனது தந்தையின் இல்லஞ்சென்று வாழ்வாயாக" என்று சொல்லி வாய்மூடவே, க்ரிஸில்டா மறுமொழி சொல்லாது தனது தகப்பனிடத்திற் சென்று, ஜீவனம் செய்து வந்தாள்.

அத்தியாயம் 6.

இப்படி கிரிஸில்டா தனது குறை நாளையும் கழித்து வருகையில் மார்க்விஸின் தான் 2 வது கலியாணம் செய்து கொள்ளுகிற தேதி வந்துவிட்டது. அவரது தங்கையும், தங்கை புருஷனும் *i.e.*, (Count and Countess of Panic.) வந்து சேர்ந்தார்கள் எல்லாந்தயாராய் விட்டது. வால்டர், கிராமத்திலுள்ள க்ரிஸல்டாவுக்குச் சொல்லியனுப்பி, அவளை தான் மணமுடிக்கும் வரையில் தன்னிடமே இருக்கும்படி கட்டளையிட்டார். கோயிலில்

மணி அடித்தது. மணக்கோலத்துக்கு வேண்டியவைகள் ஜரூராய் நடந்துகொண்டிருந்தன. இச்சமயம், க்ரிஸில்டா என்னவருத்தப்படவேண்டும்? ஆனால், அவள் அமைதியான சிரித்தமுகமும் கம்பீரபார்வையுங் கொண்டிருந்தாள். இதைப் பார்த்த மார்க்விஸிக்கே, தேகத்தில் மயிர்க் கூச்சலிட்டது. உடனே, தனது புத்திரியையும் க்ரிஸில்டா முன் கொண்டு நிறுத்தி நானித்தனை நாளாய் உனது பொறுமையைப் பரிக்ஷித்ததற்கு மன்னிக்கவேண்டும். ஏதோ, தெரியாமல் செய்துவிட்டேன். இதோ நிற்கிற இரண்டு குழந்தைகளும் உன்னுடையதே நானும் உனக்கடிமை. இது முதல், உன்னைத் தவிர வேறொருவரையும் மனைவியாகக் கொள்ளவேமாட்டேன் என்று சொல்லி, மறுபடியும் பட்டாபிஷேகம் செய்துகொண்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் மேன்மையாய் ஆண்டுவந்தனர்.

முற்றிற்று.

ஓம் தத் ஸத்.

இக்கதையினின்றும், எல்லாச்சிறுவர்களும், சிறுமிகளும், அறிந்துகொள்ள வேண்டிய தென்னவென்றால், நமக்கு எவ்விதமான கஷ்டங்கள் நேரிட்டாலும், நாம் பொறுமையோடு, இருந்து அக்கஷ்டத்தைத் தவிர்க்க முயன்றால், தொட்டகாரியங்கள் கைகூடுமென்பது திண்ணம்.

K. சுப்பிரமணியன்



வியாதிக்காரன்.—"ஐயா டாக்டர்வாள், நீங்கள் செய்த உதவிக்கு நான் எப்படி என்ன கைம்மாறு செய்கிற தென்று எனக்கே தெரியவில்லே."

டாக்டர்.—"அதற்கென்ன செக்காகவாவது மணியார்டர் மூலமாவது அல்லது ரொக்கமாவதுதான்.

கவி.—"நான் போன வாரம் எழுதின பாட்டை கிழித்தெறிந்துவிட்டேன்."

சிநேகிதர்.—"கிழித்தாவிட்டீர்கள். ஆகா அதுதான் இதுவரையில் நீங்கள் செய்ததற்குள் நல்ல தரமான காரியம்."

கோபாலன்.—"அந்த புதிதாய் கலியாணமான கிருஷ்ணன் ரொம்ப நல்லவன்."

சுந்தரம்.—"அது என்னமோ எனக்குத்தெரியாது. நான் என் நாயைக்கூட அப்படி செய்யமாட்டேன் அப்படி அவன் தன் மனேவியை செய்துகொண்டிருந்தான்."

கோபாலன்.—"ஐயோ அவள் மிகவும் நல்லவளாச்சே அப்படி என்ன செய்தான்?"

சுந்தரம்.—"முத்தம் இட்டுக்கொண்டிருந்தான். நான் ஒருநாளும் என் நாயை அப்படி செய்வதில்லை."

பையன்.—"பொய்சொல்கிறது மிகவும் கெட்டதல்லவா?"

தகப்பன்.—"வாஸ்தவமே, பொய்யே ஒருநாளும் சொல்லக்கூடாது."

பையன்.—"நல்லது ஒரு பையனை பொய் சொல்லச்சொல்வது இன்னும் ரொம்ப கெட்டதல்லவா அப்பா?"

தகப்பன்.—"ஆமாம், ஏன்?"

பையன்.—அப்படித்தான் அப்பா எங்கள் வாத்தியார் என்னை இன்றைக்கு சொல்லச்சொன்னார்."

தகப்பன்.—"ஆகா, அப்படியா, வாத்தியாரா? அது என்னது அது அப்படி செய்யச்சொன்னது?"

பையன்.—"ஆமாம், என்னை 'இனிமேல் எப்பொழுதும் யோக்கியனாக இருப்பேன்' என்று உறுதிமொழி செய்யச்சொன்னார்."

புருஷன்.—"நான் இரண்டு மாதம் குத்தாலம் பக்கம் போனால் சொஸ்தமாகுமென்று டாக்டர் சொன்னார்."

மனைவி.—"உங்கள் நாக்கை பார்த்தாரா?"

புருஷன்.—"இல்லை ஆனால் அவருக்கு உன்னுடையதைப் பற்றி ரொம்ப சொன்னேன்.

ஒரு உபாத்தியாயர் தன் வகுப்பிலுள்ள மாணாக்கர்களை யெல்லாம் பதினொரு மிருகங்களின் பெயர்களை

எழுதச்சொன்னார். உடனே எல்லாப் பையன்களுக்கும் முந்தி ராமன் என்பவன் தன் சிலேட்டுப்பலகையில் பதிலை யெழுதி உபாத்தியாயரிடம் கொண்டுபோனான். அவர் அதைப்பார்த்ததும் அதிலெழுதிருந்ததாவது.—

6 மான், 4 கரடி, 1 குரங்கு.

ஜட்ஜ்.—உன்பேரில் தீர்ப்புச் சொல்வதற்கு முந்தி நீ சொல்லிக்கொள்ளவேண்டியது ஏதாவதிருக்கிறதா.

கைதி—எல்லாத்தையும்விட எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்குவது யாதெனில் நான் அந்த வீட்டிலிருந்த காலம் முழுவதும் கட்டிலுக்கு அடியில் மூச்சு கூடத் தெரியாமல் ஒளித்துக்கொண்டிருந்த இந்தப் பயலால் நான் இன்னானென்று தெரிந்தெடுக்கப் பட்டேனே. அதுதான் ஆக்கிரமம்.

ஒரு சிறுபையன் தனது பாட்டி வாங்கிவைத்திருந்த பக்ஷணங்களை யெல்லாம் தின்றுவிட்டு அதனால் பல்வலி யெடுத்து வருந்தினவனாய் பாட்டியிடம் சென்று "பாட்டீ பாட்டீ உன் மாதிரிப் பற்கள் எனக்குமிருந்தாலாகாதா" என்றான்.

பாட்டி.—ஏண்டா அப்பா அப்படிச்சொல்லுகிறாய். என் பல் என்ன அவ்வளவழகா?

பையன்.—வலித்தால் உடனே வெளியிலெடுத்து வைத்து விடலாமல்லவா.

ஒரு கல்சட்டிக் கடைக்கு இரண்டு ஸ்திரீகள் வியாபாரத்துக்கு வந்தார்கள். அங்கு இருந்த ஒரு கல்சட்டியைப் பார்த்து அது ஒன்று தான் அங்குள்ளதென்

றெண்ணி அதை இரண்டு பேரும் ஒரே சமயத்தில் எடுக்கப்போய் எனக்கு உனக்கு என்று சண்டை போட்டார்கள். "இந்த கல்சட்டியை நான் வெகுதூரத்திலிருந்தே எனக்கு வேணுமென்று கவனித்து வந்தேன். நீ எங்கிருந்து வந்து முளைச்சாய். நான் விடமாட்டேன்." என்றாள் முதல் ஸ்திரீ. நான் நேற்றே காவேரிக்குப் போகும்பொழுது இதைப் பார்த்துவிட்டு எனக்கு வாங்க வேணுமென்று தீர்மானித்திருக்கிறேன். நீ எங்கிருந்தோ இன்றைக்கு வந்து வீண் சண்டைக்கு வருகிறாயா. போ போ. நான் கொடுக்கமாட்டேன்." என்றாள் இரண்டாவது ஸ்திரீ. இவர்கள் சண்டையைப் பார்த்து கடைக்காரன் வந்து ஏன் அம்மா சண்டை போடுகிறீர்கள். அதே மாதிரி இன்னும் 12 சட்டிகள் என்னிடமிருக்கின்றன எனவே முதல் ஸ்திரீ "சீ இந்த கல்சட்டி சுத்தமாய் வாட்டமாக இல்லையே. இது என்னத்துக்கு எனக்கு." என்றாள். இரண்டாவது ஸ்திரீ.—"வாய் அகலமாக இருப்பதுடன் கிண்டா கனக்கிறதே இது. எனக்கு இது வேண்டாம்" என்றாள்.

வக்கீல்:—பிரதிவாதி சொன்னவார்த்தைகளை அப்படியே சொல்லு, கேட்போம்.

சாக்ஷி.—தகுந்தவர்கள் முன்னிலையில் சொல்லக்கூடிய வார்த்தைகளல்ல அவை.

வக்கீல்.—அப்படியானல் ஜட்ஜியினுடைய காதில் மட்டும் படும்படி ரஹஸ்யமாய் சொல்லு.

ஒரு பள்ளிக்கூடத்து வாத்தியார் தனது வகுப்பு மாணாக்கர்களுக்கு "மெதுவாக" என்னும் பதத்தின்

பொருளை யெடுத்துரைத்து அதை பினனும் நன்கு விளக்கிக்காட்டக் கருதி தனது வகுப்பில் மெதுவாகத் தானே நடந்து தனது மாணுக்கர்களை நோக்கி "நான் இப்பொழுது எவ்வாறு நடந்தேன் சொல்லுங்கள் பார்ப்போம்" என்ருர். உடனே ஒரு பையன்—"ஆம் ஐயா! தாங்கள் இப்பொழுது சப்பைக்காலுடன் நடந்தீர்கள்" என்ருன்.

டாக்டர்.—அம்மா, உங்கள் புருஷன் நான் எழுதிக்கொடுத்த அதன் வழியே நடந்தாரா ?

அம்மாள்.—நல்லவேளையாக இல்லை. அதன் வழியாக நடந்திருந்தால் அவர் மண்டை உடைந்துபோயிருக்கும்.

டாக்டர்.—ஏனப்படி ?

அம்மாள்.—தாங்களெழுதிக் கொடுத்ததை நான்காவது மாடியிலிருந்து ஜன்னல் வழியாக வெளியே எறிந்துவிட்டார்.

ஓர் உபாத்தியாயர் மனச்சாக்ஷி என்னும் விஷயத்தை பையன்களுக்கு எடுத்துப் போதித்தபின் தான் அது விஷயமாக அனுபவப்பட்ட ஓர் விஷயத்தையும் திருஷ்டாந்தமாக எடுத்து உரைத்தார். அப்படிச் சொல்லி முடிந்ததும் ஒரு சிறிய கெட்டிக்காரப் பையன் உடனே எழுந்திருந்து "ஐயா நானும் அதே மாதிரி ஒருதரம் அநுபோகப்பட்டிருக்கிறேன்" என்று சொன்னுன். உடனே அதை உபாத்தியாயர் அவ்வகுப்பில் எல்லோருக்கும் கேட்கும்படி சொல்லச்சொன்னதின் பேரில் அப்பையன் பின் வருமாறு உரைத்தான்.

"ஆறு மாசத்திற்கு முன்பாக நான் வெளியே ஒரு காரியமாகப் போய்க்கொண்டிருக்கையில் வழியில் ஒரு

ஜோட்டுக்கடையில் வெளியே சில ஒரு அழகான ஜோடு ரூ. 4—8—0 என்று போட்டிருப்பதைப் பார்த்த எனக்கு அதைத் திருடவேண்டுமென்று அவா கொண்ட பொழுது ஏதோ ஒன்று என்னை கொஞ்சம் பின்வாங்கச் செய்தது."

"ஆ பார்த்தாயா அதுதான் மனச்சாக்ஷி" என்றார் உபாத்தியாயர்.

"இல்லை அது அல்ல. அதைவிட ரூ 10—12—0 ல் ஒரு ஜோட்டைப் பார்த்தேன். அதைத் திருடிக்கொண்டு போய்விட்டேன். அதுவாக்கும்" என்றான்.

"என் ஐயா அந்த டாக்டர் மருந்து நல்லகுணம் பண்ணுகிறதா"

"அதில் சொல்லியிருக்கும் முறைப்படி செய்தால் நல்ல குணம்தான்"

"அதில் என்ன சொல்லியிருக்கிறது"

"நன்றாய்க் கார்க்கை மூடிவைக்கவேண்டும்."

நமது சித்திரசாலை.

காஞ்சீபுரம் ஏகாம்ரநாதஸ்வாமிகோவில்.



சிருங்ககிரி ஸ்ரீமஹா ஸந்நிதானத்தால் அநுக்ரஹிக்கப்பட்ட சால்வைகளுடனும் ருத்ராக்ஷகண்டியுடனும் கூடிய ‘குருபக்தசிகாமணி’ ஆகிய பத்திராதிபர்.

அஜன் பிரலாபம்.

84358



துவாரகாபுரி.

SL
031n211.5V
N13.53

தர்மாகூதம்

இப்பெயர் கொண்டதோர் அபூர்வ கிரந்தம் தஞ்சாவூர் ஸரஸ்வதிமாலிலிருந்து கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. இது ஸ்ரீமத் வால்மீகிராமாயணத்தின் பேரில் மிகவும் எளிய ஸம்ஸ்கிருத நடையில் ஆறு காண்டங்களுக்கும் ஆறு உபந்யாஸங்களாக இருக்கிறது. இந்த கிரந்தம் எழுதியவர் தஞ்சாவூரில் அரசாண்டு வந்த எக்கோஜி ராஜாவினுடைய மந்திரியாயிருந்த திரியம்பகராய மகி என்பவர். வால்மீகியானவர் ராமாயணத்தை கதைக்காக எழுதவில்லை. ராமாயணம் முழுமையும் தர்மத்தை பிரதிபாதனம் செய்வதற்காகவே ஏற்பட்டது என்பதாக பல உதாரணங்களால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தை ஸஞ்சிகை ரூபமாக வெளியாக்க உத்தேசித்திருக்கிறோம். ராயல் 16 பக்கம் அளவுள்ள 200 பக்கங்களடங்கிய ஸஞ்சிகை ஒன்றுக்கு கிரயம் ரூபாய் 1 வீதம் கொடுக்கப்படும். வேண்டியவர்கள் உடனே எழுதி தங்கள் பெயர்களை ரிஜிஸ்தர் செய்துகொள்ளவேணும். கிரந்தத்தின் மாதிரி தெரியவேண்டுமானால் மாதிரி பக்கங்களும் அடியில் கண்ட விலாஸத்துக்கு எழுதினால் கிடைக்கும்.

மானேஜர்,

ஸ்ரீவாணீ விலாஸ் பிரஸ்,

ஸ்ரீரங்கம்.

NOW READY. PART II.

BRAHMASUTRA
BHASHYA
with
BHAMATI
KALPATARU
AND
PARIMALA

BRAHMASUTRA BHASHYA

OF

SRI SANKARA BHAGAVATPADA

WITH

BHAMATI of Vachaspati Misra,
KALPATARU of Amalananda,
AND
PARIMALA of Appayya Dikshita.

This publication is unique in that it contains at one glance all the five granthas styled by Brahmananda as Vedanta Sastra. Undoubtedly it will be of great help to all Advaita Scholars. The work being a gigantic one is issued in parts. Each part consists of 80 pages and is priced at **Re. 1. Post free.**

THE MANAGER,
BOOKSELLING DEPARTMENT,
Sri Vani Vilas Press, SRIRANGAM.